உ தமிழ்ப் பல்கலைக் கழக நூ
தஞ்சாவூர்

கணபதி துணை.

திருக்கைலாசபரம்பரைத் திருவாவடுதுறையாதீனத்து

ஸ்ரீசுவாமிநாததேசிகர்

அருளிச்செய்த

# இலக்கணக்கொத்து

## மூலமுமுரையும்.

இவை

மேற்படி ஆதீனத்து

ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணியதேசிகசுவாமிகள்

கட்டளையிட்டருளியபடி,

யாழ்ப்பாணத்து நல்லூர்

ஆறுமுகநாவலரவர்களால்

பலபிரதிரூபங்களைக்கொண்டுபரிசோதித்து,

சிதம்பர சைவப்பிரகாசவித்தியாசாலைத் தருமபரிபாலகர்

பொன்னம்பலபிள்ளையால்

சென்னபட்டணம்

வித்தியாநுபாலனயந்திரசாலையில்

அச்சிற்பதிப்பிக்கப்பட்டன.

மூன்றாம் பதிப்பு.

இதன்விலை ரூபா - க.

விரோதிகிருது௵ ஆவணி௴.

(Copyright Registered.)

7055

பழைய பல்கலைக் கழக நூலக
தஞ்சாவூர்

உ

## சுவாமிநாததேசிகர்

# சரித்திரச்சுருக்கம்.

இந்நூலாசிரியராகிய சுவாமிநாததேசிகர் சற்றேறக்குறைய நூற்றெண்பத்துநான்கு வருஷத்திற்குமுன் பாண்டிவளநாட்டிலே பரம்பரைச் சைவவேளாளர்குலத்திலே திருவவதாரஞ்செய்து, இளமைப்பருவத்தே திருக்கைலாசபரம்பரையில் விளங்காநின்ற திருவாவடுதுறையாதீனத்தைச் சார்ந்து, அக்காலத்தில் அவ்வாதீனத்தில் எழுந்தருளியிருந்த ஞானதேசிகரிடத்தே சமயதீக்ஷையும், விசேஷதீக்ஷையும் பெற்று, சிவாச்சிரமத்திற்குரிய துறவறத்தை அடைந்து, அவ்வறத்திற்கு விதித்த நூல்களை ஐயந்திரிபின்றி ஓதியுணர்ந்து, அவ்வாறொழுகித் தவத்தான் மனந்தூயராகி, தம்முடைய ஞானதேசிகரது அருமைத்திருமேனியை விட்டு நீங்காது, அத்தேசிகரது அருட்பணிவிடையை அன்போடு செய்துகொண்டு, அணுக்கத்தொண்டராய் அமர்ந்திருந்தனர்.

அக்காலத்தில் மேற்கூறிய பாண்டிவளநாட்டிலே திருநெல்வேலியென்னுஞ் சிவநகரத்திலே பரம்பரைச் சித்தாந்த சைவவேளாளர்குலத்திலே தாண்டவமூர்த்திப் பிள்ளை செய்த தவப்பயனால் உதித்த மயிலேறும்பெருமாள்பிள்ளை யென்பவர் கல்வியறிவொழுக்கங்களானும் குருலிங்கசங்கமபத்தியானும் மிகச் சிறப்புற்று, செல்வம் அதிகாரமுதலிய நலங்களிற் குறைவின்றி விளங்கியிருந்தனர். இவரது பெருமை, இந்நூலாசிரியர் இந்நூற் பாயிரத்துட்கூறிய "திருநெல் வேலி யெனுஞ்சிவ புரத்தன்—றாண்டவ மூர்த்தி தந்தசெந் தமிழ்க்கடல்—வாழ்மயி லேறும் பெருமாண் மகிபதி—யிருபத கமல மென்றலை மேற்கோண்—டில

க்கணக் கோத்தேனு நூலியம் புவனே." என்னுஞ் செய்யுளானும், அதன் விசேடவுரையானும், இனிது விளங்கும்.

இந்த மயிலேறும்பெருமாள்பிள்ளை யென்பவர் மேற்கூறிய ஆதீனத்தைச் சார்ந்த சிஷ்யவர்க்கங்களிற் சிறந்தவராயும், ஆதீனத்திலே அத்தியந்த சிரத்தையுடையவராயும், இருந்தமையால், ஆதீனத்திற்கு அடிக்கடி வந்து, ஞானதேசிகரைத் தரிசித்துக்கொண்டு போவார். வழக்கப்படியே ஒருநாள் வந்து தரிசித்துக் கலந்து பேசிக்கொண்டிருக்கும்பொழுது, இந்நூலாசிரியர் ஆண்டிளையராயினும் அறிவின் முதியராய், ஒழுக்கம் அன்பு அருள் வாய்மை அடக்கம் முதலிய நற்குணங்களின் மிகச் சிறந்தவராய் இருத்தலைக் கண்டு, "இளமைப்பருவத்தே இக்குணங்களெல்லாம் ஒருங்கமைந்திருப்பது அருமை அருமை" என்று வியப்புற்று, "நாங்கற்ற கல்விப்பொருளை இச்சிவனடியாருக்குக் கற்பிப்பேமாயின், உலகத்திற்கு மிகவும் பயன்படுவதன்றியும், நமக்கு இம்மையிற் புகழும் மறுமையில் நற்கதியும் கிடைக்கும்" என்று நினைந்து, தங்கருத்தை ஞானதேசிகர் சந்நிதானத்தில் விண்ணப்பஞ்செய்து, அத்தேசிகருடைய ஆஞ்ஞையின்படி இந்நூலாசிரியரை அழைத்துக்கொண்டுபோய், தமது வீட்டில் இருத்திக்கொண்டு, யாதொருகுறைவுமின்றி, மிகுந்த அன்புடனே உபசாரஞ்செய்து, கற்பிப்பாராயினார்.

சமதக்கினி மகாமுனிவருடைய புத்திரரும் அகத்திய மகாமுனிவருடைய முதன்மாணாக்கரும் இடைச்சங்கப்புலவர் ஐம்பத்தொன்பதின்மருள் ஒருவருமாகிய திரணதூமாக்கினியென்னுந் தொல்காப்பியமுனிவர் அருளிச்செய்த இலக்கணநூலாகிய தொல்காப்பியத்திற்கு உரையாசிரியராகிய இளம்பூரணர் செய்த உரையாகிய இளம்பூரணமும், சேனாவரையர் செய்த உரையாகிய சேனாவரையமும், நச்சினார்க்கினியார் செய்த உரையாகிய நச்சினார்க்கினியமும் எனப்படும் மூன்றுரைகளையும், ஐயந்திரிபின்றி விளங்குமாறு, பலமுறை கற்பித்தனர். அன்

றியும், அக்காலத்தில் வழங்கிய மற்றையிலக்கண நூல்களை யும், திருவள்ளுவர்குறள் பரிமேலழகருரையையும், திருச் சிற்றம்பலக்கோவை நச்சினார்க்கினியாருரையையும், சிந்தா மணி சிலப்பதிகாரம் மணிமேகலை குண்டலகேசி வளையா பதியென்னும் பஞ்சகாவியங்களையும், கலித்தொகை முத லிய சங்கச்செய்யுள்களையும், முறையே கற்பித்தனர்.

அன்றியும். வடமொழியிலும் வல்லவராகச் செய் யக் கருதி, திருநெல்வேலிக்குச் சமீபத்துள்ள செப்ப றைப்பதியில் அப்பொழுது சம்ஸ்கிருதத்தில் மகாபண்டி தராயிருந்த சிவப்பிராமணராகிய கனகசபாபதி சிவாசாரி யரைக்கொண்டு வடமொழி வியாகரணமுதலியனவற் றைக் கற்பிப்பித்தனர். இக்கனகசபாபதிசிவாசாரியர் வட மொழி கற்பித்த ஆசிரியரென்பது, பாயிரத்துள் "செப் பறைப் பதியின் வாழ்சிவத் துவிசன்—கனக சபாபதி கருது வட நூற்கட—றபோதனர் புகழுஞ் சைவாதி ராச—னுபய பதங்களை யுண்மையோடு பணிவாம்" என இந்நூலாசிரியர் கூறிய செய்யுளால் விளங்கும்.

இந்நூல்களையெல்லாம் இந்நூலாசிரியர் பன்னிரண்டு வருஷம்வரையும் தம்முடைய இயற்றமிழாசிரியரை விட்டு நீங்காது, உடனிருந்து கற்று, உளங்கொளப் பயின்ற னர். பயின்றபின், மயிலேறும்பெருமாள்பிள்ளை இந்நூ லாசிரியரை அழைத்துக்கொண்டு ஆதீனத்திற்கு வந்து, ஞானதேசிகரைத் தரிசித்து, அத்தேசிகரது சந்நிதானத் திலே இந்நூலாசிரியரது கல்வித்திற முழுதையும் பரீக்ஷை செய்து காட்டினர். காட்டியபின், "இந்தமகாத்துமாவை ஞானாசாரியமூர்த்தியாய் எழுந்தருளியிருக்கக் கண்டு தரி சிக்கவேண்டும்" என்று மிகுந்த காதலோடு விண்ணப்பஞ் செய்தனர். அதற்கு ஞானதேசிகர் "அவ்வாறே செய் வோம்" என்று திருவாய்மலர்ந்தருள், மயிலேறும்பெரு மாள்பிள்ளை மனமகிழ்ந்து, வணங்கி விடைபெற்றுக்கொ ண்டு, தமதிடத்திற்கு மீண்டனர்.

பின்பு இந்நூலாசிரியர் நிருவாணதீக்ஷை பெற்று, வீடுபேற்றுக்குக் காரணமாகிய சிவஞானபோதம் சிவஞானசித்தியார் முதலிய ஞானநூல்களையெல்லாம் ஓதி, அவற்றின் பொருளைக் கேட்டுச் சிந்தித்துத் தெளிந்துகொண்டார்.

அதன்பின் சாங்கற்ற இலக்கணவிலக்கியங்களில் இலைமறைகாய் போன் மறைந்து கிடந்த அரிய விதிகளையெல்லாம் தமது நன்னுணர்வினால் விளங்க எடுத்துத் திரட்டி, இலக்கணக்கொத்தென்னும் இந்நூலைச் செய்து, தசகாரியமுதலிய ஞானநூல்களையுஞ் செய்தனர்.

இவ்வாசிரியர் இவ்வாறு விளங்கியிருக்குங்காலத்திலே, திருவாரூர் என்னுந் திவ்வியதலத்திலே பரம்பரைச் சைவாசாரியகுலத்தில் உதித்து இலக்கணவிளக்கமுதலிய நூல்களை இயற்றிப் புலவர் திலகராய் விளங்கியிருந்த வைத்தியநாதநாவலர் ஒருநாள் ஆதீனத்துக்கு வந்து, ஞானதேசிகரைக் கண்டு, கலந்து பேசிக்கொண்டிருந்தனர். பின்பு பந்தியிற் போசனஞ் செய்யும்பொழுது, "வந்தவிளைப்பாற் போசனஞ் செவ்வையாகச் செய்தற்கிசையவில்லையோ" என்று ஞானதேசிகர் வைத்தியநாதநாவலரைப் பார்த்துக் கேட்க, அவர் வந்தவிளைப்பென்னுந் தொடர்மொழிக்கு இலக்கணம் விசாரிக்கத்தொடங்கினர். அப்பொழுது சேட்டகனிட்ட முறைப்படியே பந்தியின்கடையிலே போசனஞ்செய்துகொண்டிருந்த இந்நூலாசிரியர்மீது ஞானதேசிகர் திருக்கண் சாத்தியருள, உடனே இந்நூலாசிரியர் வைத்தியநாதநாவலரைப் பார்த்து, அச்சொற்குள்ள இலக்கணங்கள் யாவும் எடுத்து விரித்துரைத்தனர். 'அதுவன்றியும், அச்சொல்லைப்பற்றியே அநேகவினாவையும் நிகழ்த்தினர். அதைக் கேட்ட வைத்தியநாதநாவலர் மிகமகிழ்ந்து, "தொல்காப்பியமுதலிய நூல்களை எழுத்தெண்ணிப் படித்த சுவாமிநாதமூர்த்தியா! தேவர் இவ்விடத்தில் வந்திருப்பது என்க்குத் தெரியாது" என்று மிக்க விநயமொழி கூறினர். கூறியபின்,

"இவ்வியல்புடைய மகாவித்துவான்களைப் போசனகால முதலிய எக்காலத்தினும் சமீபத்தில் வைத்துக்கொள்ளல்வேண்டும்" என்று ஞானதேசிகரிடத்தில் அறிவித்தனர்.

பின்பு வைத்தியநாதநாவலர் சிலநாள் இந்நூலாசிரியருடன் ஒருங்குவதிந்து, தொல்காப்பியமுதலிய நூல்களைப் பாராட்டிக்கொண்டிருந்ததுமன்றி இவ்விலக்கணக்கொத்து நூலையுங்கேட்டு, "இவ்வரியவிதிகளையெல்லாங் கண்டெடுத்து இங்ஙனந் திரட்டுவது யாவர்க்கும் அரிதரிது" என்று மிக வியப்புற்று மனமகிழ்ந்து, தமதிடத்திற்குச் சென்றனர். இலக்கணவிளக்கஞ்செய்த இவ்வைத்தியநாதநாவலரும், தமிழ்ப்பிரயோகவிவேகஞ்செய்த ஆழ்வார்திருநகரிச் சுப்பிரமணியதீக்ஷிதரும் இந்நூலாசிரியர் காலத்துச் சிறந்த வித்துவான்களாய் இருந்தனரென்பது, "நூல்செய் தவனங் நூற்குரை யெழுதன்—முறையே யெனிலே யறையக் கேணீ—முன்பின் பலரே யென்கண் காணத்—திருவா ரூரிற் றிருக்கூட் டத்திற்—றமிழ்க்கிலக் காகிய வயித்திய நாத—னிலக்கண விளக்கம் வகுத்துரை யெழுதின—னன்றியுந் தென்றிசை யாழ்வார் திருநக—ரப்பதி வாழுஞ் சுப்பிர மணிய—வேதியன் றமிழ்ப்பிர யோக விவேக—முரைத்துரை யெழுதின னென்றே பலவே." என இந்நூலிற் கூறிய உரைச்சூத்திரத்தால், விளங்கும்.

மயிலேறும்பெருமாள்பிள்ளை விண்ணப்பஞ் செய்து கொண்டபடியே ஞானதேசிகர் இந்நூலாசிரியருக்கு ஆசாரியாபிஷேகஞ்செய்யத் திருவுளங்கொண்டும், சின்னப்பட்டத்திற்கு அப்போது பண்டாரசந்நிதிகள் இருந்தமையால், இவ்வாசிரியருக்குச் சங்காபிஷேகஞ்செய்து, ஈசானதேசிகர் என்று அபிஷேகச் சிறப்புப்பெயருங் கட்டளையிட்டருளி, திருநெல்வேலியில் ஆதீனத்தைச் சார்ந்த ஈசானமடாலயத்தில் இருக்கும்படி கட்டளையிட்டருளினார்.

இந்நூலாசிரியர் அவ்வாறே ஈசானமடாலயத்தில் எழுந்தருளியிருந்துகொண்டு, தந்நூற்கு விருத்தியுரை செ

ய்த சங்கரநமச்சிவாயப்புலவர் முதலாயினோர்க்கு இயற்றமிழ்நூலும் வீட்டுநெறிநூலும் கசடறக் கற்பித்து, நெடுங்காலஞ் சென்றபின் பரிபூரணதசையையடைந்தனர். சங்கரநமச்சிவாயப்புலவர் இந்நூலாசிரியர்க்கு மாணாக்கரென்பது, நன்னூல் விருத்தியுரையில் உரைப்பாயிரத்துள் "திருவா வடுதுறைத் தேசிக ளுகிய—கருணையங் கடலை யென் கண்ணைவிட் டகலாச்—சுவாமி நாத குரவனை யனுதின—மனமொழி மெய்களிற் றொழுதவ னருளால்" என அவர் கூறியவாற்றால், விளங்கும்.

சுவாமிநாததேசிகர் சரித்திரச்சுருக்கம்

முற்றுப்பெற்றது.

கணபதி துணை.

# இலக்கணக்கொத்துரை.

## சிறப்புப்பாயிரம்.

மதிவெயில் விரிக்குங் கதிரெதிர் வழங்கா
துயர்வரை புடவியி னயர்வுற வடக்கித்
தென்புவி வடபுவி யின்சம மாக்கிக்
குடங்கையி னெடுங்கட லடங்கலும் வாங்கி
யாசமித் துயர்பொதி நேசமுற் றிருந்த
மகத்துவ முடைய வகத்திய மாமுனி
தன்பா லருந்தமி ழின்பா லுணர்ந்த
வாறிரு புலவரின் வீறுறு தலைமை
யொல்காப் பெருந்தவத் தொல்காப் பியமுனி
தன்பெய ராலுல கின்புறத் தருநூ
லுளங்கூ ருரையா மிளம்பூ ரணமு
மானு வியல்பிற் சேனா வரையமு
முச்சிமேற் புலவர்கோ ணச்சினார்க் கினியமு
மற்றமற் றிடப்பொருண் முற்று முணர்ந்து
நன்னூன் முதலிய சின்னூ றெரிந்துந்
தொல்காப் பியங்கள் பல்காற் பயின்று
மவைகளி னருகிய நவையறு விதிகளும்
வடமொழி யிலக்கணக் கடன்முடி புடையவுங்
கற்பவர்க் கெளிதி னிற்புலப் படவே
மதியினின் மதித்துமூன் றதிகார மாக்கிப்
புலக்கணத் தெனவுல கிலக்கணக் கொத்தென்
றொருபெய ரிட்டுத் திருவுளம் பற்றினன்
வளமையின் வளர்புக ழளவிய புன்னாட்
டேவடு விழியுமை யாவடு துறையி
லாசிலா வுயிர்க்கருண் மாசிலா மணிப்பெய
ரம்பல வாணனென் றும்பரும் பரவ
வருஞான தேசிக னிருதாள் புனையு
மமிழ்தினு மினிய தமிழ்வளர் நெல்லை

யுவாமுதிர் மதிக்கலைச் சுவாமி நாதன்
றேசார் ஞானச் செல்வ
னீசான தேவ னெனுந்தே சிகனே.

# பாயிரம்.

## விநாயகவணக்கம்.

௧. தேக பந்தந் தீர்ந்தருள் பெறவே
யேக தந்த னிணையடி பணிவாம்.

## சிவவணக்கமுஞ் சுப்பிரமணியவணக்கமும்.

௨. கற்றைச் செஞ்சடைக் கண்மூன் றுடையனை
யொற்றைச் செங்கதிர் வேலனை யுள்குவாம்.

## தீக்ஷாகுருவணக்கம்.

௩. ஊரும் பேரு முருவு மில்லா
ஒயினுந் திருவா வடுதுறை யூரனை
தம்பல வாண னெனும்பெய ராதரித்
தறிவே யுருவா யமர்ந்தகுரு ராயனைப்
பொறையுடல் போகப் புகழ்ந்தடி போற்றுவாம்.

## சம்ஸ்கிருத வித்தியாகுருவணக்கம்.

௪. செப்பறைப் பதியின் வாழ்சிவத் துவிசன்
கனக சபாபதி கருதுவட நூற்கட
றபோதனர் புகழுஞ் சைவாதி ராச
னுபய பதங்களை யுண்மையொடு பணிவாம்.

## தமிழ்வித்தியாகுருவணக்கம்.

௫. திருநெல் வேலி யெனுஞ்சிவ புரத்தன்
றாண்டவ மூர்த்தி தந்தசெந் தமிழ்க்கடல்
வாழ்மயி லேறும் பெருமாண் மகிபதி
யிருபத கமல மென்றலை மேற்கொண்
டிலக்கணக் கொத்தெனு நூலியம் புவனே.

நிறைந்த கல்வியுடையார்மாட்டுச் செல்வம் வாணாள் அதிகாரமுதலிய நலங்கள் குறைதல் பெரும்பான்மை, இவனுக்கு ஓர் குறையுமில்லையென்பது தோன்றப் பெயர்க்கு முன்னும் பின்னும் அடைகொடுத் தும்.

பலர்நூல்களினும் பலருரைகளினுஞ் சிதறிக்கிடந்த சிலவிதிகளை ஒவ்வொரு சூத்திரத்தால் ஒருங்கேயறியக்கிடத்தலின், இலக்கணக்கொத்தென்று காரணப்பெயர் பெற்றதென்க. (௫)

இதுவரைவணக்கமதிகாரம்.

௬. பத்தொ டொன்பது பாடை நூல்களு
மாறு படுதல் வழக்கே யன்றியு
மொவ்வொரு பாடையி னுள்ளே யோரிற்
பலநூன் மாறு படுமே யன்றியு
மொவ்வொரு நூற்கட லுள்ளே யோரி
னெழுத்துச் சொற்பொருள் யாப்பணி யைந்தனு
ளொன்றனை யொன்றே யொழிக்கு மன்றியு
மோரதி காரத் துள்ளே யோரி
னோரியல் விதியினை யோரிய லொழிக்கு
மோரிய லதனி னுள்ளே யோரி
னொருசூத் திரவிதி யொருசூத் திரவிதி
தன்னைத் தடுத்துத் தள்ளு மன்றியு
மொருசூத் திரத்தி னுள்ளே யோரி
னொருவிதி யதனை யொருவிதி யொழிக்கு
நூலா சிரியர் கருத்தினை நோக்கா
தொருசூத் திரத்திற் கொவ்வொரா சிரிய
ரொவ்வொரு மதமா யுரையுரைக் குவரே
யவ்வுரை யதனு ளடுத்தவா சகங்கட்
கவர்கருத் தறியா தவரவர் கருத்தினுட்
கொண்ட பொருள்படப் பொருள்கூ றுவரே
யொருவிதி தனக்கே பலபெயர் வருமே
யொருபெயர் தனக்கே பலவிதி வருமே
நூலுரை போதகா சிரியர் மூவரு
முக்குண வசத்தான் முறைமறந் தறைவரே

யிம்முறை யெல்லா மெவர்பகுத் தறியினு
மவத்தை வசத்தா லலைகுவர் திடனே
யதிமதி நுட்பமோ டதிகலை கற்பினும்
விதியது வசத்தால் விதிவிலக் கயர்ப்பா
ராகையா லளவிட லரிதே யன்றியுஞ்
சொல்லின் கூட்டமும் பொருளின் கூட்டமு
மவ்விரண் டனையு மளவிடப் படாவே
யிந்நால் வகையினு ளென்னு லியன்றது
சிறப்பா யுள்ளன சிலதே டினனவை
மறப்பெனும் பகைவன் வாரிக் கொண்டன
னவன்கையி லகப்படா தடங்கின வவற்றுளுஞ்
சிறிதினைச் சிறியேன் சிறிய சிறார்தமக்
குரைத்தன னன்றியீ தொருநூ லன்றே
யிவ்வழக் கறிந்தோ ரிகழுதல் வழக்கே
யிவ்வழக் கறியா ரிகழுதல் வழக்கே.

இது அவையடக்கம். இதற்குப் பொருள் கூறின் மிகவும் பெருகுமாகலின், இன்றியமையாதனவற்றிற்குமாத்திரஞ் சுருக்கிக் கூறுகின்ரும். இந்நூன்முழுதுமதது.

எழுத்து ஐம்பத்துமூன்று, முப்பது. இது பாடைமாறுபாடு.

சார்பெழுத்து மூன்று, பத்து. இதுஒருபாடைநூன்மாறுபாடு.

நெடிற்றொடர்க்குற்றுகரம் எழுத்திலுளீரலகு; யாப்பினு ளோரலகு. 'பால்போலுமொழி' சொல்லினுள் விரி; அணியினுட் டொகை. 'துப்பி னெவனுவர் மற்கொ றுயர்வரவு நட்பினு ளாற்றுபவர்.' 'கடலோடா கால்வ னெடுந்தேர் கடலோடு—நாவாயு மோடா நிலத்து.' இவை சொல்லினுள் வெளிப்படை; முறையே அகப்பொருளினும் புறப்பொருளினுங் குறிப்பு. இவை ஒருநூலுள் ஐந்தும் மாறுபாடு. ஒன்றேயென்றதனல் ஒழித்தவெளிதென்க.

அகப்பொருள்விளக்கம், யாப்பருங்கலக்காரிகை, தண்டியலங்காரமுதலிய நூல்கள் ஒன்றனையேயுணர்த்தும்; நன்னூல் சின்னூன் முதலிய நூல்கள் இரண்டனையேயுணர்த்தும்; அவைபோலாது தொல்காப்பியம் ஐந்தனையுமுணர்த்தலிற் 'கடலென்ரும். அகத்தியம் அவிநயமுதலானவையும் அதுவாதலால், ஒவ்வொருநூலென்ரும்.

"இடையுரி—தழுவு தொடரடுக் கெனவீ ரேழே." "உருபுகள் புணர்ச்சியி—ஞெக்குமன் னப்பெயர் வேற்றுமைப் புணர்ப்பே." இவை ஓரியலோடோரியன்மாறுபாடு.

"ஞனவல் லினம்வரட் டறவும் பிறவரி—னியல்பு மாகும் வேற்றுமைக்கு" "சாதி குழூஉப்பரண் கவண்பெய ரிறுதி—யியல்பாம் வேற்றுமைக்கு" இவை ஓரியலுள் ஒருசூத்திரத்தை மற்றொன்று தள்ளுதல்.

"ஞணநமல வளன வொற்றிறு தொழிற்பெய—ரேவல் வினைநனி யவ்வன்மெய்வரி—னுவ்வுறு மேவ லுறுசில சில்வழி." இது ஒருசூத்திரத்துள் ஒன்றனை யொன்றொழித்தல்.

எழுத்தினுள் உயிர்மெய்யை உம்மைத்தொகையென்றும், அன்மொழித்தொகையென்றும், வேற்றுமைத்தொகையென்று முரைப்பர். சொல்லினுள் மக்கட்சுட்டை அன்மொழித்தொகையென்றும், இருபெயரொட்டாகுபெயரென்றும், பின்மொழியாகுபெயர்ப்பண்புத்தொகையென்றுமுரைப்பர். பொருளினுள் "வேண்டிய கல்வி யாண்டுமூன் றிறவாது." என்புழி மூன்றனைப் பதிபசு பாசமென்றும், தத்துவமசிவாக்கியமென்றும், அறம்பொருளின்பமென்றும், எழுத்துச்சொற்பொருளென்றும், ஆண்டென்றுமுரைப்பர். இவை ஒரு சூத்திரத்திற்கே பலரும் பலமதமாயுரைத்தல்.

இனிச்சொல்லை நித்தியமென்றும், அநித்தியமென்றும், வியாபகமென்றும், ஏகதேசமென்றும், பொருளென்றும், பொருளன்றென்றும், கடவுள் கட்டினதென்றும், அறிவாரும், அறியாரும், சாதியாரும், சமயத்தாரும், தேசத்தாரும், காலத்தாரும், தத்தமக்குவேண்டியவாறே கட்டினதென்றும், ஒருவரானுங் கட்டப்பட்டதன்று தானே அநாதியாயுள்ளதென்றும், சொல்லும் பொருளுஞ் சாத்தன தாடைபோல வேற்றுமையென்றும், கோட்டதுநூறுபோல ஒற்றுமையென்றும், அத்தநாரீச்சுரன்போல வேற்றுமைக்கும் ஒற்றுமைக்கும் பொதுவென்றும், இன்னும் பலவாற்றானும் பலருங்கூறுவர். அவை நிற்க. இனித்தொல்காப்பியரொருவர் தாமே அச்சொல்லை "அதிர்வும் விதிர்ப்பு நடுக்கஞ் செய்யும்." என வியற்றுதற்கருத்தாவாகவும், "அம்ம கேட்பிக்கும்." என வேவுதற்கருத்தாவாகவும், "பொருண்மை தெரிதலுஞ் சொன்மை தெரிதலுஞ்—சொல்லி னாகும்." எனக் கருவியாகவும், "கொடையெதிர் கிளவி" எனக்கொள்வோனாகவும், "முன்மொழி நிலையலும்." எனவிடமாகவும், பொருளிற்கு வேறென்று கூறி, "கமநிறைந்தியலும்" "உருவுட்காகும்." "செல்ல லின்ன லின்னா

மையே." "எல்லேவிளக்கம்." "கொல்லே யையம்." என்ப பெருளிற்கு வேறன்றென்றுங்கூறினர். அச்சொற்கு ஓர் குணமேயல்லிப் பலகுணம் பொருந்தாது; அவர்க்குமதுவேகருத்து. அக்கருத்தறிதலருமைநோக்கி, நூலாசிரியர் கருத்தினை நோக்காதென்றும் இக்கருத்துச் சொற்கேயன்றி அவர் கூறிய விதிவிலக்கிற்கெல்லாம் பொது.

இச்சூத்திரத்திற்கிதுவே பொருளென்னும் வாசகத்திற்கு, இது பொருளென்றும், இது பொருளன்றென்றும், இது பொருளோ அன்றோவென்றும், இதுவோ அதுவோ பொருளென்றும், பல பொருள்படுதலின், அவரவர் கருத்திற்கேற்பட்ட பொருளையே கூறுவர். இக்கருத்து எல்லாவாசகங்கட்கும் பொது. இனிச்சூத்திரங்கட்குப் பொருள்கொள்ளுதலெளிது, உரைவாசகங்கட்குப் பொருள்கொள்ளுதலரிதென்பது தோன்ற, நோக்காதுரைக்குவர், அறியாது கூறுவரென்றும்.

மூன்றுந்திரிபு, மூன்றும் விகாரம்; அஃறிணையியற்பெயர், பால்பகாவஃறிணைப்பெயர். இவைபோல்வன விதியொன்றற்கே பலபெயர்.

தனிமொழியாவது ஆவென்றும், ஆறென்றும், ஆற்றினனென்றும், ஒன்றென்றுங் கூறுவர். தொடர்மொழியாவது ஆவென்றும், ஆறென்றும், ஆற்றினனென்றும், ஆறிரண்டென்றும், ஆறிரண்டு தோளானென்றும், வாழையென்றுங் கூறுவர். பொதுமொழியாவது எட்டென்றும், கவியென்றும், சாத்தனென்றும், வாழ்கவென்றுங் கூறுவர். இவைபோல்வன ஒருபெயர்க்கே பலவிதி.

"அன்றி யின்றியென் வினையெஞ் சிகரந்—தொடர்பினுள்ளுகரமாய்த் திரியும்" என்று முறை கூறினர். அம்முறையே "வினையெச்சம்மே வினைமுற் றாகலும்" எனல்வேண்டும்; அது மறந்து "வினைமுற் றேவினை யெச்ச மாகலும்" என்றார். இம்மறவி உரையாசிரியர் போதகாசிரியரொடு மூவர்க்கும் பொது. இம்முறை இப்பதினொன்றுமெனக.

நனவினறிந்ததைக் கனவின் மயங்கியும், கனவினறிந்ததை நனவின் மயங்கியும், நனவினுள்ளும் பிரேரகத்தினறிந்ததைச் சாக்கிரத்தின் மயங்கியும், சாக்கிரத்தினறிந்ததைப் பிரேரகத்தின் மயங்கியும், பிரேரகத்தினுள்ளுந் தனக்குரிய யாதானுமோர் மணிப் பொற்பணியை யாதானுமோர் காரணத்தாற் பிறனொருவன் கையிற்கொடுத்துப் போக்கி, சிலபொழுதிடையிட்டு அவன் கொண்டு வந்து தர வாங்கிப் பார்த்து, அதுவோ வேறென்றோ என்றுமை

யந்தீர்த்து, சிலர்க்கறிவித்துச் சேமத்தின்கண்ணே வைத்து, சில பொழுதிடையிட்டு அவனைக் கண்டு அப்பணி தருவாயாகவென்று பகைகொண்டு, சிலபொழுதிடையிட்டு அப்பணியைக்கண்டு தெளிந்து பகைதீர்ந்தான். இவைபோல்வன அவத்தை வசத்தாலலைதல். இவையும் மூவாசிரியர்க்கும் பொது.

அதிமதி-அளவிறந்த புத்தி. அதிகலை-மேம்பாட்டினையுடைய நூல். விதி-ஊழ். விதி விலக்கு-வழுவில்லது, வழுவுள்ளது. அயர்த்தல்-விதியைவிலக்கென்றும், விலக்கை விதியென்றுங் கூறுதல். இக்கருத்து "நுண்ணிய நூல்பல கற்பினு மற்றுந்தன்—னுண்மை யறிவே மிகும்." "எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினு மப்பொருண்—மெய்ப்பொருள் காண்ப தறிவு." "தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்—கற்றனைத் தூறு மறிவு." இவை முதலாயினவற்றுட்காண்க. இவையும் மூவாசிரியர்க்கும் பொது.

ஆகையால், இப்பதின்மூன்றேதுவினாலும், விதிவிலக்களவு செய்தல் யாவராலுங் கூடாது. அன்றியுஞ் சொற்கூட்டமும் பொருட்கூட்டமுமதுவே. ஒருபொருட் பலசொல்லினையும் ஒருசொற் பலபொருளினையும் முறையே சொற்கூட்டமும் பொருட்கூட்டமுமென்பர் இலக்கணநூலோர். வேதாகமபுராணமுதலிய நூல்களையும் மாயாகாரியமாயுள்ள சகலப்பிரபஞ்சங்களையும் முறையே சொற்கூட்டமும், பொருட்கூட்டமுமென்பர் வீட்டுநூலோர்.

இந்நால்வகையென்று பின்னுங்கூறியது அநுவாதம். அதென்னெனின், வீடொன்றே நீங்கலாக ஒழிந்தனவெல்லாம் இங்ஙனங் கூறிய நான்கனுளடங்குமென்று பொருள்படுதலினென்க. இந்நான்கனையுமளவிடல் அரிதேயன்றி, இவற்றினுள் ஒன்றனை மாத்திரமளவிடலுமரிதென்க. ஆயின் நூல்களாற்பயனென்னெனின், "ஆழ வமுக்கி முகக்கினு மாழ்கடலி—னாழி முகவாது நானாழி." இவ்வுவமையாற் பயனுண்டென்று தெளிக. இம்முறைபற்றியே என்னுலியன்றதென்றும். நாழிபோல் உருவப்பொருளன்றே, அருவமாய் நித்தியமாய் அறிவுமயமாய் அறியுமறிவிருக்கவே, முழுதுங் கொள்ளாது குறையக் கொள்வதென்னெனின், பஞ்சபாசத் தடையாலென்க. தடைதீர்ந்தபின்பு கொள்கவெனின், அங்ஙனமுங்கொள்ளப்படாதென்க. அம்முறை இங்ஙனம் விரிக்கிற்பெருகுமென்க.

ஐந்தனுள் எழுத்தினுஞ் சொற்சிறப்பு, ஏனை மூன்றும் அச்சிறப்பின்று. மூன்றனுள் இயற்றமிழ் சிறப்பு, ஏனையிரண்டும் அச்

சிறப்பின்று. திருவள்ளுவர், திருக்கோவையார், திருமுருகாற்றுப் படை முதலிய செய்யுட்கள் சிறப்பு, சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை முதலிய செய்யுட்கள் அச்சிறப்பின்று. நான்கனுள் வீட்டுநூல் சிறப்பு, அறமுதலிய மூன்று நூலும் அச்சிறப்பின்று. வீட்டுநூனான்கனுள் அறிவுநூல் சிறப்பு, சரியை முதலிய மூன்று நூலும் அச்சிறப்பின்று. சிறப்பிற்கும், சிறப்பின்மைக்கும், பொது விற்குங் காரணம் விரிக்கிற் பெருகுமென்ப. இம்முறைபற்றியே சிறப்பாயுள்ளனவென்றும். எல்லாநூலும் இம்மூன்றனுளடங்கு மென்க. சிறப்பாயுள்ளனவற்றுள்ளும் சிலவென்க. அவற்றுள் ளும் மறந்தது பலவென்பது தோன்ற வாரிக்கொண்டனனென் றும். அடங்கினவற்றுள்ளுஞ் சிறிதென்பதற்குக் காரணம் "எளிய விதிகளை" என்னுந்தொடரான் மேற்காட்டுதும்.

கற்றோரெல்லாருள்ளுங் கடையேனென்பது தோன்றச் சிறி யேனென்றும், சூரியோர்க்குத் தொல்காப்பியமுதலிய நூல்களிரு த்தலால் ஏனையோர்க்கே இதுவென்பது தோன்றச் சிறியவென் றும், தருணர்க்கெல்லாம் அந்நூல்களிருத்தலிற் பாலர்க்கே இது வென்பதுதோன்றச் சிறாரென்றும், ஓரதிகாரமாயினும் இதனுள் அறியக்கூடாதென்பது தோன்ற நூலன்றென்றும், நூலன்றென்று எம்மாற் சொல்லியிருக்கவே குற்றமுண்டாயினுங் கூறுறென்பது தோன்ற வழக்கேயென்றும், வழக்கறியாதார் வழக்கையுமிகழுதல் இயற்கையேயென்பது தோன்ற வழக்கேயென்றுங் கூறினும். "காணாதாற் காட்டுவான் றான்காணான் காணாதான்—கண்டானுந் தான்கண்ட வாறு." என்பதனுள் இகழுதலியற்கையென்பது காண்க.

அவையடக்கமென்று பெயரிட்டு இங்ஙனம் பலவற்றையும் விரித்ததனாற் பயனென்னெனின், பலவாற்றானும் புழுத்த நாயி னுங் கடையேனதறியாமையை எல்லோர்க்கும் அறிவித்தலொன் றுமே பயனென்க. இவ்வாசகம் முடிந்தது முடித்தலென்னுமுத்தி.

இனியிந்நூல் பார்த்தற்குக் கருவி பத்துள; அவைகளை ஒருசூத்திரத்தாற் கூறுகின்றாம்.

எ. வடமொழி யிலக்கணஞ் சிலவகுத் தறிந்து
தொல்காப் பியத்தினுந் தொல்காப் பியத்தினு
மருகிக் கிடந்ததைப் பெருக வுரைத்தனன்
வேறுவிதி நவமாய் விளம்பில னென்க
தொல்காப் பியந்திரு வள்ளுவ ராதிநூல்

வடமொழி நியாயம் வந்தன சிலவே
தமிழி னியாயந் தந்தன பலவாற்
றமிழ்விதி வல்லராய் வடமொழி விதிசில
வறிந்தவர்க் கேயிந் நூலாமென்க
வடநூல் வழிகல வாதே தமிழைத்
தனியே நீர்தராத் தன்மை யென்னெனி
னிலக்கண மிலக்கிய மேது நிமித்தஞ்
சாத்திரஞ் சூத்திரந் தந்திர வுத்தி
பகுதி விகுதி பதமே பதார்த்த
மாதி யந்த மகார மகார
முதாரண மாத்திரை யுவமை யுருவகம்
விகற்பஞ் சந்தி விதியலங் காரங்
கால மிலேசங் காரக ஞாபகம்
விசேடணம் விசேடியம் விகாரமதி காரங்
குணங்குணி யாதியாஞ் சொற்கோ ளன்றியும்
பிறிதினியை பின்மை நீக்குதல் பிறிதி
னியைபு நீக்குத லென்னு மிலக்கண
முதலாப் பலவா மொழிபெயர்த் தனவுங்
கொண்டனர் பண்டைய ருண்டோ வின்றே
வன்றியுந் தமிழ்நூற் களவிலை யவற்று
ளொன்றே யாயினுந் தனித்தமி ழுண்டோ
வன்றியு மைந்தெழுத் தாலொரு பாடையென்
றறையவே நாணுவ ரறிவுடை யோரே
யாகையால் யானு மதுவே யறிக
வடமொழி தமிழ்மொழி யெனுமிரு மொழியினு
மிலக்கண மொன்றே யென்றே யெண்ணுக
வெளிய விதிகளை யாவரு மறிவா
ரரிய விதிகளை யறையினறி வாரிலை
யதனை லவையாற் பயனிலை யதனாற்
பயன்படு சிலவிதி பகர்ந்தன னென்க
முன்னொடு பின்மலை வுள்ளன போல
வருவன வெல்லாம் பிறர்மத மாக்குக
கூறின பின்னுங் கூறின சிலவவை

யறுவாத மென்றே யறிந்தே யடக்குக
தமிழ்விதிக் ககப்படாச் சிலவிதி சாற்றின
னவைவட மொழிவிதி யென்றே யறிக
வேற்றுமை வினையொழி பெனமூன் றாக்கி
யவற்றினுட் சொல்லினுட் சிலவிதி யடக்கி
யேனைநால் விதியு மியம்பில னென்க
பல்காற் பழகினுந் தெரியா வுளவேற்
றொல்காப் பியந்திரு வள்ளுவர் கோவையார்
மூன்றினு முழங்கு மாண்டினு மிலையேல்
வடமொழி வெளிபெற வழங்கு மென்க.

இது இந்நூல் பார்த்தற்குச் சிலகருவி கூறுகின்றது. அவை பத்துவியங்கோளுமென்க. யாதொரு முயற்சிக்குங் கருவியின்றி முடியாது; கருவியும் ஏற்ற கருவியேயன்றி வேறுகருவியாகாது; உரியகருவியும் ஒழுங்குள்ளதேயன்றி ஒழுங்கில்லதாகாது; ஆகையால், இப்பத்தினையும் பல்காற்கூர்ந்து இந்நூலினிறங்குக. பதவுரையெழுதிற் பெருகுமாதலின், அரும்பதவுரைமாத்திரமே யெழுதினமென்க. மேலுமதுவே.

வடமொழி யிலக்கணங் கடலே யாதலிற், சிலவகுத்த தறிந்தேனெனச் செப்பினனே. தொல்காப்பியம் முன்னதிலக்கணம், பின்னது பழையசெய்யுட்கள். சுருங்கிக் கிடந்ததைப் பெருக்கினனென்பது முன்னூல்களையும் இந்நூலினையுஞ் சேர்நோக்கிற் றாமே விளங்கும். ஓர் சொல்லாயினும், பொருளாயினும், புதிதாகச் சொற்றனனன்றென்பது நவமாயென்பதனாலறிக.

"ஓரெழுத் தொருமொழி யீரெழுத் தொருமொழி—யிரண்டிறந் திசைக்குந் தொடர்மொழி" "மூன்றுதலை யிட்ட முப்பதிற்றெழுத்து" "அகர முதல வெழுத்தெல்லா மாதி—பகவன் முதற்றே யுலகு." "மதிநுட்ப நூலோ டுடையார்க் கதிநுட்பம்—யாவுள முன்னிற் பவை." "நாணென்னு நல்லாள் புறங்கொடுக்குங் கள்ளென்னும்—பேணாப் பெருங்குற்றத் தார்க்கு." இவை போல்வன வடமொழிநியாயம் வந்தன.

"எழுத்தெனப்படுவ—வகரமுத னகர விறுவாய்—முப்பஃதென்ப—சார்ந்துவரன் மரபின் மூன்றலங் கடையே." "கற்றதனாலாய பயனென்கொல் வாலறிவ—னற்றா டொழாஅ ரெனின்." இவைபோல்வனவெல்லாந் தமிழினியாயந்தந்தன.

சில பலவென்பன சிறுபான்மை பெரும்பான்மையென்க. ஏனை நூலெல்லாம் இவ்விருதன்மையே, இந்நூலுமதுவேயாதலின், இருவகைநியாயமும் ஏகதேசமாயினும் அறிந்தார்க்கேயன்றி ஏனையிருவர்க்கும் இது பயன்படாதென்பது தேற்றேகாரத்தாலறிக.

வடநூலைவிட்டுத் தனியே தமிழ்நூல் நடவாத்து நியமமேயென்பது தோன்ற, வடநூல்வழிகலவாதே என்பது முதலாக யானுமதுவே என்பதீருக, வினுவிடையாற் கூறினும்.

குணத்தையுடையது குணி; பண்பையுடையது பண்பி. இவை மொழியால் வேறென்பது திண்ணம். இவைபோல உடைமை, உடையான், பகுதி, விகுதி, பகுபதம், உருபு, பொருள், திணை, பால், இடம் இப்பத்துமுதலிய இலக்கணம் எல்லாவற்றுனுமொன்றேயென்பது தோன்றத் தேற்றமிரட்டித்தாம். இனிச் சிறுபான்மை மிகவும் அருகி இலக்கணமும் வேறுபடுமென்பது தோன்ற எண்ணுகவென்றும். வேறுபடுதலாவது இருதிணையும், ஆண்பால் பெண்பால்வினையீறும் வடமொழிக்கில்லை. மூன்றிலிங்கமும், முதலீற்று வேற்றுமைகட்குருபுகளும் தமிழிற்கில்லை. மேலும் ஆண்டாண்டுக் காட்டுதும்.

எளியவிதியாவது உயிர் பன்னிரண்டு, உடம்பு பதினெட்டு. இவைபோல்வனவென்க. அரியவிதியாவது "மெய்யி னியக்க மகரமொடு சிவணும்." "அகரமுதல வெழுத்தெல்லாம்." "அக்கரங்களின்று மகர வுயிரின்றேல்." "அகரம் போல நின்றனன் சிவனுஞ் சேர்ந்தே." "அகர வுயிர்போ லறிவாகி யெங்கு--நிகரிலிறை நிற்கு நிறைந்து." என்பவற்றிற்குப் பொருள் கூறுங்கால், அகரவுயிரானது உருவெழுத்து, ஒலியெழுத்து, உணர்வெழுத்து, தன்மையெழுத்தென்று * பொருள் கூறின், உவமேயத்தொடு மாறுபடுதன்முதலிய பலகுற்றப்படும்; அங்ஙனங் குற்றப்படாமற் பொருள் கூறுதலரிதே; கூறினுங் கொள்ளுதலரிதே. அன்றியும் எழுத்துக்கட்குப் பிறப்பிலக்கணந் தொல்காப்பியரெடுத்தோதினவற்றைப் புலப்பட வறிந்திருந்தும், பிறர் அவற்றிற்கு மாறுபடக்கூறினர். அன்றி

* எழுத்துக்கள் உருவெழுத்து முதலிய நான்கு பகுதியவாதலும் அவற்றினிலக்கணமும் வருஞ்சூத்திரங்களாலுணர்க:—க. "உருவே யுணர்வே யொலியே தன்மை—யெனவீ ரெழுத்து மீரிரு பகுதிய. உ. காணப் பட்ட வுருவ மெல்லா—மாணக் காட்டும் வகைமை நாடி—வழுவிலோவியன் கைவினை போல—வெழுதப் படுவ துருவெழுத் தாகும். ௩. கொண்டவோர் குறியாற் கொண்ட வதனை—யுண்டென் றுணர்வ துணர்வெழுத் தாகும். ச. இசைப் படு புள்ளி னெழாஅல் போலச்—செவிப்புல னுவ தொலியெழுத்

யும் அவர் ஏழ் உயிரீற்றுப்பதமன்றென்றறிவித்தற்குப் புள்ளிமயங்கியலினுள் எடுத்தோதினார். அஃதறிந்தும், அஃதொற்றீற்றுப்பதமன்றென்றறிவித்தற்கு உயிரீற்றுப்புணரியலுளெடுத்தோதினார். இவ்விருவருமன்றி நூலாசிரியர்பலருமதுவே, உரையாசிரியர் பலருமதுவே. இவர்களிங்ஙன மாறுபட்டுழி, "இருவர் மாறுகோளொருதலை துணிவே" என்பதனாற் குணங்குற்றங்களைப் பலவாற்றானும் பகுத்தறிந்து உண்மை கண்டு ஒன்றனை மறுத்து ஒன்றனைத் தழுவலும், ஒற்றுமைநயம் வேற்றுமைநயமென்பபோலச் சிலகருவிகொண்டு அம்முறையாலது நன்று இம்முறையாலிது நன்று என்று அவ்விரண்டனையுந்தழுவலும், அரியைப்படைத்தலால் அயன் கடவுளென்றும், அயனைப் பெற்றுக் காத்தலால் அரி கடவுளென்றும் மாறுபட்டுழி, இவ்விருவரையும் அழித்தலால் இவர் கடவுளல்லர் அரனே கடவுளென்பதுபோலச் சிலகருவிகொண்டு இம்முறையால் இது வழு அம்முறையால் அது வழு எனவிரண்டனையுமறுத்து இவ்விரண்டற்கும் வேறாகி வழுவற்றதொன்றனைத் தழுவலும் போல்வனவென்க. எமக்கடங்கினவற்றுள்ளும் இவ்விரண்டானும் பிறர்க்குப் பயனில்லையேயென்னுந் துன்பந்தோன்ற, யாவருமறிவார், அறிவாரில்லையென்றும்.

முன்னோர் நூல்களுள் வெள்ளிடைமலைபோல விளங்கிக் கிடந்து பயன்படுவிதிகள் அளவில்லை, அவற்றுள் இலைமறைகாய்போலக் கரந்து கிடந்து பயன்படாதன சிலவற்றுட் சிறிதெடுத்துரைத்தனனென்பது தோன்றப் பயன்படுசிலவிதியென்றும், அவையடக்கத்துட் சிறிதென்றுங்கூறினும். புதிதொன்றுமின்றென்பது இதனானுமறிக.

---

தாகும். ௫. முதற்கா ரணமுந் துணைக்கா ரணமுந்—துணைக்கா ரணத்தொடு தொடரிய வுணர்வு—மவற்றொடு புணர்ந்த வகத்தெழு வளியின்—மிடற்றுப்பிறந் திசைப்பது தன்மை யெழுத்தே."

இன்னும் நான்கு பகுதியவாதலும் அவற்றினிலக்கணமும் வருஞ்சூத்திரங்களாலுணர்க:—௧. "வடிவுபெயர் தன்மையுண் முடிவு நான்கா—நடை பெறு நாவலர் நாடிய வெழுத்தே. ௨. கட்புல னில்லாக் கடவுளைக் காட்டுஞ்—சட்டகம் போலச் செவிப் புல வொலியை—யுட்கொளற் கிடுமுரு பாம்வடி வெழுத்தே. ௩. வடிவுமுதன் மும்மையின் வழங்கு மெழுத்திற்—படுபல பகுதிக் கிடுபெயர் பெயரே. ௪. தான முயற்சி தரக்கொளச் செவிப் புல—னாயவொலி தன்மை யெழுத் தாகும்மே. ௫. உருவமுதன் மும்மையோ டொன்றிய வியல்பை—மருவவுளந் துணிவ துண் முடி வெழுத்தே."

முன்னொடுபின்மலைவாவது யாதானுமொன்றனையே இது விதியென்றும் விலக்கென்றும், இயல்பென்றும் திரிபென்றும், இது பெயரென்றும் அது பெயரென்றும், இன்னு மாறுபடக் கூறுதலென்க. இம்மலைவு இந்நூலிற் பெரும்பாலும் வரும்; அவையெல்லாம் அவரவர்கொண்ட மதமென்க. அவரவர் பெயர்களை அங்ஙனமங்ஙனமுரைக்கிற் பெருகுதல்பற்றிக் கூறும். அவையெல்லா மலைவல்லவென்பது தோன்றப் போலவென்றும். அங்ஙனமலைவனவற்றை யெடுத்தோதலென்னெனின், அவையெல்லாம் ஒவ்வொருநியாயத்தாற் பயன்படுதனோக்கியென்க.

இந்நூலுள் முற்கூறியதனையே பிற்கூறுதலுஞ்சிலவுள. அவை கூறியது கூறலென்னுங் குற்றமன்று, அநுவாதமென்றே கொள்க. கூறியதுகூறல் வெளி. ஏனையதெங்ஙனமெனின், யாதானுமோர் நிமித்தத்தால் ஒன்றனை முற்கூறி, வேறொருநிமித்தத்தால் அதனையே பின்னுங் கூறுதலென்க. "நின்ற வுயிர்முன் கசதப மிகும்" என்று கூறினவர்தாமே "பலசில வெனுமிவை தம்முன் றாம்வரின் மிகும்" "அல்வழி இஐ முன்ன ராயின் மிகும்" "மீக்கு வலிமிகும்" "நெடிலோ டுயிர்த்தொடர்க் குற்றுக ரங்களுட்—டறவொற் றிரட்டும் வேற்றுமை மிகவே" "பனைமுன் கொடிவரின் மிகும்" என்று பின்னுங் கூறினர். "அன்னா னள்ளாள்" என்றவர்தாமே "என்னே னல்லன்" என்றார். "அன்னா னிறுமொழி" என்றவர்தாமே "அல்லன் னென்னே னாகு மீற்ற" என்றார். நேர் நிரை என்றவர்தாமே வேல் நிறமென்றும், நாள் மலர் என்றுங்கூறினர். நேர்நேர் நிரைநேர் என்றவர்தாமே தேமா புளிமா என்றும், காசு பிறப்பு என்றுங் கூறினர். நேர்நேர்நிரை நிரைநேர்நிரை என்றவர்தாமே மாவாழ்சுரம் புலிவாழ்சுரம் என்றும் தூஉமணி கெழூஉமணி என்றுங் கூறினர். தொல்காப்பியருமது. அதுகண்டு நச்சினார்க்கினியாரும் அநுவாதமென்றெழுதினர். "சிறப்பீனுஞ் செல்வமு மீனு மறத்தினூஉங்—காக்க மெவனோ வுயிர்க்கு." என்றவர்தாமே "அறத்தினூஉங் காக்கமு மில்லை" என்று பின்னுங் கூறினர். இவையறியாக்காற் பொருளுரைக்கவுங் கேட்கவுங்கூடாதென்பது தோன்றத் தேற்றமிரட்டித்தாம். முன்னது அது நிமித்தம் பின்னது இதுநிமித்தமென்றறிதலருமை நோக்கி அடக்குகவென்றும்.

மொழிபெயர்த்தற்கு வாராத சிலவற்றை அம்மொழியாகவே அறைந்தனனென்பது தோன்ற அகப்படாவடமொழியென்றும். அவை சைவன், சைவம், பார்வதி, கார்த்திகேயன், காங்கேயன் முதலியனவென்க.

அறநூன்முதலியன நான்கற்குக்கருவி எழுத்து முதலைந்தே, அவற்றுள்ளும் நான்கற்குங்கருவி சொல்லே, அச்சொல்லிற்குக் கருவியதுவே, ஆகையால் எல்லாவற்றினுஞ்சொல்லே சிறப்பென பது நோக்கி, மூன்றியலாகிய இந்நூலுட் சொன்மாத்திரமே சில சொற்றனமென்பது தோன்ற இயம்பிலனென்றும். வடநூலா ருந் தலைமைபற்றிய வழக்கால் அவ்வைந்தனையுஞ் சொல்லென்று வழங்குவர்.

முக்காற்பார்த்து நல்லோர் பலருடனும் பலகாலும் பயின்று பிறர்க்கறிவித்தன் முதலானவெல்லாமடங்கப் பல்காற்பழக்கமெ ன்றும். இங்ஙனம் பழகமாட்டாரென்பது தோன்றப் பழகினுமெ ன்றும். இங்ஙனம் பழகிற்றெரியாததொன்றில்லையென்பதுதோ ன்ற உளவேலென்றும்.

திருவைக் கோவைக்குங்கூட்டுக. மாணிக்கவாசகர் அறிவாற் சிவனேயென்பது திண்ணம்: அன்றியும், அழகிய திருச்சிற்றம்பல முடையார் அவர்வாக்கிற்கலந்திரந்து அருமைத்திருக்கையாலெழு தினர். அப்பெருமையை நோக்காது, சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, சங்கப்பாட்டு, கொங்குவேண்மாக்கதை முதலியவற் றோடு சேர்த்துச் செய்யுட்களோடொன்றாக்குவர். அங்ஙனமும மையாது, இலக்கணமாவது தொல்காப்பியமொன்றுமே செய்யு ளாவது திருவள்ளுவரொன்றுமே இவ்விரண்டு நீங்கலான இலக் கணவிலக்கியமெல்லாம் ஒன்றற்கொன்று பெருமை சிறுமை இணை யென்றுகொள்வாரென்பது தோன்ற இம்முறைவைத்து அடை யைப் பொதுவாக்கினும். அவர் அதுமட்டோ இறையனாரகப்பொ ருள்முதலான இலக்கணங்களையும், தேவாரம், திருவாசகம், திரு விசைப்பா, திருப்பல்லாண்டு, பெரியபுராணம், சிவஞானபோதம், சிவஞானசித்தியார், சிவப்பிரகாசம், பட்டணத்துப்பிள்ளையார்பா டல் முதலிய இலக்கியங்களையும், ஓர்பொருளாக எண்ணாது, நன் னூல், சின்னூல், அகப்பொருள், காரிகை, அலங்காரமுதலிய இலக் கணங்களையும், பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண்கீழ்க் கணக்கு, இராமன்கதை, நளன்கதை, அரிச்சந்திரன்கதை முதலிய இலக்கியங்களையும் ஓர்[illegible]ருளாகவெண்ணி, வாளுள் வீணாள் கழி ப்பர். அவரிவைகளிருக்கவே அவைகளை விரும்புதலென்னெனின், பாற்கடலுட்பிறந்து அதனுள் வாழுமீன்கள் அப்பாலை விரும்பாது வேறுபலவற்றை விரும்புதல்போல அவரதியற்கையென்க. ஓரிடத் துக் கூறியமையாது பலவிடத்துங் கூறுமென்பது தோன்ற முழ ங்குமென்றும். இம்மூன்றினும் அகப்படாத விதி ஒன்றுமில்லையெ ன்பது தோன்ற ஆண்டினுமிலையேலென்றும். இம்மூன்றனுள் வட

மொழிவழக்குப்பற்றிக் கிடந்தனவெல்லாந் தமிழர்க்கொளிக்கு மென்பது தோன்ற வெளிபெறவென்றும். விரும்பினுந் தமிழ்கொடாத விதிகளைத் தானே கொடுக்குமென்பது தோன்ற வழங்கு மென்றும்.

இக்கருவிபத்தனுள் ஒன்றே குறையினும், இந்நூல் பார்த்தார்க்குச் சிறிதாயினும் பயன்படாது; வாணாள் வீணாள் கழித்தலேயன்றி இந்நூற்குக் குற்றங்கூறிச் சூத்திரம் உதாரணம் அரும்பதவுரை யெல்லாவற்றையுந் திருத்தி வரம்பழித்துப் புறன்பழிப்பர். ஆகையால், தொல்காப்பியந் திருவள்ளுவர் முதலிய நூல்களைக் குறைபடாமல் முழுதுமுணர்ந்து, அவைகளிற் றடைபட்டவிடத்து அத்தடை தீர்க்குங்கருத்துண்டாயின், இது பயன்படும். ஆகையால், அவர்மாத்திரத்திற்கே இது நூல், மற்றையோர்க்கு இது நூலன்றென்னுங் கருத்தால், அவையடக்கத்துள் ஈதொருநூலன்றேயென்றும்.

உரைகொள்ளுதற்கருவியாகிய இச்சூத்திரமும், முற்சூத்திரமும் உபலக்கணம். அஃதென்னெனின், 'உடம்பினு ளுயிர்கூடிற் கண்காணும் நீங்கிற்காணாது' இத்தொடர் ஒழிந்த தொண்ணூற்றைந்துமதுவேயென்று தானே பொருடரும். அதுபோல எழுத்து ஐம்பத்துமூன்று முப்பது என்று கூறுதல் மாறுபாடுள்ள விதிகட்கெல்லாம் பொதுவாய் நின்று பலபொருடருதலென்க.

'நூல்செய் தவனந் நூற்குறை யெழுதன்—முறையே யெளிலே யறையக் கேணீ—முன்பின் பலரே யென்கண் காணத்—திருவா ரூரிற் றிருக்கூட் டத்திற்—றமிழ்க்கிலக் காகிய வயித்தியநாத—னிலக்கண விளக்கம் வகுத்துரை யெழுதின—னன்றியுந் தென்றிசை யாழ்வார் திருநக—ரப்பதி வாழுஞ் சுப்பிர மணிய—வேதியன் றமிழ்ப்பிர யோக விவேக—முரைத்துரை யெழுதினனென்றே பலவே.' இஃது உரைச்சூத்திரம். இந்நூன்முழுதினுள்ளும், இடையிடையே இங்ஙனம் உரைச்சூத்திரமும், உதாரணச்சூத்திரமும், வேண்டியவேண்டியவிடத்துச் செய்தனமென்க.

௮. சூத்திரஞ் சிலசில நோக்குதற் கரிதேன்
முன்பின் பார்த்துப் பின்பே நோக்குக
விதிகளிற் சிலசில வெளிப்படா தாயி
னுபலக் கணத்தினை யோர்ந்தே யுணர்க
தாமுன் னறிந்ததற் கீதுமா றாயி
னென்னூல் விதியோ வெனவே யெண்ணுக

சில்நாட் பழகிற் சிலவும் பலியா
பலநாட் பழகிற் பலிக்கு மென்க
விரைவாற் பார்க்கிற் றெரியா தொன்றும்
விரையா தேற்கிற் கருகா தென்க
வருவதிற் கருத்தினை மட்டுப் படுத்தி
வந்ததிற் சிந்தையைச் சிந்தா திறக்குக
நூலினை மீளவு நோக்க வேண்டா
சூத்திரம் பல்காற் பார்க்கவே துணிக
மாரிபோற் கொடுப்பினு மந்தனை விட்டுக்
கூரிய னுடனே கொடுத்தும் பழகுக
வேறொரு கருமத் தினைமனத் தெண்ணி
னாரிய னாயினு மப்பொழு தொழிக
சொற்பயில் விப்பவ னெப்படிச் சொற்றன
னப்படி யொழுகி யரும்பொருள் பெறுக.

இதுவுமது, வியங்கோள்பத்துங் கருவியாகலின். ஆயின், அக்கருவியோடு சேர்க்காது பிரித்ததென்னெனின், அவையிந்நூற்கே: இவையிந்நூற்கும் எந்நூற்குமே. அன்றியும் அத்துணை நுட்ப மன்றென்க.

சிலசூத்திரவிதி கருகிற்றாயின், அப்பொழுதமுந்தற்க. அந் நூலின் முன்பின்னாவது தான் முன்பே கற்ற நூற்கணாவது பின்பு கற்குநூற்கணாவது அவ்விதி வெளிறிக் கிடக்கும்; அது கண்டு தெளிந்து பின்பமுந்துக.

உபலக்கணமாவது "அ இ உம்முதற் றனிவரிற் சுட்டே" என்புழி முதற்கூடிவரிற் சுட்டேயென்றும் பொருள்கொள்ளுதல். இவ் விலக்கணநோக்காது, தனித்துநிற்பிற் சுட்டோ கூடிநிற்பிற் சுட்ட ன்றோவென்று கருதி, நன்னூலார்க்குப் பின்னூலார் இச்சூத்திரத் திற்கு அளவிறந்த குற்றங்கூறினர். அது நிற்க, அவர் எழுத்திற் குப் பெயரிடுதனோக்கியும், "எகர வினாமுச் சுட்டின் முன்னர்" எனச் சந்திநோக்கியும்; "இவ்வபடைசுட்டுவினா" எனப் பெயரி டுதனோக்கியும், "தூக்கிற் சுட்டுநீளின்" என யாப்புநோக்கியும், இங்ஙனங்கூறிப் பின் "சுட்டியா வெகர வினாவழி" "வினைத் தொகை சுட்டிருகு முகரம்" "சுட்டு வகரமூ வினமுற" "வவ் விறு சுட்டிற் கற்றுறல் வழியே" "சுட்டின்முன் னாய்த மன்வ ரின்" "அதுமுன் வருமன்று" என்று கூடிநிற்பினுஞ் சுட்டென்று கூறினர். இவ்விலக்கணங்களையுநோக்கிலர். அது நிற்க, "தனிவரி

னுஞ்சுட்டு" என்னுஞ் சூத்திரம் "இன்னெனவரூஉம்" என்னுஞ் சூத்திரம்போல விகாரப்பட்டதென்று யாப்புவிதியையுநோக்கிலர். அதுநிற்க, "ஒருமொழி யொழிதன் னினங்கொளற் குரித்தே" என்னுஞ் சூத்திரப்பொருளையுநோக்கிலர். அது நிற்க, ஒன்றினமுடித்தறன்னினமுடித்தன் முதலிய உத்தியையுநோக்கிலர். அது நிற்க, வர்னென்னும் எச்சம் பெரும்பான்மையுங் கூடிநின்று சுட்டுப்பெயராமென்று பொருடருதலையுநோக்கிலர். அது நிற்க, முதல்வரிற்சுட்டே தனிவரிற்சுட்டேயெனப் பொருள்கோளிலக்கணமும் நோக்கிலர். அதுபற்றித் தமக்கென ஒன்றிலரும் அதுவே. உரைப்பார் உரைப்பவைக்கெல்லாம் யாமென்செய்வோமென்க. சேற்றுநிலத்திற் கவிழ்ந்த பால் தேன் நெய் முதலியனவுஞ் சேறுஞற்போல, நன்னூற்சூத்திரமும் அவ்வுரையுடனே கலந்து குற்றப்பட்டதென்க. முன்னூ லொழியப் பின்னூல் பலவினுள் நன்னூலார்தமக் கெந்நூ லாரு மிணையோ வென்னுந் துணிவே மன்னுக. முன்னோ ரொழியப் பின்னோர் பலரினு ளென்றலு மொன்று. "செய்யென்வினைவழி" "செய்யா யென்னு முன்னிலை வினைச்சொல்" "மகர வுகர நீடிட னுடைத்தே" "கோளில் பொறியிற் குணமிலவே யெண்குணத்தான்—றாளை வணங்காத் தலை" "காணுங் கண்ணுக்குக் காட்டு முளம்" இவைபோல்வனவெல்லாம் உபலக்கணமென்க.

"புகழ்புரிந் தில்லிலோர்க் கில்லை" "கடிக்கமலத் திருந்தயனுங் காணான்." இவைகட்கிலக்கணம் அமைப்போர் இறந்தகாலப் பெயரெச்சத் தகரவொற்றின்மேல் ஏறிநின்ற அகரந் திரிந்ததென்றும், குவ்வுருபிற்கும், கமலத்திற்கும் ககரவொற்றுத் திரிந்ததென்றும் அமைப்பர். இவற்றைச் சிற்றதிகாரங்களைக் குற்றமறக் கற்றவர் கேடுதலுந்தோன்றலுமேயன்றிப் பொற்குடம்போலத் திரிந்ததன்றேயென்று கருதிப் பிழைபட்டதென்றே துணிவர். அன்றியுஞ்சிலர் அகரவுயிர் உகரவுயிராய்த் திரிந்ததெனத் துணிவரேயன்றி, யாமறிந்தவற்றுளில்லை எங்குள்ளதோவென்று கொள்ளமாட்டார்.அதுபற்றி எனவேயெண்ணுகவெனத் தேற்றங்கொடுத்தாம்.

சிலநாட்பழகிற் கூரியராயினும் பலியா பலநாட்பழகின் மந்தராயினும் பலிக்கும் என்பது உம்மையானும், வியங்கோளானுந் தெளிக.

கூரியராயினுந் தெரியா மந்தராயினுஞ் சருகாவென்பது அவ்விரண்டானுந் தெளிக.

எல்லார்க்குங் கற்பதிற்கருத்திறங்கும் கற்றதில் இறங்காது; அது நன்மையன்றென்பது தோன்ற இறக்குகவென்றும்,

"முக்காற் கேட்பின் முறையறிந் துரைக்கும்" என்பதைமாத்திரம் உட்கொண்டு, சூத்திரப்பொருளை வரம்புசெய்யாது ஓடுவர். அங்ஙனம் ஓடியும் இளைப்பே பயனன்றி நூற்பயனில்லையே. ஒவ்வொருசூத்திரத்தை முக்காற்பார்த்துப் பொருளை வரம்புசெய்து நடப்பாராயின், அவர்கட்கு ஒருகாலேயமையும். இருகால் முக்கால் வேண்டுவதில்லையென்பது தோன்ற இழிவுசிறப்பும்மை கொடுத்தாம்; இறந்ததுதழீஇயவெச்சமன்று.

கொடுப்பினுமென்பதனை மர்தனிடத்தும், விடுவோனிடத்து மேற்றுக. இன்சொற்சொல்லுதல், பணிதல், உற்றுழியுதவுதல் முதலானவெல்லாம் அடங்கப் பொதுப்படக் கொடுத்தென்றும். "அவ்வினை யாளரொடு பயில்வகை யொருகால்" "பிறர்க்குரையிடத்தே நூல்கலப் பாகும்" என்பவற்றைமாத்திரம் உட்கொண்டு, யாவரோடாயினும் பழகற்கவென்பது தோன்ற உயர்வுசிறப்பும்மை கொடுத்தாம்.

பசிமுதலிய வருத்தத்தாலாவது, சோறுமுதலியவற்றின்கண் அவாவினாலாவது, யாதானும் வேறொரு நிமித்தத்தாலாவது, கருத்து மயங்கின், அக்கணமே பயிறலொழிந்து தீர்ந்தபின்பு பயில்க. ஆசிரியனுயினுமெனவே, மாணுக்கற்குக் கூறவேண்டாவாயிற்று.

பிணி வறுமையாதிகளின்மையும், பொருளிளமையாதிகளுண்மையும் கற்றற்குக் கருவியாயினும், மிகவுஞ் சிறந்தகருவி ஆரியன் கருத்தில் அருள்வர நடத்தலேயென்பது தோன்றக் கேட்டென்னுது ஒழுகியென்றும். பொருளென்னும்பெயர் பொதுவாயினும், கல்விப்பொருளினைமாத்திரம் அங்ஙனங்கூருது, நற்பொருள், பெரும்பொருள், அரும்பொருள், குறையாப்பொருள், துணைப்பொருள், நீங்காப்பொருள், கேடில்பொருள், விளக்கும்பொருள், விழுமியபொருண்முதலாக யாதானுமோரடைகொடுத்தே கூறுவர். "கேடில் விழுச்செல்வங் கல்வி" எனச் சிறுபான்மை பலவடையுங்கொடுத்துக் கூறுவர். அக்கருத்துப் பண்டை நூல்களெல்லாவற்றினுள்ளுங்காண்க. அங்ஙியமம் மறந்துந் தப்பார்களென்பது தோன்ற அரும்பொருள் பெறுகவென்றும். கலித்தொகையின் ஓர் காரணநோக்கி நிதிப்பொருளைக் கேடில்விழுச்செல்வமென்ருர். இவ்வடை கல்விக்குரித்தன்றிப் பிறவற்றிற்குமுரித்தோவென்பாரை நோக்கி, வழுவமைத்தார் நச்சினார்க்கினியார். இதனுனும் அடையுரிமை காண்க.

கூ. இத்துணைச் சிறப்பின் ருகிய கருவிக
ளின் னும் பலவே சொல்லத் தொலையா

வன்றியும் பலநூ லறைந்தன சிலசில
வாகையா லிங்ஙன மடங்குத லழகே.

இன்னும் பலவாவன, உரையிற் பழகுதலைக்காட்டினும் சூத்திரத்தின் மிகவும் பழகுதலும், தனக்குரிய நாட்டைவிட்டுக் கற்றற்கு மறுநாட்டிற்சேறலும்போல்வன. இடம் பொருள் ஏவலால் தன்னாட்டிருத்தலேயன்றி மறுநாட்டிற்சேறலென்னெனின், "வேண்டிய கல்வி யாண்டுமூன் றிறவாது" "ஓதல் பகையே தூதிவை பிரிவே" "ஓதற் பிரிவுடைத் தொருமூன் றியாண்டே" என முன்னூலாரும் பின்னூலாருங்கூறினார். அக்கருத்து இங்ஙனம் விரிக்கிற்பெருகும்.

கo. நல்லோ ரல்லோர்க் கிந்நூ னண்ணி
னென்னினுங் கடையா ருயர்ந்தா ரிலரென்
றிருமாப் பின்றியேற் றிகழா திகழ்ந்து
நற்குல நற்குண நற்கலை நற்றவ
முடையரைப் பணிந்து பணியா தொழுகிப்
பழிபா வங்களைப் பயந்து தேடிப்
புண்ணியம் புகழ்களைப் போற்றிப் போக்கிப்
பிறப்பிறப் புக்களிற் பிழைத்துப் பிழைத்துப்
பசுவினைப் பாம்பினை யிரையருத் தினர்க்குப்
பயன்கொடுப் பதுபோற் பயன்கொடுத் திடுவா
ராகையா னல்லோர்க் களிக்குத லழகே.

இது நூலுணர்த்துவோர்க்குச் சிலகருவி கூறுகின்றது. நல்லோர்க்கு அல்லோர்க்கென்க. இந்நூல்—இதுபோலச் சிறப்புள்ள நூல்கள். நண்ணின்—கைகூடில். என்னினுங்கடையாரிலரென்று கருதி, இறுமாப்பின்றி, உடையரையிகழாது பணிந்து, பயந்து போற்றிப் பிழைத்துக் கொடுப்பரென்க. என்னினுமுயர்ந்தாரிலரென்று கருதி, இறுமாப்புமேற்கொண்டு, உடையரையிகழ்ந்து, பணியாதுதேடிப் போக்கிப் பிழைத்துக் கொடுப்பரென்க. பணிதலே விரதம் பணியாமையே விரதமென்பது தோன்ற, ஒழுகியென்று வேண்டா கூறினம். அவை பயன்கொடுப்பினுங் கொடுக்கும், இவர் பயன்கொடுத்தேவிடுவரென்பது தோன்றக் கொடுப்பரென்னாது இடுவரென்றும். ஈற்றடியொன்றும் இரட்டுறமொழிதல். இன்னும் பலகருவிகளுள; அவை பலரும் விரித்தலின் விரித்திலமென்க.

கக. முற்கா லத்துப் போதகா சிரியர்
மொழிகுவர் மறையா ரருமையாம் விதிகளை
வழிவழி நின்று வழங்கற் பொருட்டே
யிக்கா லத்தா ரென்பய னினைந்தோ
விசையார் தாமு மிசையார் பூமியி
லிங்ஙன மாதலி னிறக்குமென் றெண்ணி
யவைகளைத் திரட்டி யமைத்தன னன்றி
நூலிலை யென்று நுவன்றன னன்றே
யாகையாற் பலநூ லாய்ந்தார் நோக்குக
வேனையோர் நோக்கிநே ரெள்ளள வாயினும்
பயன்பட லிலையே பலியா திடமே.

இது உணர்வோர்க்கும் உணர்த்துவோர்க்கும் பொதுவாக ஓர் கருவி கூறுகின்றது. கூரியராயின் எளிமைவிதிகளை ஒருவருணர்த்தாதுமுணர்வர், அருமைவிதி அங்ஙனமன்றென்பது தோன்ற, இறந்ததுதழீஇயவெச்சத்திற்கும் உயர்வுசிறப்பிற்கும் பொதுவாகிய உம்மையை விரித்து விதிகளையுமென்றிலம். பேரறிவோர் தமக்கும் தம்மைப் பொருளென்று கொண்ட மாணுக்கர்க்கும், பயன்படுதலைச் சிறிதாயினும் நோக்கார், இறவாது நிலைநிற்றலொன்றனையே பயனுக நோக்குவரென்பது தோன்றத் தேற்றங்கொடுத்துப் பொருட்டேயென்றும். இழிகுணநோக்கிப் போதகாசிரியரென்னுது இக்காலத்தாரென்றும். தமக்கியாதானுமோர்பயனை நோக்கி ஒரோவழியுரைப்பினும் மனம்பொருந்தியுரையாரென்பது தோன்றக் கூருரென்னுது இசையாரென்றும். பிறந்தவரெல்லாமிறப்பர் யாமாத்திரம் இருப்பேமென்னுஞ்சருத்தால், சொல்லாரென்பது தோன்றவும், பிறர்க்கும் விளம்பார் தாமுமனுபவியாரென்பது தோன்றவும், இழிவுசிறப்பிற்கும் இறந்ததுதழீஇயவெச்சத்திற்கும் பொதுவாகிய உம்மை கொடுத்துத் தாமுமென்றும். கூருராயினுங் குற்றமன்று இருப்பாராயின் அனுபவிப்பாராயினென்பது தோன்றவும், வாய்நிறைவாழ்த்துச் செவியறிவுறூஉ முதலியவற்றுள் நூல்களறிவுறுத்தினும் அதன்வழியிறங்காரென்பது தோன்றவும், இசையாரென முப்பொருடோன்றக் கூறினும். உயிர் நித்தியமாதலாற் பூமியென்றும். முற்கூறிய கொத்தென்னும்பொருளை வலியுறுத்தற்பொருட்டுத் திரட்டியென்றும். நூலென்னுது பலவென்றதனுனும், கற்றுரென்னுது ஆய்ந்தாரென்றதனுனும், கற்கவென்னுது நோக்குகவென்றதனுனும், இந்நூல்விதிகள் எளிதினகப்படுமென்றெண்ணற்க. இக்கருவியில்லோர் வெறுக்கத் துணி

தற்பொருட்டு ஈற்றடியிரண்டும் வேண்டாகூறினம், அதனால் வேண்டியது முடிக்க. அதென்னெனின், இக்கருவி இல்லோர்க்குச் சிலவிதிகள் அகப்படுமாயினும், "தெருளாதான் மெய்ப்பொருள் கண்டற்றாற் றேரி—னருளாதான் செய்யு மறம்" "மழக்கையி லங்குபொற் கிண்ணம்" போலுமெனக. (கக)

கஉ. இந்நூற் குதாரணந் தொன்னூற் செய்யுளுட்
சிலவே யெழுதினம் பலவே யெழுதின
முலக வழக்கினு ளுணரும் பொருட்டே.

ஆதன்றந்தையென்பது, செய்யுளில் வருங்கால் அவ்வாறு வாராது, ஆந்தையென்றே வரும். இச்சொல்லை வேற்றுமைத்தொகைக்குதாரணங்காட்டினமாயின், சிற்றதிகாரங்களைக் குற்றமற முற்றக் கற்ற சூரியரும் அவ்வாறுகொள்ளாது, நிலைமொழியேதோ, அவ்வீறேதோ, வருமொழியேதோ, அம்முதலேதோ, எவ்வுருபு தொக்கதோ, எங்ஙனந்தொக்கதோ, ஈதொருபறவைப்பெயரோ, பிழைபட்டதோ எனப் பலவுமெண்ணி அலைவரே, அப்பொருள் பெறுரே. பிணிக்கண்வருந்தினான், நோந்தான், கொடுத்தானென்பது உருபுதொக்குச் செய்யுளில் வருங்கால், இக்குச்சாரியை பெற்றுப் பிணிக்குவருந்தினனென்றே வரும். இச்சொல்லை வேற்றுமைத்தொகைக்கு உதாரணங்காட்டினமாயின், அவ்வாறு கொள்ளாது, உருபு விரிந்ததென்றே துணிந்து, உரையையும் உதாரணத்தையும் பிழையென்று கருதுவர்; அதுபற்றிச் சிலவென்றும். நாலு கைவெட்டினான், அஞ்சுநாட்பயந்தான் இச்சொல்லை உலகவழக்குப்பற்றி எண்ணுப்பெயர்க்கு உதாரணங்காட்டினமாயின், பேரதிகாரங்களைப் பெரிதுமுணர்ந்தபெரியோர் அவ்வாறு கொள்ளாது, நான்றகையை வெட்டினான், அஞ்சத்தக்ககாலத்தஞ்சினான் என்று பொருடுணிந்தேவிடுவர், நான்கைந்தென்பதே பழக்கமாகையால். அதுபற்றிப் பலவென்றும். எனவே, இருவழக்கும் ஒன்றற்கொன்று பொருந்தாமைகாண்க. இருவர்க்கும் பொருந்தல்வேண்டுமென்னுங்கருத்தாற் பலவற்றையும் சிலவற்றையுங் கழித்தனமென்பது 'உணரும்பொருட்டே' என்பதனாலறிக. யாங்கூறிய விதிகட்குச் செய்யுளில்லையென்றெண்ணற்கவென்பது தாற்பரியம்.

பாயிரமுடிந்தது.

முதலாவது

# வேற்றுமையியல்.

௧௩. வினைமுதல் விளியே செயப்படு பொருளே
கருவி கொள்வோ னீக்கங் குறையே
யிடமென வெட்டும் வடமொழி வேற்றுமை
யேழா றென்று மியம்புந் தமிழ்நூல். (௧)

௧௪. விளிகுறை யிரண்டையும் விட்டவேற் றுமைகள்
வினையான் முடியிற் காரக மெனப்பெறுங்
குறையும் வினைகொளி னேரோவழிக் கூடும்.(௨)

௧௫. நாரா யணன்பூ வோரா யிரத்தைக்
கரத்தாற் கொய்தோ ரார்கே கொடுத்துச்
சக்கரச் சிறுமையி னீங்கி நற்சுவைப்
பாற்கடற் கண்ணே பள்ளிகொண் டானெனக்
காரக முழுதும் வந்தன காண்க
விவற்றினு ளொன்றே யியம்பினுங் காரகம். (௩)

௧௬. உருபுவே றுருபு சொல்லுரு பென்ன
வேற்றுமை யுருபு மூன்றென விளம்புவர்.

உ-ம். வாளால்வெட்டினான்; வாளின்வெட்டினான்; வாள் கொண்டுவெட்டினான் எனவரும். (௪)

௧௭. அவைதாம்--உரிமையாய் நிற்ற லொப்பாய் நிற்றன்
மாறுபட நிற்ற லெனவழங் குவரே.

உ-ம். வாளால்வெட்டினான்; ஆலத்தினாலமிர்தாக்கியகோன்; 'காலத்தி னாற்செய்த நன்றி' எனவரும். (௫)

௧௮. உருபுவே றுருபு சொல்லுரு பாகியு
முருபினை யேலாப் பெயரே யாகியு
முருபினை யேற்ற பெயரே யாகியு
முருபு தொக்க பெயரே யாகியு
மிரண்டுரு பிணைந்தா லொன்றுரு பாகியு
மாறி நின்றும் வருமிட வுருபே.

உ-ம். ஊர்க்கணிருந்தான். எ-ம். ஊரிலிருந்தான். எ-ம். ஊர்த்திசையிருந்தான். எ-ம். கண்ணகன்ஞாலம்; கண்ணகன்பரப்பு. எ-ம். கடையைக்காப்பான்; இடையைக் காப்பான்; தலையைக் காப்பான். எ-ம். முன்பிறந்தான்; பின்பிறந்தான்; தலைச்சென்றான்; தலைமழை; கடைகாப்பான்; வலமிரார்; மேலிருந்தான்; கீழிருந்தான். எ-ம். தலைக்கட்சென்றான்; இடைக்கண்முரிந்தார்; கடைக்கானின்றான்; மருங்கிலிருந்தான். எ-ம். உள்ளூர்மரம், கிணறு, தொழில், பிழைப்பு. கீழ்நீர்மீன், முதலை, ஆமை. மீகண்விழி, ஒளி, பாவை. எ-ம். வரும். (௬)

௧௬. வேற்றுமை யுருபுக ளல்லா தனவும்
வேற்றுமை யுருபுகள் போல்வெளிப் படுமே.

உ-ம். பெண்ணைவளர்த்தான்; காலைவணங்கினான், மாலைவென்றான்; மாலைவிரும்பினான், மயங்கினான்; கோட்டையிழைத்தான், இணக்கினான்; வேலைவென்றான். எ-ம். எண்ணொடுநின்று பிரிந்தது; தலையோடுதகர்ந்தது; ஊரானோர் தேவகுலம்; குலத்தாலொருவன்; வேலொடுநின்றான். எ-ம். வீட்டிற்குநல்வினை விரும்பிச்செய்தான்; உணற்குவந்தான்; சித்திரைக்குப்போனான்; ஆடிக்குவந்தான். எ-ம். சாரியையின்னீங்கிற்று, திரிந்தது, வேண்டும். எ-ம். அவனதுசெய்தான்; இவனதுசெய்தான். எ-ம். அவன்கண்பதினைந்து; நெற்றிக்கண்ணெருப்பு; அவன்றலையைந்து; அவளிடைசிறிது; இவன்கானெடிது; அவன்கடைவெல்லம்; அவன்வாயுரை; இவன்புடைகொடிது. எ-ம். வரும். (௭)

௨0. உருபேற் றதனையு முருபையு முருபு
நோக்கிவந் ததனையும் வேற்றுமை யென்பர்.

வேறுபடுதலால் வேற்றுமை, வேறுபடுத்தலால் வேற்றுமை, வேற்றுமையை முடித்தலால் வேற்றுமையென்று பொருளுரைப்பர். (அ)

௨௧. உருபினை யேற்றசொற் பலபொருள் படுதலு
முருபுநோக் கியசொற் பலபொருள் படுதலு
மெனவிரு கூறும் வேற்றுமை யென்பர்.

"வினைசெ யிடத்தி னிலத்திற் காலத்தின்." எ-ம். "பொருண்மை சுட்டல் வியங்கோள் வருதல்." எ-ம். வரும். * (௯)

* இவ்விரண்டுந் தொல்காப்பியச்சூத்திரம். முன்னையது உருபினையேற்ற சொற்பலபொருள் படுதற்கும், பின்னையது உருபுநோ

உஉ. ஒருவேற் றுமைக்கோ ருருபே வருதலு
மொருவேற் றுமைக்குப் பலவுருபு வருதலு
மெனவிரு கூறாய் வருமுரு புகளே
யைகுவ் வொன்றே யல்லன பலவே. (கo)

உங. ஒருரு பிற்கே பலபொருள் வருதலு
மொருபொருட் கேபல வுருபுகள் வருதலு
மெனவிரண் டாகும் வேற்றுமை யியல்பே
யவ்விரண் டனையு முறையே யறைகுவன். (கக)

உச. பகுபதம் பகாப்பத மிருவகைத் தொடர்ப்பதம்
வினைமுற் றுப்பெயர் குறிப்புமுற் றுப்பெயர்
தொழிற்பெய ராதியிற் றோன்றுமெட் டுருபே.

உருபாறேயுள்ளன எட்டுருபென்றதென்னெனின், "எவ்வகைப் பெயர்க்குமீ ருய்ப்பொருள்—வேற்றுமை செய்வன வெட்டே.' எனத்தேற்றேகாரத்தானும், "இருநான்-குருபு முறழ்தர நாற்பதா முருபே." என இனைத்தெனவறிந்த உம்மையானுமெனக. அன்றியும், விளியுருபு தொல்காப்பியவிளிமரபினுட்காண்க. (கஉ)

---

எழுவாயுருபுவிதியை ஓர்சூத்திரத்தாற்கூறுகின்றாம்.

உரு. எழுவாய் வேற்றுமைக் குருபே யின்று
பெயரே பயனிலை கொள்ளுந் தன்மையே
பயனிலை தன்னைக் கொண்ட தன்மையே
வினைமுத லாதலே விகாரப் பெயரே
பெயர்ப்பின் விகுதி பெறுதலே யாயவ
னவ னவா னாகின் றவன்முத
லைம்பாற் சொல்லும் பெயர்ப்பி னடைதலே
யுருபென வெவ்வே றுரைத்தார் பலரே.

ஈற்றசையொழிந்த. ஏகாரமெட்டுந் தேற்றம். முன்னின்ற
தொழிந்த ஏகாரமேழன்பின்னும் உருபென்பதனையொட்டி, எனவு
ரைத்தாரென்பதனை எண்பொருளினுமொட்டுக. எனவென்பதற்கு
உம்மைகொடுத்து எட்டடுக்கி உரைத்தாரென முடித்தலுமாம்.

---

க்கிய சொற்பலபொருள் படுதற்குங் காட்டப்பட்டன. முன்னைய
தற்கு உதாரணம்: தட்டுப்புடைக்கலன்வந்தான்; மாடத்தின்சனி
ருந்தான்; கூதிர்க்கண்வந்தான். எ-ம். பின்னையதற்கு உதாரணம்:
ஆவுண்டு; ஆசெல்க. எ-ம். வரும்.

இவற்றுள் முன்னின்றவைந்தும், பலர்நூல்களானும், பலவுரைகளானும், தெளியக்கிடந்தன. ஏனைமூன்றும் விளக்குகின்றாம்.

தன், தம், நம், என், எம், நின், நும் என்னுந் திரிபில்பெயர்கள் உருபுகளையும், உருபோடு வருமொழிகளையும், உருபின்றி வருமொழிகளையும் ஏற்றுநிற்கும். இப்பெயர்கள் எழுவாயாங்காற் றிரிந்தேநிற்கும். இத்திரிபே யுருபென்க.

இனி இறைவன்கடியன், காக்கும்; தையலாள்வரும்; உமையாளமர்ந்துவிளங்கும்; கோன்வந்தான்; கோக்கள்வந்தார்; மரமது வளர்ந்தது; மரங்கள்வளர்ந்தன இவ்விகுதிகளே உருபென்க. இவ்வுருபுகளைத் தொகுத்துமறிக.

இனி ஆயவன்முதல் நாற்சொல்லும் பாலால் இருபதாம். அவையே உருபு. சாத்தனானவன்வந்தான் இதனுள் எழுவாயும் உருபும் பயனிலையுங்காண்க. பிறவுமன்ன. இவற்றைத் தொகுத்து மறிக.

ஆயின், ஐ குப்போல ஒன்றே உருபெனவேண்டுமெனின், மூன்றைந்தாறேழனுருபுகள் பொருத்தத்தானும்; பொருளானும், பாலானும், பலவாறற்போலவும், உவமவுருபுகள் பொருத்தத்தானும், பொருளானும், பலவாறற்போலவுமென்க. ஆயின் மரமானதைபறுத்தான்; வாளானதால்வெட்டினான்; என ஐமுதலிய உருபுகளையேற்றலின் உருபன்றெனின், ஆறனுருபு உருபுகளையேற்றாற்போலவென்க. * ஆயின், ஐ குப்போல உருபுகொள்ளுதலன்றிச் சொற்கொண்டதென்னெனின், கொண்டு, பொருட்டு, உடைய, உளி, மாறு, ஒடு, ஓடு, கண்முதலியனவும் உவமவுருபுகளும் சொல்லே யுருபானாற்போலவென்க. சாத்தன்வெட்டினான், பொருதான், கொடுத்தான், நீங்கினான், அடிமை, வந்தான். எ-ம். மக்கள் சொன்னார்; உவரியொலித்தல்; ஆற்றல்சான்று; ஆயன்சாத்தன். எ-ம். உருபின்றிப்பெயராகிய எழுவாயுருபுதானே பயனிலைகொண்டதென்று கொள்ளிற் குற்றமென்னெனின், யான்வந்தேன்; நீ வந்தாய் என்றாற்போல எழுவாய்ப்பொருள்படுதலின்றி, சாத்தனைவெட்டினான்; சாத்தனொடுபொருதான்; சாத்தற்குக்கொடுத்தான்; சாத்தனினீங்கினான்; சாத்தனதடிமை; சாத்தன்கண்வந்தான். எ-ம். மக்களைச்சொன்னாருயர்திணையென்று; உவரிபோலொலித்தவொலி; ஆற்றற்குச்சான்றிந்திரன்; ஆயனாகியசாத்தன். எ-ம்.

* ஆறனுருபு உருபேற்குமென்றது தொல்காப்பியச்சூத்திரவிருத்தியின் மறுக்கப்பட்டது.

எழுவாயாகாமல் வேறுபொருள்படுதலிற் குற்றமென்க. இனியிவற்றையெழுவாயாக்கவேண்டில், சாத்தனனவன்வெட்டினன்; மக்களானவர் சொன்னார்; உவரியானதொலித்தல்; ஆயனின்றவன் சாத்தன் எனவுருபுகொடுத்தாலே எழுவாயாமென்க.

இனி இவ்வுருபின் பொருள்படப் பிறசொற்கள் வருவனவுமுள. இல்வாழ்வானென்பான்றுணை; எழுத்தென்பதொலி என்பன இல்வாழ்வானனவன்றுணை; எழுத்தாவதொலி எனப்பொருள்படுதல் காண்க. பிறவுமன்ன.

பலர் நூல்களினும், பலருரைகளினும் இங்ஙனம் பிறந்த உருபுகள் உருபென்று பெயர்பெறாமல் பொருளை முடிக்கவந்த வாசகமென்றும், சொல்லென்றும், பெயர்பெற்று, முற்காலத்தேயமைந்தனவென்றே கொள்க. அஃதன்றாயின், இவ்வுருபு இன்றியமையாதாதலால் "கடிசொல்லில்லை" "புதியனபுகுதலும்" என்பதனானும், தேங்காய்முதலிய சொற்களைப் புதிதாக விதித்தலானும், தமிழிற்கின்றாகிய வடமொழியிலக்கணந் தமிழின் வருதலானும், எழுவாயுருபும் வடமொழியிற்கண்டு இன்றுகொண்டு வந்ததென்றலுமொன்று. இக்கருத்துத் 'தரங்கக்கும் வண்ணகக்குந் தரவாவது.' 'வாழ்வாவது மாயம்.' எ-ம். 'அறமாவதிதல்.' எ-ம். மூவகைச் செய்யுளானுமறிக.

'வடமொழி யெழுவாய்க் குருபுமூன் றவைதாம்—விரியவுந் தொகவும் விரும்பு மென்ப.' இஃதுரைச்சூத்திரம்.

இவ்வெண்விதியோடெழுந்த சூத்திரம் பிறர்மதங் கூறலேயாம், தன்றுணிபுரைத்தலன்று. இவ்வெண்மருந் தம்முண்மறுப்பர்; அவை விரிக்கிற்பெருகும்.

---

இனி முற்கூறிய பொதுவிலக்கணங்களுள் உரிமையாய் நிற்கும் உருபுகளும், உருபினையேற்றசொற் பலபொருள்படுவனவும், ஒருருபிற்குப் பலபொருள் வருவனவுமாகிய மூவிலக்கணமும் ஒருங்கே தோன்ற, வினைமுதன்முதலாகச் சிறப்புச் சூத்திரஞ்செய்கின்றாம்.

உசு. இருவகைச் செயப்படு பொருளே யேதுத்
தன்வசந் தெரியா நிலைதடு மாற்றந்
தொழிற்பெய ரேழிற் றோன்றும் வினைமுதல்
கருவி யிடங்கொள் வானினுங் கருதுவர்,

உ - ம். "பிறர்க்கின்னா முற்பகற் செய்யிற் றமக்கின்னா—பிற் பகற் றாமேவரும்." "பெரியவர் கேண்மை பிறைபோல நாளும்— வரிசை வரிசையா னந்தும்- வரிசையால்—வானூர் மதியம்போல் வைகலுந் தேயுமே—தானே சிறியார் தொடர்பு." என்பனவற் றுள் 'இன்னா தாமே வரும்;' 'கேண்மை தானே நந்தும்;' 'தொட ர்புதானே தேயும்' எனச் செயப்படுபொருள் தேற்றத்தோடு வினை முதலாய்ச் செயப்படுபொருள் குன்றியவினை கொண்டது. தின் ணைமெழுகிற்று எனச்செயப்படுபொருள் தேற்றமின்றி வினைமுத லாய்ச் செயப்படுபொருள் குன்றாதவினைகொண்டது. இவ்விருவ கையும் வடமொழிவிதியாகலின், விரிக்கிற்பெருகும். ஆதித்தன் கற்றீப்பிறப்பித்தான்; காற்றுப் பழமுதிர்த்தது இவை ஏதுகரு த்தா. சாத்தனுண்டான் இது தன்வசக்கருத்தா. மாடஞ்செய்யப்ப ட்டது இது தெரியாநிலை. தெரியாநிலையாவது வினைமுதலென்று தெரியப்படாமல் வினை முதலாயே நிற்பது. இது தெரியாநிலையெ னவே, ஏனைய தெரிநிலையென்க. 'ஒத்த கிழவனுங் கிழத்தியுங் காண்ப' இது தடுமாற்றம். தடுமாற்றமாவது ஓர் பொருளே ஒரு கால் வினைமுதலாயும், ஒருகாற் செயப்படுபொருளாயுநிற்றல். 'கொல்லாமை யறவினையெல்லாந்தரும்;' 'கோறல் பிறவினை யெல் லாந்தரும்;' 'தேரான்றெளிவுந் தெளிந்தான்க ணையுறவுந்—தீரா விடும்பை தரும்' இவை தொழிற்பெயர்க்கருத்தா.

கண் காணும்; குன்று குவட்டைத் தாங்கும்; தூண் போதி கையைத் தொட்டது; 'இரப்பவ ரென்பெறினுங் கொள்வர்' எனக் கருவிமுதன்மூன்றும் முறையே காண்க. கருதுவரெனவே இலக் கணமன்று. (கச)

உ௨எ. இருவினை முதலா லொருவினை யும்முள.

உ - ம். தாய்மகவுக்கூட்டினாள்; ஆரியன் மாணாக்கனுக்குப் படிப்பித்தான்; தலைவன் றலைவியைப்புல்லினான் எனவரும். (கரு)

உஅ. ஏவுத லியற்றுத லிவ்வயின்வே றுத
லெனவினை முதன்மூ வகையா மென்ப.

உ - ம். அரசன்றேர்செய்தான்; தச்சன்றேர்செய்தான்; சாத்த னுறங்கினான் எனவரும். (கசு)

உகூ. வினைமுத லின்னும் விரிக்கிற் பெருகும். (கஎ)

ங௦. அழைத்த லென்றொன் றன்றிவே றின்மையின்
விளிக்குச் சூத்திரம் விளம்பில மென்க. (கஅ)

௩க. கருத்துண் டாதல் கருத்தின் ருத
லிருமையு மாத லீருரு பிணைதல்
கருத்தா வாத லகநிலை யாத
றெரிநிலை யாதியாய் வருஞ்செயப் படுபொரு
ளியற்றப் படுத லெய்தப் படுதல்
வேறு படுக்கப் படுத லாதியு
மவ்வெழு வகையு ளடங்கு மென்ப.

உ - ம். சோற்றையுண்டான். எ-ம். சோற்றைக்குழைத்தான். எ-ம். எறும்பைமிதித்து வழியைச் சென்றான்; பசும்புல்லை மிதித்துப் பலவுரையடைந்தான்; தூளொடு கூழையுண்டான்; நஞ்சினைக் கலந்தபாலைக் குடித்தான்; கத்தரிக்காயையும் புழுவையுங் கறித்தான்; பதரையு நெல்லையும் பணத்திற்குக் கொண்டான். எ-ம். ஆரியனையையுற்றபொருளை வினவினான். எ-ம். பசுவினைப் பாலினைக் கறந்தான்; யானையைக் கோட்டைக்குறைத்தான். எ-ம். [பசுவினது, யானையதுபோல, ஆரியனது என வாராமைபற்றி இருவகைப்பட்டீருருபிணைதலென்றும்.] தன்னைப்புகழ்ந்தான்; தன்னைக்குத்தினான்; தன்னைப்பேணினான்; தன்னைக்காதலித்தான். எ-ம். வருதலைச்செய்தான். எ-ம். மாடஞ்செயப்பட்டது. எ-ம். ஏழும் முறையே காண்க. தெரிநிலையாவது வினைமுதலுருபேற்றுஞ் செயப்படுபொருளேயெனத் தெரியநிற்றல். இது தெரிநிலையெனவே, ஏனைய தெரியாநிலையென்க. தெரிநிலை தெரியாநிலை வடமொழிவழக்கு.

எயிலையிழைத்தான்; பொருளைப்பெற்றான்; கயிற்றையறுத்தான் முதலியன அவற்றுளடங்கும்.

ஆதியென்றதனால், ஆரியன் மாணக்கனையூர்க்குப் போக்கினான்; தாய்மகளை யூர்க்குப் போக்கினாள் என்புழி மாணாக்கன் மகளென்னும் இருவரும் போதலாலே வினைமுதலாயும், ஏவப்படுதலாற் செயப்படுபொருளாயும், ஏவுவித்துக் கொள்ளுதலால் ஏவுதற்கருத்தாவாயும், ஏவப்போதலால் இயற்றுதற்கருத்தாவாயும் வந்தன. 'ஒத்த கிழவனுங் கிழத்தியுங் காண்ப.' என்புழிக் கிழவனுங் கிழத்தியும் தனித்தனி வினைமுதலாயுஞ் செயப்படுபொருளாயும் வருதல் காண்க. (கக)

௩உ. செயப்படு பொருளினுஞ் செப்பிற் பெருகும். (உ0)

௩௩. அகம்புற மொற்றுமை யாகுங் கருவி.

உ-ம். மனத்தானினைந்தான்; வாளால்வெட்டினான்; அறிவானறிந்தான் என வரும். (உக)

ருச. முதறுணை ஞாபகங் காரக மேது
வினையே நிமித்தம் வேற்றுமை வினைமுதல்
காலமா திகளையிம் மூன்றனுட் கருதுவர். (உஉ)

ருரு. கருவியை யின்னுங் கழறிற் பெருகும். (உரு)

ருசா. கேளா தேற்றல் கேட்டே யேற்ற
லேலா தேற்ற லீவோ னேற்ற
லுயர்ந்தோ னேற்ற லிழிந்தோ னேற்ற
லொப்போ னேற்ற லுணர்வின் றேற்றல்
விருப்பா யேற்றல் வெறுப்பா யேற்ற
லாதியாப் பலவு மறைந்தனர் கொள்வோன்.

உ-ம். ஆவிற்கு நீர்விட்டான். எ-ம். வறியார்க்கீந்தான். எ-ம். மாணாக்கனுக் கறிவைக் கொடுத்தான். எ-ம். தனக்குச்சோறிட்டான்; தனக்கரிசிகொடுத்தான்; 'அருமறை சோரு மறிவிலான் செய்யும்—பெருமிறை தானே தனக்கு.' எ-ம். அரனுக்குக் கண்ணலர்கொடுத்தானரி. எ-ம். அரிக்குச் சக்கரங் கொடுத்தானரன். எ-ம். சோழற்கு விருந்து கொடுத்தான் சேரன். எ-ம். சோற்றிற்கு நெய்விட்டான்; நீர்க்குவாசமூட்டினான்; வாளிற்குறைவழங்கினான்; தண்டிற்குத் தங்கங்கட்டினான்; சுவர்க்குச் சித்திரமெழுதினான். எ-ம். மாணாக்கனுக்குக் கசையடிகொடுத்தானாசிரியன். எ-ம். கள்ளனுக்குக் கசையடிகொடுத்தானரசன். எ-ம். முறையேகாண்க.

ஆதியென்றதனால், மருகனுக்கு மகட்கொடுத்தான் வழக்கு' மகனுக்கரசுகொடுத்தான் உரிமை, அரசற்குத் திறைகொடுத்தான் அச்சம், தந்தை தாய்க்குத் திதிகொடுத்தான் பாவனை எனவும் வரும். (உச)

ருஎ. கொள்வோனை யின்னுங் கூறிற் பெருகும். (உரு)

ருஅ. நிலைத்திணை யியங்கு திணைபண் பாதியி
னீக்கம் வருமென நிகழ்த்தினர் புலவர்.

உ-ம். மலையினிழிந்தான். எ-ம். யானையினிழிந்தான். எ-ம். 'சிறுமையினீங்கிய.' எ-ம். முறையேகாண்க.

ஆதியென்றதனால், 'குடிப்பிறந்து குற்றத்தினீங்கி;' 'ஐயத்தினீங்கி' எனவும் வரும். (உசா)

௩௯. நீக்க மின்னு நினைக்கிற் பெருகும். (உஎ)

௪0. ஒற்றுமை வேற்றுமை யுரைக்கப் படுங்குறை
யொற்றுமை யாவதோர் பொருளே யாகு
மொன்றாய்த் தோன்ற லுரிமையாய்த் தோன்றல்
வேறாய்த் தோன்ற லெனவேற் றுமையா
மொன்றன் கூட்டம் பலவி னீட்டந்
திரிபி னாக்கஞ் சினைகுணந் தொழிலென
வோரறு வகையா மொன்றாய்த் தோன்றல்
பொருளி டங்கால மிருவகை நாலென
வுரிமையாய்த் தோன்ற லுரைக்கப் படுமே
வேறாய்த் தோன்றல் வேறிடத் துஞ்செலு
நிலைமையி லுடைமைகள் பலவு மாகும்.

உ-ம். என்னுயிர்; இராகுத்தலை இவை ஒற்றுமை.

எள்ளதுகுப்பை. எ-ம். படையதுகுழாம். எ-ம். கோட்டது நூறு. எ-ம். சாத்தனதுகண். எ-ம். நிலத்ததகலம். எ-ம். சாத்தனதுவரவு. எ-ம். ஒன்றாய்த்தோன்றல் வகையாறும் முறையே காண்க.

முருகனதுவேல். எ-ம். முருகனது குறிஞ்சி. எ-ம். வெள்ளியதாட்சி. எ-ம். சம்பந்தனது தமிழ். எ-ம். சம்பந்தனது பிள்ளைத்தமிழ். எ-ம். உரிமையாய்த்தோன்றல் வகையைந்தும் முறையே காண்க.

சாத்தனதுபசு; சாத்தனதுசெறு; சாத்தனதுபொன் என வேறாய்த்தோன்றல் வந்தமை காண்க. இவை முன் ஒருவர்க்குரிமையாயும், பின் வேறொருவர்க்குரிமையாயும் வருதலின், நிலைமையிலுடைமையென்றாம்.

இம்மூவகைவேற்றுமையை வடநூலார் நூற்றொருபேதமாக்குவர். (உஅ)

௪௧. குறையை யின்னுங் கூறிற் பெருகும்.

௪௨. உரிமை யிருவகை யோரிட * மெங்கு
மெனநான் கென்றே யியம்புவ ரிடனே
காலந் திக்கா காயம் வெயிலிரு
ணிலமரு வுருமுத னிகழ்த்தப் படுமிடம்

* ஓரிடமேவல் இருவகையாவன சமவாயமுஞ் சையோகமுமாம். சமவாயம் - ஒற்றுமை. சையோகம் - கூட்டம்.

கூட்டிப் பிரித்தல் பிரித்துக் கூட்ட
லிருவரின் முடியு மொருவினைத் தொழிற்பெய
ரெனமூ வகைப்படு மிடமல் லாவிட
மிடத்தி னிகழ்பொரு ளிருவகை யருவுரு.

உ-ம். நிலத்தின்கட் டேரோடுகின்றது; கடற்கணாவாயோடுகின்றது; ஆகாயத்தின்கட்பருந்து பறந்தது; காட்டின்கட்புலி வாழ்ந்தது. எ-ம். மதிக்கண்மறு; கையின்கண்விரல்; குன்றின்கட்குவடு; நெற்றியின்கண்விழி; ஆண்டின்கணிருது; நாளின்கண் வைகறை. எ-ம். ஊர்க்கணிருந்தான்; தேர்க்கணிருந்தான். எ-ம். மணியின்கணொளி; உயிரின்கணுணர்வு; பாலின்கட்சுவை, நெய்; தீயின்கட்சூடு; நீரின்கட்சீதம். எ-ம். நான்கும் முறையே காண்க.

'உடையானரசருளேறு;' 'அவற்றுள், அ இ உ எ ஒக்குறில்.' எ-ம். 'வானுறையுந்-தெய்வத்துள் வைக்கப் படும்.' 'மற்றையான்-செத்தாருள் வைக்கப் படும்.' எ-ம். 'புல்லி விடாஅப் புலவியுட்டோன்றும்;' தட்டுப்புடைக்கண்வந்தான்; புல்லுதற்கண் வேர்வை வந்தது; பொருதற்கண்மழை பெய்தது; சூதாடற்கட்டுேக்கம் வந்தது. எ-ம். மூன்றும் முறையே காண்க. (௩௦)

௪௩. இடத்தி னிலக்கண மின்னும் பலவாம்.

---

இனி முற்கூறிய பொதுவிலக்கணங்களுள் ஒப்பாய்நிற்குமுருபுகளும், ஒருபொருட்கே பலவுருபுகள் வருவனவும், வேறுருபுகள் வருவனவுமாகிய மூவிலக்கணமும் ஒருங்கே தோன்ற, வினைமுதல் முதலாகச் சிறப்புச்சூத்திரஞ்செய்கின்றாம். உருபுநோக்கிய சொற் பலபொருள்படுதல் தொல்காப்பியர் நன்னூலார் "பொருண்மைசுட்டல்" என்னுஞ் சூத்திராதிகளானும் "வினைபெயர்வினாக்கொளல்" என்னுஞ் சூத்திராதிகளானும் விரித்தனர், அதனால் விரித்திலமென்க.

௪௪. ஒன்று மூன்றுநான் காறெனு முருபொடு
வருமே வினைமுத லெனவகுத் தனரே.

உ-ம். அவர்செய்தார். எ-ம். அவராற்செய்யத்தகுமக்காரியம் எ-ம். அவர்க்குச்செய்யத்தகுமக்காரியம்; 'இனைத்தென வறிந்த சினைமுதற்கிளவிக்கு-வினைப்படு தொகுதியி னும்மை வேண்டும்.'

'இன்னென வரூஉம் வேற்றுமை யுருபிற்—கின்னென் சாரியை யின்மை வேண்டும்.' எ-ம். அவரதுவரவு. எ-ம். முறையே காண்க.

சரு. எல்லா வுருபொடுஞ் செயப்படு பொருளெழும்.

உ-ம். சோறடப்பட்டது; சோற்றையட்டான்; அரசியாற் சோறுக்கினன்; அவட்குக் கொள்ளுமிவ்வணிகலம்; பழியினஞ் சும்; நூலதுகுற்றங்கூறினன்; தூணின்கட்சார்ந்தான் என முறையே காண்க. (௩௩)

சசா. ஒன்று மூன்றுநான் கைந்தா றுருபொடு
கருவி வருமெனக் கருதினர் பெரியோர்.

உ-ம். கண்காணும்; கண்ணாற்காண்பன்; கண்ணிற்குக்காண லாம்; கண்ணிற்காணலாம்;கண்ணதுகாட்சி என முறையேகாண்க.

சஎ. எல்லா வுருபொடுங் கொள்வோ னெழுமே.

உ-ம். 'இரப்பவ ரென்பெறினுங் கொள்வர்;' 'செய்யவ டவ் வையைக் காட்டிவிடும்.' நாகராற்பலி; நாகர்க்குப்பலி; நாகரின ன்புசெய்தான்; நாகரதுபலி; நாகர்கணன்புசெய்தான் என முறை யே காண்க. (௩௪)

சஅ. இரண்டுநான் கைந்தொடு மெழுமே நீக்கம்.

உ-ம்: மதுரையைநீங்கினன்; மதுரைக்குவடக்குச்சிதம்ப ரம்; மதுரையின் வடக்குச்சிதம்பரம் என முறையேகாண்க.(௩௫)

சகூ. நான்கைந் தாறே ழொடுகுறை நடக்கும்.

உ-ம். சாத்தனுக்குமகன்; மரத்தினீங்கினகொம்பு; சாத்த னதுகை; உயிரின்கணுணர்வு என முறையேகாண்க. (௩௭)

ருo. ஒன்றி ரண்டுநான் கேழொ டிடமெழும்.

உ-ம். தூண்போதிகை தொட்டது; தூணைச்சார்ந்தான்; இன்றைக்கு, நாளைக்கு, பகலைக்கு, அந்திக்கு, சந்திக்கு, மாலைக்கு, காலைக்கு, ஊர்க்கு, வீட்டிற்கு, வருவன்; தூணின்கட்சார்ந்தான் என முறையே காண்க. (௩அ)

---

இனி முற்கூறிய பொதுவிலக்கணங்களுள் உருபும் உரிமை யாய் நிற்றலுமாகிய ஈரிலக்கணமும் ஒருங்கே தோன்றவும், உருபு கள் தமக்குரிய பொருளல்லனவற்றையும் உணர்த்தலேன்றவும் வினைமுதல்முதலாகச் சிறப்புச்சூத்திரஞ் செய்கின்றும்.

௫க. ஒருரு பிற்கோர் பொருளே யுரிமை
வேறு பொருளையும் விரும்பு மென்க.

இவ்விருவிதியுந் தத்தஞ் சிறப்புச்சூத்திரத்துட்காண்க. (௩௯)

௫௨. வினைமுத லன்றியும் விரும்பு மெழுவாய்.

உ - ம். மாடஞ்செய்யப்பட்டது. (௪௦)

௫௩. செயப்படு பொருளைத் தெளித்தலு மன்றி
வேறு பொருளையும் விளக்கு மையே.

உ - ம். வீட்டைவிரும்பினான். (௪௧)

௫௪. கருவி கருத்தா வுடனிகழ் வன்றியு
மூன்று முருபுக டோன்றும் பலவினும்.

உ - ம். 'மலையொடு பொருதமால்யானை' வினையின்மை. 'தொடியொடு தொல்கவின் வாடியதோள்' வேறுவினை. 'பாலொடுதேன் கலந்தற்றே' மயக்கம். 'மதியோடொக்குமுகம்' ஒப்பு. 'விலங்கொடு மக்களனையர்' ஒப்பலொப்பு. 'எழுத்தொடு புணர்ந்தசொல்' ஒற்றுமை. (௪௨)

௫௫. கொள்வோனை விட்டுங் குப்பல பொருளாம்.

உ - ம். சோற்றிற்கரிசி ஆதிகாரணகாரியம். கூழிற்குக்குற்றேவல் நிமித்தகாரணகாரியம். பூவிற்குப்போனான்; உணற்குவந்தான் இருவகைப்பெயர்ப்பின் வினையெச்சம். பிணிக்கு மருந்து; உணற்குக் கருவி கை இருவகைப்பெயர்ப்பின் பெயரெச்சம். (௪௩)

௫௬. நீக்க மின்றியு நிகழ்த்து மின்னே.

உ - ம். 'பித்தரிற்பேதையாரில்' ஒப்பு. வேங்கடத்திற்றெற்கு; குமரியின் வடக்கு எல்லை. வாணிகத்தினயினான் ஏது. காக்கையிற் கரிது களம்பழம் ஒப்பின்மை. (௪௪)

௫௭. குறையே யன்றியுங் கூறுமா றுவது.

உ - ம். வாளதுவெட்டு. (௪௫)

௫௮. இடமே யன்றியு மியம்புமே ழாவது.

உ - ம். அறிவின்கட்டிரிவு. (௪௬)

௫௯. மாறுபட நிற்றல் வரம்பிலை யென்ப.

உ - ம். 'கிழங்குமணற்கீன்றமுளை;' 'காலத்தினாற்செய்தநன்றி, இவை கண்.

௬௦. உரிமைமுதன் மூன்று மொருங்கே தோன்ற
நிற்கு முருபுகள் சிலவுள நினைக்கின்.

உ-ம். பழியினஞ்சும்; பழியையஞ்சும்; பழியாலஞ்சும்.

நினைக்கினென்றதனால் இரண்டொருங்கே தோன்றலுமுள. மலையில்வீழருவி; மலையிலிருந்தான் என முறையே காண்க. (௬௮)

௬௧. தடுமா றுருபுக டாஞ்சில வுளவே.

உ-ம். 'அவ்வித் தழுக்கா றுடையானைச் செய்யவ—டவ்வை யைக் காட்டி விடும்' என்புழி ஒவ்வொருநிலைக்களத்து ஐயுங் குவ் வும் பொருந்தும். (௬௧)

௬௨. ஒன்றே வந்து மிரண்டே வந்து
மொன்று மிரண்டு முறழ்ந்தே வந்து
முருபுநோக் கியசொல் லொருமூ வகையாம்.

உ-ம். பாலைக்குடித்தான். எ-ம். பாலைத்தயிராக்கினான்; குடும்பத்தைக் குற்றமறைத்தான்; அரிசியாற்சோறாக்கினான்; மருமகனுக்கு மகட்கொடுத்தான். எ-ம். ஆகாயத்தின்கட்பருந்து, பறந்த கிடந்தவரசன்; வழிக்கட்டூதன், நடந்ததூதன். எ-ம். வரும். (௫௦)

௬௩. உருபுநோக் கியசொற் பலபொருள் படுதலை
முன்னோர் பலரு மொழிந்தனர் விரியா
விந்நூ லிற்சிறி தாயினு மியம்பிலன்.

௬௪. வேற்றுமை பலபல வாகத் தோற்றினும்
வினைமுதன் முதலா விளம்புமெண் பொருளி
லொவ்வொரு பொருளே வெவ்வே றுதலு
மொவ்வொரு பொருளிற் பல்லுருபு வருதலு
முருபுக டமக்குரிப் பொருளையு முதவி
வேறு பொருளையுஞ் சிலவிரும் புதலு
மெனமூன் றுள்ளே யெல்லா மடங்கும்.

தொல்காப்பியர், வேற்றுமைக்குப் பலபல விதிவிலக்கு வருதனோக்கி, ஓரியல்கொள்ளாது மூவியல்கொண்டும், முழுதுமுரைத்திலர்.

வடநூல்வழியோ வரம்பின்றேடுமென்பது தோன்றப் பலவென்றது, பலபலவென்றது, பலபலவெல்லாமென்றாம். அங்ங

னமாயினும், இங்ஙனங்கூறிய மூன்றனுள்ளே மடங்கியடங்குமெ
ன்பது தோன்ற, இரட்டுறமொழிந்தாம். (௫௨)

முதலாவது வேற்றுமையியன் முடிந்தது.

இரண்டாவது

## வினையியல்.

௩௫. தனிவினை தொடர்வினை யெனவிரு வினையினு
ணடவா முதலிய முதனிலைத் தனிவினை
விகுதிமுத லானவை கூடிற் றொடர்வினை.

என்பதுவெளி. (௧)

௩௬. முதனிலைத் தனிவினைக் குணமொழி குறினே
முதனிலைத் தொழிற்பெயர் முன்னிலை யேவ
லொருமைமுற் றன்றியும் வேறுவினை முற்றொ
டிருவகை யெச்சமவ் வெச்சமுற் றுக்களுந்
முதனிலை பிரிந்தவம் முதனிலைத் தொழிற்பெயர்
வினைமுத லாதியர் வெவ்வே றுத
லெட்டுரு பேற்றே யென்பொரு ளாதல்
செயப்படு பொருள்குன் றுமையுங் குன்றலும்
பொதுவு மிடங்குன் றுமையு மாதல்
பலபொருட் கொன்றுமோர் பொருட்கே பலவு
மாதலும் பகாப்பத மாதலு மன்றி
யியல்பினுந் திரிபினும் பகுதியென் றுத
லாதியாப் பலவே யூர்கு மென்ப.

உ-ம். ‘அறிகொன்றறியான்;’ ‘கெடுவாகவையாதுலகம்;’ ‘அங்காமுயற்சி’ இவற்றுள் முதனிலைதானே தொழிற்பெயராய் நின்றது காண்க.

‘செல்லாமை யுண்டேலெனக்குரை மற்றுநின்—வல்வரவு வாழ்வார்க்குரை.’ ‘என்னைக் குமாரற் கியம்பு’ இவற்றுள் முன்னிலைமுற்றுக் காண்க.

‘பெறுவது கொள்வாருங் கள்வருநேர்;’ ‘ஏ நிகரவற்றுள்ளே யேகமும்—ஓ நிகரவற்றுள்ளே யொன்றும்—புள்ளி கொள்

ளலைத் தள்ளா வாகும்' இவற்றுள் நேர்வர் நிகர்க்கும் என வேறு வினைமுற்று வந்தது காண்க.

பொருபடை; கொல்களிறு இவை பெயரெச்சமானது காண்க.

'வரிப்புனைபந்து;' 'அறுவேறு வகையின்;' 'பாலறிவந்த;' சாக்குத்தினன்; 'செய்தக்க வல்ல செயக்கெடுஞ் செய்தக்க—செய் யாமை யானுங் கெடும்;' 'மண் மாண் புனைபாவை யற்று' இவை வரிந்து, அற்று, அறிய, சாவ, செய்ய, மாட்சிமைப்பட என்று பொருள்பட்டு வினையெச்சமானது காண்க.

'கால காலனைக் காண்கின்ற போது—காலனைத் தூரத்துமக் காட்சி தானே.' 'கால காலனைக் கரிசறக் காண்கிற—காலனைத் தூ த்துமக் காட்சிதானே.' 'கால காலனைக் காண்கின் ஞூர்தமக்—கோ ர்வீ டளிக்குமக் காட்சியீ தின்மை.' இவற்றுள் மூன்றினும் நின்ற முதனிலை பிரிந்து தொழிற்பெயராய் வினைமுதலானது காண்க. ஆதியென்றதனால், 'அக்காட்சியாற்பயனுண்டு;' அக்காட்சிக்கினை யில்லை' இவைபோல்வனவெல்லாங்கொள்க. முதனிலையுமன்றித் தொழிற்பெயர் பிரிந்து வினைமுதலாதலுங்கொள்க. அது 'இருணீ ங்கி யின்பம் பயக்கு மருணீங்கி—மாசறு காட்சி யவர்க்கு' அக்கா ட்சி என்பதனாற் காண்க.

இவ்வுரைபெருகிற்று, சுருங்கிற்று; சொல்லைச்சேர்த்தான்; ஆயிரமுடியையவிழ்த்துநட்டான்; உரையாலறிவித்தான்; இச்சொ ற்குப் பொருளிது; இவ்வுரைக்குச் சொல்லிது; மடியினீங்கி வாணி கஞ்செய்தான்; இச்சொல்லினறியலாமிப்பொருள்; இவ்வுரையது பெருமைக்கொப்பில்லை; இச்சொற்கணிருக்கு மிப்பொருள்; களி வாராய்; மடி போவாய் இவற்றுளெட்டுருபேற்றே எண்பொருளா னது காண்க.

விடு, ஏ, வை, வெள, உண், தின், பார், கேள் இவற்றுட்செய ப்படுபொருள் குன்றுமை காண்க. நட, வா போ, வாழ் இவற்றுட் செயப்படுபொருள் குன்றுதல் காண்க. முடி, மடி, கெடு, தேய், தபு, பிரி இவற்றுட்பொதுக்காண்க. உரிஞ், செல் இவற்றுள் இடங் குன்றுமை காண்க.

ஒருவனை வைதான், சுமையை வைத்தான், படையின் மடிந் தான், சிலையைமடித்தான், இத்தொழிற்கு மடித்தான்; பணத்தை முடிந்தான், படையின் முடிந்தான் இவற்றுட் பலபொருட்கோர் முதனிலை காண்க. சொல், உரை, அறை, கூறு, விளம்பு, பகர்; ஈ, தா, கொடு இவற்றுள் ஒருபொருட்கே பலமுதனிலை காண்க. பகா ப்பதமுமது.

நடந்தான், பொருந்தான் வாழ்ந்தான் இவற்றுள் இயல்புபகுதி காண்க. வந்தான், வருகின்றான்; தந்தான், தருகின்றான்; கண்டான்; செத்தான் இவற்றுட்டிரிபுபகுதி காண்க.

ஆதியென்றதனால், நாற்றை நடு; சாத்தற்குங் கொற்றற்கும் வழக்கறுத்தற்குப் பூதனை நடு; திருச்சிராப்பள்ளிக்குந் திருநெல்வேலிக்கும் மதுரை நடு. எ-ம். கொற்றா நட; கன்றா நடவந்தான். எ-ம். முதனிலைகள் நடுவனென்னும் பெயராயும், இடையென்னும் பெயராயும், செயவென்னுமெச்சமாயும் வந்தன காண்க.

இச்சூத்திரம் பிறர்மதங்கூறலே, தன்றுணிபுரைத்தலன்று. பிறர் தம்முண்மறுப்பர். அவை விரிக்கிற்பெருகும். ஆயினும், ஒருவர் மதத்தைமாத்திரஞ் சிறிதுகூறுகின்றாம். முதனிலைகள் முன்னிலையேவலொருமையெதிர்கால வினைமுற்றென்பையாயின்;—அது பொருந்தாது. என்னை? இவையாறும் மாறுபடுதலின். அஃதெங்ஙனமெனின்;—முதனிலை தனியே நின்று முன்னிலைக்கட் சென்றதாயின், அவ்வாறு ஏனையிரிடத்திலுஞ் சேறல்வேண்டும்; செல்லாதாகலின், முன்னிலையன்று. ஏவலாயின், முதனிலைக்கண் விப்பியிணைந்து வேறுபொருள் பட்டாற்போல, ஐ ஆய் இகரவிகுதி கூடில் வேறுபொருள்படவேண்டும்; அஃதின்று. முதனிலை தானே யேவலாயிருக்கவே அதன்மேன் மூன்றுவிகுதியும் விதித்தல் நின்றுபயனின்மையாமாகையால், ஏவலன்று. நடந்தார் என்புழி நடவென்னும் வினை பன்மைப்பாற்பொருள்படலின் ஒருமையன்று. நடந்தானென்புழி நடவென்னுஞ்சொல் இறந்தகாலவினையாதலின் எதிர்காலமன்று. நடத்தலென்புழி நடவென்னுஞ் சொற்பெயராயே நிற்றலின் வினையன்று. செய்குன்று; செய்தக்கவல்ல; அறிகொன்று; இச்சொல் நன்று, வழு, வழுவற்றது; இவ்வயலுக்காயிரமுடி நட்டான் என்புழி ஈரெச்சம், தொழிற்பெயர், பொருட்பெயர் முதலானவற்றிற்குப் பொதுவாதலின் முற்றன்று. அன்றியும், நடந்தேன், நடந்தான் முதலிய வழுவற்ற சொற்களெல்லாம் இடவழுவாயேவிடும். விதியும் மறையும் ஒருசொற்கண்ணேயுள்ளதே வினை. அக்குணமிவற்றிற்கின்று. முதனிலை புடைபெயர்தலே வினையாதலின், எல்லாவினைச்சொற்களும் பிறத்தற்கு மூலமாகிய பொதுமுதனிலைத் தனிவினைப்பெயரென்றே கொள்க. எல்லாவினைச்சொற்களாவன திணை, பால், இடம், காலம், விதி, மறை, பொது, சிறப்பாதியோடு கூடின முற்றெச்சங்களும், தொழிற்பெயர்களுமென்க. (௨)

௯௭. தொடர்வினைக் குணமே தொகுக்குங் காலை
முதனிலைத் தனிவினைப் பகுதி முன்னனர்,

விகுதிமுத லைந்தனுள் வேண்டுவ பொருந்தியு
மவையினு ளொன்றணை யாதே திரிந்துந்
திணையே பாலிடம் பொழுதிவை தீண்டித்
தொழிற்பெயர் முற்றீ ரெச்சமாய்த் தோன்றிச்
சிறப்புப் பொதுவெனச் சேறலு மன்றியுந்
தன்வினை பிறவினை யிவ்விரு வினைப்பொது
விதிவினை மறைவினை யிவையிரு வினைப்பொதுச்
செய்வினை செயப்பாட் டுவ்வினை யிப்பொது
முதல்வினை சினைவினை யிவையிரு வினைப்பொது
விருவகை யெச்சத் தினுக்கும் பொதுவினை
தெரிநிலை வினையே தெரியா நிலைவினை
வினைக்குறிப் பன்றியும் வினாவினைக் குறிப்புப்
பொதுச்சிறப் பினுக்கே பொதுவாய் நிற்றல்
வினைபெயர் தமக்கு வேறின் றாதல்
முற்றீ ரெச்சம் விதிமறை வினைபெய
ரியல்பா கியசொற் றிரிபா கியசொல்
லொருமொழி பலமொழிக் கொப்பாய் நிற்ற
லாதியாப் பலவே யாகு மென்ப.

உ-ம். ஆடுதல், ஆடல், சொல்லு, அருளு, வாரு, செய்து, செய்பு இவைபோல்வனவெல்லாம் விகுதிபொருந்தின. உண்டான், தின்றான் போல்வன விகுதியும் இடைநிலையும் பொருந்தின. உண்டனன், உண்கின்றனன் போல்வன விகுதியும், இடைநிலையும், சாரியையும் பொருந்தின. நடக்கின்றனன், விடுக்கின்றனன் போல்வன விகுதியும், இடைநிலையும், சாரியையும், சந்தியும் பொருந்தின. நடந்தனன், முடிந்தனன் போல்வன ஐந்தும் பொருந்தின. வேண்டுவ என்றதனால், நடந்து, போனான் எனமுறையின்றியும் பொருந்தும்.

கேடு, பாடு, வீடு போல்வன அவ்வைந்தனுளொன்றும் அணையாதே திரிந்து வினையாயின.

'திணையே பாலிடம் பொழுதிவை தீண்டித் தொழிற்பெயர் முற்றீரெச்சமாய்த் தோன்றிச் சிறப்புப் பொதுவெனச் சேறலு மன்றியும்' அவ்வளவும் வெளி.

பிரிவர், ஆடுவர்; பிரிப்பர், ஆட்டுவர் இவை தன்வினை பிறவினை. 'தேற்றுவொழுக்க மொருவன்க ணுண்டாயின்;' 'நட்பாட

தமிழ்ப் பல்கலைக் கழகம்
தஞ்சாவூர்



றேற்றுதவர்.' எ-ம். அவனைத்தேற்றிக்கெடுத்தான்; அவளைத்தேற்றிப்பிரிந்தான். எ-ம். இவை சொல்லொன்றே தன்வினையும் பிறவினையுமாயின. 'தொல்காப் பியனெனத் தன்பெயர் தோற்றி;' 'பொருண்முத லாறினுந் தோற்றி;' 'தொடர்ந்து தொழிலல காலந் தோற்று;' இவன்வெளுத்தான் இவைபோல்வனவுமது.

உண்பான், உண்ணான் இவை விதிவினை மறைவினை. செய்யாய்; செய்யீர்; 'மகனெனல்;' 'மக்கட்பதடியெனல்;' 'அல்லும் பகலுமருச் சிக்கயா மந்தோறும் வல்லார்' வல்லார் மாட்டாதார்; 'வல்லார் திறைகொள்வர்;' 'வல்லார் திறைகொடுப்பர்;' 'அகல்விசும்பிலார்;' அருளான்; வெகுளான் இவை சொல்லொன்றே விதிவினையும் மறைவினையுமாயின.

உண்டசாத்தன்; உண்டசோறு இவை செய்வினை செயப்பாட்டுவினை, புலிகொன்ற யானை; மீன் விழுங்கினவன்; ஒன்னார் வணங்கினான்; அவள்விரும்பினவனிவன்; அறிந்து வந்தான் இவை சொல்லொன்றே செய்வினையும் செயப்பாட்டுவினையுமாயின.

சாத்தனடந்தான்; கானடந்தது இவை முதல்வினை சினைவினை. வனம்பொலிந்தது; படைபொருதிற்று; அவன்பருத்தான்; அருக்கனுருக்கினான் இவைபோல்வனவெல்லாம் முதல்வினையுஞ் சினைவினையுமாயின.

தேடிய பொருள்; தேடிய வந்தான். எ-ம். ஓடிய புரவி; ஓடிய விழுந்தான். எ-ம். பாங்கனோடு கூடிய தலைவன்; தலைவியோடு கூடிய வந்தான். எ-ம். இவைசொல்லொன்றே ஈரெச்சமாயின.

தெரிநிலைவினை வெளி. வேறு, இல், இல்லை, இன்மை, உள், உண்மை, உண்டு, அல், அன்மை இவைபோல்வன தெரியாநிலைவினை. குழையன், அன்று, இன்று; நல்ல சாத்தன், வல்ல வீரன்; அன்றி வாரான், இன்றிச் செய்யான் இவை மூவகைவினைக்குறிப்பு. வடமொழிவழக்குப்பற்றியே சூத்திரஞ்செய்தனம். அது கருத்தன்றாயின், தமிழ்மொழிவழக்குப்பற்றித் தெரியாநிலைவினையாகிய வினைக்குறிப்பென்று கொண்டு, இருவகைக்குங்காட்டின உதாரணங்களை ஓரிலக்கணமாக்குக.

யார், எவன், என், என்னை இவை வினாவினைக்குறிப்பு. இனி யார், எவன் இவை வினாவினைக் குறிப்பாயிற்பொதுவாம். வினாப் பெயராயிற்சிறப்பாம். ஆகையால் ஒருசொல்லே பொதுவிற்கும் சிறப்பிற்கும் பொதுவாய்நிற்றல்காண்க. இவை மேல்வரும் வினை பெயர்தமக்கு வேறின்றாகும் உதாரணங்களுடனுங்கூடும்.

அந்தணனைக் கொன்றானை யரசன் கொன்றான். எ-ம். ஓதுவான் வந்தான்; உண்பான் போனான். எ-ம். பிறந்தவிறந்தன, பிறந்த சாத்தன்; கண்டவழிந்தன, கண்டகண்; தின்றவற்றன, தின்றவாய்; வந்தபோயின, வந்தபொருள்; 'செய்தக்க வல்ல செயக்கெடுஞ் செய்தக்க—செய்யாமை யானுங் கெடும்.' 'இருவினைக்குத் தக்கவுடல்.' எ-ம். முறையே முற்றும் வினையெச்சமும் பெயரெச்சமும் வினைபெயர்தமக்கு வேறின்றாய் ஒருசொல்லாயே நிற்றல் காண்க.

முற்றீரெச்சமுதல் ஒப்பாய் நிற்றல்வரை ஒருபொருள். அது செய்யாவென்னும் வாய்பாடு. 'ஒன்றனையுஞ்செய்யாவோரறிவமற்றபொருள்கள்' இது முற்று. செய்யாதசாத்தன்; செய்யாதுவந்தான் இவை விகாரப்பட்டு, செய்யாச்சாத்தன்; செய்யாவந்தான் என வீரெச்சமாயின. 'மாறாக் காதலர் மலைமறந் தனரே—பேறுமென்றோள் வளைநெகி ழும்மே—யாறாக் கட்பனி வரலா னாவே.' 'தொடர்ந்து தொழிலல காலந் தோற்றா—வேற்றுமைக்கிடனாய்' என்பனவுமது. செய்யாவென்னும் வினையெச்சம் விதிவினை. 'நட்த்தலைச் செய்யாவாகிய குதிரைகள் கெட்டன' இது அஃறிணைப் பன்மைப்பெயர். செய்யும், யாவும், ஆவும் இவை பலமொழி. மறையும் வினையும் இயற்சொல்லுந் திரிசொல்லும் ஒருமொழியும் முற்காட்டினவற்றுளடங்கும்.

ஆதியென்றதனாற் செய்யுமென்னும் வாய்பாடு பொதுமுற்றாயும், எச்சமாயும், நிகழ்காலமாயும், எதிர்காலமாயும், முன்னிலையுயர்திணைப்பன்மைச் சிறப்புமுற்றாயும், உயிரும் உயிர்மெய்யுங் கெடுதலும், உந்தாகலும்போல்வன வெல்லாங்கொள்க. உண்டு முதலாயினவுமது.

இம்மூன்றும் பொது. மேல்வருவன சிறப்பு. (ரு)

௬அ. பெயர்வினை யிடையுரி நான்கடி யானும்
பிறக்கும் வினையெனப் பேசுவர் புலவர்
பண்படி முதலாப் பலவும் பகர்வ
ரவையிவை யுள்ளே யடங்கு மென்க.

உ - ம். முதல், ஈறு, ஒற்று, அழுக்காறு இவைபோல்வனவெல்லாம் முதனிலை. முதலும், ஈறும், ஒற்றும், 'கொடுப்பதழுக்கறுப்பான்' இவைபோல்வனவெல்லா முற்று.' முதலுதல், இறுதல், ஒற்றுதல், அழுக்கறுத்தல் இவைபோல்வனவெல்லாந் தொழிற்பெயர். 'நாவலொடு பெயரிய பொலம்;' 'ஐயெனப் பெயரிய

வேற்றுமைக் கிளவி;' அழகிய சொக்கர்; முதலியவெழுத்து; இற்ற பதம்; 'ஞகாரை யொற்றிய தொழிற்பெயர்;' அழுக்கற்றபாவி இவைபோல்வனவெல்லாம் பெயரெச்சம். அகரமுதலிரிற்கும்; னகரமிற்றுநிற்கும்; மெய்களெல்லாமொற்றிநடக்கும்; 'அழுக்கற்ற கன்றுருமில்லை' இவைபோல்வனவெல்லாம் வினையெச்சம். இங்ஙனம் ஐந்துவகையாய் வந்த வினையெல்லாம் பெயரடியாகப் பிறந்தவினை.

நட, நடத்தல், நடந்தான், நடந்தசாத்தன், நடந்துவந்தான் இவையைந்தும் வினையடியாகப் பிறந்தவினை.

சாத்தா புலிபோல்; நெய்போலுதல், போன்றல், போறல், நீர்க்கில்லை; புலிபோன்றான்; புலிபோன்ற சாத்தன்; புலிபோன்று பாய்ந்தான் இவையைந்தும் இடையடியாகப் பிறந்த வினை. உவமவுருபுகளெல்லாம் இம்முறையே வரும்.

கண்ணே சிவ; சிவத்தல், சிவப்பு; கண் சிவந்தது; சிவந்த கண்; சிவந்து வீங்கின கண் இவையைந்தும் உரியடியாகப் பிறந்த வினை. எல்லாப்பண்புகளும் இம்முறையே வரும். (சு)

சுகூ. முதனிலை தொழிற்பெயர் முற்றீ ரெச்சமென்
றைவகை யுள்ளே யடங்கும் வினையே.

என்பது வெளி. (ரு)

எ0. முதனிலை யின்றியுந் தொழிற்பெயர் மொழிகுவர்.

உ - ம். பூசல், வேட்டை, சண்டை, கூத்து, தொழில், வினை, ஆசை, வேட்கை, அவா, சூது, வாது, தச்சு, கொல்லு, நெட்டி எனவரும். பட்டினியுமது. (சு)

எக. முதனிலை திரிந்துந் திரியா தாகியு
மிருவகை யாகிய விவ்வினை யீற்றின்
விப்பி யிணைந்தும் வெவ்வே றணைந்து
மியன்றெண் வகையாம் பிறவினை யென்ப.

இயன்றெண் வகையாஞ் செய்வியென் னேவல் எனப்பாடமோதுதலுமொன்று.

உ - ம். ஆட்டினான்; ஊட்டினான் இவைபோல்வன முதனிலை திரிந்தன.

அரசன் கட்டின கோட்டை, வெட்டின குளம், செய்ததேர், வைத்தசோலை; கோழி கூவிப் பொழுது புலர்ந்தது—கூவுவித்து; 'உரற்கால் யானையொ டித்துண் டெஞ்சிய'—எஞ்சுவித்த; 'குடி பொன்றிக் குற்றமு மாங்கே தரும்'—பொன்றுவித்து; 'குடி மடிந்து குற்றம் பெருகும்'—மடிவித்து இவை முதனிலை திரியாதன.

நடத்துவிப்பி, நடப்பிப்பி இருவகைவினையீற்றின் விப்பியிணைந்தன. நடத்துவித்தான், விடுவித்தான் இருவகைவினையீற்றின் விவ்வேறு வந்தன. ஊட்டுப்பித்தான், உண்பித்தான் இருவகைவினையினும் பிவ்வேறு வந்தன. விப்பியிணைதற்குப்பொருள் வியாவது பியாவது கூடியாவது இணைந்துநிற்றலேகருத்தென்க.

எஉ. செய்வியென் வினையுட் செய்வினை சிலவே.

உ-ம். 'நிரையாமாச் சேர்க்கு நெடுங்குன்ற நாட;' 'நட்பாட றேற்றாதவர்;' 'தேற்று வொழுக்க மொருவன்க ணுண்டாயின்' இவற்றுள், சேரு நெடுங்குன்றம், நட்பாட றேறுதவர், தேறுவொழுக்கம் என்றே பொருள்கொள்வர். 'போக்குவரவிலி;' 'போக்கு வரவுபுரிய;' 'போக்குமதுவிளிந்தற்று;' கள்ளன்போக்குக்காட்டி மீண்டான் என்பதுமது. போக்குத் தன்வினையன்றேவெனின், 'கைவேல் களிற்றொடு போக்கி;' 'போக்குமவன் போகாப் புகல்;' 'போக்கும் பொருளுண்டே லொன்றாகப் போம்;' மகட்போக்கிய தாய் என்பதனாலறிக. (அ)

எங. சொல்லாற் றெரிவினை பொருளாற் றெரிவினை
யென்றிரு திறனே தன்பிற பொதுவினை.

உ-ம். தீர்தல்; தீர்த்தல்; நடத்தல். எ-ம். ஆடினசாத்தன்; ஆட்டினசாத்தன்; பிரியமைச்சன், கெடுபுத்தி, தேய்கட்டை, மீள்சினம், உரைகல். எ-ம். இவைபோல்வனவெல்லாம் சொல்லாற் றெரிந்த தன்வினை பிறவினை பொதுவினை.

விண்டதாமரை, விண்டபனை, விண்டநிலம், இவைபோல்வன வெல்லாம் பொருளாற்றெரிந்த தன்வினை பிறவினை பொதுவினை.()

எச. மறைமூ வகையா வழங்குவர் புலவர்.

உ-ம். வாழ்வான் - வாழான், வாழ்வானல்லன், கெடுவான். எ-ம். கொடுப்பான் - கொடான், கொடுப்பானல்லன், வாங்குவான். எ-ம். புகழ்வான் - புகழான், புகழ்வானல்லன், இகழ்வான். எ-ம். இவை முற்று.

உண்ட சாத்தன் - உண்ணாத சாத்தன், உணலற்ற சாத்தன், பசித்த சாத்தன். இவை பெயரெச்சம்.

நடந்து வந்தான் - நடவாது வந்தான், நடையின்றி வந்தான், வாகனமேறி வந்தான். இவை வினையெச்சம்.

உண்டல் - உண்ணாமை, உணலறல், பட்டினி இவை தொழிற்பெயர்.

முதனிலைகளெல்லாம் நடப்பான், நடவான்; உண்பான், உண்ணான் என விதிக்கும் மறைக்கும் பொதுவாகிய பெயராதலால், மறையின்றென்று முன்னர்க் காட்டினாம். (க0)

எரு. இதுவிதி யிதுமறை யென்னப் படாசில.

உ - ம். போ, வா; தொடு, விடு; வாழ், கெடு; உலாவு, நில்; உறங்கு, விழி; விரும்பு, வெறு; கொடு, வாங்கு; சா, பிழை; போனான், வந்தான்; நின்றான், இருந்தான்; செத்தான், பிழைத்தான்; விரும்பினான், வெறுத்தான்; உறங்கினான், விழித்தான். எ-ம். செல்வன், வறியன். எ-ம். வினையுங்குறிப்பும் வந்தன.

விதிவினை மறைவினையென்னாமையால், பெயர்க்குங்கொள்க. உ-ம். கிழக்கு, மேற்கு; தெற்கு, வடக்கு; உறவு, பகை; இன்பம், துன்பம்; ஆண், பெண்; பகல், இரவு; ஒளி, இருள்; மெய், பொய்; உண்மை, இன்மை எனவரும்.

இவைகளையிணைத்து ஒன்றற்கொன்று விதியாயும் மறையாயும் நிற்றல் காண்க. (கக)

எசு. நிலைமொழி மறையே வருமொழி மறையே
யிருமொழி மறையே யெனமூ வகைமறை.

உ - ம். உண்ணாது வந்தான்; உண்டு வாரான்; உண்ணாது வாரான்; 'பள்ளியுமீரம்புலராமையேறற்க' எனவரும். (கஉ)

எஎ. விதிச்சொன் மறைப்பொரு ளாகி வருநவு
மறைச்சொல் விதிப்பொரு ளாகி வருநவும்
விதிச்சொலின் முதனிலை விதிப்பொருள் பெறுநவு
மறைச்சொலின் முதனிலைவிதிப்பொருள்பெறுநவு
முளவென மொழிகுவ ரொருபுடை யோரே.

உ - ம். அழுக்காறு - பொறாமை; அழுக்காறாமை - பொறுத்தல்; உடன்படல் - மறாமை; மறுத்தல் - உடன்படாமை; 'அற

வினை யாதெனிற் கொல்லாமை.' 'கொல்லாமை மேற்கொண்டொழுகுவான்' இவைபோல்வனவெல்லாம் விதிச்சொல் மறைப்பொருளும் மறைச்சொல் விதிப்பொருளுமென்க.

'உள்ளங்கையினு ரோமமுளைத்ததாயின் அறிவிலானடங்குவன்' இவற்றுள் முளைத்தது, அடங்குவன் என்னும் விதிவினையினுள் முதனிலை பிரிந்து முளையாமையே துணிவு, அடங்காமையே துணிவு என்றே பொருள் படுதல் காண்க. இது விதிச்சொல்லின் முதனிலை மறைப்பொருள் பெற்றது.

இனி ஒரு பொருளின்புடை பெயர்ச்சியே வினையென்பது எல்லார்க்கும் ஒப்பமுடிந்தது; அவ்வினையைக் கொள்ளுதலால் வினையெச்சமென்பதும் அங்ஙனமுடிந்தது; அவ்வினையெச்சம் வினையைக் கொள்ளுதலன்றி வினையின்மையைக்கொள்ளாது என்பதும் அங்ஙனமுடிந்தது. ஆகவே, உண்டுநடந்தான் என்பது பொருந்தும்; உண்டு நடவான் என்பது பொருந்தாது, இலக்கணவழுவேயாம். ஆகையால், அம்மறைச்சொல்லினுள் முதனிலையைப் பிரித்து, ஒருபொருளின் புடைபெயர்ச்சியாகிய புடைபெயர்ந்த நடத்தலென்னுந் தொழிற்பெயராக்கி, வினையெச்சத்தை வினைகொண்டுமுடித்து, பின்பு செய்யானென்னுமறையை வருவித்து, உண்டு நடத்தலைச் செய்யானென்று முடிப்பர். இக்கருத்துப் பரிமேலழகர்க்கும் உரையாசிரியர்க்கும் நியமம். இது மறைச்சொல்லின் முதனிலை விதிப்பொருள் பெற்றது. (கங)

எஅ. செயப்பாட்டு வினையினைச் செப்புங் காலை
வினைமுதல் செயப்படு பொருளே தொழிற்பெயர்
மூன்றின் பயனிலை யாயுமவை யாயு
முதனிலை தொழிற்பெயர் முற்றீ ரெச்சம்
வினைமுதல் செயப்படு பொருளே முதியுட்
படுசொல் லற்றே படுபொரு ளாயு
மவைக்கட் படுசொல் லிணைந்து வந்து
முற்றுத் தொழிற்பெயர் முதலினுட் படுசொல்
வரினும் படுபொருள் வருதலின் றுயும்
பெயர்ப்பின் வினையெச் சத்தின் பின்னர்ப்
படுசொல் வந்தே வேறுபொருள் பட்டுந்
தன்பொருள் பிறபொரு ளிவ்விரண் டற்கும்
பொதுவாய்ப் படுசொற் பொருந்தி நின்றும்

படுசொல் வரப்படாப் படுபொரு ளாயும்
படுசொல் வந்தே படுபொரு ளாயு
மின்னும் பலவா யியலு மென்ப.

உ-ம். அரனருச்சிக்கப்பட்டான்; ஆடை தரப்பட்டது; ஒழுக்கஞ்செய்யப்படும். மூன்றின் பயனிலை வந்தது காண்க.

'அகடாரா ரல்ல லுழப்பர்க் கென்னு—முகடியான் மூடப் பட் டார்.' 'இகழப் படுவாரைக் காணினு மிழுக்கே;' 'இன்னுதிரக் கப்படுதல்' அம்மூன்றாய் வந்தது காண்க.

செய்குன்று; ஆண்டவ னென்ற லரற்கே தகுமே; மரம் வெட்டிற்று; அரம்பொருத பொன்; எழுதிவந்தவோலை; 'யாழு மெழுதி யெழின்முத் தெழுதி;' 'இல்வாழ்வானென்பான்' 'ஊருணிநீர்' எழும் படுசொல்லற்றுப் படுபொருளானது காண்க. ஆதியென்றதனால், எழுத்தாணியெழுதிற்று இது கருவி.

செயப்பட்டகுன்று; ஆண்டவனென்று சொல்லப்படுத லரற்கே தகுமே; மரம் வெட்டப்பட்டது; அரம் பொரப்பட்ட பொன்; எழுதப்பட்டு வந்தவோலை; யாழுமெழுதப்பட்டு முத்துமெழுதப்பட்டு; இல்வாழ்வானென்று சொல்லப்படுவான்; ஊரரால் உண்ணப்பட்டதாகிய நீர்; எழுத்தாணியெழுதப்பட்டது அவ்வெட்டனுட் படுசொல்லணைந்து வந்தது காண்க.

'உட்கப் படாஅ ரொளியிழப்ப ரெஞ்ஞான்றுங்—கட்காதல் கொண்டொழுகு வார்' என்புழி உட்காரெனவே பொருள்படுதலிற் படுசொற்குப் படுபொருள் வாராமை காண்க. 'பெயரெழுவாய் வேற்றுமையாம் பின்பதுதா னாறு—பயனிலையு மேற்கப் படுதல்' என்புழி ஏற்றலென்றே பொருள்படுதலிற் படுசொற்குப் படுபொருள் வாராமை கான். முதலென்றதனால், உண்ணப்பட்ட சாத்தன்; உண்ணப்பட்டு வந்த சாத்தன் என்பன ஒரோவழி உண்ட சாத்தன்; உண்டு வந்த சாத்தன் எனவே பொருள்படுதலின், ஈரெச்சத்தினுள்ளுங்கொள்க. கற்பிக்கப்படுமாசான்; கற்பிக்கப்படாவாசான்; கற்கப்படுமாணுக்கன்; கற்கப்படாமாணுக்கன் என்பனவுமது.

'மறையிறந்து மன்று படும்;' 'போற்றினும் பொத்துப் படும்;' சொற்பொருள் சோர்வுபடும்;' 'துன்பங்கள்சென்றுபடும்' இவற்றுள் இரண்டன்பின்னரும் உண்டாமென்றே வேறுபொருள்பட்டது காண்க. 'இலம்படு புலவ ரேற்றகை நிறைய' என்பதுமது. 'இனைத்தெனவறிந்த பொருட்கும்மைபடும்;' 'இன்னெ னுருபிற் கின்னென் சாரியை இன்மைபடும்;' 'ஒளியோ டொழுகப்படும்;'

'வஞ்சரை யஞ்சப்படும்;' மெய்சொல்லப்படும்; ஆசை நீக்கப்படும் இவற்றுள் இரண்டன்பின்னரும் வேண்டுவது தக்கதென்றே வேறு பொருள்பட்டது காண்க. இதனை "வேறில்லை யுண்டியார் வேண் டுந் தகும்படும்" என்னுஞ் சூத்திரத்தினும் விளக்குதும்.

'உதவிசெயப்பட்டார்;' 'இன்மை தழுவப்பட்டார்;' 'அல்லல டையப்பட்டார்' இவை ஒருகாற்றன்பொருட்கும், ஒருகால் உதவி யையேற்றுக்கொண்டார்; இன்மையைத்தழுவினர்; அல்லலையடை ந்தார் எனப்பொருள்பட்டுப் பிறபொருட்கும் பொதுவாய்ப் படு சொற்பொருந்தல் காண்க.

மரம்வெட்டினன்; சோற்றையுண்டான் இவற்றுட் படுசொ ல்லை வருத்தினும் வரப்படாமற்றடைபட்டுக் கிடப்பினும் படுபொ ருள் வந்தது காண்க.

நாய்கோட்பட்டான்; புலிகவ்வப்பட்டான் இவற்றுட் படு சொல்லைத் தடுப்பினுந் தடைபடாதே வந்து பொருந்திப் படுபொ ருள் வந்தது காண்க.

இன்னும் பலவென்றதனால், எம்மால் வீழப்பட்ட திருநுதற்கி ல்லையிடம்; தம்மால் வீழப்பட்ட தலைவியுடைய மென்றேள் இவ ற்றை 'யாம்வீழுந்திருநுதல்;' 'தாம்வீழ்வார்மென்றேள்' எனத் தொகுக்கவேண்டிற்றெருக்கலாம், வேறுபொருள்படாதாதலான். 'கேள்வியாற் றேட்கப்படாத செவி;' 'முகடியான் மூடப்பட்டார்' இவற்றைக் கேள்வி தோளாத செவி, முகடிமூடினர் எனத் தொகு க்கவேண்டிற் றெருக்கப்படாது, வேறுபொருள்படுதலின். (கச)

எசரு. அறுதொகை யறைகுவ ரறிவுடை யார்பலர்
படுதொகை யொடுதொகை யேழென் பார்சிலர்.

உ - ம். போசாத்தா; செய்குன்று. எ-ம். சொல்லுதலாற் சொல். எ-ம். பால்கறந்தது. எ-ம். உண்டசோறு. எ-ம். வணிகன றிந்துவந்த பொன். எ-ம். இவ்வைந்தும் வினையின்றொகை. போக் கப்படு சாத்தா; செய்யப்பட்டதாகிய குன்று. எ-ம். சொல்லப்படு தலாற்சொல். எ-ம். பால்கறக்கப்பட்டது. எ-ம். உண்ணப்பட்ட சோறு. எ-ம். வணிகனாலறியப்பட்டுவந்த பொன். எ-ம். முறையே அவ்வைந்திற்கும் படுசொற்றொகாநிலை காண்க. அறுதொகைக்கி னையன்றென்பது கருதி, அறிவுடையார் சிலரென்றும். (கரு)

அ௦. தனக்குப் பயனே பிறர்க்குப் பயனே
தனக்கும் பிறர்க்குஞ் சாரிரு பயனே

தனக்கும் பிறர்க்கும் பயன்சார் பிலவே
யெனநால் வகையா யியன்றே யிவைதாஞ்
சிற்றறி வோர்வினை பேரறி வோர்வினை
யெனவிரு கூறு யெட்டா மென்பர்.

உ-ம். உண்டான்; உடுத்தான்; உறங்கினான். எ-ம். பாங்கன் றானுநடந்தான்; பாங்கியுடநீர்த்தாள். எ-ம். தலைவி தலைவனுக்குச் சோறட்டாள்; தலைவன் றலைவியைப் புணர்ந்தான். எ-ம். பயனில் சொற் பாராட்டினான்; கையைவீசினான்; கண்ணை யிமைத்தான். எ-ம். முறையே சிற்றறிவோர்வினை நான்குங்காண்க.

யானெனதென்னுஞ் செருக்கறுத்தான்; அவாவைவிட்டான்; பிறவியையொழித்தான்; வீட்டையடைந்தான். எ-ம். நூலைப்பாடினான்; உரையையெழுதினான்; மாணாக்கனையறிவித்தான். எ-ம். வேதாகமவழி விரும்பி யொழுகினான்; இரக்கத்தொடுபலி யிரக்கத்தொடுத்தான்; அரனது விழாவை மிகவலங் கரித்தான்; சிவனது பூசையை மிகச்சிறப் பித்தான். எ-ம். அறம்பொருளின்ப மளவின்றித் தேடினான்; அட்டமா சித்தியை யருமையாய்த் தேடினான். எ-ம். முறையே பேரறிவோர்வினை நான்குங் காண்க.

'உலகநூ லுணர்ந்தோர்க் குரைப்பினுந் தெரியா—பேரறிவோர்வினை யெனப்பே சுகவே—யறிவுநூ லுணர்ந்தோர்க் கறையினுந் தெரியா—சிற்றறி வோர்வினை யெனச்செப் புகவே—யவ்விரு நூலை யறிந்தார் தமக்கே—யிவ்விரு கூற்றெண் வினையிலங் கிடுமே.' அஃதென்னெனின்;—இழிபுவினைகளெல்லாவற்றினுள்ளும் மிகவுமிழிபுவினையாவது இரத்தலேயென்னும் உலகநூல். உயர்ந்த வினைகளெல்லாவற்றினுள்ளும் மிகவுமுயர்ந்த வினையாவது இரத்தலேயென்னும் அறிவுநூல், ['ஒன்றில்லாதான் செத்தபிணத்திற் கடை;' 'இயல்பாகு நோன்பிற்கொன்றின்மை' என்பனவுமது.] இங்ஙனம் எல்லாவினையையும் மாறுபடக் கூறுதலேயன்றி ஓர் வினையையானும் உடன்பட்டுக் கூறாதாதலால், யாதானுமோர் வினைச்சொற்பிறந்தவழி அவ்வெட்டனுள் இதுவென்று துணிந்தடக்குதல் அவர்க்கேயன்றி ஏனையிருவர்க்குங் கூடாதாதலாலெனக. ()

அக. அவைதா—மனமொழி மெய்யறி வாகிய நான்க
னசைவே யாகியு மவ்வசை வின்றியு
நல்வினை தீவினை வெறுவினை யெனநடந்
தறிந்து செய்வினை யறியாது செய்வினை
யசேதனஞ் செய்வினை யெனவே யமர்ந்து

தீவினை நல்வினை சிலமுறை திறப்பிச்
செய்யா விருவினை செய்வினை யாகிச்
செய்யிரு வினையே செய்யா வினையா
யின்னும் பலவா மிலக்கணம் பெறுமே.

உ-ம். நினைத்தான்; உரைத்தான்; நடந்தான்; அறிந்தான் இந்நான்கும் அசைந்தவினை. இவற்றைத் தமிழ்நூலார் ஒருபொருளின் புடைபெயர்ச்சியென்று வழங்குவர். 'அறிவிறந்தங் கறிந்திடார் செறிந்ததுகளகற்றிடரே' இதுபோல்வனவெல்லாம் அசைவற்றவினை. இதனை வடநூலார் பரவசமென்று வழங்குவர். இவ்வைந்தனுள் அசைவற்ற வினையென்பதொன்றில்லை ஏனைநான்கே வினையென்பாரும், அந்நான்கனுள்ளும் அறிவசைந்தவினையென்பதொன்றில்லை ஏனைமூன்றே வினையென்பாரும், மூன்றென்று வரையறையில்லை உலகத்துப் பலபொருள்களினுடைய அசைவொன்றுமே வினையாதலால் ஒன்றே வினையென்பாரும், தீக்குச்சூடுபோலப் பொருட்குண்மேயன்றி வினையென்பதொன்றில்லையென்பாரும், இன்னும் பலவாறுரைப்பாருமுளர். அவையெல்லாம் விரிக்கிற் பெருகும்.

நல்வினை தீவினை வெளி. வெறுவினையாவது இருவினையினுட்படாதுவருவது: கையை நொடித்தான்; காலைநெட்டிவிட்டான்; மூச்சுவிட்டான்; உறுப்பழுக்கை யுருட்டியுதிர்த்தான்; வேர்வையைத்துடைத்தான்; சோற்றைப் பிசைந்தான் எனவரும். மேல் அசேதனஞ்செய்வினைக்குக் காட்டிய உதாரணங்களுட் பொருந்துவனவெல்லாங்கொள்க. எல்லாவினையும் இருவினையுளடங்குமேயன்றி வெறுவினைகூட்டி மூவினையென்று நூல்வழக்கில்லையேயெனின், பட்டணத்துப்பிள்ளையார் வினைகளை வரம்புசெய்யுமிடத்து, "செய்தன சிலவே செய்வன சிலவே—செய்யா நிற்பன சிலவே யவற்றிடை—நன்றெனப சிலவே தீதென்ப சிலவே—யொன்றினும் படாதன சிலவே" எனமூவினைகொண்டார். அன்றியும் பரிமேலழகர் பயன்வினை வெறுவினையென இரண்டுகொண்டு, பயன்வினையைப் பலவிடத்தினும் பலவாக விரித்து, வெறுவினையை "வகுத்தான் வகுத்தவகையல்லாற் கோடி" என்பதனுட்கொண்டார். அன்றியும் மூவினைகொள்ளாக்கால், யாங்காட்டிய உதாரணங்கட்கு வேறுவிதியில்லையென்க. அம்மூவினையுள்ளும் நல்வினையுந் தீவினையுஞ்சிலவே, வெறுவினை பலவேயெனக் கொள்க. இக்கருத்து நோக்கியே அவர் நன்று தீதென ஒருமைப் பாலாகவும், ஒன்றினும் படாதன எனப்பன்மைப்பாலாகவுங் கூறினாரென்க.

அறிந்துசெய்வினை, அறியாதுசெய்வினை வெளி. அசேதனஞ் செய்வினையாவது அறிவற்ற பொருளினது வினை: விளக்குக்காட்டிற்று; இருட்டு மறைத்தது; விடங்கொன்றது; கள்ளுமயக்கிற்று; மருந்து பிழைப்பித்தது; பூமி தாங்கிற்று; ஆற்றுநீரீர்த்தது; தீச்சுட்டது; காற்றலைத்தது, உதிர்த்தது; நிழலோடிற்று, திரும்பிற்று, நீண்டது, குறுகிற்று; கரும்பினித்தது; வேம்புகசந்தது எனவரும்.

முறைதிறம்பலாவது மாறுபட்டுநிற்றல். எண்ணுயிரவரைக் கழுவிலேற்றினர்; ஆண்டவனைத் தூதாக வஞ்சாது நடத்தினர்; அப்பர்தாங் கொண்ட விரதமழித்தனர்; கடவுளை நாடோறுங் கல்லாலெறிந்தனர்; ஆண்டவன் றலையி லடியான் மிதித்தனர் இவை தீவினை நல்வினையாயின. அநங்க னலரை யரனிடத் திட்டான்; வில்வலன் வாதாவி வந்த பெரியோர்க்கெலாம் வழிபடு முறையே வழிபட் டிருந்தார்; வேங்கை வரிப்புலிக்கு விடத்தைத் தீர்த்தான்; பாம்புக்குப் பால்வார்த்தான்; வலையனுக்குத் தூண்டில் வழங்கினான்; கள்ளனுக்குச் சோறிட்டான் இவை நல்வினை தீவினையாயின. 'நெஞ்சிற்றுறவார்;' 'அடங்கலர்க் கீந்ததானப்பயன்;' கணவனிழந்தோர்கட்குங் கண்ணி குத்தித் திரியுமவர்துயரினுக்கும் இரங்கினான் இவைபோல்வனவுமது. இனியிவ்விரண்டனையுங் கூட்டி 'அரனடிக்கன்பர்செய்யும்.' 'வினையும் விபரீதமாம்' எனப் பலருங்கூறினர்.

செய்யாவிருவினை செய்வினையாகுமென்றதென்னெனின், 'அறவினை யாதெனிற் கொல்லாமை;' 'நோன்பென் பதுவே கொன்றுதின் ஞமை;' 'அழுக்காறுமை, வெகுளாமை, பெரியாரைப்பிழையாமை முதலாக விலக்கினவற்றைச் செய்யாமையே நல்வினைசெய்தல்.' 'பெரியோரைக் காணில் இருக்கையெழாமை எதிர்செல்லாமை, ஒருவனையாதீர்த்தவழியும் விடந்தீண்டினவழியும் அவ்விடர்தீர்க்கும் வல்லன்றீராமை, தலைவியைப் புல்லுதற்கு விதித்த நாளிற் புல்லாமை முதலாக விதித்தனவற்றைச் செய்யாமையே தீவினை செய்தல்.' எனவரும். 'துப்பி னெவனாவர் மற்கொ றுயர்வரவு— நட்பினு ளாற்று பவர்' என்பதுமது.

செய்யிருவினையே செய்யாவினையாமென்றதென்னெனின், மெய்யுணர் வுடையோ ரெவ்வினை செயினும் அவ்விரு வினைசெய்யாமை யாகும் என்று ஆகமமறையெல்லாமியம்பும்.

இன்னும் பலவென்றதனால், 'நடக்கின்றான் படிக்கின்றான்' எனக்கலத்தலும், 'உண்கின்றான் உறங்குகின்றான்' எனக்கலவாமையும், 'விளக்குக்காட்டிற்றுக் கண்கண்டது' என ஒன்றனைவிட்டொ

ன்று நில்லாமையும், 'சோற்றை முக்காற்கூறுண்டு காற்கூறுண்டற்குமுன்னே ஓர்நிமித்தத்தால் உணவொழிந்தான்' என அம்முக்காற்கூற்றுவினை பயன்படுதலும், 'நெற்பயிர் முக்காற்கூறு முறையே வளர்ந்து காற்கூறு விளைதற்கு முன்பே மழையின்றி விளைவொழிந்தது' என அம்முக்காற் கூற்றிற் சிறிதாயினும் வினை பயன்படாமையும் முதலாயினவெல்லாங்கொள்க.

இவ்விருசூத்திரவிதியுந் தமிழ்வழக்கன்று, வடநூல்வழக்கென்க.

அ௨. தொழிற்பெயர் வினைமுதல் செயப்படு பொருளே
கருவி யிடம்பெய ரெச்சமுற் றாகலு
மிருவகை முற்று மீரெச்ச மாகலு
மிருவகை யெச்சமு முற்றே யாகலு
முளவென மொழிப வோரோவழிப் புலவர்.

ஓரோவழியென்றதனால் எல்லார்க்கும் ஒப்பமுடிந்ததன்று. இக்கருத்து "எழுத்துச் சொற்றிரி பிரண்டே யன்றி" என்னுஞ்சூத்திரத்திற் காட்டுதும்.

உ-ம். பறவை பறந்தது; அன்பரிடத்துக் கொடைதோன்றிற்று; 'தேரான் றெளிவுந் தெளிந்தான்கணையுறவுந்—தீரா விடும்பை தரும்.' எ-ம். உடுக்கைகிழிந்தது; நடக்கைவந்தது; புழுக்கலுண்டான். எ-ம். விளக்குக்காட்டிற்று; நோன்பிற்குக் காப்புக் கட்டினான்; மகற்குப் பொற்காப்பணிந்தான்; எனக்கிவ்வேல் காப்பு; உனக்கிவ்வரண் காப்பு; அவற்கிவ்வாள் காப்பு. எ-ம். இடக்கையுயர்ந்தது; படுக்கை தாழ்ந்தது. எ-ம். பொருள்செயல்வகை; வினைசெயல்வகை; தோன்றலாறே; உயிர்த்தலாறே. எ-ம். 'ஆய்தங் கெடுத லாவயி னான;' 'மெய்யீ றெல்லாம் புள்ளியொடு நிலையல்;' 'ஏற்றான்புள் ளூர்ந்தா னெயிலெரித்தான் மார்பிடந்தா—னீற்றுனிழன் மணி வண்ணத்தான் - கூற்றொருபான்—மங்கையான் பூமகளான் வார்சடையா னீண்முடியான்—கங்கையா னீள்கழலான் காப்பு.' எ-ம். தொழிற்பெயரானது வினைமுதலாதி முற்றீருகவாறுபொருள்பட்டது காண்க.

உண்டான்சாத்தனூருக்குப்போனான் என்புழி, உண்டசாத்தனூருக்குப் போனான் எனப்பொருள்படுதல் காண்க. இது வினைமுற்றுப் பெயரெச்சமானது. ஏனைமூன்றும் நன்னூலில் "வினைமுற்றேவினை யெச்ச மாகலும்" என்னுஞ் சூத்திரத்திற்குக் காட்டிய உதாரணங்களாலறிக.

வெறுத்த ஞானி வீட்டையடைந்தான்; சாத்தனுழுதவந்தான் என்புழி வெறுத்தான் ஞானி, சாத்தனுழுதான் எனப்பொருள் பட்டு ஈரெச்சமுமுற்றுதல் காண்க. (கஅ)

அங. வினைமுற் றுப்பெயர் விரிக்குங் காலை
வினைமுதல் செயப்படு பொருளே கருவி
யிடமே தொழிற்பெய ரிவ்வைந் தன்றியு
மெட்டுரு பேற்றே யெண்பொரு ளாத
லீற்றய திரித லீரெச்ச மாத
லீறிகர மாதலவ் வீறிகர மாயவை
வினைமுதல் செயப்படு பொருளொடு கருவி
யிடம்வினை யெச்சமா யியங்குத லன்றியு
மின்னும் பலவகை யெனவிளம் புவரே.

வினைமுதலாதியெடுத்துக் கூறிப் பின்னும் ஈரிடத்தெடுத்துக் கூறுதலென்னெனின், முன்னது உருபேலாமலே அப்பொருள்படும்; நடுவது உருபேற்றே அப்பொருள்படும்; பின்னது விகாரப் பட்டே அப்பொருள்படுமென்க.

உ-ம். 'தார்தாங்கிச் செல்வது தானை;' 'வினையே செய்வது;' 'உலகத்தா ருண்டென்ப தில்லென்பான்.' எ-ம். உடுப்பது, உண்பது; 'இல்வாழ்வா னென்பான்.' எ-ம். 'வேலன்று வென்றி தருவது;' 'வெல்வதரண்.' எ-ம். விளைவது நாடு; யாமிருப்பது மதுரை. எ-ம். 'உறங்குவது போலுஞ் சாக்கா டுறங்கி—விழிப்பது போலும் பிறப்பு.' 'பெறுமவற்றுள் யாமறிவ தில்லை.' எ-ம். முறையே ஐந்துங்காண்க.

'மாணடிசேர்ந்தார் வாழ்வார்.' எ-ம். 'ஒறுத்தாரை யொன்றாக வையாரே.' எ-ம். கொண்டானல் வாழ்ந்தாள் குலமகள். எ-ம். 'ஒறுத்தார்க் கொருநாளை யின்பம்.' எ-ம். ஈன்றாளி னீங்கின ளிவ ணிமித்தம். எ-ம். கொண்டானது மாடு. எ-ம். கொண்டான்கணி ருந்தாள்குலமகள். எ-ம். இரப்பானிச்சோற்றையேல். எ-ம். முறை யேயெட்டுங்காண்க.

தின்பார்—'ஊன்தின்பவர்;' நயவாதான்—'பெண்மைநயவா தவன்;' செய்வான்--'செய்பவன் கருவி;' செறப்பட்டார்--'வேந்து செறப்பட்டவர்' இவற்றுள் ஈற்றயதிரிதல் காண்க.

நடந்தகுதிரைகள்; பிறந்தபிள்ளைகள் இவை அன்பெறு அகர வீற்றஃறிணைப் பன்மைவினைமுற்றுப்பெயர் பெயரெச்சமானது.

உண்பான் வந்தான்; ஓதுவான் போயினன் இவை வினைமுற்றுப்பெயர் வினையெச்சமானது.

இவன் மானேந்தி; இவன் பிறைசூடி; இவன் கங்கையாடி இவை ஏந்தினன், சூடினன், ஆடினன் என்னும் வினைமுற்றுப்பெயர்கள் ஈறிகரமானது.

மண்ணுணி வெண்ணெயுண்டான்; புழுதியுணி கடித்தது; ஞாயிறுகாணி நன்றாயெரிந்தது. எ-ம். ஊருணி; பேயாடி. எ-ம். இவ்விளக்குக்கண்காட்டி; இத்தகடு பேயோட்டி; இச்சகடுதேரோட்டி. எ-ம். இப்பானை நாழிபொங்கி; இம்மரக்கால் குறுணிகொள்ளி. எ-ம். அம்பலத்தாடி வந்தான்; மயிலேறிநீங்கினன்; வேலேந்தி வெகுண்டான்; நூலோதிறுவன்றான். எ-ம். இவை ஈறிகரமாயவை வினைமுதலாதியாக முறையே காண்க.

இன்னும் பலவென்றதனால், 'தாம்வீழ்வார்;' 'யாம்வீழ்வார்;' 'இல்வாழ்வானென்பான்.' எ-ம். 'உண்பது நாழி;' 'உடுப்பது நான்குமுழம்.' எ-ம். உருபும் படுசொல்லுந் தொக்கு வினைமுற்றுப்பெயராய் வினைமுதலாயுஞ் செய்ப்படுபொருளாயும் வருதன்முதலாயினவெல்லாங்கொள்க. (௧௧)

அ௪. எச்சமென் றொன்றில்லை யிவையடை யென்றும்
வேறெச்ச மென்றிலை விகாரமுற் றென்று
மெச்சமொன் றென்று மிரண்டே யென்றுந்
தன்வினை பிறவினை யிவ்விரண் டென்று
முப்பொழு தறிதலான் மூன்றே யென்றுந்
தலைமையிற் றலைமை யெனவிரண் டென்றுங்
காரணங் காரிய மெனவிரண் டென்று
முதல்வினை சினைவினை யெனவிரண் டென்று
மியல்பு திரிபென விரண்டே யென்றும்
விரியே தொகையே யெனவிரண் டென்றும்
வினையெச்ச மொன்றையே வெவ்வே றென்று
மீறுசொற் பற்றி யிரண்டே யென்று
மின்னும் பலபல விலக்கண மாகச்
சொன்னார் சிலரே துணியார் பலரே.

இது எச்சமென்பதொன்றனையே ஒரோருவர் ஒரோரிலக்கணமாகக் கொண்டது கூறுகின்றது.

உ - ம். அட்டசோறு; சொன்னமொழி; உண்டுபசிநீர்ந்தான்; உறங்கிவிழித்தான் இவை அடையாய் நிற்றலேயன்றி வேறு பயன்படும் பொருளின்றாகலான், எச்சமென்றென்றில அடைமொழியேயென்பர்.

உண்டான்சாத்தன்; உழுதான்வந்தான் என்பன விகாரப்பட்டு உண்டசாத்தன்; உழுதுவந்தான் என நிற்றலால், எச்சமென்று வேறில்லை விகாரமுற்றேயென்பர்.

உண்ட; உண்டு எனக் குறைவினையாதலால், எச்சமென்பதொன்றேயென்பர். அவை நிலைமொழிக்குறைவினையால் ஒன்றேயாயினும், வருமொழிநோக்கி இரண்டேயென்பர்.

தன்வினை, பிறவினை, முக்காலவினை வெளி.

தச்சன்செய்ததேர், அரசன்செய்ததேர்; உழுது பயன்கொண்டான் வறியான், உழுது பயன்கொண்டான் வேந்தன் எனவருதல் பற்றித் தலைமை இற்றலைமையென இரண்டேயென்பர்.

மழைபெய்தநீர், புல்லினவின்பம்; சமைந்தவரிசி, உண்டசோறு; உழுதுவிளைந்தநெல், பிணிநீரக் குடித்தான் மருந்து இவை இங்ஙனம் வருதல்பற்றிக் காரணங்காரியமென இரண்டேயென்பர்.

முதல்வினை சினைவினை வெளி.

மருவினநாள், மரீஇயநாள்; தழுவிக்கொண்டான், தழீஇக்கொண்டான் எனவருதல்பற்றி இயல்பு திரிபென இரண்டேயென்பர்.

பொருதகர், பொருததகர்; வரிப்புனைபந்து, வரிந்துபுனைபந்து எனவருதல் பற்றித் தொகை விரியென இரண்டேயென்பர்.

செய்து, செய்பு முதலாயின வெவ்வேறுதலால், இவையெல்லாவற்றையுங்கூட்டி வினையெச்சமென்று ஒருபெயரிடல் பொருந்தாது; அன்றியும் வினையைக்கொள்ளுமெட்டுருபுகளையும், உவமவுருபுகளையும், பிறவற்றையும் வினையெச்சமென்று பெயரிட்டு வழங்காமை காண்கவென்பர். பெயரெச்சத்திற்கும் இஃதொக்கும்.

செய்து, செய்பு முதலாக ஈறுபற்றிவருவன எல்லாவற்றையும் ஒன்றாக்கி, வான், பான், பாக்கு, பின், முன், கால், கடை, வழி, இடத்து முதலாகச் சொற்பற்றி வருவனவெல்லாவற்றையும் ஒன்றாக்கி, வினையெச்சமென்பது இரண்டேயென்பர்.

இன்னும் பலபலவென்றதனால், செயற்கென்பதனை வினையெச்சமென்றும், உருபென்றும், நீர் பொய் கூறியபின் மெய்கூறுவார்

யார் என்பதனைக் கூறினானென்று ஒருசொல்லாக்கி வினையெச்சமென்றும், இருசொல்லாக்கிப் பெயர்கொண்ட பெயரெச்சமென்றுங் கூறுதன் முதலாகப் பலகூறுவரென்றுங் கொள்க.

இவற்றுள் ஒன்றனைத் தள்ளி ஒன்றனைக் கொள்ளற்க, இவையெல்லாவற்றையுங் கொள்கவென்னும் பொருள்படச் சிலர்பலரென்றாம்.

(உ०)

அரு. வேறில்லை யுண்டியார் வேண்டுந் தகும்படும்
வினைபெய ரெச்சம் வியங்கோள் பத்துந்
திணைபா லிடமெலாஞ் செல்லு மென்ப.

யார் என்னும் வினாவினை உயர்திணைப்படர்க்கைக்குமாத்திர முரித்தன்றோவெனின், "நாலூரென் னுள்ளமார் ஞானங்களாரென்னை யாரறிவார்." எ-ம். "ஊதைகூட் டுண்ணு முகுபனி யாமத்தெங்—கோதைகூட் டுண்ணிய தான்யார்மன் - போதெலாந்—தாதொடு தாழுந்தார்க் கச்சி வளநாடன்—றூதொடு வாராத வண்டு." எ-ம். இக்காரியஞ்செய்தற்கு நீ யார். எ-ம். அஃறிணையிருபாற்கண்ணும் ஏனையீரிடத்தினும் வருதலின், எல்லாவற்றிற்கும் உரித்தென்க.

வேண்டுமுதன்மூன்றும் முற்றிற்கும் எச்சத்திற்கும் பொதுவாய செய்யுமென்னும் வாய்பாடன்றோவெனின்; "ஓஒதல் வேண்டு மொளிமாழ்குஞ் செய்வினை—யாஅது மென்னு மவர்." யான் போகல்வேண்டும்; நீயுரைத்தல்வேண்டும் என உயர்திணைப்பல்லோர்படர்க்கை தன்மை முன்னிலைக்கண் வருதலின், அன்றென்க. இம்மூன்றும் ஒருபொருட்கிளவியாய்த் தொழிற்பெயராய்த் தேற்றப்பொருள்பட்டே நிற்குமென்க. தேற்றப்பொருளாவது இக்காரியஞ்செய்தலே தக்கது, தகுதி, பொருத்தம், துணிவு, தெளிவு, நன்மை, அமைதி, முடிவு, வேண்டுவது; இக்காரியஞ்செய்யாமை வழுவே, இழிவே, தீமையே, சிறுமையே, குற்றமே எனப்பொருள்படுதல். 'இனைத்தென வறிந்த சினைமுதற் கிளவிக்கு—வினைப்படு தொகுதியி னும்மை வேண்டும்' 'இனைத்தென் றறிபொருளுலகி னிலாப்பொருள்—வினைப்படுத் துரைப்பி னும்மை வேண்டும்' 'இன்னென வருஉம் வேற்றுமை யுருபிற்—கின்னென் சாரியை யின்மை வேண்டும்' 'நலம்வேண்டி னாணுடைமை வேண்டும்' வேறுவினைப் பல்பொரு டழுவிய பொதுச்சொலும்—வேறவற் றெண்ணுமோர் பொதுவினை வேண்டும்.' எ-ம். இவராலிக்காரியஞ்செய்யத்தகும்; இவ்வூழருந்தத்தகும்; இச்சோறுண்ணத்

தகும்; இந்நீர்குடிக்கத்தகும். எ-ம். 'முகத்தி னினிய நகாஅ வகத்தின்னா—வஞ்சரை யஞ்சப் படும்.' 'இளைய ரினமுறைய ரென்றி கழா நின்ற—வொளியோ டொழுகப் படும்.' 'கற்றறிந் தோரைத்—தலைநிலத்து வைக்கப் படும்.' 'கீழ்களைச்—செய்தொழிலாற் காணப் படும்.' எ-ம். 'இருவினைக்குத்தக்கவுடல்' 'உள்ளப்படுவன—கொள்ளப் படாது மறப்ப தறிவிலென் கூற்றுக்களே.' எ-ம். வரும். இங்ஙனம் வருஞ்செய்யுட்கட்கெல்லாம், நச்சினார்க்கினியார், சேனாவரையர், பரிமேலழகர், உரையாசிரியர் முதலாயினார் முற்றும் எச்சமாயும் பொருளுரைக்கின் வழுவாமென்று கருதி, வியங்கோட்பொருட்டென்றும், விதிப்பொருட்டென்றும், தகுதிப்பொருட்டென்றும், வேண்டுவதென்றும், தமக்கு வேண்டியவாறே பொருளெழுதிச் சொற்குணம் வாளாபோயினர்.

உண்டென்பதனை நன்னூலார் விரித்தலின், விரித்திலமென்க. ஏனைய வெளி. உண்டென்பது முறையிறந்து தன்மைமுற்றும், எச்சமாயும், உள்ளென்னும் முதனிலையாயும், பகுபதமாயும், உண்மையென்னுந் தொழிற்பெயராயும், பகாப்பதமாயும், உண்ணென்னும் முதனிலையாயும் திரிதனோக்கி, முதலினும் ஈற்றினுந் திரிபுபட்டுக் கிடக்கச் சூத்திரஞ்செய்தனம். (உக)

அகூ. வினைச்சொ லிலக்கணம் விளம்பிலள வில்லை
யாயினு மைந்தனு ளறிந்தடக் குகவே.

இது புறநடை. புறனடையென்பாருமுளர். ஐந்தும் முற்கூறினும்.

'பேய்கண் டனையதொன் றுகிநின் றனைப் பெருந்தகையே;' 'தூண்டிற்பொன் மீன்விழுங்கி யற்று;' புறங்குன்றி கண்டனைய ரேனும்.' எ-ம். 'மயில்கண் டன்ன மடநடை மகளிர்;' 'சேய்கண்டனையன்.' எ-ம். 'பலர்புகழ் ஞாயிறு கடற்கண் டாங்கு;' 'பொருளில்லார்க் கிவ்வுலக மில்லா கியாங்கு;' 'அறிதோ றறியாமை கண்டற்றால்.' எ-ம். இங்ஙனம் பெரும்பாலும் வரப்பட்ட மூவகைவினைக்குந் தமக்கேற்றபடி பொருள் விளங்குதற்கேற்ற சொல்லெல்லாம் விரித்தெழுதிச் சொற்குணம் வாளாபோயினர். 'வெகுளி கணமேயுங் காத்த லரிது;' 'புறங்குன்றி கண்டனைய ரேனும்' இவற்றிற்கு ஆனாலும் ஆயினுமெனப் பொருளெழுதி வாளாபோயினர்.

நச்சினார்க்கினியார் நன்னூலார் முதலாயினார் இயற்கை முதனிலை ஆ போ என்றே இருக்குமென்றார். திருவள்ளுவர் பரிமே

லழகர் முதலாயினர் இயற்கைமுதனிலை ஆகு போகு என்றேயிருக்குமென்றார்.

கல், வில், நில். எ-ம். ஒல், கொல், செல், சொல், புல், வெல். எ-ம். குற்றொற்று முதனிலைத்தனிவினைகள் விகற்பமின்றியோர் படித்தாயிருக்கவே, இவற்றுள் வியங்கோள்விகுதி பொருந்தில்; கற்க, விற்க, நிற்க. எ-ம். ஒல்க, கொல்க, செல்க, சொல்க, புல்க, வெல்க. எ-ம். விகற்பித்துப் பலபடித்தாயின. இது மட்டோ, இம் முதனிலைகள் செயவெனெச்சமாயின், கற்கவென்னும் வியங்கோடானே எச்சமாகியும், அவ்வாறன்றி வேறுபட்டு, ஒல்ல, கொல்ல, சொல்ல என எச்சமாகியும், வந்தன. இதுமட்டோ, இம்முதனிலைகள் வினையாகாது, கல்லையுருட்டினான்; வில்லை வளைத்தான்; கொற்செய்த கூர்வாள்; செல்லரித்த சேலை; 'சொல்லருஞ் சூற்பசும்பாம்பின்;' 'புற்றலைகாண்பரிது' எனப் பெயராயின. இதுமட்டோ, இவை தொழிற்பெயராங்கால், கற்றல், கற்குதல், கற்பு, கல்வி. எ-ம். கோறல், கொல்லுதல், கொல்லல், கொலை. எ-ம். வேறுபட்டன. இதுமட்டோ, இவை பிறவினை யாங்கால், கற்பி, நிற்பி, நிறுத்து, நிறுவு, நிறு, நிலைப்பி. எ-ம். செல்வி, செலுத்து. எ-ம். வேறுபட்டன. நிறுவென்பது உயிரீற்றுமுதனிலையன்றோவெனின், நீ நில்லென்னு முதனிலைதானே ஒன்றனை நிற்கச்செய்யென்னும் பொருள்படத் திரிந்ததென்க. இங்ஙனம் பலபலமுதனிலைக்குணங்களை விரிக்கிற்பெருகும், அமைக.

எழுத்தென்னுந்தொழிற்பெயர் அப்பொருளை விட்டுப் பால் பகாவஃறிணைப்பொருட்பொதுப்பெயராய், அப்பொருளை விட்டு ஒவியமுதலியனபோலன்றி அகரம் னகர முதலியன வடிவையுணர்த்தும் சிறப்புப்பெயராய், அப்பொருளைவிட்டு ஒலியையுணர்த்துமாகுபெயராய், அப்பொருளை விட்டு அவ்வொலியினதிலக்கணத்தையுணர்த்தும் இருமடியாகுபெயராய், அப்பொருளை விட்டு அவ்விலக்கணத்தையுணர்த்து நூலினையுணர்த்தும் மும்மடியாகுபெயராய், அப்பொருளை விட்டு இங்ஙனங்கூறிற்றெழுத்து இங்ஙனமறிவித்ததெழுத்து எனக் கருமகருத்தாவையும், கருவிக்கருத்தாவையும் உணர்த்தும் நான்மடியாகுபெயராய் நின்று, பல பொருள் பட்டது காண்க. இங்ஙனம் பலபல தொழிற்பெயர்க்குணங்களை விரிக்கிற் பெருகும், அமைக.

இனி முற்றீரெச்சங்களை விரிக்கிற்பெருகுதலானும், தொல்காப்பியமுதலிய விலக்கணங்களினும் திருவள்ளுவர் முதலியவிலக்கியங்களினும் சில சில விரித்தலானும், எழுதிலம். இங்ஙனம் வருதல்பற்றி அளவிலையென்றாம். அநவத்தையோவென்பாரை

நோக்கி ஐந்தென்றும். ஐந்தன்மேல் ஆறேழ் முதலாகக்கொள்வாருஞ் சிலர், ஐந்தன்கீழ் நான்கு மூன்று முதலாகக்கொள்வார்கள் சிலர், அவர்களை நம்பற்கவென்பது தோன்ற அடக்குகவென்றது அறிந்தென்றும். அவர்கண்மதங் கூறி மறுக்கிற் பெருகும், அதனாலமைக. (உஉ)

இரண்டாவது வினையியன் முடிந்தது.

மூ ன் றா வ து

# ஒ ழி பி ய ல்.

அஎ. பொதுவெழுத் தாலுஞ் சிறப்பெழுத் தாலு
மீரெழுத் தாலு மியைந்துமொழி பெயர்ந்தும்
பொதுவெழுத் துள்ளும் பொதுவாய்த் திரிந்துந்
தமிழ்ச்சிறப் பெழுத்தைந் தானுந் திரிந்து
மொழிமுத லிடைகடை யெனுமூன் றிடத்துந்
தோன்றன் முதலா விகாரந் தோன்றியும்
வருமே தமிழில் வடமொழி யென்க.

உ-ம். மணி. எ-ம். நதி. எ-ம். ஆதி. எ-ம். பிறிதினியைபு நீக்கம்; பிறிதினியைபின்மை நீக்கம். எ-ம். மாலை; நாரி. எ-ம். அற்புதம்; விகற்பம். எ-ம். சிவன்; நாராயணன். எ-ம். தமிழ்; அமிழ்தம். எ-ம். தெய்வம்; எந்திரவூர்தி. எ-ம். கொங்கணம். எ-ம். உலகம்; தத்துவம்; வாக்கு. எ-ம். இடபம்; விடம்; இராமன். எ-ம். பரிசம்; முத்தி; நறு. எ-ம். முறையே காண்க.

ஆக்கினை ஆணை; விஞ்ஞானம் விண்ணாணம்; விருத்தம் வட்டம்; நிருத்தம் நட்டம்; திடம் திட்டம்; விபு விம்மு இங்ஙனம் இன்னும் பரந்துவருவனவெல்லாம் இச்சூத்திரவிதியுள் அடக்கிக்கொள்க. (க)

அஅ. பொதுவெழுத் தானுஞ் சிறப்பெழுத் தானு
மீரெழுத் தானு மிலங்குந் தமிழ்மொழி.

உ-ம். நிலம்; நீர். எ-ம். ஒன்று; எறி. எ-ம். பழம்; வாழை. எ-ம். முறையே காண்க. (உ)

அகூ. அதிகா ரத்தா லவாய்நிலை தன்னை
லோர்சொற் பொருளை யுறுத்தற் பொருட்டாற்

செய்யுள் விகாரத் தாற்சிதைந் ததனு
லறுவகைப் பொருளி னத்தொகை தன்னு
லிடையி லுள்ளன வெல்லா மறைதலா
லின்னும் பலபல வேதுவி னுலு
மொழிவரு வித்து முடித்தனர் கொளலே.

அதிகாரத்தான் மொழிவருவித்தலாவது: "அவற்றுள், அ இ உ எ ஒக்குறிலைந்தே" என்புழி நின்ற அவற்றுளென்னுஞ்சொல்லைப் பத்துச்சூத்திரத்திற்குத் தனித்தனியே வருவித்தலும், "அன்னு னிறுமொழி யாண்பாற் படர்க்கை" என்புழி நில்லாத வினை வினைக்குறிப்பு உடம்பாடு எதிர்மறைமுற்றுக்களாமென்னுஞ்சொற்கள் முதலாகப் பலசொற்களை "வேறில்லை யுண்டைம் பான்மூ விடத்தன" என்னுஞ்சூத்திரவரை பொருத்தமறிந்து தனித்தனியே வருவித்தலும் போல்வன.

அவாய்நிலையான் மொழிவருவித்தலாவது: "இயம்புவனெழுத்தே"—யான்; 'அறைகுவன்சொல்லே'—யான் என்றாற்போல்வன.

ஓர்சொற்பொருளையுறுத்தற்பொருட்டான் மொழிவருவித்தலாவது: ஊழென்னுஞ்சொற்கு விதி, பொறி, வினை முதலிய சொற்களுள் ஒன்றனைக் கூறவே பொருள்படுதலாயிருக்க, 'ஊழ் அஃதாவது இருவினைப்பயன் செய்தவனையே சென்றடைதற்கு ஏதுவாகிய நியதி' என்றாற்போல்வன.

செய்யுள்விகாரத்தாற் சிதைந்ததனன் மொழிவருவித்தலாவது: 'ஆகார விறுதி யகர வியற்றே;' 'செய்தசெய் கின்ற செய்யுமென் பாட்டில்;' 'கருத்துப் பதப்பொருள் காட்டு;' பழியஞ்சிப் பாத்தூ ணுடைத்தாயின் வாழ்க்கை;' 'வினைவலியுந் தன்வலியு மாற்ருன் வலியுந்—துணைவலியுந் தூக்கிச் செயல்.' என்பவற்றுள் அகரவிறுதியியற்றே, செய்யுமென்னும் வாய்பாட்டில், எடுத்துக்காட்டு, இல்வாழ்க்கை, சீர்தூக்கிச்செயல் என்றாற்போல்வன. செய்யுள்விகாரத்தினனும் சிதைந்ததனுலும்என இருபொருள்கொண்டு, இவ்வுதாரணங்களை முன்னதற்காக்கி, பின்னதற்குக் 'கழாஅக்கால் பள்ளியுள் வைத்தற்ருல்' என்பதற்குப் பகரவீகாரமுதலிய குற்றங்களை மிதித்தென்னுஞ்சொற்களை வருவித்தல்போல்வனவெனக் கொள்ளலுமொன்று. சிதைந்தது - இழிவுபட்டது.

அறுவகைப்பொருளினத்தொகை தன்னுன் மொழிவருவித்தலாவது: முறிமேனி என்புழி முறிபோலு மேனியென்றமையாது மாவினது தளிரினது நிறத்தையும் அத்தளிரினது தட்பத்தையும்

போன்று கண்ணுக்கும் மெய்க்கும் இன்பத்தைக் கொடுக்கு மேனி யென்றாற்போல்வன. அறுவகைப்பொருளினாலும் அத்தொகைத ன்னாலுமென இருபொருள்கொண்டு, இவ்வுதாரணத்தைப் பின்ன தற்காக்கி, முன்னதற்குதாரணம் அறுவகைப்பொருளும் விரிந்து நின்றவிடத்தும் இங்ஙனமொழிகளை வருவித்தல்போல்வனவெ னக் கொள்ளலுமொன்று.

இடையிலுள்ளனவெல்லா மறைதலான் மொழிவருவித்தலாவது: 'அயனுயர் சதாசிவ னதிகா ரத்தார் என்புழி அரி அரன் மகேச்சுரனென வருவித்தல்போல்வன. 'பிருதிவி நாதம் பிறக்கு மாயையின்;' 'அ ஔ உயிரே;' 'கனவுடம்பாகும்' என்றாற்போல் வனவுமது.

இன்னும் பலபலவேதுவினான் மொழிவருவித்தல் தொல்காப் பியப் பொருளதிகாரவுரையிற் பெரும்பாலும் வரும். இங்ஙனம் விரிக்கிற்பெருகும்.

'பிறிது மாகுப காமங்காழ்க் கொளினே;' 'நல்லார்புனைவரே' என்புழி யானுமதுசெய்வேனெனப் பொருள்கொள்ளுதல் குறிப்பு.

'கருநாய் கவர்ந்த காலினர் சிதகிய பானையர்' என்புழி ஆயெ னப் பொருள்கொள்ளுதல் வினையெச்சமானது வினைக்குறிப்புமுற் றாய்த் திரிந்தது. "குறிப்புமுற் றீரெச்ச மாகலு முளவே" என்பத னால் முற்றெச்சமாய்த் திரிந்ததன்றோவெனின், அவர் "அன்றி யின்றியென் வினையெஞ் சிகரந்—தொடர்பினு ளுகரமாய் வரும்" என்று கூறினார். அதனை மறந்து கூறுதலால் அன்றென்க. அவர் இதுவேயன்றிப் பலவிடத்தினுமறந்தார். அன்றியும் இறைவனீங்க லானவெல்லாவாசிரியர்க்கும் "மறவி யினைய வுடல்கொ ளுயிர்க் குணம்" என்பதனாற் போது. அவரவர் மறவிகளை விரிக்கிற்பெரு குதலானும், அறிதலருமையானும், பெரியோர்க்குக் குற்றங்கூறினா னென்னுங் குற்றம் வருதலானும், விரித்திலமென்க. இம்மறவி வரு தற்குக்காரணந் தன்வசஞ் சிறிதாயினுமின்றி ஊழென்னும் பரவச மாயே நடத்தலென்க. இக்கருத்து நோக்கியே பாயிரத்துள் 'மறப் பெனும் பகைவன் வாரிக் கொண்டனன்' என்றும். 'இரும்பார்க் குங் காலரா யேதிலார்க் காளாய்;' சேனைத்தலைவராய்' என்பன போல நின்றன கெடுதல்விகாரப்பட்டு நின்றன வென்பாரும்,ஆயெ ன்னுமொழி வருவிக்கவேண்டுமென்பாருமுளர். இங்ஙனம் வருவ னவெல்லாம் மொழிவருவித்தலென்னுமிலக்கணமன்று. இவ்விர ண்டற்கும் வேறுபாடென்னெனின், முன்னது மொழிவருவித்த ற்கு முன்பே சொல்லாவது பொருளாவது சொற்பொருள் கூடியர

வது முடியாது கிடக்கும்; பின்னது மொழிவருவித்தற்கு முன்பே சொல்லும் பொருளும் முடிந்து கிடக்கும். (ங)

சூ0. இயற்கை யளபெடை செயற்கை யளபெடை
யெழுத்துப்பே றளபெடை யிசைநி றளபெடை
யொற்றுப்பே றளபெடை யொரோவழிக் கூடி
லைந்தென மொழிப வளபெடை யவைதாங்
குற்றெழுத் தளபெடை நெட்டெழுத் தளபெடை
யொற்றெழுத் தளபெடை யெனவொரு மூன்றாய்
மொழிமுத லிடைகடை மூன்றினும் வருமே.

விளி, பண்டமாற்றூர்த்தல், புலம்புதல், முறையிடுதல் ஆதியிடத்துச் சொற்குப் பின்றோன்றாது கூடப்பிறத்தல் இயற்கை.

சீர் தளை வழுவினவிடத்துச் சொற்பிறந்தபின் புலவன் பெய்துகொள்ளுதல் செயற்கை.

எழுத்துப்பேறு உயிர்மயங்கியன் முதலானவிடங்களில் அராஅப்பாம்பு முதலிய சொற்களிற்காண்க.

இசையளபெடை வழக்கினுட் காமரத்தாரிடத்திற்காண்க.

"ஒற்-றின்றியுஞ் செய்யுட் கெடினுற்றை யுண்டாக்கு—குன்றுமே லொற்றளபுங் கொள்" என்பதனால் ஒற்றுப்பேறளபெடை காண்க. இவ்விதி சிறுபான்மையாதலிற் கூடிலென்றாம். எனவே நான்கும் பெரும்பான்மையென்க.

'பழூஉப்பல் லன்ன பருவுகிர்ப் பாவடி;' 'நெய்போல்வதூஉம்;' 'நீங்கிற்றெறூஉம்;' 'துப்பாயதூஉமழை;' 'கூட்டி யெழூஉத லென்மனார் புலவர்;' 'ஆவயின் வரூஉம் வல்லெழுத்து மிகுதி;' 'ஆவயின் வரூஉ மகர மூர்ந்தே;' 'இன்னென வரூஉம் வேற்றுமையுருபிற்கு;' 'ஏவலின் வரூஉ மெல்லா வீற்றவும்;' 'வடிவி னளவின் வண்ணத்தின் வரூஉம்.' எ-ம். 'விராஅய்ச்செய்யாமை;' 'கழாஅக்கால்;' 'குன்று முட்டிய குரீஇப் போலவும்;' 'பரீஇயுயிர்செகுக்கும்.' எ-ம். வருவனவெல்லாங் குற்றெழுத்து. இவ்விதி பெரும்பான்மையும் விளிமரபுச்சூத்திரங்களாற் காண்க. ஒழியைந்தும் வெளிப்படை.

சூக. போலி யெழுத்தைப் போற்றுதல் கடனே.

எ-து. ஈரெழுத்துக்கள் கூடி ஓரெழுத்துப்போல வருவனவற்றைத் தள்ளாது கொள்ளுகவென்றவாறு. தள்ளில், ஐயெ னெடுஞ்சினை மெய்பெறத் தோன்றும்;' 'ஐயந்திரப் பொருளை யுணர்த்தலு—

மெய்ந்நடு நிலையு மிருநிறை கோற்கே;' 'கையி னாற்சொலக் கண்ணி னிற் கேட்டிடு—மொய்கொள் சிந்தையின் மூங்கையு மாயினேம்,' 'கையறு நெஞ்சங் கடியல் வேண்டும்—பொய்தீர்காட்சிப் புரையோய் போற்றி;' 'ஒளவிய நெஞ்சத்தா னாக்கமுஞ் செவ்வியான்—கேடு நினைக்கப் படும்.' இவைபோல் வருஞ்செய்யுளெல்லாம் மோனைத்தொடையோடும் எதுகைத்தொடையோடும் மாறுபட்டு, இலக்கணவழுவாதல் காண்க.

வடநூலார் இவ்விலக்கணத்தைத் தள்ளாது, சமானாக்கரமென்று பெயரிட்டு இவ்விரண்டனையுந் தழுவினார். அதுபற்றித் தமிழ்நூலார் இணையெழுத்தென்று மொழிபெயர்க்க மறந்து போலியெழுத்தென்று மொழிபெயர்த்ததனால், போலிச்சரக்கு, போலியிலக்கணம், போலியுரை என்னுஞ் சொற்களைப்போல இதனையுங்கருதி, முன்னும் பின்னும் பாராது தள்ளினார், அதுபற்றியே இச்சூத்திரஞ் செய்தனமென்க. (௫)

௬௨. அறுவகைத் தொகையு மப்பொருள் படுமே
யாதலி னுருபு முதலிய வடைந்து
நின்றுபய னென்னெனி னிகழ்த்தக் கேணீ
தொக்குழி யப்பொரு டோன்றியும் வேறோர்
பொருளே தோன்றியும் பலபொரு டோன்றியும்
வரும்பின் னிரண்டு மயக்கங் கொடுக்கு
மத்தொகை யிருவகை வழக்கினு மாகர
கருதின பொருளறி கருவி யாக
வருமே யுருபு முதலிய விரியே.

உ-ம். மரத்தை வெட்டினான் தொகின் அப்பொருள் பட்டது. சாத்தனைவெட்டினான்; சாத்தனொடுவந்தான்; சாத்தற்குக் கொடுத்தான் தொகின் வேறுபொருள் பட்டன. கரும்பிற்கு வேலி; கருப்புவேலி எனத் தொகிற் பலபொருள்பட்டது. இம்மூன்றனுள் முன்னது இருவழக்கினும் பொருந்தும், பின்னிரண்டும் ஒருவழக்கினும் பொருந்தாது. அஃதென்னெனின், முறையே கூறுகின்றாம். கருதினபொருளைவிட்டுக் கேட்கின்றான் வேறுபொருளைக் கருதலானும், அதுவோ இதுவோ எதுவோ எனமயங்குதலானுமென்க. ஆகையாற் கருதினபொருளறிகருவியாகிய உருபு முதலிய விரி வந்துநிற்றலாற் பயனுண்டென்க.

ஏனையைந்தொகையும் இவ்வாறு வரும்: விரிநிலம்; குளிர்நீர்; சுடுதீ; பெய்மழை பொருந்தும். பார்த்தநீர்; ஆகும்வாகனம்; காத்த

மலர்; பூத்தவரசு இவை பார்நீர்; ஆகுவாகனம், ஆவாகனம்; காமலர்; பூவரசு எனத்தொகிற் பொருந்தாது.

ஆருயிர்; ஆரணங்கு; ஆரமிர்தம் பொருந்தும். ஆரிருள், ஆரடிசில், ஆர்நீர், ஆர்வயிறு, ஆர்வாய் பொருந்தாது.

மதிமுகம், பவளவாய் பொருந்தும். கடல்போல முழங்கிற்று; மழைபோலப் பொழிந்தது; புலிபோலப் பாய்ந்தது தொகிற் பொருந்தாது.

கபிலபரணர்; உவாப்பதினான்கு பொருந்தும். எட்டும் நூறும்; பொன்னுமணியும்; வருதற்குமுரியன்; சாத்தனும்வந்தான் தொகிற் பொருந்தாது.

பொற்றாலி பொருந்தும். பொற்குடம் பொருந்தாது.

எழுத்துச்சொற்பொருளணிக்குற்றங்கள் வரினும் சந்தக்குற்றம் வரலாகாதென்னும் யாப்புவிதி நோக்கி, எவ்வழுவரினுமமைக அடி தொடை ஓசை முதலிய செய்யுளுறுப்புக்கள் வழுவற்கவென்னுங் கருத்தாற் பொருந்ாதனவற்றையுஞ் செய்யுள்விகாரமென்று பெயரிட்டு இடர்ப்பட்டு ஒரோவழித் தொகுப்பர் சான்றோர். அங்ஙனந் தொகுப்பராயினும், விரிந்து நின்று பொருள்பட்டாற்போல மயக்கமின்றிப் பொருள்படுங்கருவியாக அத்தொகைக்கு முன்னும் பின்னுந் தொடர்புசெய்வர். எனவே, தொகுத்த சான்றோர்க்கும் அத்தொகை ஆகாதென்பது கருத்தாயிற்று. ஆகவே, உருபு முதலிய விரியின்றாயின் வேறுபொருள்பட்டும், அதுவோ இதுவோ எதுவோ என்னும் ஐயந்தோன்றப் பலபொருள்பட்டும் வருதலின், பொருடுணிதற்கருவியாகிய உருபு முதலிய விரி வேண்டுமென்பது தெளிக. தொகுக்கினும், வல்லுனர் தொகுக்கிற்பொருந்தும், வல்லார் தொகுக்கிற்பொருந்தாது. எனவே, வழு, வழுவியமைந்தது, வழுவற்றது எனத் தொகைநிலைமூன்றென்று தெளிக. (சு)

சுந. தொகிலொருபொருண் முதலெழுபொருள் வரைதரும்

என்பது வெளி. (எ)

சுச. தடுமா றுந்தொழி றருந்தொகை சிலவே.

உ - ம். புலிகொல்வீரன்; பகைவர்தொழுமரசன்; 'வாளைமீனுள்ளறலைப்படல். (அ)

சுரு. தொகைநிலை தொகாநிலை யெனுஞ்சொற் பொருளா
மாறுபடு புலவர்கண் மூவர்க ளென்க. [ன்

நிலைமொழி வருமொழிக்கிடையே மறைந்து நிற்றல் வெளிப் படநிற்றலென்றும், நிலைமொழி வருமொழிகள் கூடிநிற்றல் பிரிந்து நிற்றலென்றும், நிலைமொழி வருமொழிகள் ஒன்ருய் நிற்றல் பலவாய் நிற்றலென்றும், பொருள்கூறி, ஒருவரையொருவர் மறுப் பர். அவை விரிக்கிற்பெருகும்.

இது பொது, வருவது சிறப்பு. (௯)

௬௫. தொகைநிலைக் குணத்தைச் சொல்லுங் காலை
வேற்றுமை யுருபு முதலிய விடைநிலை
தொகுதலிற் றொகைநிலை யெனப்படு மென்று
நிலைமொழி வருமொழி நீக்க மின்றி
யீறு முதலு மியைந்து நின்று
விட்டிசைப் பின்றியோர் நிலைமொழி விதிபெறத்
தொகுதலிற் றொகைநிலை யெனப்படு மென்றும்
பலசொற் கூடியோர் சொல்லே யாகிப்
பிளவுபட் டிசைக்கவும் பிரிக்கவும் படாம
லீறு முதலு மிவையெனப் படாமற்
றெருகுதலிற் றொகைநிலை யெனப்படு மென்றுங்
கூறுவர் தொகாநிலை கூறுங் காலை
யுருபு முதலிய விடையே யுரைத்தல்
விட்டிசைத் துரைத்தல் வெவ்வே றுரைத்த
லென்றே கூறுவ ரிவர்மத மறுபடா.

உ - ம். நூல்கற்ருன் இது உருபு தொக்கு நின்றது. நூலைக் கற்ருன் இது உருபு விரிந்து நின்றது.

சூரனைவென்ருன் வந்தான் என்புழிச் சூரனைவென்ருனென் னும் பதம் நிலைமொழி வருமொழி நீக்கமின்மை முதலிய இலக்க ணங்களைப் பெற்றுத் தொக்கு ஓர் நிலைமொழியாயே நின்றது. முரு கன் சூரனைவென்ருன் என்புழிச் சூரனை வென்ருனென்னும் பதங் கள் மூன்ருக விட்டிசைக்கப்பட்டு நின்றன.

'ஒருகோட் டிருசெவி முக்கணால் வாயன்;' 'உல்லாச நிராகுல யோக விதச்—சல்லாப விநோதன்;' 'துடியிடை நெடுங்கட் டுணை முலைப் பொற்றெடி;' மன்னகுமாரன்; சங்கபடகம்; வட்டவுள் ளம்; பவளவாய்; கமலபாதம் இவை பலசொற்கூடி ஓர்சொல்லா தன்முதலிய இலக்கணங்களைப் பெற்றுத் தொக்கு ஓர்பெயராயே நின்றன. ஒருகோட்டன் இருசெவியன் முக்கண்ணன் நால்வா

யன். எ-ம். உல்லாசன் நிராகுலன் யோகவிதன் சல்லாபன் விநோதன். எ-ம். துடியிடையாள் நெடுங்கண்ணாள் துணைமுலையாள் பொற்றொடியாள். எ-ம். மன்னன்குமாரன். எ-ம். சங்கம் படகம். எ-ம். வட்டம் வள்ளம். எ-ம். பவளம் வாய். எ-ம். கமலம் பாதம். எ-ம். வெவ்வேறாய்ப் பிரிக்கப்பட்டுப் பிளந்திசைக்கப்பட்டு ஈறு முதலும் இவையெனத் துணியப்பட்டுப் பலபெயராயே நின்றன.

இம்மூவரும் ஒருவர்க்கொருவர் எளியரல்லர், அதனால் மதமறுபடாவென்றும். (௬0)

௬௭. அறுவகைத் தொகையு மறையுங் காலை
யொன்றே தொகுதலும் பலவே தொகுதலு
மாறு வகையு மடங்கத் தொகுதலு
முருபே தொகுதலும் பொருளே தொகுதலு
முருபும் பொருளு மொருங்கே தொகுதலு
முருபும் பொருளு மொருங்குபல தொகுதலும்
பொருளு முருபும் பொருளுந் தொகுதலு
முதலிடை கடையென மூன்றினுந் தொகுதலுங்
கடையிடை யிரண்டினுங் காணத் தொகுதலு
மாதியாப் பலவு மறைந்தனர் புலவர்.

உ-ம். மரம்வெட்டினான் என்புழி ஒன்றே தொக்கது.

'குன்றி கோபங் கொடிவிடு பவள-மொண்செங் காந்த ளொக்கு நின்னிறம்' என்புழி உருபும் உம்மையுந்தொக்கன.

துடியிடை நெடுங்கட் டுணைமுலைப் பொற்றொடி என்புழி ஆறுந்தொக்கன.

மதிமுகம் என்புழி உருபே தொக்கது.

பொருபடை என்புழிக் காலமென்னும் பொருளே தொக்கது.

படைக்கை என்புழி உருபும்பொருளும் ஒருங்கே தொக்கன.

பாண்டிக்கரை என்புழிப் பாண்டியனது நாட்டுக் கடலினது கரைக்கணிருக்குமூர். பொன்னரசன் என்புழிப் பொன்னின்கண்ணே விருப்பத்தையுடையவரசன், குழல்வாய் என்புழிக் குழலினிசைபோல இனிமையைக் கொடுக்குஞ்சொல்லினையுடைய வாய். இவை உருபும் பொருளு மொருங்குபல தொகுதல்.

வடுகக்கண்ணன் என்புழி வடுகநாட்டின்கட்பிறந்த கண்ணன். செந்தாமரை என்புழிச் சிவந்த பூவையுடைய தாமரை. இவை பொருளும் உருபும் பொருளுந்தொக்கன.

மலர்முகம் முதற்றொக்கது. தாமரைமுகம் இடைத்தொக்கது. பொற்றாலி கடைத்தொக்கது. செய்தான்மாடம்; இருந்தான்குன்றம்; அன்பருளிருக்கு மறிவோரிடத்தே கடை இடைத் தொக்கன.

ஆதியென்றதனால், வடுகங்கண்ணன்—வடுகனுக்கு மகனாகிய கண்ணன்; கவிழ்தும்பை—கவிழ்ந்த பூவையுடைய தும்பை; ஆந்தை—ஆதனுக்குத் தந்தை; பூந்தையுமது. இவை முதலிய பெரும்பாலும் விரியும்.

தனித்தனி சிறப்பித்தால் விரிதனோக்கி, அறுவகைத்தொகையுமெனப் பொதுப்படக் கூறிச் சுருக்கினமென்க. (கக)

சுஅ. பண்புத் தொகைவிதி பகரிற் பெருகு
மாயினுஞ் சிலவிதி யறைகுவன் கேணீ
பண்புமுன் வருதலு மிருபண் படுத்தலு
மிருபண் பொடுபொரு ளியைதலு மவ்விரு
பண்புக டாமே பொருளை விளைத்தலு
மியற்பெயர் சிறப்புப் பெயர்மா றுதலுஞ்
சிறப்புப் பொதுப்பெயர் முறையே சிறத்தலும்
பொதுச்சிறப் புப்பெயர் முறையே பொருந்தலும்
பின்மொழி யாகு பெயராய்ப் பிறத்தலு
முன்மொழி யாகு பெயராய் முடிதலு
மிருமொழி யாகு பெயரா யிருத்தலு
மொருபொருட் கிருபெய ராகி யொட்டலு
முற்பதந் தமிழ்மொழி முற்பதம் வடமொழி
யிருபதந் தமிழ்மொழி யிருபதம் வடமொழி
யாகி வருதலு மாதியாப் பலவே.

வெண்கரும்பென இனம்பற்றியும், வெண்டிங்களென இனம்பற்றாமலும், வெண்டாமரையெனத் தனக்குரிய சினையைவிட்டு உரிமையில்லாத முதலைப்பற்றியும், வெள்ளாடெனவெதிர்வுபற்றியும், 'விலங்கன்னர்வெள்ளறிவினார்' என இழிபுபற்றியும், வெண்களமர், வெள்ளாளர் எனச் சாதிபற்றியும், வெள்ளோட்டமெனப் புதுமைபற்றியும், வெண்டேரெனப் பொய்பற்றியும், வெளிற்றுமரமென உள்ளீடின்மைபற்றியும்,வெளியார் முன்னென இயல்பு

பற்றியும், இச்சோறு வெண்படியெனக் கலப்பின்மைபற்றியும், இவ்வுரு வெண்கலமென ஒரு பெயரேபற்றியும், வெள்ளிடையெனத் தனிமைபற்றியும், இவ்வணி வெள்ளைப்பொன்னென நிறமின்மைபற்றியும், இவனுக்கு வெள்ளைப்புத்தியென மந்தம்பற்றியும், இவ்வூரில் வெள்ளைப்பிள்ளையாரெனப் பண்புப்போலிபற்றியும், இன்னும் பலவாயொருபண்பே விரிதலிற் பெருகுமென்றும். இக் கருத்து "கறுப்புஞ் சிவப்பும் வெகுளிப் பொருள" என்னுஞ் சூத்திரமுதலியவற்றுலறிக.

உ-ம். கருங்குதிரை. எ-ம். வெண்ணிறம். எ-ம். சிறுபைந் தூவி. எ-ம். பெருவெள்ளை சிறுவெள்ளை [இவையாகுபெயருமன்றி அன்மொழியுமன்றி நெல்லென்னும் பொருடந்தன.] எ-ம். திருவள்ளுவன் றெய்வப்புலவன்; அகத்தியன் முனிவன்; தண்டியாசிரியன் [இவற்றை மாறியுமறிக.] எ-ம். பலாமரம்; பரணிமீன்; மேடராசி. எ-ம். அரசன்சோழன், பார்ப்பானிராமன். எ-ம். மக்கட்சுட்டு; பழங்கறி; பழம்புளி. எ-ம். குழற்பண்; யாழ்ப்பண்; 'குழலினிதியாழினிது.' எ-ம். புளிச்சுவை; கறிச்சுவை. எ-ம். அராஅப்பாம்பு; கன்னியாகுமரி. எ-ம். மன்னன்குமாரன். எ-ம். நுட்பம். எ-ம். அழகப்பிரான். எ-ம். ஆதிபகவன். எ-ம். முறையே காண்க.

ஆதியென்றதனல், வண்ணம், வடிவு, அளவு, சுவை முதலாகப் பலருமெடுத்தோதினவும் அணியினுள்ருவக முதலியனவுங் கொள்க. (௧௨)

௬௬. சிலபெய ரெச்சமுஞ் சிலவினைத் தொகையு
மிருவகை யுவமையும் வண்ணச் சினைச்சொலும்
பண்புத் தொகையெனப் பகரும் வடநூல்.

உ-ம். எண்ணும்பொருள்—எண்ணப்படுவதாகிய பொருள் என்பர். துணியும்பொருளுமது. இவ்விரண்டனையும் வேறிலக்கணமென்பர். உரைகல்-உரைக்கப்படுவதாகிய கல் என்பர். செய்குன்றுமது. மதிமுகம், முகமதி என்புழி உருபு இடையினுமீற்றினுந் தொக்கது என்பர். செங்கானரை, வெண்பூத்தாமரை முறையே காண்க.

பகரும் வடநூலெனவே தமிழ்க்கடாதென்க. ஆயின் ஈரிலக்கணமும் ஒன்றென்று பாயிரத்திற் கூறியதென்னெனிற் பெரும்பான்மை நோக்கியென்க. (௧௩)

கூ00. அஅந் நகிருவி வருமொழிப் பொருளை
யின்மை பிறிதுமறை யினுளொன் ருக்கும்.

எ-து. இவ்வகையாறும் வருமொழிப்பொருளை மூன்றனுளொன்ருக்குமென்றவாறு.

உ - ம். அரூபம், அப்பிராமணன், அதன்மம். எ-ம். 'அடைந்தானு மொன்ருகா தநந்நியமா யிருக்கும்;' 'அநந்நியமாய் நிறைந்த;' அநங்கன். எ-ம். 'அந்நியநாத்தியை யுணர்த்தும்.' எ-ம். நிமலனுமிறையவன். எ-ம். 'குதர்க்கவுரைகூறேல்.' எ-ம். திக்கினேடுவிதிக்கு நீர் செலுத்தி. எ-ம். முறையே ஆறும் மூன்றும் வந்தன காண்க. (கச)

கூ0க. அவற்று ளின்மை யைவகை யாகும்.

அவை சிவஞானசித்தியாரில் அபாவவளவையுள்ளுந் தண்டியலங்காரத்துள் அபாவவிரிச்சூத்திரத்துள்ளுங் காண்க. ஆயின், வடமொழியிலக்கணத்தை இங்ஙனம் விரிக்கிற்பயனென்னெனின், "இல்லென் கிளவி யின்மை செப்பின்;" "இல்லெ னின்மைச் சொற்கை யடைய;" "இல்பொருளுவமை." எ-ம். அல்வழி; அஃறிணை; அவனல்லன்; குற்றியல்லன்மகன்; மகனன்றுகுற்றி; 'இருதிறனறிவுள திரண்டலா வான்மா;' 'இருதிற னல்லது சிவசத்தாமென.' எ-ம். 'கோளில்பொறி;' 'பயனில்சொல்.' எ-ம். முறையே அம்மூன்றனையும் முற்காலத்தார் மொழிபெயர்த்துத் தமிழிற்குரிய இலக்கணவிலக்கியமாக்கினர். அன்றியும் பிற்காலத்தார் 'நேர்ந்த மொழிப்பொருளை நீக்க வருநகரம்;' 'என்று மபாவமு மில்லதனபாவமும்;' 'அபாவம் பொருளொப் பாறென்பர்.' எ-ம். 'அத்துவித மொன்றையு மாங்கு;' 'அநாதிமுத்தசித்துரு;' 'அபேதப்பிறப்பிலதாய்.' எ-ம். மொழிபெயராமலே தமிழ்க்குரிய இலக்கணவிலக்கியமாக்கினர். ஆகையால், அம்மூன்றனையும் அவற்றுளொன்ருகிய ஐந்தனையும் விரித்தறியாக்கால், தமிழிலக்கணவிலக்கியங்கட்குப் பொருள்கொள்ளக்கூடாது. பொருள்கொள்ளுங்கருவியாய் விரித்ததனுன், மிகவும் பயனுண்டேயென்க.

இனி இவ்வறுவகையுமன்றி, அபகீர்த்தி, அதிக்கிரமம், அபவாதம், துன்னிமித்தமுதலிய பலவுள. அவையெல்லாம் விரிக்கிற்பெருகுதலானும், தமிழிற்குப் பயன்படுதல் சிறுபான்மையாதலானும், உரைத்திலமென்க. (கரு)

கூ0உ. எழுத்துச்சொற்பொருளாற்றன்மொழிப்பொருட்
காரண மிவற்றுட் கருதுவ கருதுக.

எ-று. எழுத்தாற்றல், சொல்லாற்றல், பொருளாற்றல், மொழிப்பொருட்காரணமென்னு நான்கனுட்கருதுதற்கு அகப்பட்டன வற்றைமாத்திரங் கருதுகவென்றவாறு. ஆற்றல் - வலி.

அயன், அரி, அரன் என்புழி அகரவுயிரானது ஒற்று உயிர் மெய் முதலியனவற்றையுணர்த்தாது தானுயிரே தனக்கொருமாத்திரையே யென்றுணர்த்தலே எழுத்தாற்றல். இக்குளத்தைப்பெருக்கு; இவ்வாற்றுப்பெருக்கு நேற்று வந்தது; இவ்வாற்றுப்பெருக்குக் கடல்போன்றது என முறையே குகரவுயிர்மெய்யானது ஒன்று, அரை, கான்மாத்திரையாகியும், முற்றுகரம், குற்றுகரம், ஒற்றுகியும், அலகுபெற்றே நின்றும், பெறுதற்கும் பெறுமைக்கும் பொதுவாயே நின்றும், பெறாதே நின்றும், ஆற்றல்கெட்டது.

விரலென்னுஞ்சொற் றனக்கு முதலாகிய கையையுஞ் சினையாகிய நகத்தையும் உணர்த்தாது, தானங்குலமேயென்று பொருளுணர்த்தலே சொல்லாற்றல். நகமென்னுஞ்சொல் ஒருகாலுகிரையும் ஒருகான்மலையையும் உணர்த்தலே ஆற்றல்கெட்டது.

சிலைவளைத்து வென்றான்; சிலையாலாலயஞ்செய்தான் என்னுந்தொடரினுள் முறையே கல் வில் என்றுணர்த்தாது, வில் கல் என்றுணர்த்தலே பொருளாற்றல். இப்பணமுழுதுங்கொடாதே என்னுந் தொடரினுள் ஒருகாற் சிறிதாயினுங் கொடாதேயென்றும், ஒருகாற்சிறிது வைத்துப் பெரிது கொடுவென்றும், ஒருகாற் பெரிது வைத்துச் சிறிது கொடுவென்றும் உணர்த்தலே ஆற்றல்கெட்டது.

மொழிப்பொருட்காரணம் "மொழிப்பொருட்காரணம்" என்னுந் தொல்காப்பியச் சூத்திரத்துட்காண்க.

இந்நான்கிலக்கணமும் அறிதலருமைநோக்கிக் கருதுவ கருதுகவென்றும். (கசு)

கоள. முப்ப தெழுத்து முறையே யொற்றுமை
யன்றியுங் கசவுஞ் சயவும் வயவு
மனவும் ளவும் லவவு மன்றியு
மின்னும் பலவா மொற்றுமை யென்ப.

அன்றி ஈரிடத்திற்கூறியது முன்புள்ளது, இன்றுள்ளது, சொல்லொற்றுமையென்னும் மூவிதியும் பகுத்தறிதற்கென்க.

உ - ம். அறுமுகம் - ஆறுமுகம்; மீற்கண் - மீன்கண். எ-ம். பிக்கை - பிச்சை; பங்கசம் - பங்கயம்; கோவில் - கோயில்; கலம்

கலன்; அலமருகுயிலினம் - அளமருகுயிலினம்; வில்வம் - வில்லம். எ-ம். வரும்.

இன்னும் பலவென்றதனால், பகுதிமுதலைந்தும், பெயர்முதனான்கும், நிலைமொழியும் வருமொழியுங்கொள்க. உ-ம். இயம்பினார் - விளம்பினார். எ-ம். உண்டனன் - உண்டான். எ-ம். உண்ணாநின்றான் - உண்கின்றான். எ-ம். ஒன்றனை - ஒன்றினை. எ-ம். முட்டீது - முஃடீது; கற்றீது - கஃறீது. எ-ம். பொற்பணி - ஆடகப்பணி. எ-ம். தொட்டான் - தீண்டினான். எ-ம். அதுவோ-அதுகொல். எ-ம். "கருப்புஞ் சிவப்பும் வெகுளிப் பொருள." எ-ம். சிவனஞ்சுதின்றான் - அரன்விடமுண்டான். எ-ம். முறையே காண்க.

கoச. ஓரெழுத் திற்கே யொருசா ரியையு
மோரெழுத் திற்கே பலசா ரியையும்
பலவெழுத் திற்கே யொருசா ரியையுந்
தொடர்ந்தபல் லெழுத்திற் கொருசா ரியையுஞ்
சாரியை யின்றித் தனித்துந் தொடர்ந்துந்
தொடர்பினுட் சாரியை கலந்து தோன்றியும்
வருமென மொழிப வழக்கறிந் தோரே.

உ-ம். 'வல்லெழுத் தென்ப க ச ட த ப ற;' 'மெல்லெழுத் தென்ப ங ஞ ண ந ம ன;' 'இடையெழுத்தென்ப ய ர ல வ ழ ள.' இவை பதினெட்டும் அச்சாரியையொன்றையே பெறும்.

அகரம், அகாரம், அஃகான் என்புழி ஓரெழுத்திற்கே பல சாரியை வந்தன.

அகாரம், ஆகாரம், ஐகாரம் என்புழிப் பலவெழுத்திற்கே ஒரு சாரியை வந்தது.

அஆகாரம், இஈகாரம் என்புழித் தொடர்ந்த பலவெழுத்திற்கு ஒருசாரியை வந்தது.

'அம்முனிகரம்' என்புழிச் சாரியையின்றித் தனித்துவந்தது.

'அ இ உம்முதற்றனிவரின்' என்புழிச் சாரியையின்றித் தொடர்ந்து வந்தது.

'ணளஃகான்முன்னர்;' 'லளஃகான்முன்னர்' என்புழித் தொடர்பினுள் அச்சாரியையும் கான்சாரியையும் வந்தன. ஓரெழுத்திற்கோர்சாரியையும், ஓரெழுத்திற்கிணைந்து இருசாரியையும், இணையீரெழுத்திற்கு ஒருசாரியையும் வருதல்பற்றிக் கலந்தென்றாம். ()

க௦௫. தகுதி யவாய்நிலை யண்மைநிலை மூன்றும்
புணரப் புணர்வது புணர்ப்பெனப் புகல்வர்.

தகுதியாவது, சோற்றையுண்டான் என்புழிச் சோறென்னும் பதம் உருபு வருமொழிகளோடு புணர்தற்குமுன்பே தானே தனித் தோராதாரமின்றியே நிற்பினும், இறிஞி மிறிஞிபோலப் பொருளற்ற சொல்லன்றாய், பொருளும் வினைமுதல் கருவி முதலிய பொருளன்றாய், இன்னும் பலகுணங்களோடு கூடி நிற்றல்.

அவாய்நிலையாவது, அத்தனிப்பதம் தனக்குரிய ஐயுருபையே விரும்புதலுமன்றி, ஓர் வினைச்சொல்லினையும் விரும்புதன்முதலாகிய அவாவோடு கூடி நிற்றல்.

அண்மைநிலையாவது, சோறு கடன்முழங்கிற்றுண்டான் என இடையிற்பிறசொற்கள் வந்து பொருந்தற்கிடங்கொடாமற் றம்முளணுகிச் சோற்றையுண்டான் என நிற்றல். இவ்வண்மைநிலையிலக்கணமுணராதார் இடையிற்பொருத்தில், அதனைச் சான்றோர், ஒன்றனையுங் குற்றங்கூறேமென்னு நியமத்தால், யாப்புவிதி நோக்கி வந்ததென்றும், மொழிமாற்று முதலிய பொருள்கோளிலக்கண நோக்கி வந்ததென்றும், இடைப்பிறவரனோக்கி வந்ததென்றும், இன்னும் யாதானுமோர் பெயரையிட்டு, சோற்றையுண்டான் கடன்முழங்கிற்று எனப் பிரித்து வேறுதொடராக்குவர். இதனைச் சிலர் மறுப்பர். அஃதெங்ஙனமெனின், நாற்குலத்தலைவரும், நாற்குலக்குலமகளிரும் தனித்தனியே இருவரிருவராய்க் கிடப்பிற் புல்லுதல் கூடும்; இம்முறையன்றி நான்குதலைவரும் ஒருநிரையே, பின்பு நான்குகுலமகளிரும் ஒருநிரையேயாக எண்மருமொருமுறையே கிடப்பிற் புல்லுதற்றொழில் கூடாது. இவ்வுவமை முதலாகப் பலவுவமைகளைக் காட்டிச் சொற்றொடர்புண்டென்றன்மாத்திரமேயன்றிப் பொருட்டொடர்பு சிறிதாயினுங் கூடாதென்று உவமேயங் கூறிமறுப்பர். இவ்வண்மைநிலைவிதியானது தகுதியவாய்நிலையைக்காட்டினும் மிகவும் விரியுமென்க. தொல்காப்பியர் இம்மூன்றனையுமுள்ளடக்கி, "நிறுத்த சொல்லுங் குறித்துவரு கிளவியும்" என்றார்.

(கக)

க௦௬. பொருத்தப் புணர்ச்சியப் பொருத்தமில்புணர்ச்சி
யிவ்விரு வகையு மொருங்கியல் புணர்ச்சி
யெனமூன் றென்பர் புணர்ச்சி யியல்பே
வழூவுடைப் புணர்ச்சியை மருவழி நான்கே.

இது பொது.

(உ௦)

கoஎ. பொருத்தப் புணர்ச்சியை விரிக்கிற் பெருகு
மன்றியும் யாவரு மறைந்தனர் காண்க. (உக)

கoஅ. ஆற்றொழுக் கடிமறி மாற்றிரண் டல்லர்
வெழுவகைப் பொருள்கோன் மரூஉமொழி பொ
சிலவிடைப் பிறவரல் பண்பதி கார [ய்யுரை
மாதியாம் பதங்க ளவையு மன்றி
விகுதியுரு பும்மை முதலினுட் சிலவும்
பொருத்தமில் புணர்ச்சி யெனப்புகன் றனரே.

ஆற்றொழுக்கும் அடிமறிமாற்றும் பொருத்தப்புணர்ச்சியுளடங்கும். ஏனையவற்றுக்குதாரணம் 'சுரையாழவம்மிதப்ப;' 'யானைக்கு நீத்துமுயற்குநிலை' முதலியவெழுவகைப்பொருள்கோளும் பலரும் விரித்தனர் காண்க.

நுனிக்கொம்பர்; கடைக்கண்; அரைக்காசு; முன்றில் என முன் பின்னாய் நிற்றன்முதலியன மரூஉமொழி.

'ஒப்பிலா மலடி பெற்ற மகனொரு முயற்கொம் பேறித்—தப்பிலா காயப் பூவைப் பறித்தமை சாற்றி னாரே' முதலியனவெல்லாம் பொய்யுரை.

வல்லமெறிந்த மல்லல்யானைப்பெருவழுதி என்றலே முறை. இதனிடையின் நல்லிளங்கோசர்தந்தையெனவரல் இடைப்பிறவரலென்க. இச்செய்யுள்போலப் பெரும்பாலுமுளவென்க.

'இனிய வுளவாக வின்னாத கூறல்—கனியிருப்பக் காய்கவர்ந் தற்று.' என்புழி இனிய கனி, இன்னாத காய் எனப் பின்னும் பிரித்துப் பொருத்தலே பண்பு.

அதிகாரமாதியென்றது "அதிகா ரத்தா லவாய்நிலை தன்னால்" என்னுஞ் சூத்திரத்திற்கூறிய. உதாரணமுழுதுங் கொள்ளுதற் கென்க.

இதுவரை பதத்தோடு பதம் புணர்ந்த பொருத்தமில்புணர்ச்சி.

இனிப் பதத்தோடு விகுதி முதலிய பொருந்தும் பொருத்தமில்புணர்ச்சி வருமாறு:—கொடிச்சேவலான்; செய்தவேள்வியன்; கொண்டபகைவன்; உடைமரவுரியான் இவைபோல்வனவெல்லாம் சேவற்கொடியான்; வேள்விசெய்தவன்; பகைகொண்டவன்; மரவுரியுடையான் என்று விகுதி பொருந்தலே முறையென்க. 'செல்வத்துளெல்லாந்தலை;' 'நடுவூருணச்சுமரம்' இவை போல்வனவெல்

லாம் செல்வமெல்லாவற்றுள்; ஊர்நடுவுள் என்றுருபு பொருந்த லேமுறையென்க. 'புணரிய னிலையிடைக் குறுகலு முரித்தே;' சாத்தன் வருதற்குரியனுமாவன் இவைபோல்வனவெல்லாம் புணரிய னிலையிடையுங் குறுகலுரித்து; சாத்தன் வருதற்கு முரியனுவன் என்றும்மை பொருந்தலே முறையென்க. முதலென்றதனுல், ஒன்றினையுணர்ந்தான்; இரண்டினையிழந்தான் இவைபோல்வனவெல்லாம் அன்சாரியை பொருந்தலே முறையென்க. (௨௨)

**க0௯. இவ்விரு வகையு மொருங்கியல் புணர்ச்சி சிலவிடைப் பிறவர லெனத்தெளிந் தனரே.**

உ-ம். வாளான் மருவாரை மாய வெட்டினான்; அறத்தை யழுக்கு பெறச்செய்தான்; 'நீலமயி லேறிவரு மீசனருண் ஞான மதலை' இவைபோல்வனவெல்லாம் ஒருகாற்பொருந்தும், ஒருகாற் பொருந்தாதென்க.

பொருத்தப்புணர்ச்சியொன்றிருக்கவே ஏனையிரண்டுங்கொண்டதென்னெனின், புணர்ச்சிச்சிறப்பினும் அடி தொடை ஓசைமுதலிய செய்யுளுறுப்புச் சிறத்தலிற் கொண்டதென்று தெளிக. சிறுபான்மை சொற்சுருங்குதற்பொருட்டென்றும், சொல்விரிதற்பொருட்டென்றுந்தெளிக.

இம்மூவகைப்புணர்ச்சியும் சிறப்பும், அச்சிறப்பின்மையும், பொதுவுமாகிய வழுவற்ற புணர்ச்சியேயாமென்க. சோறுகடன் முழங்கிற்றுண்டானென்பதுபோலச் சிறவாத வழுப்புணர்ச்சியன்று. புணர்ச்சி நான்காயிற்றென்க. (௨௩)

**கக0. வழுவுடைப் புணர்ச்சியைப் பலர்வகுத் தலினிலம்.**

எழுத்தினுள் விலக்கியனவுஞ் சொல்லினுட் டிணைவழுமுதலியனவுமென்க. (௨௪)

**ககக. புணர்ச்சி விகாரம் புணர்ச்சியில் விகார மெனவிரண் டாகு மெழுத்து விகாரம்.**

தொடர்மொழிக்கண்ணும், தனிமொழிக்கண்ணும் முறையே வருமென்க.

இது பொது, வருவன சிறப்பு. (௨௫)

**கக௨. எழுத்திலக் கணத்தி னெழுந்த விகார மியாப்பிலக் கணத்தி னெழுந்த விகார மெனவிரு கூறும் புணர்ச்சி விகாரம்.**

இவ்விருவகைவிகாரமும், ஈரிலக்கணத்தினும் எல்லாரும் விரித்தலின், யாம் விரித்திலமென்க. (உசு)

**௧௧௩. தோன்றல் திரிதல் கெடுதனிலை மாறுத லெனநான் காகும் புணர்ச்சியில் விகாரம்.**

நிலைமாறுதலாவது எழுத்துக்கள் ஒன்றனிலைக்களத்து ஒன்று சென்று தம்முள் வேறின்றி நிலைமாறுதல்.

உ - ம். செல் - சென்றீ; நில் - நின்றீ; யாது - யாவது இவை தோன்றல்.

'உயர்திணைமேன;' 'அஃறிணைமேன;' 'உரிச்சொன்மேன;' 'கண்ணகன்பரப்பு;' வாளான்வெட்டினான் இவை லகரம் ணகரமாய்த் திரிந்தது. மலையில்வீழருவி; மழைபெய்யில் வாழலாம் இவை னகரம் லகரமாய்த் திரிந்தது. 'சுழியோ டெறிபுனற் பொன்னிநன்னாடன்' இது குற்றெழுத்து நெட்டெழுத்தாய்த் திரிந்தது. மாகி - மாசி இது ககரஞ் சகரமாய்த் திரிந்தது. இவை திரிதல்.

யாவர், யார்; யானை - ஆனை; யாடு - ஆடு இவை கெடுதல்.

தசை, சதை; வைசாகி, வைகாசி; நாளிகேரம், நாரிகேளம்; 'காமவிதி கண்முகம் மருங்குல்வாய் துகடினி' காவி மதி துடி சனி இவை நிலைமாறுதல்.

புணர்ச்சிவிகாரத்திற்கும், புணர்ச்சியில்விகாரத்திற்கும் வேறுபாடென்னெனின், முன்னது வருமொழிநாற்கணநோக்கியாவது, வேற்றுமை அல்வழி நோக்கியாவது, அடிதொடையோசை மூன்று நோக்கியாவது, இன்னும் யாதானுமோர்காரணத்தால் விகாரப்படுமென்க. பின்னது ஓர்காரணமுமின்றியே விகாரப்படுமென்க. ()

**௧௧௪. இந்நான் கியல்பு மியம்புவர் மொழிக்கும்.**

எ-து. ஓர்காரணமுமின்றியே தோன்றன்முதலிய நான்கும் பெறுஞ் சொற்களென்றவாறு.

உ - ம். சாத்தன்பசித்துண்டான். எ-ம். குருவி குரீஇ. எ-ம். பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல்; பெயர், வினை, இடை, உரி. எ-ம். நுனிக்கொம்பர், கடைக்கண், அடிநா, இடைநா, கடைநா, அரைக்காசு, முன்மாலை, பின்மாலை, வந்தானுழுது, செய்தான்மாடம், இருந்தான்குன்றம். எ-ம். நான்கும் முறையே காண்க.

இனிச் சொற்கள் இங்ஙனந்தமிழ்மொழிவிதியால் நிலைமாறுதலுமன்றி, வடமொழிவிதியால் நிலைமாறுதலுமுள. உ-ம். செய்தவேள்வியர்; எய்தியசெல்வத்தர்; கழிந்தவுண்டியர்; வேண்டாவுயிரார்; அருங்கேடன்; கொண்டகூழ்த்தாகி; கூப்பியகையினர்; வெறுத்தவாசையர்; பொறுத்தசடையினர்; கெட்டவறுமையர்; விட்டவவாவினர்; வேர்த்துவெகுளார்; கொழுநற் றொழுதெழுவாள்; வாய்பிளந்துறங்கினான்; குறட்டைவிட்டுறங்கினான் எனவரும்.

இனித் தமிழ்மொழிவிதியால் நிலைமாறுதற்கும், வடமொழிவிதியால் நிலைமாறுதற்கும் வேறுபாடென்னெனின், நிலைமொழியும் வருமொழியுந்திரியாது தம்முள் நிலைமாறுதல், திரிந்து தம்முள் நிலைமாறுதலென்க. உ-ம். 'வைக்குந்தன் றாளையெடுத்து;' 'பருகுவன் பைதனோ யெல்லாங் கெட.' எ-ம். வாய்பிளந்துறங்கினான்; குறட்டைவிட்டுறங்கினான். எ-ம். முறையே காண்க.

இனிச் சொற்கள் யாதானுமோர்காரணத்தாற்றோன்றன் முதலிய நான்கும் பெறுதலைப் பலரும் விரித்தலின், விரித்திலமென்க.

பெயரென்பது பேர். எ-ம். நீயிரென்பது நீவிர், நீர். எ-ம். எவனென்பது என்னை, என். எ-ம். பொழுதென்பது போழ்து, போது. எ-ம். ஞெண்டரென்பது ஞெண்டு, ஞண்டர், ஞண்டு, நண்டு, நெண்டு. எ-ம். தெங்கின்காய் தேங்காய். எ-ம். இன்னுமிவைபோல ஓர்காரணமுமின்றியே வரும் விகாரமெல்லாம் இவ்விருசூத்திரத்திற்கூறிய எண்விதியுளடக்கிக்கொள்க. (உஅ)

கக௫. விகாரத் தாற்பொருள் வேறு படுதலும்
விகாரத் தாற்பொருள் வேறு படாமையு
முளவென மொழிப வுணர்ந்திசி னோரே.

உ-ம். கா, காவி, காவிரி. எ-ம். ஆரம், அரம்; அன்பன், அற்பன். எ-ம். பாலாறு, பாலா, ப்ால், பா; மாலைபெற்றாள், மால்பெற்றாள்; தாரைகுறித்தான், தார்குறித்தான். எ-ம். மூவிகாரமும் முறையே வரப் பொருள் வேறுபட்டது காண்க.

புளியங்காய்; காமத்துப்பால்; உரியநெய். எ-ம். 'திருத்தார்நன்றென்றேன்றியேன்;' பொன்குடம், பொற்குடம்; ஏழுகடல், எழுகடல். எ-ம். பாலைவிரும்பினான், பால்விரும்பினான்; மீனைவெறுத்தான், மீன்வெறுத்தான்; ஆதன்றந்தை, ஆந்தை; பூதன்றந்தை, பூந்தை; கொற்றன்றந்தை, கொற்றந்தை; சாத்தன்றந்தை, சாத்தந்தை; கொற்றனுக்கு மகனாகிய கொற்றன், கொற்றங் கொற்றன்;

அகங்கை, அங்கை. எ-ம். மூவிகாரமும் முறையே வரப் பொருள் வேறுபடாதது காண்க. (உக)

ககசு. காரண மதனையே யிடுகுறி யாகவு
மிடுகுறி யதனையே காரண மாகவும்
பலசொல் லினையே யொருசொல் லாகவு
மொருசொல் லினையே பலசொல் லாகவுங்
கருதுவ ரோரோவழிக் கற்றறிந் தோரே.

உ-ம். கரிகரம்; பணிபணம்; வேலன்வேல் இவற்றுள் யானை, பாம்பு, முருகன் என இடுகுறியாகவே பொருள்கொள்வர். இஃதன்றியும், பிறைசூடி, சக்கிரபாணி, கணபதி, சூரனைவென்றான், சிவகாமி, மலர்மாது, உலகமாதா, தெய்வயானை இக்காரணப்பெயர்களை ஓர்மகனுக்கும், ஓர்மகளுக்கும், ஓரெருதிற்கும், ஓர்பசுவிற்கும் பொருத்தி இடுகுறிப்பெயரென்றே கொள்வர்.

"மொழிப்பொருட்காரணம்" என்னுஞ் சூத்திரத்தில் இடுகுறிகளையெல்லாங் காரணமாகக் கொண்டது காண்க.

வாள்போலும்வேற்கண்; கோடாதசெங்கோல்; 'வெருவந்த செய்தொழுகும் வெங்கோலன்;' 'அடியளந்தான்றாயதெல்லாம்' இவற்றுள் கண், கோல், கோலன், அரி என ஒரு சொல்லாகவே கொள்வர். இஃதன்றியும், கும்பகாரன், இசைகாரன், அலங்காரம் இவற்றையும் ஒரு சொல்லாகவே கொள்வர்.

பொருப்பன் இதனுள் பொருப்பென்னு முரிமைப்பொருளையுடையான் முருகன் என்றும், பொருப்பிற்கிறைவனாகிய குறிஞ்சிமன் என்றும், பலசொல்லாகவே கொள்வர்.

இந்நான்கிற்குஞ் சொற்கிடந்தபடியே பொருள்கூறில் இலக்கணவழுவாதனோக்கி, இங்ஙனம் மாறுபடச் சூத்திரஞ்செய்தனனென்க. இலக்கணவழுவாதலை விரிக்கிற்பெருகும். (௩௦)

ககஎ. பகுபதத் திலக்கணம் பகருங் காலைப்
பகாப்பதந் தொடர்மொழி யிரண்டினுட் படாம
லொருமொழி யீற்றினுந் தொடர்மொழி யீற்றினும்
பின்மொழி கெட்ட முன்மொழி யீற்றினு
முன்மொழி கெட்ட பின்மொழி யீற்றினு
மளவிலை யாகி வரும்விகு திகளிற்
பொருந்தும் விகுதிகள் பொருந்த லன்றியும்

வேற்றுமை யுவம வுருபுக ளிடைநிலை
சாரியை நான்குந் தனித்தும் பொருந்தியும்
வேற்றுமைப் பொருள்களை யேற்று நின்று
மொவ்வொரு வேற்றுமை வெவ்வே றாகியு
மிதனை யுடைய திதுவென நின்று
மிதன துடைமை யிதுவென நின்று
மிடப்பொரு ளுணர்த்தும் வினைச்சுட் டெண்பெற
விடைச்சொல் லாகவே யெழுந்து நின்றுந்
தன்மை மாத்திரந் தானாய் நின்றும்
பெயர்ச்சொன் முதலா நான்கினும் பிறந்தும்
பெயர்தா னறுவகை யாகப் பிரிந்தும்
பகுபதமாயினும் பலகுணப் படலாற்
பகாப்பத மென்னப் பெயர்பட லன்றியும்
வினைக்குறிப்பு முற்று வினைக்குறிப் புப்பெய
ரிருவகை யெச்ச மெனப்பெயர் பெற்றும்
பகாப்பதப் பொருள்படப் பகுபத மாகியும்
பகாப்பதச் சொற்படப் பகுபத மாகியும்
பகுத்தலை யேற்றும் பகாமையை யேற்று
மிவ்விரு குணத்தையு மொருங்கே யேற்றும்
பலசொல் லொருபொரு ளாகப் பட்டும்
பலபொரு ளொருசொல் லாகப் பட்டு
மின்னும் பலவா யியலு மென்ப.

குதிரை பகாப்பதம், கருங்குதிரைக்கால் தொடர்மொழி, இவ்விரண்டுமல்லனவெல்லாம் பகுபதமே என்று கொள்ளுதற் பொருட்டு இரண்டினுட் படாமலென்றும்.

உ-ம். வேலன் என ஒருமொழியீற்றின் விகுதி பொருந்தியது.

சேவற்கொடியன்; 'தொடியணிதோளன்;' 'செந்நிறக் குடுமி வெண் சேவற்பதாகையன்' எனத் தொடர்மொழியீற்றின் விகுதி பொருந்தியது.

தெலுங்கன் சொல்லுதற்றெழிலையுடைய பாடை தெலுங்கன் சொல்லு எனற்பாலது தெலுங்கு எனப் பின்மொழிகெட்டமுன் மொழியீற்றின் விகுதிபொருந்தியது. வடுகுமது.

பஞ்சவிலக்கணத்தான், எழுத்திலக்கணத்தான், நாற்கவிஞன், ஆசுகவிஞன் எனற்பாலன இலக்கணத்தான், கவிஞன் என முன்மொழிகெட்ட பின்மொழியீற்றின் விகுதி பொருந்தியது.

அருளை, அருட்கண், அருள்போல, அருளாநின்று, அருள்கின்று, கோன் காமத்து என வேற்றுமையுருபும், உவமவுருபும், இடைநிலையும், சாரியையும் தனித்துப் பொருந்தின. தனித்துமென்றவும்மையால், அருளினை, அருளின்கண், வானம்போல, உண்ணாநின்றனன், கோன்மை, காமத்தின் எனக்கலந்தும் பொருந்தின.

குழையினையணிந்தவன் குழையன்; தமிழைச்சொல்வான் தமிழன்; பொன்னையுடையான் பொன்னன்; மருந்தினைக்கூட்டுவான் மருத்துவன்; கூத்தினைப்பயின்றவன் கூத்தன்; மூன்றென்னுமெண்ணைப்பெற்றவர் மூவர். எ-ம். தொல்காப்பியனாற் செய்யப்பட்டநூல் தொல்காப்பியம்; [அகத்தியம் அவிநயமுதலானதுமது.] கணக்கான்முயன்றுண்பவன் கணக்கன்; ஆற்றலான்வென்றவன் ஆற்றலான்; மானத்தாற்கெட்டவன் மானி; காமத்தான் மயங்கினவன் காமி; பிணியான்வருந்துகின்றவன் பிணியன். எ-ம். ஆரூர்க்கிறைவன் ஆரூரன்; சிவனுக்கடியான் சைவன்; பகவற்குப் பாடியாடினான் பாகவதன்; அரசற்குமகள் அரசி. எ-ம். வடக்கினின்றும் வந்தவன் வடமன்; வாணிகத்தினாயினான் வாணிகன். எ-ம். சிவனதுசமயம் சைவம்; மரத்தினது கொம்பு மரத்தது; கோட்டது நுனி கோட்டது; எழுத்தினதிலக்கணம் எழுத்தது; சூத்திரத்தினதுபொருள் சூத்திரத்தது; குழலினதோசை குழலது. [தமன் முதலாகிய பன்னிருகிளைப்பெயருமது.] எ-ம். மதுரைக்கணிருந்தவன் மதுரையான்; விசாகநாளிற்பிறந்தவன் விசாகன்; அரசுகுலத்திற்பிறந்தவன் அரசன்; அம்பலத்திலாடினவன் அம்பலவன். எ-ம். வேற்றுமைப்பொருள்களையேற்றுநின்றன.

இதனையுடையதிது; இதனதுடைமையிது இவ்விரண்டனையுந் திணைபாலிடங்கடோறுமொட்டி, இவற்றிற்குதாரணம் முன்னும் பின்னுங் காட்டினவற்றுட்காண்க.

யாண்டு, யாங்கு, எங்கு, எங்கண், எவண், யாவண், எங்ஙனம், யாங்ஙனம். எ-ம். ஆன, ஈன, அங்கு, இங்கு, உங்கு, ஆங்கு, ஈங்கு, ஊங்கு, அவண், இவண், உவண், அம்பர், இம்பர், உம்பர், அங்ஙனம், இங்ஙனம், உங்ஙனம். எ-ம். ஒருவயின், இருவயின், மூவயின், எண்வயின். எ-ம். இடப்பொருளுணர்த்தும் விகுதிச்சுட்டெண் பெறவிடைச்சொல்லாகவேயெழுந்து நின்றன.

வெண்மை, வெளுப்பு, வெள்ளை, கருமை, கறுப்பு, ஆண்மை, பெண்மை, கோன்மை, ஆடுதல், ஆடல், ஆட்டம் எனத்தன்மைமாத்திரந்தாஞய் நின்றன.

குழையன், உண்டான், மற்றது, மற்றையான், குழவி, மழவன், மகவு எனப் பெயர்ச்சொன்முதலா நான்கினும் பிறந்தன.

பெயராறுவகையாய்ப்பிரிதல் நன்னூலார் விரித்தனர், அதனால் விரித்திலமென்க.

படலாற்பெற்றென்க. ஐந்துபெயர்பெற்றது பலருரைகளானும், பலர்நூல்களானுங்காண்க. பகுபதமென்னும் பெயர்கூடில், ஆறென்றே கொள்க.

'குறியெதிர்ப்பை நீர துடைத்து;' 'மாதர் மனையாட்சி யாள்;' 'வண்ணவண்டின்குரல் பண்ணைபோன் றனவே;' 'நுனிக்கொம்பர்;' 'நத்தம்போற்கேடும்;' 'சோதி வாயவுங் கண்ணவுஞ் சிவந்தன;' 'வானந் துளங்கிலென்;' 'இருவயிற் பெயரொடும்;' 'பொருண்மை தெரிதலுஞ் சொன்மை தெரிதலும்' என்புழி நின்ற பகுபதங்களை, நீர், மாது, பண், கொம்பு, நத்து, வாய், கண், வான், இரண்டு, சொல், பொருள், எனப் பகாப்பதமாகவே பொருள்கொள்வர். இதனைத் தமிழ்நூலோர் பகுதிப்பொருள்விகுதியென்று பெயரிட்டு வழங்குவர்.

'இல்லதெ னில்லவண் மாண்பானல்;' அட்படைக்காயிரம் பாய்மா வந்தன; 'களிமடிமானி;' அவனினு மிவன்குணம்; கவிவந்தான்; இறைகாக்கும்; கோவுண்மைகூறுவான்; ஆயிரந்தச்சுச் செய்த தேர்; பத்துக்கொல்லுச்செய்தவிருப்புலக்கை; மூவேந்து சொன்ன மொழி; [அரசுமமைச்சுமது.] இருவர்க்குநடுவிவன்; பேதை தொழுதாள்; [பெதும்பைமுதலாறுமது.] இவற்றுள் நின்ற பகாப்பதங்களையெல்லாம், மாண்பினள், பாய்மாவுடையார், களியன், மடியன், குணவான், கவிஞன், இறைவன், கோண், தச்சர், கொல்லர், வேந்தர், அரசர், அமைச்சர், நடுவன், பேதையாள், [பெதும்பை முதலாறுமது.] எனப்பகுபதமாகவே பொருள்கொள்வர். இதனைத் தமிழ்நூலார் ஆகுபெயருள் அடக்கி வழங்குவர்.

பகுத்தலையென்றன்முதன்மூன்றும் முன்னர்க் காட்டினவற்றுட்காண்க. அவை குழையன், ஊரன். எ-ம். ஆன, ஈன. எ-ம். அங்ஙனம், இங்ஙனம். எ-ம். போல்வனவென்க.

கள்ளன், திருடன், சோரன் எனப்பலசொல் ஒருபொருளாகப்பட்டுவந்தன.

அரசன் என்பது அரசுகுலத்திற்பிறந்தவன், அரசனுக்குப் பிறந்த வேறொருசாதியான், அரசனது தொழிலையேற்ற வேறொருசாதியான், அரசுகுலத்திற்பிறந்து வேறொருசாதியாய் வழுவினவன் என்றும், மாண்டான் என்பது பஞ்சத்தில், படையில் மாண்டான், குணத்தில், பொறையில், கல்வியில், ஒழுக்கத்தில் மாண்டான் என்றும் பலபொருள்படுதலின், பலபொருளொருசொல்லாகப் பட்டு வந்தமை காண்க.

இன்னும் பலவென்றதனால், வயிறன், பல்லன், பொய்யன், தோளன், அறிவன் இவைபோல்வனவெல்லாஞ் சொற்கிடந்தபடி பொருள்படாமல், எல்லார்வயிற்றைக்காட்டினும் பெருவயிறன், எல்லார்பல்லைக்காட்டினும் பருத்து நீண்டுயர்ந்த பல்லன், யாவரும் பொய்யும் மெய்யுங்கலந்து சொல்வர் இவன் மிகவும்பொய்யன், எல்லார்தோளினும் பலமுள்ள தோளன், உலகரறிவுபோலன்றி மயக்கந் தீர்ந்தவறிவன் என்று பொருள்படுவனவும், கண்டனையது. விழுங்கியற்று, கண்டனையர், கண்டன்ன ,கண்டனைய, கண்டாங்கு, ஆகியாங்கு, கண்டற்றால். எ—ம். மயிலன்னாள், புலிபோல்வான். எ-ம். சைவன், பார்வதி, கார்த்திகேயன், காங்கேயன், வைனதேயன். எ—ம். முதற்கண் உவமவுருபு, விகுதி வருவனவுமென்க.

இனி "அன்னான்" என்னுஞ்சூத்திரத்தால் நன்னூலார் விகுதிகளையளவுசெய்திருக்கவே அளவிலையாகி வரும் விகுதியென்றதென்னெனின்;—தெலுங்கு, வடுகு, அருளு, வாரு, சொல்லு. எ—ம். அகத்தியம் தொல்காப்பியம், அவிநயம், மகன், மகள்,மகார், பிறன், பிறள், பிறர், அவ், இவ், உவ், எவ், கோன். எ-ம். ஆண்மை, பெண்மை, உடுக்கை,படுக்கை, காப்பு, புணர்ப்பு, புணர்ச்சி, மகிழ்ச்சி, குழவி, மகவு. எ—ம். வடமன், தென்மன், எழுதுதல், ஆடுதல், சாக்காடு, வேக்காடு, உணப்பாடு, தினப்பாடு, ஆக்கம், ஆட்டம், பாய்த்துள், செய்யுள்; வாரானை. எ—ம். உயிர், மெய், உயிர்மெய், சொல் ஆகிய நான்கு விகுதிகளும் அளவின்றி மிகவும் பரந்துவருதனோக்கி, சிறுபான்மை பயன்படும் பொதுவிகுதிகளை யெல்லாமொழித்துப் பெரும்பான்மை பயன்படும் வினைமுற்றொன்றற்கே வேண்டுஞ் சிறப்பு விகுதிகளைமாத்திரமே அளவுசெய்தாரென்று கொள்வதல்லது, எல்லாவிகுதிகளையும் அளவுசெய்தாரென்று கொள்ளற்க. அன்றியும், அவர் பெயரியலிற்கொண்ட விகுதிகளும், வினையெச்சத்திற்குக் கொண்ட பன்னிரண்டு விகுதிகளும், தொல்காப்பியர் அவ்வெச்சத்திற்குக் கொண்ட பின், முன், கால், கடை, வழி, இடத்து முதலிய விகுதிகளும், அவ்விரு

வருமெடுத்து ஓதாத 'அவாவுண்டேல்,' அற்றால், பாடி, ஆடி, ஆய், போய் முதலிய விகுதிகளும், மூன்றனுளடங்காத 'மகனெனல் மக்கட் பதடியெனல்' முதலிய பலவகை வியங்கோள்விகுதிகளும், இன்னும் பாட்டு, நக்கு, தேற்று, வீச்சு, ஒத்து முதலியவற்றுள் இடைநிலைத்தன்மைப்பட்டு ஒற்றுக்களாய் வரும் விகுதிகளும், அளவிறந்து வருதனோக்கியென்க. அவரெடுத்தோதியது சிறப்புவிகுதியேயென்றது எற்றாற்பெற்றீரெனின்;—அன்விகுதியை ஈரிடத்திற்கூறுதலானும், "இன்ன பிறவும் பொதுச்சாரியையே" என்றாற்போலப் பொதுவிகுதிகளேயென்னாது "வினையின் விகுதி" என்றமையானும், இம்முறையே வினையியலுள் முற்றொன்றற்குமாத்திரமே யெடுத்துக்கூறுதலானும், ஆண்டும் அன்விகுதியை ஈரிடத்திற் கூறுதலானும், இம்முற்றுவிகுதிகளிற் சில பிறவற்றினுஞ் செல்லினுஞ் செல்கவென்னுங் கருத்தால் எதிரது தழீஇயவெச்சவும்மையோடு "பெயரினுஞ்சிலவே" என்றமையானும், பொதுவிகுதியாயிற் பெயரினுஞ்சிலவேயென்னாதலானும், பகுதியிடைநிலைகளுள் முற்றொன்றற்கே சிறப்பித்துக் கூறி ஏனைப்பகுதியிடைநிலைகளையொழித்தமையானும், இவ்விகுதிச்சூத்திரத்திற்கு முன் பின்னின்ற சூத்திரக்கருத்துக்களானும், பெயரியலுள்ளும் வினையியலுள்ளும் வேண்டும் விகுதிகளை அவற்றிற்கு வேறாகவெடுத்தோதலானும், யாங்காட்டிய நால்வகைவிகுதிகளையொழித்தமையானும், இன்னும் பலவாற்றானுமென்க. பிறவாவன ஈரெச்சங்களும், பெயர்ப்பகுபதங்களும், மற்றது, மற்றையான் முதலிய இடைப்பகுபதங்களும், மழவன் முதலிய உரிப்பகுபதங்களுமென்க. இக்கருத்தறியாதார் அச்சூத்திரம் பொதுவென்றும், வினைக்கும் பெயர்க்குமே பொதுவென்றும், அன்விகுதி கூறியதுகூறலென்னுங்குற்றமென்றும், ஒன்றன்விகுதி மற்றொன்றிலன் விகுதியென்றும், சூத்திரம் பிழைபட்டதாகக் கருதித்திருத்தித் திருத்தினமென்றும், இன்னும் பலகருதிமயங்குவரென்க.

இனிப் பொருந்தும் விகுதிகள் பொருந்தலென்றதென்னெனின், குழையன் இகரம்பெறாது; செட்டி அன்பெறாது; காதறை இரண்டும் பெறாது; வில்லன் வில்லி இரண்டும் பெறும்; இத்தன்மை நோக்கியென்க.

இனிப் பதத்தோடு ஐவகையிடைச்சொற்களும் பொருந்துதல் தொடர்மொழியன்றோ பகுபதமென்றதென்னெனின், குழையன். எ-ம். சாத்தனதாடை, ஆடைசாத்தனது. எ-ம். பவளம்போல்வாய், வாய்பவளம்போலும். எ-ம். உண்ணாநின்று. எ-ம்.

கோன்-எ-ம். வருவனவற்றிற்குப் பலருரைகளாலும், முற்றக்கற்ற பெரியோரைக் கேட்டலாலும், தொடர்மொழியன்றென்பது தெளிக. நன்னூலார் பதத்தோடிடைச்சொற்பொருந்தலைப் பகுபத முடிப்புழித் தனிமொழியென்றும், அல்வழிபதினான்கனுள் தொடர்மொழியென்றும், அங்ஙனம் அல்வழிச்சந்தியென்றும், உருபியலின் வேற்றுமைச்சந்தியென்றும், "அ இ உம்முதற்றனிவரும்" என்றும், "குறிப்பெனெண் பகுதியிற் றனித்தியலின்றி" என்றும், இன்னும் பலவிடங்களினும் பலவழிப்படக் கூறினர்; தொல்காப்பியருமது, வடநூலாருமது. ஆகையால், முற்றக்கற்ற பெரியோரைக் கேட்கவென்றும். யாஞ் சிலவற்றிந்தனவற்றை விரிக்கின், மிகவும் பெருகுமென்க.

ஐந்துமென்னாது நான்குமென்றதென்னெனின், விகுதி பொருந்திப் பகுபதமாதலே பெரும்பான்மை நோக்கியென்க.

வேற்றுமைப்பொருள்களையேற்று நின்றுமென்னாது ஒவ்வொருவேற்றுமை வெவ்வேறாகியுமென்றதென்னெனின், ஒவ்வோருருபின்கட்பலபொருள் வருதனோக்கியென்க.

பகாப்பதமென்றும் பெயரைப் பிரித்ததென்னெனின், பகுபதமென்னும் பெயர் பெரும்பான்மை, பகாப்பதமென்னும் பெயர் சிறுபான்மை, ஏனைநான்கும் பொதுவென்று கொள்ளுதற்பொருட்டென்க. (௬௪)

கக௮. வேற்றுமை வழியோ டல்வழி யன்றியு
மவ்விரு வழியு மடக்கும் பொதுவழி
யம்மூன் றுள்ளே யடங்கா வழியு
மெனநான் கென்றே யியம்புவர் சந்தி.

பொதுவழிகொண்டதென்னெனின், பொதுத்திணை, பொதுப்பால், பொதுப்பெயர், பொதுவினை, பொதுக்காலம், பொதுவெச்சம், பொதுமுற்று, பொதுவிடம் முதலியவற்றைத் தேர்ந்து கொள்க.

அடங்காவழிகொண்டதென்னெனின், அலி, பேடு, உலகம், தெய்வமுதலியவற்றிற்குச் சொற்பொருள் திணை பால் முதலிய தொடக்கிற் சிறப்புமன்று, பொதுவுமன்று, ஒன்றினுமடங்காவழி போலவென்க.

வேற்றுமைவழி அல்வழிக்குதாரணம் வெளிப்படை. ஏனையவற்றிற்குதாரணம் வருமாறு:—அஞ்செவி, அங்கை, கரும்புவேலி, உரைநூல், நூலுரை, மதிமுகம், முகமதி, புலிகொன்றது, நாய்

கடித்தது, போல்வனவெல்லாம் பொதுவழிச்சந்தி. பொருபடை, கருங்குதிரை; படைபடை, பஃபத்து, வயிறுமொடுமொடென்றது; முன்றில், முயற்கோடு, சாத்தன் சோற்றைப் பகற்கட்ப சித்து விருந்தோடுண்டான் இவைபோல்வனவெல்லாம் அடங்கா வழிச்சந்தி.

இனிப் பொதுத்திணை முதலைந்தும் வெளிப்படை. எனைமூன்றும் வருமாறு: ஓடியசாத்தன், ஓடியவந்தான் பொதுவெச்சம். செய்யுமென்பது பொதுமுற்று. இவன் சொன்னசொல் என்பது தன்மைக்கும், முன்னிலைக்கும், படர்க்கைக்கும் பொதுவிடம். தன்னொடு படுக்குந் தன்மைப்பன்மையும், முன்னிலை கூடிய படர்க்கையும் முன்னிலையும் பொதுவிடம் என்றலுமொன்று.

அடங்காவழிச் சந்தியை விரிக்கிற்பெருகுமென்க. (௩உ)

கக௯. வேற்றுமை வழியீ ரெட்டாய் விரியு
மூவெட் டென்று மொழியவும் பெறுமே
யேனைமூ விரியு மியம்பிற் பெருகும்.

உ-ம். சாத்தன் வந்தான்; சாத்தனனவன் வந்தான்; குயில் வாராய்; குயிலே வாராய். ஒழிந்த பன்னிரண்டும் வெளிப்படை.

சாத்தனையெனப் பதத்தோடுருபு புணர்தலைச் சிலர் வேற்றுமைச்சந்தியென்று கொள்ளாமையின், மூவெட்டென்றிலம். அவர்க்கவையெங்ஙனமடங்குமென்னிற் பகுபதத்திலடங்குமென்க. அக்கருத்து வடநூலினுமறிக. (௩௩)

கஉ0. பெயர்முற் றெச்சமோ டுருபைந் தடுக்கே
யிரட்டைக் கிளவியோ டிருமூன் றவைதா
மொன்றுபல வடுக்கல் வேறுபல வடுக்கல்
விதியா யடுக்கன் மறையா யடுக்கல்
விதிமறை கூடி விரவி யடுக்கல்
பலசொற் கூடியோர் பொருளா யடுக்கல்
பலபொருட் கேயொரு சொல்லா யடுக்க
லிருவகை தனக்கும் பொதுவா யடுக்க
லியல்பா யடுக்கல் விகாரமா யடுக்க
லாதியாப் பலவு மறைகுவர் புலவர்.

உ-ம். 'அரியானை யந்தணர்தஞ் சிந்தை யானை;' 'கண்டுகேட் டுண்டுயிர்த்துற்று' இவை ஒன்றுபலவடுக்கல்.

வாளான் மருவாரை வழிக்கண் வெட்டினான் இது வேறுபல வடுக்கல்.

'புரைதீரா மன்னு விளமை;' 'ஏவவுஞ் செய்கலான் றான்றே ரான்;' 'இடிப்பாரை யில்லாத வேமரா மன்னன்.' இவை மறையா யடுக்கல்.

சாத்தனைக் கண்டு கொற்றனைக் காணாது வந்தான்; சோறுண்டு கைகழுவாது வந்தான் இவை விரவியடுக்கல்.

படைபடை; வயிறு மொடுமொடென்றது இவை பலசொற்கூ டியோர்பொருளாயடுக்கல்.

ஒவ்வொருவர்க்கே யிவ்விருபணங்கொடு; இப்பலசரக்கை வெ வ்வேறுக்கு; 'மாற்றருநீ ருறைவனநற் பறவைகளுற் காவி மன்னி யிடும் பஃபத்து,' இவை பலபொருட் கோர்சொல்லாயடுக்கல். வே றுவேறு என்பன ஒருகால் அவனும் வேறு இவனும் வேறு எனப் பலபொருளாயும், ஒருகால் அவன் வேறுவேறென விரைவுபற்றி ஒருபொருளாயுநிற்கும். ஏனையவெல்லாம் வெளி.

இரட்டைக்கிளவியைப் பிரித்ததென்னெனின், இது இலையிர ட்டை, பூவிரட்டை, காயிரட்டை, விரலிரட்டைபோல ஒற்றுமை ப்பட்டு நிற்றலானும், அவ்வைந்தும், மக்களிரட்டை, விலங்கிரட் டை, முட்டையிரட்டை, கையிரட்டை, காலிரட்டை போல வேற்றுமைப்பட்டு நிற்றலானுமென்க.

ஆதியென்றதனால், பசித்து வந்த சாத்தன் சோற்றிற்குப் பட படத்தான் என ஒருதொடர்க்கண்ணே அவ்வாறுமடுக்குதலும், அவற்றுட்சில குறைந்தடுக்குதலுமுதலானவெல்லாங்கொள்க. ()

கஉக. அடுக்கல் லவையு மடுக்கவை போல்வரு
மவ்வடுக் கணியினு ளளவில யென்க.

உ-ம். 'பொய்யாமை பொய்யாமை யாற்றின்;' 'இறந்தா ரிறந்தா ரனையர்.' எனவரும். (௩௫)

கஉஉ. பொருளைப் பொருளெனல் பொருளல் லதனையே
பொருளென லிதுபொரு ளன்றென் றறிந்து
மிதுவே பொருளென லெனமூன் று துணிவே.

உ-ம். நிலம், நீர், நெருப்பு முதலிய பொருள்களை அதுவது வாகவே துணிதல். பித்தளையைப் பொன்னென்றும், பழுதையைப் பாம்பென்றும், சிப்பியை வெள்ளியென்றும், குற்றியை மகனென் றும் துணிதல். பிறனொருவனை மாதாப்பிதாவாகத் துணிந்து நிதி

கொடுத்தலும், மண் மரம் சிலை செம்பு முதலானவற்றைத் தெய்வமென்று துணிந்து பூசைசெய்தலும், வீட்டையறிவிக்குமகனைக் கடவுளென்று துணிந்து அவன்கருத்தின்வழியே நிற்றலும் போல்வன.

சொற்களும் பொருளாதலால் அவற்றிற்கும் அத்துணிவுகொள்க. பெயர் வினை இடை உரிகளை அதுவதுவாகவே துணிதல். சொக்கலிங்கமென்பதை முழுதுங்கலிங்கமென்னும் பொருள்படச் சகரவேகாரநெட்டெழுத்து மொழிமுதலாகத் துணிதலும், 'அடிஞானமான்மாவிற் றேன்றும்' என்பதை மூலஞானமெனத் துணிதலும், அத்துவிதமென்பதனை இரண்டில்லையெனத் துணிதலும் போல்வன. 'மாணடிசேர்ந்தார்' என்னும் வினையைப் பெயராகவே துணிதலும், 'வேலொடுநின்றான்' என்னுமுருபிடையைக் கொண்டென்னும் வினையாகவே துணிதலும், முழுதும் வாரான் என்புழி வாரானென்னும் வினையின்மையை வினையுண்மையாகவே துணிதலும், 'அறவினை யாதெனிற் கொல்லாமை' என்புழிச் செய்யாமையென்னும் மறையைச் செய்தலென விதியாகவே துணிதலும் போல்வன.

எல்லாப்பொருள்களும் அவற்றையறிவிக்கு மெல்லாச்சொற்களும் இம்மூன்றனுள் அடங்குமென்க. இவற்றுள், முன்னதும் பின்னதும் வழுவன்று, நடுவது வழுவேயென்பது "பொருளல்லவற்றைப் பொருளென் றுணரு—மருளானா மாணாப் பிறப்பு." "நில்லா தவற்றை நிலையின வென்றுணரும்—புல்லறி வாண்மை கடை." என்பனவற்றாலறிக. கூடாவொழுக்கமென்னும் அதிகார முழுதுமது. (ருசு)

கஉரு. அன்பரு ளாசையோ டறிவறி யாமையிவ்
வைந்தாற் றுணிதலம் மூன்றனு ளடங்கும்.

என்பது வெளி. (ருஎ)

கஉசு. ஒருதொடர் பலதொட ரெனத்தொட ரிரண்டே.

உ-ம். சாத்தன் அரிசி நெற் பயறு முதலானவை கொண்டுவந்தான்; கொற்றன் பூவிலை காய் பழமுதலானவை கொண்டுவந்தான்; தேவன் மிளகு புளி கடுகு முதலானவை கொண்டுவந்தான்; பூதன் சிலை தாலி பூண் அணி முதலானவை கொண்டுவந்தான்; அரசனக்காலத் தமைச்சொடு வந்தான்; தலைவன் றலைவிக்குத் தாலிகட்டினான் இப்பலதொடர்களும் வரைவென்னும் ஒருபொருட்கண்ணேவருதலின் ஒருதொடரேயாம். அங்ஙனமாதல், வந்தா

னென்னுமைந்துமுற்றையுஞ் செயவென்னுமெச்சமாக்கி, நோக்குக. இக்கருத்து "வினைமுற் றேவினை யெச்ச மாகலும்" என்னுஞ் சூத்திரத்துட் "கானவரிரிய" என்னுஞ் செய்யுளிற்காண்க.

சாத்தனை வரைவிற்கு வடக்கனுப்பினான்: கொற்றனையிழவுக்குக் கிழக்குப்போக்கினான்: தேவனை நெற்கொள்ளத் தெற்கேயேவினான்: பூதனைத் தேன்விற்க மேற்கே செலுத்தினான். இவையெல்லாம் ஒருவன்வினையேயாயினும் ஒன்றற்கொன்று மறையாய்ப் பொருத்தமின்மையாற் பலதொடரேயாமென்க. இக்கருத்துப் "பேசரியவராகம்" என்னுஞ் செய்யுளிற்காண்க.

இவற்றை வடநூலார் ஏகவாக்கியம், பின்னவாக்கியமென்பர். அதனான் மொழிபெயர்த்தனமென்க. (௩௮)

௩௯. எழுத்துச் சொற்றிரி பிரண்டே யன்றிப்
பொருட்டிரி பெங்கும் பொருந்து மென்ப.

உ-ம். பொன்குடம் - பொற்குடம்; மாசி - மாசி; தீயேன் - தியேன்; ஆறுமுகம் - அறுமுகம். எ-ம். உடுத்து - உடீஇ; வெல்க - வென்றீக; எல்லாப்பொருளும் - எப்பொருளும்; கழுவாதகால் - கழாக்கால்; பரியவரை - பராரை; மராவத்து - மராத்து; தெரிவான் - தெரிகிற்பான்; காண்பான் - காண்கிற்பான். எ-ம். வரும். இவைபோல்வனவெல்லாம் எழுத்துத்திரிபும், சொற்றிரிபுமென்க.

இனிப் பொருட்டிரிபு வருமாறு:—'பெண்ணேவல் செய்தொழுகு மாண்மை' இது ஒழுகுவானென்னுமுற்றினது பொருள் தன்னிலை திரிந்து பெயரெச்சத்தின்கண்ணே சென்றது. 'நெஞ்சத்தார் காதலவராக வெய்துண்ட—லஞ்சுதும் வேபாக் கறிந்து.' இது அஞ்சுவனென்னும் ஒருமைமுற்றினது பொருள் அவ்வாறுதிரிந்து பன்மைமுற்றின்கண்ணே சென்றது. 'தானுந் தேரும் பாகனும் வந்தென்னலனுண்டான்.' இது பன்மைமுற்றினது பொருள் ஒருமைமுற்றின்கண்ணேசென்றது. ஞாயிறுபட்டுவந்தான் செயவெனெச்சத்தினது பொருள் செய்தெனெச்சத்தின்கண்ணே சென்றது காண்க.

இருதிரிபு முற்கூறினுமாதலின், அன்றியென்றும். எங்குமென்றது எல்லாச்சொல்லினுமென்க.

இனிச் சொற்றிரிபேயன்றிப் பொருட்டிரிபில்லையென்பாரும், பொருட்டிரிபேயன்றிச் சொற்றிரிபில்லையென்பாரும், இவ்விரண்டுமுண்டென்று கொண்டிருக்கவும் மயங்கிச் "சொற்றிரி யினும் பொருடிரியா வினைக்குறை" என மாறிக் கூறுவாரும், எழுத்

துத்திரிபாவது சார்பெழுத்தேயென்பாரும், சொற்றிரிபாவது கிளி யென்பது கிள்ளை, மயிலென்பது மஞ்ஞை என்பனபோல்வன வென்பாரும், பொருட்டிரிபாவது மாவினது வெண்பூப் பசுங்கா யாயிற்று, களாவினது பசுங்காய் கருங்கனியாயிற்று, மயிரினது கருமை வெண்மையாயிற்று, பாலினதினிமை புளிப்பாயிற்று என் பாருமுளர். அவர் மதமறுப்புக்களை விரிக்கிற்பெருகும். (௩௯)

கஉசு. பலபொருட் கொருவடி வாகும் பதங்களை
யோசையொடு கூறுவ ருணர்ந்தோ ரவைதாந்
தனிமொழிதொடர்மொழியெனுமிரண்டினும்வருந்
தனிமொழி வினைமொழி தனையே சாருஞ்
சொல்வேறு படாது பொருள்வேறு படுதலும்
பொருள்வேறு படாது சொல்வேறு படுதலும்
பொருள்சொல் லொருங்கே போய்வேறு படுதலு
மெனமூன் றென்பர் தொடர்மொழி யியல்பே.

உ - ம். நட வா முதலிய முதனிலைத்தனிவினைகளை முற்றாக்க வேண்டில் எடுத்துச் சொல்லுக; முதனிலைத்தொழிற்பெயராக்க வேண்டிற் படுத்துச் சொல்லுக. கட்டென்பதை முற்றுகரமுற் றாக்கவேண்டிலெடுக்க; குற்றுகரத் தொழிற்பெயராக்கவேண்டிற் படுக்க. "நெறிநின்றார் நீடுவாழ் வார்" என்பதனை முறையே பெய ராக்கவேண்டிலெடுக்க; முற்றாக்கவேண்டிற்படுக்க. செய்யுமென் பதை எச்சமாக்கவேண்டிலெடுக்க; முற்றாக்கவேண்டிற்படுக்க. அம் பலத்தாடியென்பதனைப் பெயராக்கவேண்டிலெடுக்க; எச்சமாக்க வேண்டிற்படுக்க. இவைபோல்வனவெல்லாம் பலபொருட்கொரு வடிவாகிய தனிமொழி.

'குழல்வளர் முல்லையிற் கோவலர் தம்மொடு - மழலைத் தும்பி வாய்வைத்தூத' இது சொல் வேறுபடாது பொருள் வேறுபட் டது. அஃதழகிது, அதனை, அவற்றை; நிறுவென்றான், கூவென் றான், ஏவென்றான், சொல்லென்றான், விள்ளென்றான் இது பொ ருள்வேறுபடாது சொல்வேறுபட்டது. செம்பொன்பதின்பலம் இது சொல்லும் பொருளும் வேறுபட்டது. இவற்றிற்குப் பொ ருள் விளங்க எடுத்தும் படுத்துஞ்சொல்லுக. இவைபோல்வன வெல்லாம் பலபொருட்கொருவடிவாகிய தொடர்மொழி. (௪0)

கஉஎ. எடுத்தல் படுத்த லிரண்டே யோசை
நலிதல் விலங்கலொடு நான்கென் பார்சிலர்
மூன்றெனத் துணிந்தே மொழிகுவர் பலரே.

என்பது வெளி. (சக)

கஉஅ. ஒருபொருட் கேபல வாய்பாடு வருதலும்
பலபொருட் கேயொரு வாய்பாடு வருதலு
முளவென மொழிப வுணர்ந்திசி னோரே.

உ - ம். செய்து, செய்பு, செய்யா, செய்யூ; ஆநின்று, கின்று, கிறு இவைபோல்வனவெல்லாம் ஒருபொருட்கே பலவாய்பாடு வந்தன.

செய்யுமென்பது இருதிணைக்கும், ஆண்பாற்கும், பெண்பாற்கும், ஒருமைக்கும், பன்மைக்கும், முற்றிற்கும், எச்சத்திற்கும், நிகழ்காலத்திற்கும், எதிர்காலத்திற்கும், பொருந்திநிற்கும். செய்யாவென்னும் வாய்பாடும் உண்டென்னும் வாய்பாடுமுதலியனவும் அது. வினையியலுட்காட்டினோம். இவைபோல்வனவெல்லாம் பலபொருட்கொருவாய்பாடு வந்தன.

ஒருபொருட்கொருவாய்பாடு தாமே விளங்கலிற் கொண்டிலமென்க. (சஉ)

கஉகூ. பொருளதி கார முன்ன முத்தி
வெளிப்படை குறிப்பே மெய்ப்பா டன்மொழி
யொட்டாகு பெயரே யுவமை யிறைச்சி
யுபசார மாசை யுண்மயக் காதி
யேது வாக வியம்புவர் சொற்பொருள்.

எ-து. இப்பதினைந்துங்காரணமாக இடனறிந்து சொற்குப் பொருளுரைப்பரென்றவாறு.

ஆதியென்றதனால், ஞாபகம், உடம்பொடுபுணர்த்தல், இலேசு, குறை, வேண்டாகூறல், சொல்லாற்றல், பொருளாற்றல், தாற்பரியம், செய்யுள்விகாரம், இருவகைவழக்கு, திசைவழக்கு, மரூஉமொழி, பொது, சிறப்பு, தன்மதம், பிறர்மதம், வினை, சார்பு, இனம், இடம் இவ்விருபத்தொன்றும் ஒழிந்தனவுங் காரணமாகக் கொண்டு பொருளுரைப்பரென்க. பெரும்பான்மை வருவனவற்றையெடுத்தோதிச் சிறுபான்மை வருவனவற்றை ஆதியென்றதனாற்றழுவினமென்க.

பொருள்காரணமாகச் சொற்பொருளுரைத்தலாவது முன்பே தனக்கு வேண்டிய பொருளைக் கருதிக்கொண்டு பின்பு அப்பொருளுக்கேற்கச் சொற்பிரித்துச் சந்திகூட்டுதல், 'தவரடி புனைந்த தலைமையோன்' இத்தொடர்க்குத் தவருடைய அடியைப் புனைந்த அன்

பிற்பெரியோனென்றும், தவத்தோராலே தன்னுடைய அடியைப் புனையப்பட்ட அறிவிற்பெரியோனென்றுங் கூறுக. 'விந்துவின் மாயை யாகி' இத்தொடர்க்குச் சுத்தமாயையிலே நின்றும் அசுத்த மாயை பிறந்தென்றும், சுத்தமாயையைப்போல அசுத்தமாயையும் அநாதியே தனியே ஒருமுதலேயாயென்றுங்கூறுக. பின்னதற்குச் சொற்சோதனை 'பரிதியி னொருதா னாகி'என்க. 'அடிஞானமான்மா விற்றேன்றும்' இத்தொடர்க்குச் சிவனுடைய சீர்பாதஞானமானது ஆன்மாவினுடைய ஞானத்தின்கண்ணே கலக்குமென்றும், ஆன்மாவினுடைய அநாதிஞானமானது ஆன்மாவினின்றும் வெளிப் படுமென்றுங் கூறுக. 'உடலுயிர்கண் ணருக்க னறிவொளிபோல்' இத்தொடர்க்கு முன்புள்ள 'பொற்பணிபோல்' முதலிய முப்பொருளை மறுத்தற்பொருளைக் கருதி உட்கொண்டு, உடலுயிர்போல் ஒற்றுமை, கண்ணருக்கன்போல் வேற்றுமை, அறிவினறிவுபோற் பொதுமையென்றும், பின்புள்ள 'பிறிவருமத்துவிதம்' ஆகிய ஓர் பொருளை உடன்படற்பொருளைக் கருதி உட்கொண்டு, உடலும் உயிருங்கூடினவிடத்துத் தோன்றுமறிவைப் பிறிக்கப்படாதது போலவும், கண்ணுமருக்கனுங் கூடினவிடத்துத் தோன்றுமொளியைப் பிறிக்கப்படாததுபோலவுமென்றுங் கூறுக. செம்பொன் பதின்பலமுதலாயினவுமது.

அதிகாரங்காரணமாகச் சொற்பொருளுரைத்தலாவது 'கூடி லின்பம் பிரியிற்றுன்பம்' என்னுந்தொடர் அகச்செய்யுட்கண் வரின், தலைவியைத் தலைவன் புணரில் அளவிலின்பம்; ஓதல், பகை, தூது, துணை, பொருண்முதலியவற்றால் உடன்படாது நீங்கில் அளவிறுன்பம் என்றும், புறச்செய்யுட்கண் வரில், கற்றோருடன் கலைபயிலில் அளவுபட்டவின்பம்; நித்தியம் நைமித்திகங் காமிய முதலிய விரதங்களால் உடன்பட்டுப் பயிறலொழியின் அளவு பட்ட துன்பம் என்றுங் கூறுக.

முன்னங்காரணமாகச் சொற்பொருளுரைத்தலை நன்னூலார் "முன்னத்தி னுணருங் கிளவியு முளவே" எனத்தொகுத்தார்; தொல்காப்பியர் "இவ்விடத்திம்மொழி" என்னுஞ் சூத்திரத்தால் விரித் தனர்; அவற்றுட்காண்க.

உத்தி காரணமாகச் சொற்பொருளுரைத்தலைத் தொல்காப்பி யர் அறுபத்துநான்குகூறுக விரித்தனர்; அவற்றுற் காண்க. ஏனைய வற்றை விரிக்கிற் பெருகுமென்க.

மெய்ப்பாட்டியலுள் மெய்ப்பாடு காண்க.

ஒட்டுத் தண்டியலங்காரத்துட் காண்க.

"இறைச்சி தானே பொருட்புறத் ததுவே." இது தொல்காப்பியம்.

'உணர்ந்ததை மறத்த லுண்மயக் கென்ப.' இஃது உரைச்சூத்திரம்.

இப்பொருள்கோள்கள் ஆற்றுநீர்முதலிய ஒன்பதுவகைப்பொருள்கோளினும் இச்சூத்திரத்திற்குப் பின்புள்ள எழுவகைப்பொருள்கோளினும் அடங்காவென்க.

இச்சூத்திரவிதி தொல்காப்பியப்பொருளதிகாரத்தினும், கலித்தொகையினும், பரிபாடலினும், தண்டியலங்காரத்தினும் பெரும்பான்மை வரும்; ஏனையிலக்கணவிலக்கியங்களிற் சிறுபான்மை வருமென்க. (சகூ)

கங௦. உயர்திணை யியற்பெய ரஃறிணை யியற்பெய
ருயர்திணைப் பொருளிற் சாதி யொருமை
யஃறிணைப் பொருளிற் சாதி யொருமை
யுயர்திணைப் பொருளிற் சாதிப் பன்மை
யஃறிணைப் பொருளிற் சாதிப் பன்மை
யொருசொன் னின்றே தனித்தனி யுதவுத
லெனப்பிரி வேழென் றியம்புவர் புலவர்.

உ - ம். இறையென்னு முயர்திணையியற்பெயர் ஒருமைக்கும், பன்மைக்கும் பொதுவாய் நின்று, வருமொழி வந்த பின்பு, இறைவன்வந்தான், இறைவர் வந்தார் எனநிற்கும். கோ, வேந்து, அரசு, அமைச்சு, கவி, பெண்டு, வேசை, உமை, தையல், பேதை, [பெதும்பை முதலாயினவுமது.] இவை கோன் கோக்கள், வேந்தன் வேந்தர், அரசன் அரசர், அமைச்சன் அமைச்சர், கவிஞன் கவிஞர், பெண்டாட்டி பெண்டுகள், வேசையாள் வேசையார், உமையாள் உமையார், தையலாள் தையலார், பேதையாள் பேதையார், [பெதும்பைமுதலாயினவுமது.] என இங்ஙனம் விரியுமென்க. அஃறிணையியற்பெயர் வெளி.

'சிவிகை பொறுத்தான்' 'வறியவனிரந்தான்' 'தானு மதனை வழங்கான்பயன்றுவ்வான்' இவை வருமொழி நோக்காமலே தனக்குரியவொருமைப்பாலை விட்டுப் பன்மைப்பாலையே விளக்குதலால், உயர்திணைச்சாதியொருமையாயிற்று. இவ்விதியை மறந்து, சிவிகைபொறுத்தாரெனக் குறளைத்திருத்தினருமுளர். அவர் 'இல்வாழ்வானென்பான்;' 'அவ்வித் தழுக்கா றுடையானை;' 'உடையானரசருளேறு;' 'செல்லாமை யுண்டே லெனக்குரை மற்றுநின்—

வல்வரவு வாழ்வார்க்குரை' என முப்பாலினு மிகவும் பரந்து பெரு ம்பான்மை வருதலை நோக்கிலர்போலும். இவற்றைத் திருத்த மற ந்தனர்போலுமென்க. 'நூலெனப் படுவது நுவலுங்காலை;' 'அஞ் சுவ தஞ்சாமை பேதைமை யஞ்சுவ—தஞ்ச லறிவார் தொழில்.' 'உலகத்தா ருண்டென்ப தில்லென்பான்;' 'நேர்வதுநாடு;' 'விளை வதுநாடு' இவை வருமொழியை நோக்காமலே தனக்குரியவொரு மைப்பாலை விட்டுப் பன்மைப்பாலையே விளக்குதலால், அஃறி ணைச்சாதியொருமையாயிற்று.

'எண்ணென்ப வேனை யெழுத்தென்ப விவ்விரண்டுங்—கண் ணென்ப வாழுமுயிர்க்கு.' இதனுள் உயர்திணைச்சாதிப்பன்மையும், அஃறிணைச்சாதிப்பன்மையுங்காண்க.

'கடுமொழியுங் கையிகந்த தண்டமும் வேந்த—னடுமுரண் டேய்க்கு மரம்.' 'பொருள்கருவி காலம் வினையிடனொ டைந்து—மிருடீர வெண்ணிச் செயல்.' இவற்றுள் அரமென்பதும், ஒடுவெ ன்பதும், ஒருசொன்னின்றே தனித்தனியுதவுதல் காண்க. முத னிலைத்தீவகம், இடைநிலைத்தீவகம், கடைநிலைத்தீவகமுதலாயின வுமது.

இவ்வேழும் நின்றநிலை தப்பிப் பிரிந்தது காண்க. இவற்றுள் உயர்திணையியற்பெயரில்லையென்பாரும், அஃறிணையியற்பெயரும், சாதியொருமையும் ஒரிலக்கணமேயென்பாரும், உயர்திணைச்சாதி யொருமையும், அஃறிணைச்சாதியொருமையும், ஒரிலக்கணமேயெ ன்பாரும், சாதிப்பன்மையில்லையென்பாரும், ஒருசொன்னின்று தனித்தனியுதவுதலைப் பொருள்கோளினும், பிரிப்பெச்சத்தினும் அடக்குவாருமுளர். அவரிலக்கணநுட்பங்கூர்ந்திலர்போலும். அவ ர்களை மறுக்கிற் பெருகுமென்க.

இப்பிரிவேழும் ஒன்பதுபொருள்கோளிலடங்கா. (சச)

**கரு௧. இலக்கண மிலக்கிய முரையெனப் பெயர்பட் டிருக்குமென் றெண்ணுக செய்யுளி னியல்பே.**

இலக்கணமும் உரையுஞ் செய்யுளாமோவெனின்;—"சூத்தி ரங் குறித்த யாப்பிற் றாகும்." "பல்வகைத் தாதுவின்." "நூற்பா வகவல்"எனப்பலருமோதலானும், "சூத்திரமுஞ்செய்யுளாதலின்" என நச்சினார்க்கினியாரெழுதலானும், "விதித்தன செய்தலும் வில க்கியன வொழிதலும்." "பொருப்பு வில்லிபால் விருப்ப மிலரே" என வாசகங்களைச் செய்யுளுறுப்புத் தோன்றவெழுதலானும், "உண்டான் தின்றான் ஓடினான் பாடினான்" எனவுதாரணங்களை

அவ்வுருப்புத்தோன்ற வெழுதலானும், இலக்கணச்செய்யுள், இலக்கியச்செய்யுள், உரைச்செய்யுள், உரைச்சூத்திரமெனப் பலரும் ஆளுதலானும், வடநூலாரும் இவ்வாறு கொள்ளுதலானும், இன்னும் பலவாற்ருனுமாமென்க. செய்யுளென்னுஞ் சொற்குப்பொருளோர்ந்து முணர்க. (சரு)

## மூன்ருவது ஒழிபியன் முடிந்தது.

## இலக்கணக்கொத்துரை முற்றுப்பெற்றது.

மெய்கண்டதேசிகன் றிருவடிவாழ்க.

[illegible]

உ

கணபதி துணை.

# இலக்கணக்கொத்துச்

# சூத்திரவகராதி.


| சூத்திரம். | பக்கம். |
|---|---|
| அ அந்நகிருவி | ௯௭ |
| அகம்புறமொற்றுமை | ௨௮ |
| அடுக்கல்லவையு | ௮௩ |
| அதிகாரத்தா | ௫௭ |
| அவற்றுளின்மை | ௯௭ |
| அவைதாமனமொழி | ௪௭ |
| அவைதாமுரிமையா | ௨௨ |
| அழைத்தலென்றுன் | ௨௭ |
| அறுதொகையறைகுவ | ௪௯ |
| அறுவகைத்தொகையுமப் | ௯௧ |
| அறுவகைத்தொகையுமறை | ௯௪ |
| அன்பருளாசையோ | ௮௪ |
| ஆற்றெழுக்கடிமறி | ௭௧ |
| இடத்தினிலக்கண | ௩௧ |
| இடமேயன்றியு | ௩௩ |
| இதுவிதி யிதுமறை | ௪௩ |
| இத்துணைச்சிறப்பின் | ௧௮ |
| இந்நான்கியல்பு | ௭௩ |
| இந்நூற்குதாரணந் | ௨௧ |
| இயற்கையளபெடை | ௯௦ |
| இரண்டுநான்கைந் | ௩௨ |
| இருவகைச்செயப்படு | ௨௯ |
| இருவினைமுதலா | ௨௭ |
| இலக்கணமிலக்கிய | ௬௦ |
| இவ்விருவகையு | ௭௨ |
| உயர்திணையியற்பெயர் | ௮௬ |
| உரிமைம்முதன் | ௩௪ |
| உரிமையிருவகை | ௩௦ |
| உருபினையேற்றசொற் | ௨௩ |
| உருபுநோக்கியசொற் | ௩௪ |
| உருபுவேறுரு—பாகி | ௨௨ |
| உருபுவேறுரு—பென் | ௨௨ |
| உருபேற்றதனையு | ௨௩ |
| ஊரும்பேரும் | ௨ |
| எச்சமென்றென்றிலே | ௫௨ |
| எடுத்தல்படுத்த | ௮௯ |
| எல்லாவுருபொடுங்கொள் | ௩௨ |
| எல்லாவுருபொடுஞ்செய | ௩௨ |
| எழுத்திலக்கணத்தினெழு | ௭௨ |
| எழுத்துச்சொற்பொருள் | ௯௭ |
| எழுத்துச்சொற்றிரி | ௮௫ |
| எழுவாய்வேற்றுமைக் | ௨௪ |
| ஏவுதலியற்றுத | ௨௭ |
| ஒருதொடர்பலதொடர் | ௮௪ |
| ஒருபொருட்கேபல | ௮௭ |
| ஒருவேற்றுமைக்கோ | ௨௪ |
| ஒற்றுமைவேற்றுமை | ௩௦ |
| ஒன்றிரண்டுநான் | ௩௨ |
| ஒன்றுமூன்றுநான்கா | ௩௧ |
| ஒன்றுமூன்றுநான்கைந் | ௩௨ |
| ஒன்றேவந்து | ௩௪ |
| ஓருருபிற்கே | ௨௪ |
| ஓருருபிற்கோர் | ௩௩ |
| ஓரெழுத்திற்கே | ௯௬ |
| கருத்துண்டாதல் | ௨௮ |
| கருவிகருத்தா | ௩௩ |
| கருவியையின்னும் | ௨௬ |
| கற்றைச்செஞ்சடைக் | ௨ |
| காரணமதனையே | ௭௫ |
| குறையேயன்றியுங் | ௩௩ |
| குறையையின்னுங் | ௩௦ |
| கேளாதேற்றல் | ௨௬ |

| சூத்திரம். | பக்கம். | சூத்திரம். | பக்கம். |
|---|---|---|---|
| கொள்வோனையின்னுங் | ௨௯ | புணர்ச்சிவிகாரம் | ௭௨ |
| கொள்வோனைவிட்டுங் | ௩௩ | பெயர்முற்றெச்சமோ | ௮௨ |
| சிலபெயரெச்சமுஞ் | ௬௬ | பெயர்வினையிடையுரி | ௪௦ |
| சூத்திரஞ்சிலசில | ௧௫ | பொதுவெழுத்தா—மியை | ௫௭ |
| செப்பறைப்பதி | ௨ | பொதுவெழுத்தா—மிலங் | ௫௭ |
| செயப்படுபொருளினு | ௨௮ | பொருத்தப்புணர்ச்சியப் | ௭௦ |
| செயப்படுபொருளைத் | ௩௩ | பொருத்தப்புணர்ச்சியை | ௭௧ |
| செயப்பாட்டுவினையினை | ௪௪ | பொருளதிகாரமுன்ன | ௮௭ |
| செய்வியென்வினை | ௪௨ | பொருளைப்பொருளொனல் | ௮௩ |
| சொல்லாற்றெரிவினை | ௪௨ | போலியெழுத்தை | ௬௦ |
| தகுதியவாய்நிலை | ௭௦ | மதிவெயில்விரிக்கும் | ௧ |
| தடுமாறுந்தொழிற்றருந் | ௬௨ | மறைமூவகையா | ௪௨ |
| தடுமாறுருபுக | ௩௪ | மாறுபடநிற்றல் | ௩௩ |
| தனக்குப்பயனே | ௪௬ | முதறுணைஞாபகங் | ௨௯ |
| தனிவினைதொடர்வினை | ௩௫ | முதனிலைதிரிந்தும் | ௪௧ |
| திருநெல்வேலியெனுஞ்சிவ | ௨ | முதனிலைத்தனிவினை | ௩௫ |
| தேகபந்தந்தீர் | ௨ | முதனிலைத்தொழிற்பெ | ௪௧ |
| தொகிலொருபொருண் | ௬௨ | முதனிலையின்றியுந் | ௪௧ |
| தொகைநிலைக்குணத்தை | ௬௩ | முப்பதெழுத்து | ௬௮ |
| தொகைநிலைதொகாநிலை | ௬௨ | முற்காலத்துப் | ௧௧ |
| தொடர்வினைக்குணமே | ௩௭ | வடமொழியிலக்கணஞ் | ௮ |
| தொழிற்பெயர்வினை | ௫௦ | வழுவுடைப்புணர்ச்சி | ௭௨ |
| தோன்றறிரிதல் | ௭௩ | விகாரத்தாற்பொருள் | ௭௪ |
| நல்லோரல்லோர் | ௧௯ | விதிச்சொன்மறைப் | ௪௩ |
| நாராயணன்பூ | ௨௨ | விளிகுறையிரண்டையு | ௨௨ |
| நான்கைந்தாறே | ௩௨ | வினைச்சொலிலக்கணம் | ௫௫ |
| நிலைத்திணையங்கு | ௨௧ | வினைமுதலன்றியும் | ௩௩ |
| நிலைமொழிமறை | ௪௩ | வினைமுதலின்னும் | ௨௭ |
| நீக்கமின்றியு | ௩௩ | வினைமுதல்விளியே | ௨௨ |
| நீக்கமின்னு | ௩௦ | வினைமுற்றுப்பெயர் | ௫௧ |
| பகுபதத்திலக்கணம் | ௭௫ | வேறில்லையுண்டியார் | ௫௪ |
| பகுபதம்பகாப்பத | ௨௪ | வேற்றுமைபலபல | ௩௪ |
| பண்புத்தொகைவிதி | ௬௫ | வேற்றுமையுருபுகளல் | ௨௩ |
| பத்தொடொன்பது | ௩ | வேற்றுமைவழியிரெட்டாய் | ௮௨ |
| பலபொருட்கொருவடி | ௮௯ | வேற்றுமைவழியோடல்வழி | ௮௧ |

உ

கணபதி துணை.

திருக்கைலாசபரம்பரைத் திருவாவடுதுறையாதீனத்துச்

# சிவஞானசுவாமிகள்

அருளிச்செய்த

# தொல்காப்பியச்சூத்திரவிருத்தி,

# இலக்கணவிளக்கச்சூறாவளி.

இவ்விரண்டும்

மேற்படி ஆதீனத்து

ஸ்ரீமஸ்ரீ சுப்பிரமணியதேசிகசுவாமிகள்

கட்டளையிட்டருளியபடி,

யாழ்ப்பாணத்து நல்லூர்

## ஆறுமுகநாவலரவர்களால்

பலபிரதிருபங்களைக்கொண்டுபரிசோதித்து,

சிதம்பர சைவப்பிரகாசவித்தியாசாலைத் தருமபரிபாலகர்

## பொன்னம்பலபிள்ளையால்

சென்னபட்டணம்

வித்தியாநுபாலனயந்திரசாலையில்

அச்சிற்பதிப்பிக்கப்பட்டன.

மூன்றாம் பதிப்பு.

விரோதிகிருதுஸூ ஆவணிமீ.

(Copyright Registered.)

கணபதி துணை.

# தொல்காப்பியச்சூத்திரவிருத்தி.

## தற்சிறப்புப்பாயிரம்.

எங்கு மாய்நிறைந் தொளிர்முதற் கடவுளை யிறைஞ்சிப்
பொங்கு பேரருட் குரவனைப் புந்தியி னிறுவித்
துங்க மல்குதொல் காப்பியச் சூத்திர விருத்தி
யிங்கு வாழியற் றமிழ்வலோர் மகிழ்தர விசைப்பாம்.

## சிறப்புப்பாயிரம்.

“வலம்புரி முத்திற் குலம்புரி பிறப்பும்—வான்யா றன்ன
தூய்மையும் வான்யாறு—நிலம்படர்ந் தன்ன நலம்பட ரொழுக்க
மும்—திங்களன்ன கல்வியுந் திங்க ளொடு—ஞாயி றன்ன வாய்
மையும் யாவது—மஃகா வன்பும் வெஃகா வுள்ளமுந்—துலைநா
வன்ன சமனிலை யுளப்பட—வெண்வகை யுறுப்பின ராகித் திண்
ணிதின்—வேளாண் வாழ்க்கையுந் தாஅ ளாண்மையு—முலகிய
லறிதலு நிலைஇய தோற்றமும்—பொறையு நிறையும் பொச்சாப்
பின்மையு—மறிவு முருவு மாற்றலும் புகழுஞ் — சொற்பொரு
ளுணர்த்துஞ் சொல்வன் மையுங்—கற்போர் நெஞ்சங் காமுறப்
படுதலு—மின்னோ ரன்ன தொன்னெறி மரபினர்—பன்னருஞ்
சிறப்பி னல்லா சிரிய—ரறனே பொருட்பய னின்பெனு மூன்
றின்—திறனறி பனுவல் செப்புங் காலை—முன்னர்க் கூறிய வெண்
வகை யுறுப்பினு—ளேற்பன வுடைய ராகிப் பாற்படச்—சொல்
லிய பொருண்மை சொல்லியாங் குணர்தலுஞ்—சொல்லிய பொரு
ளொடு சூழ்ந்துநன் குணர்தலுந்—தன்னோ ரன்னோர்க்குத் தான்
பயப் படுதலுஞ்—செய்ந்நன்றி யறிதலுந் தீச்சார் பின்மையு—மடி
தடு மாற்ற மானம்பொச் சாப்புக்—கடுநோய் சீற்றங் களவே
காம—மென்றிவை யின்மையுஞ் சென்றுவழி படுதலு — மறத்
துறை வழாமையுங் குறிப்பறிந் தொழுகலுங்—கேட்டவை நினைத்
தலும் பாடம் போற்றலு—மீட்டவை வினவலும் விடுத்தலு முரை
த்தலு—முடைய ராகி நடையறிந் தியலுநர்—நன்மா ணாக்க ரெ
ன்ப மண்மிசைத்—தொன்னூற் புலமைத் துணிபுணர் வோரே.
என ஆத்திரையன் பேராசிரியன் கூறிய பொதுப்பாயிரத்தானே
பன்னருஞ்சிறப்பி னல்லாசிரியனை யுணர்ந்து வழிபட்டு ஒருநூல்

கேட்பான் புகுந்த நன்மாணுக்கர்க்கு, அந்நூலானுவலப்படும் பொருளும், நூல்கேட்டலாற் பெறப்படும் பயனும், கேட்டற்குரிய வதிகாரிகளாவாரிவரென்பதூஉம், இன்னது முற்றியபின்னர் இந்நூல் கேட்கற்பாற்றென்னு மியைபு முணர்ந்தன்றி நூல்கேட்டற்கண் மனவூக்கஞ் செல்லாமையின், இன்றியமையாச் சிறப்பினவாய இந்நான்கும் ஒருதலையாக முன்னருணர்த்தல்வேண்டும்; இந்நான்கு முணர்ந்தவழியும், கற்றுவல்ல சான்றோரல்லாராற் செய்யப்பட்ட நூலாயிற் கூறியதுகூறன் முதலிய குற்றமுடைத்தாமன்றேயெனவும், கற்றுவல்ல சான்றோரும் மற்றோர் கோட்பாடுபற்றிச் செய்யின் முனைவனூலொடு முரணுமன்றேயெனவும் ஐயுற்றூக்கஞ் செல்லாமையின், அவ்வையநீக்குதற்பொருட்டு, ஆக்கியோன் பெருமையும், நூற்பெருமையும், அந்நூல்வழங்குநிலமும், அதன் முதனூலும் இவையென்பது தோன்ற, ஆக்கியோன்பெயரும் வழியும் எல்லையும் நூற்பெயரும் உணர்த்தல்வேண்டும். ஆகலின், இவ்வெட்டுந் தெரிப்பதாகிய சிறப்புப்பாயிரம் இந்நூற்குப் பனம்பாரனாராற் கூறப்பட்டது.

வடவேங்கடந் தென்குமரி—யாயிடைத்
தமிழ்கூறு நல்லுல கத்து
வழக்குஞ் செய்யுளு மாயிரு முதலி
னெழுத்துஞ் சொல்லும் பொருளு நாடிச்
செந்தமி ழியற்கை சிவணிய நிலத்தொடு
முந்துநூல் கண்டு முறைப்பட வெண்ணிப்
புலந்தொகுத் தோனே போக்கறு பனுவ
னிலந்தரு திருவிற் பாண்டிய னவையத்
தறங்கரை நாவி னான்மறை முற்றிய
வதங்கோட் டாசாற் கரிறபத் தெரிந்து
மயங்கா மரபி னெழுத்துமுறை காட்டி
மல்குநீர் வரைப்பி னைந்திர நிறைந்த
தொல்காப் பியனெனத் தன்பெயர் தோற்றிப்
பல்புகழ் நிறுத்த படிமை யோனே.

இதன்பொருள். வடவேங்கடந் தென்குமரியாயிடை - வடக்கண் வேங்கடமுந் தெற்கட் குமரியு மெல்லையாகவுடைய அவ்விடமாகிய—தமிழ் கூறு நல்லுலகத்து - தமிழ்மொழியைக் கூறு நல்லவுலகத்தின்கண் வழங்கும்—வழக்குஞ் செய்யுளுமாயிரு முதலின்- வழக்கினையுஞ் செய்யுளினையுமாராய்ந்த பெரிய காரணத்தானே— எழுத்துஞ் சொல்லும் பொருளு நாடிச் செந்தமி ழியற்கை சிவ

ணிய - அவற்றின்கண்ணவாகிய எழுத்திலக்கணமுஞ் சொல்லிலக்கணமும் பொருளிலக்கணமு மாராய்ந்து செந்தமிழி னுண்மையைப் பொருந்தி யுணரும்பொருட்டு—நிலத்தொடு முந்து நூல் கண்டு - அச்செந்தமிழ் நிலத்து மொழியோடு முற்பட்டுத்தோன்று நூலினை நோக்கி—முறைப்பட வெண்ணிப் புலந்தொகுத்தோன் - அந்நூலிற்கிடந்த விலக்கணம் பிற்காலத்தா ருணரு முறைமைப் படக் கருதி நூலைத் தொகுத்துச்செய்தான்—போக்கறு பனுவல் - அங்ஙனஞ்செய்த குற்றமற்றநூலினை—நிலந்தரு திருவிற்பாண்டியனவையத்து - மாற்றாரது நிலத்தைத் தனக்கு நல்கும் போர்த்திருவினையுடைய பாண்டியன் மாகீர்த்தியவைக்களத்தின்—அறங்கரை நாவி னான்மறை முற்றிய வதங்கோட் டாசாற் கரிறபத் தெரிந்து- அறமேகூறு நாவினகத்து நான்மறையு முற்றப்பயின்ற அதங்கோடென்னு மூரி னாசிரியனுக்குக் குற்றமறத் தெரிவித்து—மயங்கா மரபி னெழுத்து முறை காட்டி - இயற்றமிழும் இசைத்தமிழும் நாடகத்தமிழும் முன்னூலுட்போல விரவாத தன்மையானே இயற்றமிழை வேறுபிரித்து முறையானே யுலகிற்கறிவித்து—மல்குநீர் வரைப்பினைந்திர நிறைந்த தொல்காப்பியனெனத் தன்பெயர் தோற்றி - கடல்சூழ்ந்த நிலவுலகத்தில் ஐந்திரவியாகரண நிறைய வுணர்ந்த தொல்காப்பியனெனத் தன்பெயரைத் தோற்றுவித்தலால்—பல்புகழ் நிறுத்த படிமையோன் - பலபுகழையு மிவ்வுலகத்தி னிலைபெறுத்தின தவவொழுக்கத்தினையுடையான். என்றவாறு.

வேங்கடங் குமரியெனவே திசை பெறப்படுமாயினும், எல்லைகூறப் புகுந்தாராகலின், அதற்கேற்பத் திசைகூறி யெல்லைகூறு தன் மரபென்பதுபற்றி, வடவேங்கடந் தென்குமரியென்றார்.

தமிழ்நாட்டிற்கு வடக்கட் பிறவெல்லையுமுளவாக வேங்கடத்தை யெல்லையாகக் கூறினார், அகத்தியனார்க்குத் தமிழைச் செவியறிவுறுத்த செந்தமிழ்ப் பரமாசாரியனாகிய அறுமுகக்கடவுள் வரைப்பென்னு மியையுபற்றியென்பது. தெற்கட் குமரியாறாகலின், அதுவே யெல்லையாயிற்று. கிழக்கு மேற்குக் கடலெல்லையாகலின், வேறெல்லை கூறாராயினார். "வடதிசை மருங்கின் வடுகுவரம் பாகத்—தென்றிசை யுள்ளிட் டெஞ்சிய மூன்றும்—வரைமருள் புணரியொடு பொருது கிடந்த—நாட்டியல் வழக்க நான்மையின் கடைக்கண்—யாப்பின திலக்கண மறைகுவன் முறையே." எனச் சிறுகாக்கைபாடினியார் தெற்குங் கடலெல்லை கூறியது, குமரியாறு கடல்கொண்ட பிற்காலத்துச் செய்ததெனவறிக.

வடவேங்கடம் தென்குமரியென்பன அன்மொழித்தொகையாய் அவற்றை யெல்லையாகவுடைய நிலத்தையுணர்த்தின. இஃ

தறியாதார் ஆயிடையென்புழித் தனித்து நின்று பொருளுணர்த்தலாற்றாத அகரச்சுட்டினை ஆகுபெயரென்றும், அவற்றுக்குள்ளென உருபு விரித்துமிடர்ப்படுப.

தமிழ்கூறு நல்லுலகத்தென இடத்தினிகழ்பொருளின் றொழிலும் பண்பும் இடத்தின்மேனின்றன.

ஆயிடையாகியவுலகத்தென்க.

இருமுதலென்னும் பண்புத்தொகை ஒட்டியொருசொல்லாய் நின்று, பின்னர் ஆயென்பதனோடு தொக்கு, வினைத்தொகையாயிற்று. கூர்த்தவுணர்வுமுதலிய பிறகாரணங்களினும் இஃதின்றியமையாச் சிறப்பிற்றென்பார் இருமுதலென்றார். "நின்முகங்காணுமருந்தினேன்" என்புழிப்போல, ஆயிருமுதலென்புழி ஆராய்ச்சியை முதலென்றதாகலின், ஆண்டு வினைகொண்டு முடிந்தது. ஆய்தல் - ஈண்டவ்விருவகை மொழிகளையுங் கற்றுளங்கொளப் பயிறல்.

இங்ஙனம் வழக்குஞ் செய்யுளும் பயின்றார்க்கு, அவற்றின்கணொருஙிகரனவாய சொற்களுள் ஒன்றோடொன் றொவ்வாதுளவாகிய செய்கை வேறுபாடுகளுஞ் சொன்முடிபு பொருண்முடிபு வேறுபாடுகளு நோக்கும்வழி, இவையெல்லாம் வழாநிலையோ, சில வழுவமைதியோ, வழுவோ, கட்டளையில்லையோவெனவுமாசங்கை நிகழுமன்றே, அவ்வாசங்கை நீங்க எழுத்து முதன்மூன்றுமாராய்ந்து செந்தமிழியற்கை சிவணுதற்கு, இந்நூலொருதலையான் வேண்டப்படுமென்பதூஉம், அவை பயிலாதார்க்காசங்கையே நிகழாமையின் இந்நூல் பயன்படாதென்பதூஉம், விளக்கிய, ஆயிருமுதலினடிச் சிவணிய சண்டெண்ணித் தொகுத்தானென்றார். எனவே வழக்குஞ்செய்யுளுமாராய்ந்த பின்னர் இந்நூல் கேட்கற்பாற்றென்பது பெறப்பட்டது. இக்கருத்தறியாத நச்சினார்க்கினியார் முதலென்பதனைப் பெயரடியிற் பிறந்த முதனிலைவினைப்பெயராகக்கொண்டு, முதலுதலினாலெனவுரைப்பர். இருமுதலென்னுந் தொகைச்சொல் அங்ஙனம்° பக்கிசைத்தல் பொருந்தாமையறிக. இன்னுமவர் நல்லாசிரியருடைய வழக்குஞ் செய்யுளுமெனவுரைகூறினார். "வழக்கெனப் படுவ துயர்ந்தோர் மேற்றே—நிகழ்ச்சி யவர்கட் டாக லான" என மரபியலுட்கூறுதலின், வழக்கெனவே உயர்ந்தோர் வழக்கென்பதூஉம், அதனோடெண்ணப்படுதலிற் செய்யுளும் அவர்செய்யுளென்பதூஉம், தாமே பெறப்படுதலின், அது மிகையாமென மறுக்க. வழக்கெனவே செய்யுளு'மடங்குமாயினும், தலைமை தோன்ற வேறுகூறினார், 'முனிவர்வந்தார் அகத்திய'னும் வந்தான்' என்புழிப்போல. உலகமொ

ழியும் வேதமொழியுமெனப் பகுத்த மாபாடியத்திற்குக் கையட ரும் இவ்வாறேயுரைத்தார்.

ஈண்டுப் பொருளென்றது அகம் புறமென்னும் இருகூற்றுப் பதினேழ்திணைப் பகுதியவாய்ச் செய்யுளிற் பாடுதற்குரிய இன்ப முதலிய வுலகியற்பொருளை, மொழித்திற முணர்தற்பொருட்டுச் செய்யுளாராய்ச்சிக் கொருதலையான் வேண்டப்படுதல் பற்றி இயற் றமிழொழிபாகக் கொண்டோதற்பாலன அவையேயாகலின். அற் றேல், இஃதெழுத்துஞ் சொல்லும்போலச் செந்தமிழியற்கை சிவ ணுதற்கேதுவாகாமையானும், வடமொழியார் வேறோதுவதல்லது சத்தநூலுளோதாமையானும், ஈண்டோதல்வேண்டாம் பிறவெ னின்;—ஈண்டுக் கூறும் பொருட்பாகுபாடுகள் பொதுவாகாது தமி ழிற்கே சிறந்து வேறென்றாற் பெறப்படாமையின், இப்பொருள் பற்றி வரும் பரிபாடல், கலி, அகநானூறு, புறநானூறு, ஐங்குறு நூறு, நற்றிணை, குறுந்தொகை, ஆற்றுப்படை, பதிற்றுப்பத்து முத லிய செய்யுளாராயப் புகுந்தார்க்கு இப்பொருட்பாகுபாடுணராக் கால் குன்றுமுட்டிய குரீஇப்போல விடர்ப்பட்டுச் செய்யுண்மொ ழித்திற முணரமாட்டாமையிற் செய்யுண் மொழித்திறமுணர்ந்து செந்தமிழியற்கை சிவணுதற்கு ஒருதலையானோதல்வேண்டுமென்க.

செந்தமிழியற்கைசிவணுதல் மொழித்திறத்தின் முட்டறுத் தல். முட்டு - வழு.

நாடிச் சிவணிய வென்பது 'ஓதியுணர்ந்தான்' என்பதுபோலக் காரணகாரியப்பொருட்டாய் நின்றது. சிவணியவென்பது செய்யி யவென்னும் வாய்பாட்டு வினையெச்சம். இஃதுணரமாட்டாதார் நாடிக்கண்டெண்ணித் தொகுத்தானெனக் கூட்டி, ஒருவினைமுதல் வினையாக்கி, நாடியவாராய்ச்சியிற் குறைபாடுடையவற்றிற்கு முந் துநூல்கண்டென்றும், ஆயிருமுதலிற் செந்தமிழியற்கைசிவணிய வெனக் கொண்டுகூட்டியுமிடர்ப்படுப.

செந்தமிழென்பதனை நிலமென்பதனோடுங்கூட்டுக. நிலமென் பது ஆகுபெயர்.

செந்தமிழ்நிலத்து மொழியோடு முற்பட்டுத் தோன்றுநூலெ ன்றது அம்மொழி தோன்றுங்காலத்துடன்றோன்றிய நூலென இதன்றொன்மை கூறியவாறாயிற்றென்பது. எனவே, அகத்திய மென்பது பெற்றாம். அற்றேல், முந்துநூல் கண்டெனப் பொதுப் படக் கூறுதலானும், அகத்தியநிறைந்த தொல்காப்பிய னென்னு மையானும், நூலுள்ளும் "கடிநிலை யின்றே யாசிரி யற்க" எனப் பிறாண்டும் பொதுப்படக் கூறுதலானும், அகத்தியமே முதனூ லென்பது துணியப்படாதாம் பிறவெனின்;—நூலெனப் பொதுப்

படக் கூறாது நிலத்தொடு முந்து நூலென விசேடித்தலின்; செந்தமிழ்நிலத்து மொழி தோன்றுங்காலத்து உடன்றோன்றிய நூல் அகத்தியமொன்றேயாகலானும், ஏனை நூல்களெல்லாம் அகத்தியத்தின் வழித் தோன்றியனவேயாமாகலானும், ஐந்திரநோக்கித் தொகுத்தானெனின், தமிழ்மொழிப் புணர்ச்சிக்கட்படுஞ் செய்கைகளும், குறியீடுகளும், வினைக்குறிப்பு, வினைத்தொகை முதலிய சில சொல்லிலக்கணங்களும், உயர்திணை அஃறிணை முதலிய சொற்பாகுபாடுகளும், அகம் புறமென்னும் பொருட்பாகுபாடுகளும், குறிஞ்சி வெட்சி முதலிய திணைப்பாகுபாடுகளும், அவற்றின் பகுதிகளும், வெண்பாமுதலிய செய்யுளிலக்கணமும், இன்னோரன்ன பிறவும் வடமொழியிற் பெறப்படாமையானும், இவையெல்லாந் தாமே படைத்துக்கொண்டு செய்தாரெனின், முந்துநூல் கண்டென்பதனோடு முரணுதலானும், முற்காலத்து முதனூல் அகத்தியமென்பதூஉம் அதன் வழித்தாகிய தொல்காப்பியம் அதன் வழிநூலென்பதூஉந் துணியப்படுமென்க.

அற்றேல், தொல்காப்பியனார் அகத்தியனாரோடு மாறுகோடலின் அகத்தியத்தொடு பிறழவும் பிற்காலத்து வீழ்ந்தன சில முந்து நூல் கண்டு அவற்றின் வழிநூல் செய்தாரெனக் கொள்ளாமோவெனின்;—அஃதான்றோர் வழக்கொடு மாறுகொள்ளுவார் இக்காலத்துச் சொல்லினும், அடிப்பட்ட சான்றோர் சொல்லாராகலிற் கொள்ளாமென்பது. அல்லதூஉம், கடைச்சங்கத்தாருட் களவியற்பொருள் கண்ட கணக்காயனார் மகனார் நக்கீரர் இடைச்சங்கத்தார்க்குங் கடைச்சங்கத்தார்க்கு நூலாயிற்றுத் தொல்காப்பியமென்றுரைசெய்தாராகலின், இடைச்சங்கநான்முதலின்றுகாறும் வழங்கிவருதலானும், அருந்தவக்கொள்கையகத்தியனாரோடு மாறுகொண்டு நூல்செய்தாராயின் இவ்வாறு நிலைபெற்று வழங்காதாகலானும், "கூறிய குன்றினு முதனூல் கூட்டித்—தோமின் றுணர்த றொல்காப் பியன்ற—னாணையின் றமிழறிந் தோர்க்குக் கடனே." எ-ம். "வீங்குகட லுடுத்த வியன்கண் ஞாலத்துத்—தாங்கா நல்லிசைத் தமிழ்க்குவிளக் காகென—வானோ ரேத்தும் வாய்மொழிப் பல்புக—ழானாப் புல்மை யகத்திய னென்னு—மருந்தவ முனிவனாக்கிய முதனூல்—பொருந்தக் கற்றுப் புரைதப வுணர்ந்தோர்—நல்லிசை நிறுத்த தொல்காப்பியன்." எ-ம். "மன்னிய சிறப்பின் வானோர் வேண்டத்—தென்மலை யிருந்த சீர்சான் முனிவரன்—றன்பாற் றென்றமிழ் தாவின் றுணர்ந்த—துன்னருஞ் சீர்த்தித் தொல்காப் பியன்முதற்—பன்னிரு புலவரும்." எ-ம். எல்லாவாசிரியரும் அகத்தியனார்க்கு முதன்மாணாக்கராயினாரென்பதுபற்றியே தொல்காப்பியனார்க்குப் பெருமை கூறி அகத்தியமே தொல்

காப்பியத்திற்கு முதனூலெனக் கூறினாராகலானும், அகத்தியனா ரோடு முரணிச் சபித்தாராயின் அதுபற்றியே பெருமை கூறத்தகும் அவ்வாறேரோராசிரியருங் கூருமையானும், அது வேதவழக்கோடும் ஆன்றோர் வழக்கோடும் மாறுகொள்ளுவார் கூற்றேயாமென மறுக்க.

அற்றேல், அகத்தியநிறைந்த தொல்காப்பியனென்னாது ஐந்திரநிறைந்த தொல்காப்பியனென்றதென்னையெனின்;—அகத்திய நிறைந்தமை யெல்லாரானுந் தெளியப்பட்டமையின் வடமொழியினும் வல்லனுயினனென்பது விளக்கிய, அங்ஙனங் கூறினரென்பது. இவ்வாறன்றி ஐந்திரத்தின் வழித்தோன்றிய நூலென்பது விளக்கிய ஐந்திரநிறைந்த தொல்காப்பியனென்ருரென்பாரை, ஐந்திரநிறைந்த தொல்காப்பியனெனவே ஐந்திரம் முதனூலென்பதமைந்திருப்ப முந்துநூல்கண்டெனக் கூறியதெற்றுக்கெனவுங் கூறி மறுக்க.

முறைப்படவெண்ணிப் புலந்தொகுத்தலாவது முதனூல் பரந்து கிடத்தலின் இக்காலத்துச் சில்வாழ்நாட் பல்பிணிச் சிற்றறிவினோர்க்கறியலாகாமையின் அவரறியுமுறைமைப்படவெண்ணி அதற்கேற்பத் தொகுத்துச் செய்தல். இனிச் சார்புநூல்போலத் திரிபு வேறுடைத்தாகச் செய்யாது முன்னோர்நூலின் முடிபொருங்கொப்பக் கருதித் தொகுத்துச் செய்தலெனினுமமையுமென்க. எனவே, இது வழிநூலென்பதூஉம் பெறப்பட்டது.

"மரபுநிலை திரியா மாட்சிய வாகி—யுரைபடு நூறா மிருவகையியல—முதலும் வழியுமென நுதலிய நெறியின்" என மரபியலகத்து நூலிரண்டென வோதியிருப்பச் சார்புநூலெனவொன்று கூறியதென்னையெனின்;—ஒன்றன்வழியாகச் செய்வனவெல்லாம் வழியேயாயினும் அவை முன்னோர்நூலின் முடிபொருங்கொத்தலுந் திரிபுவேறுடைத்தாதலுமென இருவேறுவகைப்பட நிகழ்கின்றமையின், அதுபற்றிச் சார்புநூலென வேறுகோடலுமமையுமென விடுக்க. அங்ஙனந் திரிபுவேறுடையதூஉம் பொருளானொருங்கொத்தலின், மரபுநிலை திரியாமையின், வழிநூலென்றற்கேற்புடைத்தாதலுமறிக. திரிபுடையவாயினும் மரபுநிலைதிரியாதன யாவையெனின்;—செய்யுளியலுட் கூறிய வொற்றளபெடையை அளபெடையதிகாரப்பட்டமை நோக்கி உயிரளபெடையைச் சாரவைத்துக் கூறுதலும், தனிநிலை முதனிலை இடைநிலை ஈறெனுநால்வகையிடத்தை மூன்றிடமெனவடக்குதலும், "மெல்லெழுத்து மிகுத லாவயி னான" என்றவாறே தங்கை நங்கை எங்கை செவிதலை புறம் என மகாரங்கெட்டு இனமெல்லெழுத்து மிகுமென்னாது மகரமேயினமெல்லெழுத்தாய்த் திரியுமென்றலும், "அக

மென் கிளவிக்குக் கைமுன் வரினே—முதனிலை யொழிய முன்னவை கெட்டு" மெல்லெழுத்து மிகும் என்னாது அங்கையென்புழிக் ககரவகரங்கெட்டு மகரந்திரிந்து முடியுமென்றலும், "முதலீரெண்ணி னொற்று ரகரமாகும்." "இடைநிலை ரகர மிரண்டெனெண் ணிற்கு—நடை மருங்கின்று." என்றவாறே கூறாது இரண்டனொற்றுயிரேக நின்ற ரகரவொற்றின்மேல் உகரம் வந்து செய்கைப்பட்டு முடியுமென்றலும், நாகியாதென யகரம் வரும்வழி உகரங்கெட்டிகரந்தோன்றுமென்னாது உகரமே இகரமாய்த் திரியுமென்றலும், நெடுமுதல் குறுகுமொழிகளின்முன் பொதுப்பட ஆறனுருபிற்கும் நான்கனுருபிற்கும் அகரநிலையுமெனக் கூறி "ஆற னுருபி னகரக் கிளவி—யீரு ககரமுனைக் கெடுதல் வேண்டும்." என்னாது "குவ்வினவ்வரும்" என்றொழிதலும், ஆடிக்குக் கொண்டான் என்புழி இக்குச்சாரியையென்னாது குச்சாரியையென்றலும், வற்றுச்சாரியை வகரங்கெட்டு அற்றென நிற்குமென்னாது அற்றுச் சாரியையென்றேகோடலும், இன்னென்சாரியை இற்றெனத் திரியுமென்னாது இற்றென்பது வேறு சாரியையெனக் கோடலும், அக்கென்சாரியை மெய் மிசையொடுங் கெடுமென்னாது அகரச்சாரியையெனக்கோடலும், அ ஆ வ என மூன்றும் பலவறி சொல்லென்னாது உண்குவ உறங்குவ என்புழி வகரத்தை வேறு பிரித்து இடைநிலையெனக்கொண்டு அகரவிகுதியென்றொழிதலும், அகம் புறம் எனப் பகுத்தவற்றைத் தம்முள் வேறுபாடுநோக்கி அகம் அகப்புறம் புறம் புறப்புறம் என நான்காகப் பகுத்தலும், வெட்சித்திணை உழிஞைத்திணைகளின் மறுதலைவினையை வீற்றுவினையாதலும் வேற்றுப்பூச் சூடுதலுமாகிய வேறுபாடுபற்றி வேறுதிணையாகவைத்தெண்ணுதலும், இன்னோ ரன்னவை பிறவுமாம். இவை யிங்ஙனம் வேறுபடினும், புணர்ச்சிமுடிபுஞ் சொன்முடிபும் பொருண்முடிபும் வேறுபடாமையின், மரபுநிலை திரியாவாயின. இவ்வுண்மையுணராதார் பன்னிருபடலமுதலிய நூல்களை வழீஇயினவென்றிகழ்ந்து, பன்னிருபடலத்துள் வெட்சிப்படலந் தொல்காப்பியனார் கூறியதன்றெனவும், தொல்லாசிரியர் வழக்கொடு முரணித் தமக்கு வேண்டியவாறே கூறுப.

இனிச் "சார்ந்துவரன் மரபின் மூன்றலங் கடையே." எ-ம். "சார்ந்துவரி னல்லது தமக்கியல் பிலவெனத்—தேர்ந்துவெளிப் படுத்த வேனை மூன்றும்." எ-ம். வரையறுத்தோதியவாறே சார்பெழுத்து மூன்றென்னாது சிலவுயிரெழுத்துக்களையும் மெய்யெழுத்துக்களையும் உடன்சேர்த்தெண்ணுதலும், தன்மைச்சொல்லை உயர்திணையென்னாது விரவுத்திணையெனச் சாதித்தலும், "நடுவணைந் திணை" என்னுஞ் சூத்திரவிதியோடு மாறுகொளப் பாலைக்கு நிலம்

பல்கலைக் கழக

பகுத்துக்கோடலும், இன்னுமிவைபோல்வனவும், [illegible]லின், வழிநூல் சார்புநூலாதற்கேலாவாயிழுக்குப்படுமென்பது. அற்றேல், ஒன்றன்வழியேயன்றியுந் தாந்தாமறிந்தவாற்றானே நூல்செய்யப் பெறாரோவெனின்;—அது மரபன்றென்பது நோக்கியன்றே ஆசிரியர் "மரபுநிலை திரியிற் பிறிதுபிறி தாகும்" என்னுஞ் சூத்திரவிதி நூலிற்குமெய்துவித்து, நூலின்மரபு கூறப் புகுந்தாரென்க. காலந்தோறும் வழக்கு வேறுபடுதலின், அது பற்றிச் செய்யுநூலும் வேறுபடவமையும் பிறவெனின்;—முற்காலத்து வழக்கு வீழ்ந்ததனை வழுவென்று களையப்படுமாயினன்றே பிற்காலத்து வேறுபடப் பிறந்த வழக்கு இலக்கணமெனத் தழுவிக்கொள்வது. தொல்லாசிரியர் வழக்கே வழக்குப் பிற்காலத்து வேறுபட வழங்கப்படுமாயின் அவ்வழக்கு இலக்கணத்தோடு பொருந்தாதென விலக்குதற்கன்றே "வழக்கெனப் படுவ துயர்ந்தோர் மேற்றே—நிகழ்ச்சி யவர்கட் டாக லான." என்றாராகலின், அமையாதென்க. புதியன புணர்த்தல் பழையவற்றோடு முரணாத வழியேயெனவுணர்க, "வழியி, னெறியே நால்வகைத் தாகும்" "தொகுத்தல் விரித்த றொகைவிரி மொழிபெயர்—ததர்ப்பட யாத்தலோ டனைமர பினவே." என்னு மரபியற்சூத்திரங்களான் வழிநூல் நான்குவகையுள் ஒன்றானியாக்கப்படுமாகலின். அவற்றுள் இது தொகுத்தியாத்தானென்பார் புலந்தொகுத்தோனென்றார்.

புலம் - நூல். அஃதாவது ஒருபொருணுதலிய சூத்திரமும், இனமொழி கிளந்தவோத்தும், பொதுமொழிகிளந்த படலமுமென்னும் மூன்றுறுப்படக்கிய பிண்டம். அவற்றுட் சூத்திரமென்னுமோருறுப்பேயடக்கிய பிண்டம் இறையனார் களவியல்; சூத்திரமுமோத்துமென்னுமிரண்டுறுப்படக்கிய பிண்டம் பன்னிருபடலம்; மூன்றுறுப்படக்கிய பிண்டம் தொல்காப்பியம். இவை முறையே சிறுநூல், இடைநூல், பெருநூலெனப்படும். இனி அகத்தியம் இயற்றமிழ் இசைத்தமிழ் நாடகத்தமிழென்னுமூன்றுறுப்பினையுமடக்கிநிற்றலின், அது பிண்டத்தினையடக்கிய வேறோர்பிண்டமென்றார் நச்சினார்க்கினியார்.

போக்காவன கூறியது கூறன்முதலியன. போக்கறுபனுவலெனவே, அவற்றையெதிர்மறுத்துணரப்படுங்குணங்களும், முப்பத்திருவகை யுத்தியுமுடைய பனுவலென்பதூஉம் பெறுதும். உத்தியை வடநூலார் பரிபாடையென்பர். "நற்பூங் கழலா னிருதிங்களயந்த வாறுங்—கற்பா டழித்த கனமாமணித் தூண்செய் தோளான்—வெற்பூ டறுத்து விரைவின் னெறிக்கொண்ட வாறும்." என்புழிப்போலப் போக்கறு, பனுவலென்றது சுட்டுப்பொருட்டாய் நின்றது.

7055

ஒருவராற் செய்யப்பட்டநூல் ஒருவேந்தனவைக்களத்தில் ஒருபுலவனுக்கேற்பித்தரங்கேறின் அது சிறக்குமாகலின், பாண்டியனவையின் அதங்கோட்டாசாற்கரிறபத் தெரிவித்தாரென்பது. இக்கருத்தே பற்றி ஒருசாரார் ஆக்கியோன்பெயர் முதலிய வெட்டனோடுகளமும், அக்களத்தினரங்கேறிய காலமுங்கூட்டியெண்ணி, நூல்செய்தற்கேதுவிஃதென்னுங்காரணமும் உடன்சேர்த்துப் பதினொருவகைத்துச் சிறப்புப்பாயிரமென்றாரெனவுணர்க. ஆயின் இந்நூல் யாதுகாரணத்தாற் செய்யப்பட்டதோவெனின், சின்னாட்பல்பிணிச் சிற்றறிவினோரறியுமுறைமைப்படவெண்ணியெனவே, மாணாக்கர்மாட் டிரக்கங் காரணமாகச் செய்யப்பட்டதென்க.

'எனப்படுவானென்றற்பாலது' "இல்வாழ்வானென்பான்" என்புழிப் படுவிகுதி தொக்குநின்றாற்போலத் தெரிவித்தென நிற்கற்பாலது தெரிந்தென விவ்விகுதி தொக்குநின்றது. இங்ஙனம் வருவனவற்றை வடநூலார் அந்தர்ப்பாவிதணிச்சென்பர். "குடிமடிந்து குற்றம்பெருகும்" "குடிபொன்றிக் குற்றமுமாங்கே தரும்" "உரற்கால்யானை யொடித்துண் டெஞ்சிய யா" "கோழிகூவிப் போது புலர்ந்தது" என்பனவும் அப்பொருளவாய் நின்றன. அரசனெடுத்தவாலயமென்பதுமது. இஃதுணராத பரிமேலழகியார் "இருணீங்கி யின்பம் பயக்கும்" என்புழி நீக்கியென்பது தொடைநோக்கி மெலிந்து நின்றதெனவும், நீங்கவென்பதன்றிரிபெனினுமமையுமெனவு முரைத்திடர்ப்படுவர். உரையாசிரியரும் பரிமேலழகியாரும் "முதனிலை மூன்றும் வினைமுதன் முடிபின." என்னுஞ்சூத்திரத்தோடு முரணுதலையஞ்சிச் செய்தென்னும் வாய்பாட்டானின்று பிறவினை முதல்வினை கொண்டனவெல்லாஞ் செயவெனெச்சத்திரிபென்றே கொள்வர். அதனை மறுத்து நிகழ்காலத்துக்குரிய செயவெனெச்சம் காரணப்பொருண்மையுணர்த்தும் வழிபலது இறந்தகாலமுணர்த்தாமையிற் காரணகாரியப்பொருட்டாய்ப் பிறவினைமுதல்வினைகொண்டு முடிந்தவழியே செய்தெனெச்சஞ் செயவெனெச்சத்திரிபெனப்படுமெனக் கொண்ட சேனாவரையர் "ஒடித்துண் டெஞ்சிய யா" என்புழி எஞ்சுவித்தவெனப் பொருள்கொள்ளவறியாது செய்தெனெச்சம் பிறவினைமுதல்வினைகொண்டு முடிந்ததெனக் கருதி, இன்னோரன்னவற்றை "வினையெஞ்சு கிளவியும் வேறுபல் குறிய" என்னுஞ் சூத்திரத்தாலமைத்தார். நச்சினார்க்கினியார் "அம்முக்கிளவி" என்னுஞ் சூத்திரத்தை யிடர்ப்படுத்தி நலிந்து பொருள்கொண்டு, செய்தெனெச்சம் தன்வினைமுதல்வினைகொண்டு முடிவனவுமுள் பிறவினைமுதல்வினைகொண்டு முடிவனவுமுளவெனத் தமக்கு வேண்டியவாறே கூறினார். அது "முதனிலை மூன்றும் வினைமுதன் முடிபின.". "அம்முக் கிள

வியுஞ் சினைவினை தோன்றின்" "வினையெச்சம்" என்பனவற்றைப் பயனில்கூற்றாகச் செய்யுமாறறிக. "கரும்பார் தோண்முத்தங் கழ்ன்று செவ்வாய் விளர்த்துக் கண்பசலை பூத்த காமம்—விரும்பார் முலைக்கண் கரிந்து திங்கள் வெண்கதிர்கள் பெய்திருந்த பொற்செப் பேபோ—லரும்பால் பரந்த நசுப்புங் கன்னின் புலனுயிற்றுய்ந்த வனிச்ச மாலை—பெரும் பாரமாய்ப் பெரிது நைந்து நற்சூற் சலஞ்சலம்போ னங்கை நலந் தொலைந்ததே." என்புழிக் காரணகாரியப்பொருண்மையுணர்த்தாது பிறவினைகொண்டனவா லெனின்; செயவெனெச்சந்தனக்குரிய நிகழ்காலமுணர்த்தும்வழிக் காரணகாரியப் பொருள்பட வரவேண்டாமையின், இச்செய்யுளின் வரும் வினையெச்சமெல்லாம் நிகழ்காலமே குறித்து வருதலின், அவை செயவென்பதன்திரிபேயாமென்பது. 'இவனுமிவளுஞ் சிற்றிலிழைத்துஞ் சிறுபறையறைந்தும் விளையாடுப' என்பது பொதுவினையாயினும், வினைமுதல்வினையாதலுமுடைமையின், அவை வினைமுதல்வினைகொண்டனவேயாம், "வினைமுதன் முடிபின" என்புழிப் பொதுவாகாது வினைமுதற்கே வினையாதல் வேண்டுமென்னும் வரையறையின்றி வினைமுதல் வினையென்னுந் துணையேயாய் நிற்றலின். இது சேனாவரையருரையானுணர்க. "தானுந் தேரும் பாகனும் வந்தெ னலனுண்டான்" என்புழி உண்டானென்பது சிறப்புவினையாயினும், வந்தென்பது வினைமுதல்வினைகொண்டு முடிந்ததேயாம், "வினைமுதன் முடிபின" என்றதுணையல்லது வினைமுதற்கெல்லாம் வினையாதல்வேண்டுமென்னும் யாப்புறவின்மையின். இன்னும் வேறுபட வரும் வினையெச்சமெல்லாம் இவ்வாறோர்ந்து முடியுமியல்பறிந்து முடித்துக்கொள்க, செய்தெனெச்சம் யாண்டுந் தன்வினைமுதல்வினைகொண்டே முடியுமென்பது தொல்லாசிரியர் துணிபாகலின்.

மயங்காமரபினெழுத்துமுறைகாட்டியென்புழி எழுத்தென்றதியற்றமிழை. அஃது "எண்ணென்ப வேனை யெழுத்தென்ப விவ் விரண்டுங்—கண்ணென்ப வாழு முயிர்க்கு." "எழுத்தறியத் தீருமிழிதகைமை." என்பவற்றானுமுணர்க. எழுத்து, இயற்றமிழ், சத்தநூலென்பன ஒருபொருட்கிளவி. அகத்தியத்துண் முத்தமிழும் விரவிக்கூறப்பட்டன. அவற்றுள் இயற்றமிழை வேறுபிரித்து வழிப்படுத்தார் தொல்காப்பியர் முதலாயினார், இசைத்தமிழை வேறுபிரித்து வழிப்படுத்தார் பெருநாரை பெருங்குருகு முதலிய நூலுடையார், நாடகத்தமிழை வேறுபிரித்து வழிப்படுத்தார் முறுவல் சயந்தம் குணநூல் செயிற்றியமுதலிய நூலுடையாரென வுணர்க. இயற்றமிழுள்ளும் எழுத்துச் சொற் பொருண்மூன்றனையும் முன்னூலுட்போல விரவக் கூறாது முன்னரெழுத்துணர்த்திப்

பின்னர்ச் சொல்லுணர்த்தி அதன்பின்னர்ப் பொருளுணர்த்தினு னென்பார், காட்டியென்ருெழியாது முறைகாட்டியென்ருர்.

அற்றேல், பொருளதிகாரத்துக் கூறும் பொருளாவது பெரும்பாலுங் காமச்சுவையும் வீரச்சுவையும் பற்றி யோனியென்னு முறுப்புத் தழுவி நாடகவழக்கோடொத்து வரும் புலநெறி வழக்காகலின், அது நாடகத்தமிழுளோதற்பாலதல்லது இயற்றமிழோடியைபின்மையின், ஆசிரியர் நாடகத்தமிழுமுடனோதினுரென்னு மோவெனின்;—என்னும்: என்னை? இது நாடகத்தமிழுளோதற்பாலதாயினும் கலித்தொகை முதலிய செய்யுளாராய்ச்சிக்கு இன்றியமையாது வேண்டப்படுதலின், அதுபற்றி யியற்றமிழொழிபாய்க் கொண்டு ஈண்டைக்கு வேண்டுந்துணையே யோதினுரல்லது, நாடகத்தமிழினோதப்படுங் கூத்துவிகற்பமும், அவினயவிகற்பமும், தோரியமகளிர் * முதலிய கூத்தியரிலக்கணமும், தலைக்கோலியல்பும் ஆடலாசிரியர் முதலியோரிலக்கணமும், ஆடரங்கினிலக்கணமுமாகிய இன்னோரன்னவற்றையோதாமையின்.

அற்றேலஃதாக, "எண்ணென்ப வேனை யெழுத்தென்ப." எ-ம். "சத்தமுஞ் சோதிடமும்." எ-ம். இயற்றமிழோடு சிறந்தெடுத்தெண்ணப்படுஞ் சோதிடமுதலிய பிறகலைகளுமுளவாக முத்தமிழெனத் தமிழாசிரியரெல்லாம் இவற்றையே விதந்துகொண்டதென்னையோவெனின்;—அஃதொக்கும்: சோதிடமுதலிய பிறகலைகளெல்லாம் ஆரியத்தினுந் தமிழினும் ஏனைமொழிகளினும் வேறுபாடின்றியொப்ப நிகழ்தலின் அவற்றை வேறுவிதிக்கவேண்டாமையானும், இயலிசை நாடகமென்னு மூன்றுந் தமிழ்நிலத்துச் சில வேறுபாடுடைமையின் அவற்றை வேறுவிதிக்கவேண்டுதலானும், அதுபற்றி அகத்தியத்துள் இம்மூன்றுமேயெடுத்தோதினுராகலின், முத்தமிழென வழங்கப்பட்டனவெனவறிக.

தமிழ் வழங்கு நிலமேயன்றி நிலவுலகமுழுதுந் தன்பெயர் தோற்றுவித்தானென்பது விளக்கிய, மல்குநீர்வரைப்பென்ருர்.

பாணினீயமுதலிய வியாகரணங்களுமுளவாக ஐந்திரநிறைந்த தொல்காப்பியனென்ருர், "பெயரது விகாரமென் ரோதிய புலவனு முளன்." எனப் பிறர்மதங்கூறி "இந்திர னெட்டாம் வேற்றுமை யென்றனன்." எனவிந்திரனோதியதனைத் தர்துணிபாகக்கொண்ட அகத்தியனுர்க்கு ஐந்திரமேயுடன்பாடென்பது பெறப்படுதலின், அதுவே தொல்காப்பியனுர்க்கு முடன்பாடென்பது பற்றிப்போலுமென்க. எனவே, தொல்காப்பியனுர்க்கு வடநூலறிவுறுத்தவாசிரியரும் அகத்தியனுரென்பது பெற்ரும்.

* தோரியமகளிர் - ஆடிமுதிர்ந்த மகளிர்.

பல்புகழாவன முறைப்படவெண்ணித் தொகுத்தலானும், பாண்டியனவையத் ததங்கோட்டாசாற்குத் தெரிவித்தலானும், ஐந்திரநிறைந்த தொல்காப்பியனெனத் தன்பெயர் தோற்றுவித்தலானும், உடம்பொடுபுணர்த்துக் கூறிய படிமையானும் வருவன.

தோற்றி நிறுத்தவென்பது காரணகாரியப்பொருட்டாய் நின்றது.

தொகுத்தோன் படிமையோனெனக் கூட்டுக. ஏகாரமிரண்டும் ஈற்றசை.

தொல்காப்பியனெனவே ஆக்கியோன்பெயரும், அதனாற்பெறப்பட்ட நூற்பெயரும்,முந்துநூல்கண்டெனவே வழியும்,வடவேங்கடந் தென்குமரியெனவே எல்லையும், வழக்குஞ்செய்யுளுமாயிருமுதலினெனவே இவையாய்ந்தபின்னர் இது கேட்கற்பாற்றென்னும் யாப்பும், இவையாய்ந்தோர் இது கேட்டற்குரியரென்னுங் கேட்போரும், எழுத்துமுறைகாட்டியெனவே நுதலியபொருளும், செந்தமிழியற்கை சிவணியவெனவே பயனுமாகியவெட்டும் பெறப்பட்டன. ஏனைக்காலமுங் களனுங் காரணமும் முன்னர்க் காட்டப்பட்டன.

காலமுதலியமூன்றும் நூல்செய்தார்காலத்து நிகழ்ந்தன. ஆக்கியோன் பெயர்முதலியவெட்டும் நூல்செய்தார்காலத்தும் நூல்வழங்குங்காலத்து மொப்பநிகழ்வன. இவை தம்முள் வேற்றுமை. கழிந்தவற்றையுணர்தலாற் பெரும்பயனின்மையின், அவையொருசாரார்ற் கொள்ளப்பட்டன. ஆக்கியோன் பெயர்முதலியன ஒருதலையானுணரவேண்டுதலின், அவையெல்லாவாசிரியரானுங்கொள்ளப்பட்டன.

இவ்வெட்டனுள்ளும் ஆக்கியோன் பெயர்முதலிய நான்கும் ஐயமறுத்தற்பொருட்டன்றி ஒருதலையானுணர வேண்டாமையானும், "சிதைவில வென்ப முதல்வன் கண்ணே" என்பதோத்தாகலின் முதனூற்கணையமின்மையின் ஐயமறுத்தல் வழிநூன்மாத்திரைக்கே வேண்டுதலானும்,அவற்றுள்ளும் வழியென்பது முதனூற்கின்மையானும், ஆக்கியோன்பெயரும் நூற்பெயரும் பாயிரத்தானேயன்றி நூன்முதலிடை கடையினெழுதப்படுதலானும், உலகத்திற்றோற்றத்தானும் அறியவும்படுமாகலானும், எல்லை நாட்டெல்லையே நூற்கெல்லையாகவுணரப்படுமாகலானும், யாப்புமுதலிய போலவின்றியமையாச் சிறப்பினவன்மையின் அந்நான்கினையுமுன்னர் வைத்து இன்றியமையாச் சிறப்பினவாகிய யாப்புமுதலிய நான்கினையுமிறுதிக்கண் வைத்து, "ஆக்கியோன் பெயரே வழியே

யெல்லை—நூற்பெயர் யாப்பே நுதலிய பொருளே—கேட்போர் பயனொ டாயெண் பொருளும்—வாய்ப்பக் காட்டல் பாயிரத் தியல்பே." எனச் சூத்திரஞ்செய்தவாறு. இக்கருத்தே பற்றி வடநூலாரும் யாப்புமுதலிய நான்கு முணர்த்துவதே பாயிரமெனக்கொள்ப. இவற்றுள்ளும் பயன் இன்றியமையாது சிறந்தமையின் இறுதிக்கண் வைக்கப்பட்டது. ஏனையவுமிவ்வாறேயோர்ந்துணர்க.

வடநூலார் யாப்பை ஆனந்தரியமென்றும், நுதலியபொருளை விடயமென்றும், கேட்போரை அதிகாரிகளென்றும், பயனைப் பிரயோசனமென்றுங் கூறுப. அவருளொருசாரார், ஆனந்தரியப் பொருள் நூலைப் பயப்பித்தற்குக் காரணமாய்க் கேட்போரை விசேடித்து நிற்றலின் வேறுகூறவேண்டாவென்னுங் கருத்தால், ஆனந்தரிய நீக்கிச் சம்பந்தமொன்று கூட்டி நான்கென்பாராயினர். சம்பந்தமென்பதூஉம் யாப்பென்னும் பொதுச்சொல்லாற் கொள்ளப்படும். அது புலந்தொகுத்தோனெனவே நூற்கும் நுதலியபொருட்கும் தொகுப்பதூஉம் தொகுக்கப்படுவதூஉமாகிய சம்பந்தமென்பது பெறப்பட்டது. யாப்பு, இயைபு, தொடர்ச்சி என்பன ஒருபொருட்கிளவி.

ஈண்டுக் கேட்டல் பாடங்கேட்டல். அது "கேள்வி விமரிசம் பாவனை" என்பதனானும் "கேட்டவை நினைத்தலும் பாடம் போற்றலும்" "ஒருகுறி கேட்போ னிருகாற் கேட்பின்" என்பவற்றானு முணர்க.

இவ்வெட்டுமுணர்ந்ததற்குப் பயன் நூல்பயிலுதற்கனூக்கமுண்டாதல். ஊக்கம் - உள்ளக்கிளர்ச்சி.

இனி வாய்ப்பக்காட்டலென்பதனானே இத்துணைச் சிறப்பில வாய் அவ்வவற்றிற்கினமாய்க் காட்டப்படுவனவுமுளவென்பதுபெற்றும். அவை ஆக்கியோன்பெயரேயன்றி ஆக்குவித்தோன் பெயர் கூறுதலும், வழியேயன்றி அதன்வகையாகிய தொகுத்தன்முதலிய நான்கினுளொன்றுமாறு கூறுதலும், தன்முதனூற்கு வழி கூறுதலும், அது வந்த மரபுவழி கூறுதலும், பொதுவெல்லைகூறுதலேயன்றிச் செந்தமிழ் முதலியவற்றின் சிறப்பெல்லை கூறுதலும், நூற்பெயரேயன்றிப் படலப்பெயர் ஒத்தின்பெயர் கூறுதலும், நூற்கியைபு கூறுதலேயன்றி நூலினுட் படலமுதலியவற்றிற்கியைபு கூறுதலும், சம்பந்தங் காட்டுவோர் மதத்தில் நூற்கும் நுதலிய பொருட்குங் கிழமைகூறுதலேயன்றி நுதலியபொருட்கும் பயனுக்குங் கிழமைகூறுதலும், நூற்கும் நூல்செய்தோனுக்குங் கிழமைகூறுதலும், நுதலிய பொருளேயன்றிப் படலநுதலியதூஉம்

ஒத்துநுதலியதூஉம் சூத்திரநுதலியதூஉங் கூறுதலும், கேட்போ ரேயன்றிக் கேட்பிப்போரைக் கூறுதலும், பயனேயன்றிப் பயனு க்குப் பயன்கூறுதலுமாம்.

பயனுக்குப் பயனாவது "எழுத்தறியத் தீரு மிழிதகைமை தீர் ந்தான்—மொழித்திறத்தின் முட்டறுப்பா னாகு - மொழித்திறத் தின்—முட்டறுத்த நல்லோன் முதனூற் பொருளுணர்ந்து—கட்ட றுத்து வீடு பெறும்." என்பதனாற்காண்க. எனவே, முதனூற்பொ ருளுணர்தற்கு முறையானே இது கருவிநூலென்பது பெறப்பட் டது. முதனூல்—வீட்டுநூல். ஈண்டுக் கேட்பிப்போர் இயற்றமிழ் வல்லவாசிரியர். படலநுதலியது இவ்வதிகாரமென்னுதலிற்றுவெ னினென்பது. எழுத்துஞ் சொல்லும் பொருளு நாடியென்பதூஉம் அதனை விளக்கி நின்றது. ஒத்துநுதலியது இவ்வோத்தென்னுதலிற் றுவெனினென்பது. சூத்திரநுதலியது இச்சூத்திரமென்னுதலிற் றுவெனினென்பது. படலத்திற்கியைபு மேலையதிகாரத்தோடி யைபுடைத்தாயிற்றென்பது. ஒத்திற்கியைபு மேலையோத்தினோடி யைபுடைத்தாயிற்றென்பது. சூத்திரத்திற்கியைபு மேலைச்சூத்திரத் தோடியைபுடைத்தாயிற்றென்பது. இவை நூன்முகத்துக் காட்டப் படுதலேயன்றிப் படலமுகத்தும் ஒத்துமுகத்தும் சூத்திரமுகத்துங் காட்டவும்படும். இவையெல்லாம் பாயிரமேயாம். பிறவுமிவ்வாறே கண்டுகொள்க.

அற்றேல், கேட்போர் மாணாக்கரும் கேட்பிப்போராசிரியரு மாதலான் இவ்விரண்டும் பொதுப்பாயிரத்தாற் பெறப்படுமாலெ னின்;—அற்றன்று: பொதுவகையானாசிரியர்க்கும் மாணாக்கர்க்கு மிலக்கணம்பெறப்பட்டதல்லது இந்நூற்கின்னாரென்னுஞ் சிறப்பு வகை ஆண்டுப் பெறப்படாமையின், இஃதீண்டுக் காட்டப்படும். இது காட்டாக்கால், சிற்றறிவோர் பெருநூலும், பேரறிவோர் சிறு நூலும், முத்தமிழுளொருநூற்குரியோரேனையிரண்டுநூலும், அறம் பொருளின்பம் வீடென்னு நான்கனுளொன்றற்குரியா ரேனைமூன் றுநூலுங் கேட்பான்புக்கிடர்ப்பட்டு மயங்குபவாகலின், இஃதொ ருதலையாற் காட்டல்வேண்டுமென்பது. இதுபற்றியன்றே பொது வெனவுஞ் சிறப்பெனவும் பாயிரமிருபகுதிப்பட்டதூஉமென்க.

இக்கருத்தறியாத உரையாசிரியரை யுள்ளிட்டோரெல்லாரும் நூலரங்கேறு மவைக்களத்துக் கேட்டாரைக் கேட்போரென்றும், தொகுத்தன்முதலிய வழியின் வகையினை யாப்பென்றுங்கூறினார். ஆக்கியோன்பெயர் நுதலியபொருளென்பனபோல இறந்தகாலத் தாற்கூறாது கேட்போரென வெதிர்காலத்தாற்கூறியதே அஃதுரை யன்மைக்குச் சான்றாகலானும், காலங்களத்துளடங்குதலின் வேறு

கூறவேண்டாமையானும், ஆக்கியோன்பெயர் முதலியனபோல நூல்வழங்குங்காலத்து நிகழ்வதன்றாகலின் அவற்றோடொருங்கு வைத்தெண்ணல் பொருந்தாமையானும், கேட்டற்குரிய அதிகாரிகளாவாரையொருதலையாக வுணர்த்தல்வேண்டுமாகலானும், தொகுத்தன்முதலியன வழியுளடங்குதலானும், இயைபுமொருதலையானுணர்தற்பாலதாகலானும், யாங் கூறியதே வடநூலார்க்கு முடன்பாடாகலானும், அவருரை போலியுரையென்க.

இனி மாபாடியத்துள், பாதுகாப்பு, ஓர்ச்சி, கருவி, எண்மை ஐயமறுத்தலென்பனவும் பயனென்பர். அவையெல்லாம் மொழித்திறத்தின் முட்டறுத்தற்பயத்தவாயடங்கும். அவற்றையீண்டுரைக்கிற் பெருகும்.

இப்பாயிரத்தை வடநூலார் உபோற்காதமென்ப.

இனி என்பது பாயிரமென்னுதலிற்றோவெனின்னென்பதூஉம், ஆக்கியோன்பெயர் முதலியவெட்டு முணர்த்துதனுதலிற்றென்பதூஉம், பாயிரங்கேட்டலாற் பெறப்படும் பயனிதுவென்பதூஉம், இப்பாயிரஞ்செய்தாரிவரென்பதூஉம் போல்வன பாயிரத்துக்குப் பாயிரமெனக் கொள்க. இவையெல்லாம் "ஒத்த சூத்திர முரைப்பின்" என்புழி ஒத்தவென்பதனாற் கொள்ளப்படும்.

தொல்காப்பியமுடையானென்னும் பொருட்கண் அம்முக்கெட்டு, அன்விகுதி புணர்ந்து, தொல்காப்பியனென நின்று, பின்னர்த் தொல்காப்பியனாற் செய்யப்பட்ட நூலென்னும் பொருட்கண் அன்விகுதி கெட்டு, அம்விகுதி புணர்ந்து, தொல்காப்பியமென முடிந்தது. "முதலிற்கூறும்" என்னுஞ் சூத்திரத்துட் சேனாவரையரும் இவ்வாறே கூறி, உரையாசிரியரை மறுத்தார். இனி உரையாசிரியரும் நச்சினார்க்கினியாரும் இதனையாகுபெயரென்றும், ஈறுதிரியுமென்றுங் கூறினாராலெனின்;—அவர் ஆகுபெயர்ப் பெற்றி யறிந்திலர் போலுமென்க. ஆகுபெயர்களெல்லாம் நின்றாங்கு நின்று இயற்பெயர்ப்பொருளையும் வேறுணர்த்தி நிற்குமாற்றலுடையவாதலும், அகத்தியம், தொல்காப்பியம், கபிலமென்பவற்றிற்கு அவ்வாற்றலின்மையுமோர்ந்துணர்க. ஆசிரியர் விரிவஞ்சியொருமொழிமுடிபு கூறுதொழிந்தமையின், இவரிங்ஙனமயங்குவாராயினாரென்க.

பாயிரவிருத்தியொருவகையான் முடிந்தது.

# எழுத்ததிகாரம்.

எழுத்ததிகாரமென்பது எழுத்ினததிகாரத்தையுடையதென அன்மொழித்தொகையாய் அப்படலத்திற்குக் காரணக்குறியாயிற்று.

எழுத்தென்றது அகரமுதனகரவிறுவாய்க் கிடந்த முப்பதுங் குற்றியலிகரமுதலிய மூன்றுமாம். அவற்றிற்கெழுத்தென்னுங்குறி முன்னர் "எழுத்தெனப்படுப" என்னுஞ்சூத்திரத்தாலோதுபவாகலின் ஈண்டெதிரதுபோற்றி யாளப்பட்டது.

அதிகாரம் அதிகரித்தல். அஃதிருவகைப்படும். அவற்றுளொன்று வேந்தனிருந்துழியிருந்து தன்னில முழுவதுந் தன்னாணையி னடப்பச் செய்வதுபோல ஒருசொன்னின்றுழி நின்று பலசூத்திரங்களும் பலவோத்துக்களுந் தன்பொருளே நுதலிவரச் செய்வது. ஒன்று சென்று நடாத்துந் தண்டத்தலைவர்போல ஓரிடத்து நின்றசொற் பலசூத்திரங்களோடுஞ் சென்றியைந்து தன்பொருளைப் பயப்பிப்பது. இவற்றிற்கு முறையே வடநூலார் யதோத்தேசபக்கமெனவுங் காரியகாலபக்கமெனவுங்கூறுப. இது சேனாவரையருரையானுமுணர்க. அவற்றுளீண்டதிகாரமென்றது முன்னையது. அதனையுடையதெனவே, எழுத்தை நுதலிவரும் பலவோத்தினது தொகுதி எழுத்ததிகாரமென்றவாறாயிற்று. எழுத்தினததிகாரத்தையுடையதென்புழி ஆறுவது வினைமுதற்பொருண்மையின்கண் வந்த காரகம்.

இப்படலத்துள் விதிக்கப்படுவனவெல்லாங் கருவியுஞ் செய்கையுமென இருவகைப்படும். அவற்றுட்கருவி நூன்மரபு முதலிய நான்கோத்தானும், செய்கை தொகைமரபு முதலியவைந்தோத்தானுங் கூறப்படும். கருவி பொதுவுஞ்சிறப்பு மெனவிருவகைத்து. புணரியலுட்கூறப்படுவன செய்கையொன்றற்கேயுரிய கருவியாகலிற் சிறப்புக்கருவி; ஏனை மூன்றோத்தினுங் கூறப்படுவன பொதுக்கருவி. அற்றேல் அவையோரோத்தாகக் கூறவமையும் பிறவெனின்;—அமையாது: சொல்லதிகாரத்துள் வேற்றுமையியலும் வேற்றுமைமயங்கியலும் விளிமரபும் ஒருநிகரனவாகவுந் தம்முள் வேற்றுமை கண்டு வேறுவேறோத்தாகக் கூறினாற்போல, ஈண்டுந் தம்முள் வேற்றுமையுடைமைபற்றி நூன்மரபு மொழிமரபு பிறப்பியலென மூன்றோத்தாகக் கூறினார், "நேரின மணியை நிரல்படவைத்தாங்—கோரினப் பொருளை யொருவழி வைப்ப—தோத்

தென மொழிப வுயர்மொழிப் புலவர்" என்பதோத்திலக்கண மாகலின்.

## நூன்மரபு.

அஃதாவது நூலினது மரபுபற்றிய பெயர்கூறுதல். எனவே, இதுவு மிவ்வோத்துட்கூறுஞ் சூத்திரங்களுக்கெல்லா மதிகாரமென்பது பெறப்பட்டது. மலை கடல் யாறு குளமென்றற் றொடக்கத்துலகமரபுபற்றிய பெயர்போலாது, ஈண்டுக் கூறப்படும் எழுத்து, குறில், நெடில், உயிர், மெய்யென்றற்றொடக்கத்துப் பெயர்கள் நூலின்கணாளுதற்பொருட்டு முதனூலாசிரியனாற் செய்துகொள்ளப்பட்டமையின், இவை நூன்மரபுபற்றிய பெயராயினவென வறிக. ஏனையோத்துக்களின் விதிக்கப்படும் பெயர்களும் நூன்மரபுபற்றிவரும் பெயராதல் உய்த்துணர்ந்துகோடற்கு இது முன் வைக்கப்பட்டது.

இப்பெற்றியறியாதவுரையாசிரியர் முதலியோர் இவ்வதிகாரத்தாற் சொல்லப்படு மெழுத்திலக்கணத்தினை யோராற்றாற்றொகுத்துணர்த்துதலின் நூன்மரபென்னும் பெயராயிற்றென்பாரும், இவ்வோத்துட்கூறப்படும் விதிகள் மூன்றதிகாரத்திற்கும் பொதுவாகலின் நூன்மரபென்னும் பெயராயிற்றென்பாருமாயினார். இவ்வதிகாரத்துட்கூறு மெழுத்திலக்கணத்தைத் தொகுத்துணர்த்தலாற் பெற்ற பெயராயின் அதிகாரமரபெனப்படுவதன்றி நூன்மரபெனப்படாமையானும், இவ்வோத்துட்கூறப்பட்டன செய்கையோத்திற்கும் பொருளதிகாரத்துட் செய்யுளியலொன்றற்குமே கருவியாவதன்றி மூன்றதிகாரத்திற்கும் பொதுவாகாமையானும், அவை போலியுரையாதலறிக.

க. எழுத்தெனப் படுப
வகரமுத
னகர விறுவாய் முப்பஃ தென்ப
சார்ந்துவரன் மரபின் மூன்றலங் கடையே.

என்பது சூத்திரம் என்னுதலிற்றோவெனின், அகரமுதலியவற்றிற்குப் பொதுப்பெயர் கூறுதனுதலிற்று. இ-ள். நெடுங்கணக்கினுள் அகரமுதல் னகரவீறாகக் கிடந்த முப்பதும் எழுத்தென்று சொல்லப்படுவனவென்று கூறுவர் நூலோர், தனித்தானுங் ககரமுதலியனபோல் அகரமொடு சிவணியானுமியங்கு மியல்பின்றி ஒரு மொழியைச் சார்ந்துவருதலே தமக்கிலக்கணமாகவுடைய மூன்றல்லாதவிடத்து என்றவாறு. எனவே, சார்ந்துவரன்மரபின் மூன்றுளவென்பதூஉம் ஈண்டே பெற்றாம்.

அகரமுதலிய முப்பதும் நெடுங்கணக்கினுட் பெறப்படுதலின், அவற்றை விதந்தோதாது, முதலுமிறுதியுமெடுத்தோதி யநுவதித்தார். அநுவதித்தலெனினும் வழிமொழிதலெனினுமொக்கும். அநுவாதமாவது முன்னர்ப் பெறப்பட்டதொன்றனை வேறொன்று விதித்தற்பொருட்டுப் பின்னருமெடுத்தோதுதல். அதனால் அது கூறியது கூறலென்னுங் குற்றமாகாது வழிமொழிதலென்றாயிற்று. வழிமொழிதற்கு முன்னர்ப் பெறப்பட்டதனைப் புரோவாதமென்பர் வடநூலார்.

இனிச் சார்ந்துவரன்மரபின்மூன்றும் அகரமுதலியனபோலத் தனித்துநிற்றலாற்றாமையின் நெடுங்கணக்கினுட் பெறப்படாவாயினவாகலான், அவற்றை முன்னர் வகுத்தோதுப.

முப்பஃதென்பது இனைத்தெனவறிந்தபொருளின் வினைப்படுதொகுதியாகலின், ஆண்டு வேண்டப்படு முற்றும்மை விகாரத்தாற்றொக்கது, "இருதோடோழர்பற்ற" என்புழிப்போல, சூத்திரமுஞ் செய்யுளாகலின்.

இனி உரையாசிரியரும் நச்சினார்க்கினியாரும் இச்சூத்திரம் பெயருமுறையுந் தொகையுமுணர்த்திற்றென்றும், அ ஆ முதலியனவே பெயரென்றும், அம்முறையே முறையென்றும், முப்பஃதெனத் தொகை விதிக்கப்பட்டதென்று முரைத்தாராலெனின்;—அற்றன்று. அஃதாசிரியர் கருத்தாயின், அ ஆ இ ஈயென முழுதுமெடுத்தோதி முறைக்கேதுவுங்கூறுவர். அவ்வாறு கூறாது அகரமுதனகர விறுவாயென அநுவதித்தே யொழிந்தமையானும், எழுத்தென்ப தொருபொருள் அதற்கு அ ஆ முதலியன பெயரென்றல் பொருந்தாமையானும், அ ஆ முதலிய அ ஆ முதலியவற்றிற்குப் பெயராதல் கூற வேண்டாமையானும், வேண்டுமெனிற் சொற்களும் பொருளையுணர்த்தாது அவை தம்மையே யுணர்த்தும்வழி அவற்றிற்கவை பெயராதல் கூறாமை குன்றக்கூறலாமாகலானும், முறையுந்தொகையுஞ் செய்கைமுதலியவற்றிற்குக் கருவியன்மையின் அவற்றை விதித்தலாற் பயனின்மையானும், அவருரை போலியுரையெனவறிக. இச்சூத்திரத்தினெழிபாகிய "அவைதாங் குற்றியலிகரம்" என்னுஞ் சூத்திரத்துள் 'எழுத்தோரன்ன' எனவெழுத்தாதல் விதிக்கின்றமையானும், ஈண்டும் அகரமுதனகர விறுவாய் முப்பஃது எனவநுவதித்து, அவற்றிற்கெழுத்தென்னும் பெயரே விதிக்கப்பட்டதெனக்கொள்க. அகரமுதலியபொருட்கு ஈண்டெழுத்தென்னும் பொதுப்பெயர் கூறி "அவற்றுள் அ இ உ" "ஆ ஈ ஊ ஏ" "ஔகாரவிறுவாய்" "னகாரவிறுவாய்" "வல்லெழுத்தென்ப" "மெல்லெழுத்தென்ப" "இடையெழுத்தென்ப" என்

னுஞ் சூத்திரங்களாற் சிறப்புப்பெயர் கூறுமாறுமறிக. சூத்திரம் வேறுபொருடாராமைப்பொருட்டன்றே ஆசிரியர் நூன்மரபென அதிகாரஞ்செய்துகொண்டதூஉமென்க.

அற்றேல், "னஃகா னொற்றே யாடூஉ வறிசொல்" "ளஃகா னொற்றே மகடூஉ வறிசொல்" என்றாற்போலப் பிறண்டும் பொருளை முன்னர்க் கூறிப் பெயர் பிற்கூறுபவாகலானும், இதற்கிது பெயரென்று பொருளை முன்னர்க் காட்டிப் பெயர்கூறுதலே மரபாகலானும், ஈண்டும் அகரமுதனகரவிறுவாய் முப்பஃது மெழுத்தெனப்படுபவென்ப என்றோதல்வேண்டும், அவ்வாறோதாது எழுத்தெனப்படுப வகரமுதனகரவிறுவாயென மாறிக்கூறியதென்னையோவெனின்;—நன்று வினாயினாய். அவ்வாறோதுதலே மரபாயினும், எழுத்தென்பது மங்கலமொழியாகலின் முதற்கண் மங்கலங் கூறுதன் மரபெனக் கருதி, எழுத்தெனப்படுப வகரமுத னகரவிறுவாயென்றார்: என்றாரேனும், "எழுத்துப்பிறிந் திசைத்த லிவணியல் பின்றே" "எழுத்தோ ரன்ன பொருடெரி புணர்ச்சி" எனப் பிறண்டுமெடுத்தாளுதலான், அவ்வாட்சிபற்றி எழுத்தென்பது பெயர் அகரமுதல் னகரவிறுவாயென்பது பெயர்ப்பொருளெனத் துணிந்தபின்னர், அகரமுதனகரவிறுவாய் முப்பஃதெழுத்தெனப் படுபவென்ப என்னுங் கிடக்கைமுறை உள்ளத்தின்கணிலைபெறும், அதன்பின்னர்ச் சூத்திரப்பொருளினிது விளங்குமாதலின், ஈண்டுப் பெயர் பின்னுதலிற் பிறழாமையுணர்க. இதுவேயண்மைநிலை. இவ்வாறன்றி எழுத்தென்பது சென்றுநடாத்துந் தண்டத்தலைவர் போல் அதிகரிப்பதெனக் கொண்டு பின்னர் வந்தியையுமென்றலுமொன்று. இனி முதனூலாசிரியனாற் படைத்திட்டுக்கொண்ட பெயரென்னுது, உலகத்திலெழுதப்பட்டவையெல்லா மெழுத்தாமன்றே அதனையீண்டாளுதற்பொருட்டு முதனூலாசிரியனால் வரையறுத்துக் கொள்ளப்பட்டதென நியமவிதியாகக் கொள்ளினுமமையும். "வல்லெழுத் தென்ப கசட தபற." "மெல்லெழுத் தென்ப ஙஞண நமன." "இடையெழுத் தென்ப யரல வழள." "உயர்திணை யென்மனார் மக்கட் சுட்டே—யஃறிணை யென்மனா ரவரல பிறவே" என்றற்றொடக்கத்தனவும் அவ்வாறே கண்டுகொள்க.

அற்றேல், குற்றியலிகரமென்னுங் குறியீட்டான் நாகியாதெனச் செய்கைசெய்தல்வேண்டும், செய்கைசெய்தபின்னர் அவ்வெழுத்துக் குற்றியலிகரமெனல்வேண்டும், இஃதொன்றனையொன்று பற்றுதலென்னுங் குற்றமாம் பிறவெனின்;—ஆகாது, நாகுயாது என்பனவே சொல்லாகலின் நாகியாதென்புழிப் பெறப்பட்ட குற்றியலிகரம் வழூவென்று காணலுற்றுழி "யகரம் வரும்

வழி யிகரங் குறுகும்" என்னுஞ் சூத்திரம் வழாநிலையாதலுணர்த்த வந்ததல்லது முன்னில்லாத குற்றியலிகரத்தை விதிக்க வந்ததல்லாமையின், எல்லாச்சொற்களும் படைப்புக்காலந்தொடங்கி நிலைபேறுடைமையின். இனியிலக்கணமொன்றே கன்னாக நூல் கொண்டுணரப் புகுவார்க்கும் கேண்மியாவென்புழி மகரம் பற்றுக்கோடாக நின்ற குற்றியலிகரமுணர்ந்தவழி இதுபோன்றனவெல்லாங் குற்றியலிகரமென்றுணரப்படுதலின், ஆண்டு மக்குற்றமின்மையறிக, ஒருகுடத்தைக்காட்டி இது குடமென்றுணர்த்த வுணர்ந்தார்க்கு இந்நிகரனவாய் வனையப்படுவனவெல்லாங் குடமென்றுணரப்படுமாகலின். அங்ஙனமல்லாக்கால், மனையகத்துக் குடமுளதென்றவழி முன் காணாத குடத்தையறிதல்கூடாதென்பது. எழுத்து முதலியவற்றிற்கு மிவ்வாறே கண்டுகொள்க.

இவ்வெழுத்தென்னுங்குறி வேற்றுமைத்தொகை வினைத்தொகை மெய்ம்மயக்கம் உடனிலைமயக்கம் இரட்டைக்கிளவியென்பன போல உடனிகழ்ச்சிபற்றிய பெயராகாது அகரமுதலியவற்றிற்குத் தனித்தனியே பெயராதல் உத்திவகையானுணர்ந்துகொள்க.

சொல்லும் பொருளும் பேதாபேதமாகலின், அதுபற்றி "உறுதவ நனியென வரூஉ மூன்று—மிகுதி செய்யும் பொருள வென்ப." "கறுப்புஞ் சிவப்பும் வெகுளிப் பொருள." "புதிதுபடற் பொருட்டே யாணர்க் கிளவி." எனச் சிலவற்றை வேற்றுமைநயம்படவும், "கெடவரல் பண்ணையா யிரண்டும் விளையாட்டு." "தடவுங் கயவு நளியும் பெருமை." எனச்சிலவற்றை யொற்றுமைநயம்படவுங் கூறுவராகலின், ஈண்டெழுத்தெனப்படுப வகரமுதனகர விறுவாயென வொற்றுமைநயம்படக் கூறிற்று. சொல்லும் பொருளும் வேறென்பார் எழுத்தெனப்பெயர்பெறுவனவற்றை யெழுத்தென்றதாகுபெயரென்ப. இனிச் சொல்லும்பொருளுமொன்றென்பார் "புதிதுபடற் பொருட்டே யாணர்க் கிளவி" என்பது இராகுவினது தலையென்றாற் போலுமென்பர்.

இத்துணையுங்கூறியவாற்றானே, அகரமுதலியவற்றிற்கு எழுத்தென்னுங்குறியிடுதற் கெழுந்ததிச்சூத்திரமென்றுணர்ந்துகொள்க.

எழுத்தென்றொழியாது எனப்படுபவென்பவென்றார், இது முதனூலாசிரியனால் விதிக்கப்பட்டுத் தொன்றுதொட்டு வருங்குறியென்பதறிவித்தற்கு.

அற்றேலஃதாக; நெடுங்கணக்கினுள் அகரமுதல் னகரவிறுவாய்க்கிடக்கை முறையாதற்குக் காரணமென்னையோ அறிதல்வேண்டினே னென்பையாயிற் காட்டுதும்:—

ழகர றகர னகரங்கண்மூன்றுந் தமிழெழுத்தென்பதறிவித்தற்கு இறுதிக்கண் வைக்கப்பட்டன. அவற்றுள்ளும் ழகரமிடையெழுத்தாகலின் அதுபற்றி இடையெழுத்தொடு சார்த்தி அவற்றிறுதிக்கண் வைக்கப்பட்டது. வடமொழியின் லகாரம் ளகாரமாகவுமுச்சரிக்கப்படுவதன்றித் தனியேயோரெழுத்தன்மையின், அச்சிறப்பின்மைபற்றி இடையெழுத்தாகிய ளகாரம் ழகாரத்திற்கும் பின் வைக்கப்பட்டது. ய ர ல வக்கணான்கும் முறையே அடியண்ணமும் இடையண்ணமும் அண்பன்முதலும் இதழுமென்னுமிவற்றின் முயற்சியாற் பிறத்தலான், அப்பிறப்பிடத்து முறையே முறையாக வைக்கப்பட்டன.

இனியொருங்கரணவாயவிடையெழுத்துக்களில் இவ்விரண்டு வேறுபிரித்து, யரக்களும் லவக்களும் ழளக்களும் தம்முளினமென்றும், இனமாதல்பற்றி முறை கூறப்பட்டனவென்றும், பிறப்பேயன்றி அளவு செய்கை பொருள் வடிவென்பவற்றுள் ஏற்றனவொத்தலும் இனமாதற்கேதுவென்றுங் கூறுவாருமுளர். அது பொருந்தாது. ஒருவாற்றானொத்தலு மொருவாற்றான் வேறுதலுமுடைமைபற்றியன்றே இனமென்று வழங்கப்படுவது. அவற்றுள், இடையெழுத்தாறும் இடப்பிறப்பானொத்தலும் முயற்சிப்பிறப்பான் வேறுதலுமுடைமையின், இடைக்கணமென வோரினமாயின. உயிர்க்கணம் வன்கணம் மென்கணமென்பவற்றிற்கும் இஃதொக்கும். அவற்றுள், அ ஆக்கண்முதலியனவும் கஙக்கண்முதலியனவும் ஆகமுயற்சிப்பிறப்பானொத்தலுங் குற்றோசை நெட்டோசையும் வல்லோசை மெல்லோசையுமாகிய புறமுயற்சிப்பிறப்பான் வேறுதலுமென்னு மிருதன்மையுமுடைமையின், அவ்வேறுபாடுபற்றி வேறுபிரித்து இவ்விரண்டோரினமெனவும் வைக்கப்பட்டன. இடையெழுத்துக்களுள் இவ்விரண்டினை வேறுபிரித்து இனமென்றற்கு அவ்வாறோரியைபின்மையின், அவையவ்வாறினமாதல் யாண்டையதென்க. அல்லதூஉம் அ ஆக்கள் கஙக்கண்முதலியனபோல யரக்கண் முதலியனவற்றை யினமென்றல் செய்கைக்குக் கருவியாகாமையானும், முறைபெறுதற்கேதுவெனின் முறைகூறவேண்டாமை மேற்காட்டினாமாகலானும், உலகத்தும் பிறப்பொத்தல் பற்றியேயினமென்று வழங்குபவாகலானும், இடப்பிறப்பொத்தலாறுக்கும் பொதுவன்றி இவ்விரண்டற்குச் சிறந்ததல்லாமையானும், அது பொருந்தாமையுணர்க. இனமாதலறிந்துகோடற்பொருட்டே ஆசிரியர் பிறப்பியல்கூறினார். அவ்வாறன்றென்பாரை, எழுத்ததிகாரத்துட்கூறும் பொருளெல்லாஞ் செய்கையுங் கருவியுமென விரண்டாயடங்குமென்பதுஎல்லார்க்கு மொப்ப முடிந்ததாகலாற் பிறப்பியல் வேறொன்றற்குக் கருவியாகாமையிற் பய

னில் கூற்றுமெனக் கூறி, மறுக்க. வடநூலாரும் பிறப்பொத்த லொன்றே யினமடைத்தற்கேதுவென்ப. இனி அளவுமுதலிய வொத்தலின் இனமாமென்பார்க்கு, ஙகரத்தோடு மகரத்திற்களவொக்கும் முகம் முகன் எனப் பொருளொக்கும்; ககர சகர தகரங்கட்கு வடிவொக்கும்; ரகர ழகரங்கட்குச் செய்கையொக்கும்; இவ்வாறேயினமல்லாதவேனையவும் இவற்றுளேற்றனவொக்குமாகலின், அவையுமினமாவான்செல்லுமாறறிக. அன்றியும், ஈண்டுக் கூறினவையெல்லாஞ் செய்கைக்குக் கருவியாமெனக் கூறி அச்செய்கையை ஈண்டினமடைத்தற்குக் கருவியாமெனக் கூறுதல் ஒன்றனையொன்று பற்றிநிற்றலென்னுங் குற்றமாதலறிக.

இனிக் கஙக்களுஞ் சஞக்களும் டணக்களுந் தநக்களும் பமக்களும் அடிநாவண்ணம் இடைநாவண்ணம் நுனிநாவண்ணம் அண்பல்லடி இதழென்னுமிவற்றின் முயற்சியாற் பிறத்தலான், அப்பிறப்பிடத்தின் முறையே முறையாக வைக்கப்பட்டன. வலியாரை முன்வைத்து மெலியாரைப் பின்வைத்தன்மரபாகலின், வல்லெழுத்துக்கண் முன்னும் அவ்வவற்றிற்கினமொத்த மெல்லெழுத்துக்கள் அவ்வவற்றின்பின்னுமாக வைக்கப்பட்டன. அவ்விரண்டுநோக்கியல்லது இடைநிகரனவாயொலித்தலறியப்படாமையின், அது பற்றி இடையெழுத்துக்கள் அவ்விருகூற்றிற்கும் பின் வைக்கப்பட்டன.

அகரமுதலிய பன்னிருயிருந் தனித்தியங்குமாற்றலுடைமையானும், ககர முதலிய பதினெட்டுமெய்யும் அகரத்தோடு கூடியல்லதியங்குமாற்றலின்மையானும் உயிர் முன்னும் மெய் பின்னுமாக வைக்கப்பட்டன.

இனி உயிர்களுள், அ இ உ என்பன முறையே அங்காந்து கூறுமுயற்சியானும், அவ்வங்காப்போடண்பல்லடி நாவிளிம்புறக் கூறுமுயற்சியானும், அவ்வங்காப்போடிதழ்குவித்துக் கூறுமுயற்சியானும், பிறத்தலான், அப்பிறப்பிடத்து முறையே முறையாக வைக்கப்பட்டன. ஆகார ஈகார ஊகாரங்கள் அகரமுதலியவற்றிற்கினமாகலின், அவற்றைச் சார வைக்கப்பட்டன. நெட்டெழுத்தாவது நீருநீருஞ் சேர்ந்தாற்போலக் குற்றெழுத்திரண்டொத்து நின்று நீண்டிசைப்ப தொன்றாகலின், அஃதுணர்ந்துகோடற்குக் குற்றெழுத்துக்களின் பின்னர் நெட்டெழுத்துக்கள் வைக்கப்பட்டன. அற்றேற் குற்றெழுத்திற்கோதிய விதி நெட்டெழுத்திற்கும் வருமாலோவெனின்;—அற்றன்று, வேறுநின்ற குற்றெழுத்திற்கே விதி பெறப்படுதலின். இன்னுமிக்கடாவிடைகளெல்லாம் மாபாடியத்துங் கையடத்தும் இரண்டாமானிகத்திற்கண்டுகொள்க.

இந்நெட்டெழுத்துக்கள் மொழிக்காரணமாய் வேறுபொருடந்து நிற்றலின், அதுபற்றி வேறெடுத்தெண்ணி உயிர் பன்னீரெழுத்தெனப்பட்டன. அளபெடை அந்நெட்டெழுத்தோடு குற்றெழுத்தொத்து நின்று நீண்டிசைப்பதொன்றாயினும், மொழிக்காரணமாய் வேறுபொருடாராது இசைநிறைத்தன்மாத்திரைப் பயத்ததாய் நிற்றலின், வேறெழுத்தென வைத்தெண்ணப்படாதாயிற்றென்பது நுண்ணுணர்வானோர்ந்துணர்க. "குன்றிசை மொழிவயினின்றிசை நிறைக்கு—நெட்டெழுத் திம்பரொத்தகுற்றெழுத்தே." என்றதூஉம் இக்கருத்தேபற்றியென்க. இப்பெற்றியறியாதார் நெடிலுங்குறிலும் விரலும்விரலுஞ் சேரநின்றாற்போல இணைந்து நின்றளபெடுக்குமெனவும், அளபெடையெழுத்து உயிரெழுத்துளடங்காதெனவும், சார்பெழுத்தென வைத்து வேறெண்ணப்படுமெனவும், தமக்கு வேண்டியவாறே கூறுப. நெடிலுங்குறிலும் அவ்வாறு நின்றளபெழுமென்றல் பொருந்தாமைக்கு எழுத்தெடையென்னாது அளபெடையென்னுங் குறியீடே சான்றாதலறிக. அற்றேல், ஒரெழுத்தினையே இரண்டுமாத்திரையுமொருமாத்திரையுமாகப் பிரித்தசைத்துச் சீர்செய்தல் பொருந்தாதெனின்;—அற்றன்று: எழுத்துவகையானென்னாது "மாத்திரை வகையாற் றளைதம கெடாநிலை—யாப்பழி யாமையென் றளபெடை வேண்டும்." என்றமையின், எழுத்திற்கு மாத்திரைகோடலும் அசைத்தலுஞ் சீர்செய்தலுந் தளையறுத்தலும் ஓசைபற்றி யல்லது எழுத்துப்பற்றியல்லவென்க.

இன்னும் வடநூலார் அ என்னுமோரெழுத்தே ஒருமாத்திரையாயுச்சரிக்குங்காற் குற்றெழுத்தென்றும், இரண்டுமாத்திரையாய்க் கூட்டியுச்சரிக்குங்கால் நெட்டெழுத்தென்றும், மூன்றுமாத்திரையாயுச்சரிக்குங்கால் அளபெடை யெழுத்தென்றும் மூவகைப்படுமெனவும், அம்மூன்றும் எடுத்தல் படுத்தல் நலிதலென்னுமோசை வேறுபாட்டால் ஒன்று மூன்றாயொன்பதுவகைப்படுமெனவும், அவ்வொன்பதுவகையும் மூக்கின்வளியொடு சார்த்தியுஞ் சார்த்தாதுமுச்சரிக்குமாற்றால் ஒவ்வொன்றிவ்விருவகைத்தாய்ப் பதினெட்டாமெனவுங் கூறுப. இவ்வாறே யேனையெழுத்திற்குங் கொள்வர். அவ்வாறு வேறுபடினும், உயிரெழுத்தாந் தன்மையிற் றிரியாவாய்ப் பதினெட்டுமோரினமாமென்றே கொள்வர். இதனானும் உயிரளபெடையுயிரின் வேறாகாமையுணர்க. இதனானே ஒற்றளபெடையுமொற்றின்வேறன்மையுணர்க.

இனி எகரமாவது அகரக்கூறுமிகரக்கூறுந் தம்முளொத்திசைத்து நரமடங்கல்போனிற்பதொன்றாகலானும், ஒகரமாவது அகரக்

கூறு முகரக்கூறுந் தம்முளொத்திசைத்து அவ்வாறு நிற்பதோன் றுகலானும், அவையவற்றின் பின்னர் முறையே வைக்கப்பட்டன. ஏகார ஓகாரங்கள் இனமாகலின், அவற்றின்பின் முறையே வைக் கப்பட்டன. அகரமும் யகரமும் இகரமுந் தம்முளொத்திசைத்து நிற்பதொன்றாகலின், எகர ஏகாரங்களின் பின்னர் ஐகாரமும், அக ரமும் வகரமும் உகரமுந் தம்முளொத்திசைத்து நிற்பதொன்றாக லின், ஒகர ஓகாரங்களின் பின்னர் ஔகாரமும் வைக்கப்பட்டன. இவ்வாறுதல்பற்றி ஏ ஓ ஐ ஔ என்னு நான்கினையும் வடநூலார் சந்தியக்கரமென்பர். கையடனார் நரமடங்கல்போலென்றுவமை யுங் கூறினார். இக்கருத்தேபற்றி ஆசிரியர் "அகர விகர மைகார மாகும்." "அகர வுகர மௌகார மாகும்." எனக்கூறி, ஐயென்னு நெட்டெழுத்தின்வடிவு புலப்படுதற்கு அகரவிகரங்களேயன்றி அவற்றிடையே யகரமுமொத்திசைக்குமென்பார் "அகரத் திம்பர் யகரப் புள்ளியு—மையெ னெடுஞ்சினை மெய்பெறத் தோன்றும்." என்றும், மெய்பெறவென்றவிலேசானே ஔவென்னுநெட்டெழு த்தின் வடிவு புலப்படுதற்கு அகரவுகரங்களேயன்றி அவற்றி டையே வகரமுமொத்திசைக்குமென்றும், இம்பர் உம்பரென்றாற் போல்வன காலவகையிடவகைகளான் மயங்குமாகலின் இவற் றின் முதற்க ணிற்ப தியாதோ இறுதிக்க ணிற்பதியாதோவென்னு மையநீக்குதற்கு "இகர யகர மிறுதி விரவும்." என்றுங்கூறினார். மொழிந்தபொருளோடொன்றவவ்வயின் மொழியாததனை முட்டி ன்று முடித்தலென்னுமுத்தியான் எகர ஏகாரங்கள் ஒகர ஓகாரங் கள் அவ்வாறுதலுங் கொள்ளவைத்தார். மாபாடியத்துள் ஊகார த்தின் பின்னின்ற வடவெழுத்து நான்குயிர்க்கு மிடையே ரகர லகரக்கூறுகளொத்துநிற்கு மென்றவாசிரியர் பதஞ்சலியார்க்கு ஐ ஔ வென்புழியும் இடையே யகர வகரக்கூறுகள் விரவிநிற்கு மென்பதுடன்பாடாதல் பெற்றாம். எகரமுதலியவற்றுள் அகரக் கூறு குறைவும் இகர உகரக்கூறுகள் மிகுதியுமாமெனவுமுணர்க. இதுவுமாபாடியத்திற்கண்டது. வடநூற்கடலை நிலைகண்டறிந்த சேனாவரையர் எழுத்ததிகாரத்திற்குரைசெய்தாராயின், இன்னோ ரன்னபொருளனைத்துந் தோன்ற ஆசிரியர் கருத்துணர்ந்துரைப் பர். அவர் சொல்லதிகாரம்போலப் பெரும்பயன்படாமை கருதி எழுத்திற்குரைசெய்யாதொழிந்தமையின், தமிழ்நூலொன்றேவல் லவுரையாசிரியரையுள்ளிட்டோருரையை ஆசிரியர் கருத்தாகக் கொண்டு பின்னுள்ளோருமயங்குவாராயினரென்பது. "அகர விகர மைகார மாகும்." என்புழி ஆகுமென்றதனாலாகாதென விலக்கப்படுமென்பாரை, "பன்னீ ருயிரு மொழிமுத லாகும்." என் புழியும் ஆகுமென்பதனாற் பன்னீருயிரு மொழிமுதலாகாவென

விலக்கப்படும்போலுமெனக் கூறி,மறுக்க. அன்றியும் இயற்கையா னின்ற ஐகார ஒளகாரங்கள் வேறு,போலியாயிவ்வாறு வரும்ஐகார ஒளகாரங்கள் வேறெனக் கொளின்;—இவற்றையெடுத்தோதி விலக்குதலாலொருபயனின்மையிற் பயனிலமொழிதலாமாறுண ர்க. யாங்கூறியதே வடநூலார்க்குமுடன்பாடாதல் மாபாடியம் வல்லார்வாய்க்கேட்டுணர்க. வடநூலுணர்ந்தார்க்கன்றித் தமிழி யல்பு விளங்காதென்பது முணர்ந்துகோடற்கன்றே பாயிரத்துள் "ஐந்திர நிறைந்த தொல்காப்பியன்" என்றதூஉமென்க. எகர ஒகர ங்கள் ஒருவாற்றாற் சிறப்பெழுத்தாயினும், பாகதமொழியிற் பயி ன்று வருதலானும், சாமவேதமுடையாருளொருசாரார் இசைபற் றிக் குழூஉக்குறிபோலக் கொண்டோதுபவாகலானும், இறுதிக் கண் வையாது முறைபற்றி ஏகார ஓகாரங்களின் முன்வைக்கப்பட் டன. ஈண்டுக் கூறியவாற்றானே அகரமுயிரெழுத்துக்களினுங் கலந்துநிற்குமாறறிக.

இத்துணையுமுறையாமாறு காட்டப்பட்டது. எழுத்துக்களுக் குப் பிறப்பு வடநூலார் சிறுபான்மை வேறுபடக் கூறுப. அஃதுச் சரிக்குமோசை வேற்றுமைபற்றியெனக்கொள்க.

இனி எழுத்தெனப்படுபவகரமுத னகரவிறுவாயென்றொழி யாது முப்பஃதென்னுந்தொகை கூறியதெற்றுக்கெனின்;—அது கூறாக்கால், எழுத்தென்றற்குரியவை வகரந்தொடங்கி னகரவிறு வாய்க் கிடந்தவைந்துமேயோ, அகரந்தொடங்கி நகரமீறாய்க் கிட ந்தவிருபதுமேயோ, அகரத்தைத் தனக்கு முதலாகவுடைய ஆகார மும் னகரத்தைத் தனக்கீறாகவுடைய றகரமுமென்னுமிரண்டு மேயோ, அகரமுமுதலும் னகரமுமிறுவாயுமென்னுஞ் சொற்களே யோவெனவும், பலவாற்றானைய நிகழுமன்றே, அவ்வையநீக்குதற் கும் இம்முப்பதுமேயன்றி வடமொழியிற்கூறு மேனையெழுத்துக் கள் ஈண்டுக் கொள்ளப்படாவென்றற்குமென்க.

ஒருமொழியைச் சார்ந்து வருமியல்பன்றித் தனித்தியங்குமிய ல்பு தமக்கிலவென்றலின், அவை தம்மையேயெடுத்தோதிக் காட் டலாகாமையின், வருஞ் சூத்திரத்தான் அவற்றிற்கு வேறுவேறு பெயரிட்டு "அவைதாங்—குற்றிய லிகரங் குற்றிய லுகர—மாய் தம்" என்றும், அம்மூன்றும் புள்ளிபெறுதல்பற்றிப் பொதுப்பெ யராக "முப்பாற்புள்ளியும்" என்றும், அவை தனித்தெழுதப்படா வாயினும் மொழியொடு சார்த்தியெழுதப்படுதலின் எழுத்தென் னுங்குறியீட்டிற்குரியவென்பார் "எழுத்தோரன்ன" என்றுமோ தினர். குற்றியலிகர வுகரங்களோடிவற்றிடை வேற்றுமை தெரி

ந்துகோடற்பொருட்டு, இகரமுகரமென்ளுெழியாது "குற்றியலிக ரங்குற்றியலுகரம்" என்ருர்.

கேண்மியா வரகு என்பனவற்றினிகரமுமுகரமும், போலு மென்புழி அரைமாத்திரையாய் நின்ற மகரம் போன்ம் என லக ரம் னகரமாய்த் திரிந்த ஈறொற்றுடனின்றகாரணத்தாற் பின்ன ர்க் கான்மாத்திரையாய் நின்ருற்போல, முன்னரோருமாத்திரை யாய் நின்று பின்னரோருகாரணம்பற்றி யரைமாத்திரையாகாது மகரமும் வல்லெழுத்துமாகிய மெய்யெழுத்தினைச் சார்ந்து என்று மரைமாத்திரையாயே நிற்குமொருதன்மையவாயினும், அப்பெ ற்றியுணராது இவையரைமாத்திரைபெறுதல் மகரக்குறுக்கம்போ லச் செயற்கையாற்போலுமென்று உலகமலையாமைப்பொருட்டு இவையியல்பாதலியல்பென்பார், குற்றிகரங்குற்றுகரமென்ளுெ ழியாது குற்றியலிகரங்குற்றியலுகரமெனக் குறியிட்டார். இக்கு றியீடுமுணராதார் ஒருமாத்திரையாய் நின்ற குற்றெழுத்துக்களே இடமும் பற்றுக்கோடுஞ் சார்ந்த காரணத்தால் அரைமாத்திரை யாய்க் குற்றியலிகரங்குற்றியலுகரமென நின்றனவெனக் கூறித் தமதறியாமையைப் புலப்படுப்பர். ஆசிரியர் "குற்றியலுகரமு மற் றெனமொழிப." என்னுஞ் சூத்திரத்தாற் குற்றியலுகரமும் புள்ளி பெற்றுநிற்குமென முற்றுகரத்தோடிதனிடை வரிவடிவிறும் வே ற்றுமை தோன்றக் கூறி உம்மையாற் குற்றியலிகரமும் புள்ளிபெ ற்றுநிற்குமென்ருேதினமையானும், "குற்றிய லிகர நிற்றல்வேண் டும்" எனவும் "குற்றிய லுகரம் வல்லா றூர்ந்தே" நிற்றல்வேண் டும் எனவுங் கூறியதன்றி இவைபற்றி மாத்திரை குறுகுமென்ளு மையானும், "புணரிய னிலையிடைக் குறுகலு முரித்தே" "ஆயிரு மூன்றே யுகரங் குறுகிடன்" என்புழியும், "யகரம் வருவழி யிக ரங் குறுகும்" என்புழியும், "கொங்கலர் பூம்பொழிற் குறுகினர் சென்றுழி" "தீவினை முதிர்வலைச் சென்றுபட் டிருந்த—கோவ லன் றன்னைக் குறுகின னாகி" "கோயின் மன்னனைக் குறுகினள் சென்றுழி" "நீங்கிற் றெறூஉங் குறுகுங்காற் றண்ணெனுந்தீ" "அறுங் குறுகா ரறிவுடையார்" என்புழிப்போலக் குறுகுதல் அணுகுதலென்னவே பொருள்படுமாகலானும், அவ்வாறன்றிக் குறை தலே பொருளாயினுங் குற்றுயிர் குற்றெழுத்தென்ருற்போலத் தம் மின் மிக்கிசைக்குமெழுத்துக்களை நோக்கிக் குறுகுமென்ருரென வேபடுமாகலானும், அங்ஙனங்கொள்ளாக்கால் "எல்லா விறுதியு முகர நிறையும்" என்புழிப் புணர்ச்சிக்கண் முற்றுகரமாய் நிற்கு மெனப் பொருள்பட்டு இச்சூத்திரமாறுகொளக் கூறலாய் முடியு மாகலானும், குற்றியலிகரமுங்குற்றியலுகரமும் ஆய்தம்போல வேறெழுத்தேயாவனவன்றி, ஒருமாத்திரையாய் நின்ற இகரவுக

ரங்களே மகரக்குறுக்கமுதலியனபோல ஒருகாரணம்பற்றியரை மாத்திரையாய் நின்றனவல்லவென்பது தெற்றெனவுணர்க.

அற்றேல், ஐகாரக்குறுக்கம் மொழியிடைகடைகளென்னுமிடங்காரணமாகக் குறுகியிசைப்பதுபோலக் குற்றியலிகரக்குற்றியலுகரங்களும் இடமும் பற்றுக்கோடுங்காரணமாகக் குறுகியிசைத்தலின், இவற்றையியல்பென்றதென்னையெனின்;—அறியாது கடாயினாய். அவை காரணமாகக் குறுகியிசைப்பனவாயின், இங்கு ஏது தாது என்னும் வடமொழியிறுதியுகரமும் அவ்விடமும் பற்றுக்கோடுமுடைமையின் அவை காரணமாகக் குறுகியிசைத்தல்வேண்டும், காரணமுள்வழிக் காரியமுண்டாதலொருதலையாகலின். அங்ஙனமிசையாமையின், இடமும் பற்றுக்கோடுங் குற்றியலிகரக்குற்றியலுகரங்கணிற்றற்குச் சார்பாவனவேயன்றிக் குறுகியிசைத்தற்குக் காரணமாகாவெனக் கொள்க. அஃதேல், வடமொழியின் அறுவகையிடமும் வல்லெழுத்துப்பற்றுக்கோடுங் குற்றியலுகரத்திற்குச் சார்பாகாமையின் இலக்கணவழுவாம் பிறவெனின்;—ஆகாது, குற்றியலுகரம் இடமும் பற்றுக்கோடுஞ்சார்ந்தன்றி நில்லாதென்றதல்லது இடமும் பற்றுக்கோடுங்குற்றியலுகரத்திற்குச் சார்பாயல்லது வாராவென்னும் யாப்புறவின்மையின். குற்றியலுகரந் தமிழ்ச்சிறப்பெழுத்தாகலின், வடமொழியின் வாராதாயிற்று. இக்குற்றியலிகரக்குற்றியலுகரவுண்மையறியாதவுரையாசிரியர் "இடைப்படிற் குறுகு மிடனுமா ருண்டே." என்பதற்கு இடைப்படினுங்குறுகுமென உம்மையை மாற்றி, இறந்ததுதழீஇயிற்றுக்குவர். அஃதாசிரியர்கருத்தொடு முரணுமென்பது இக்கூறியவாற்றானறிக. இன்னும் புணர்ச்சிவேற்றுமைபற்றி வேறாயிற்றென்பார்க்குக் களவு கனவு முதலியவற்றுகரமும் புணர்ச்சிவேறுபட்டுக் குற்றியலுகரத்திற்குரிய விதிமுழுவதூஉம் பெறுதலின் அதனையுங்குற்றியலுகரமெனக் கோடல்வேண்டும், அவ்வாறு கொள்ளாமையின் அவர்க்குமது கருத்தன்றென மறுக்க.

காட்டு கூட்டு என ஆய் குறைந்து நின்றவேவல்வினைச்சொற்களின்வருமுகரத்தை வினைக்கண்வரு முற்றுகரமென்பாருமுளர். ஆசிரியர் "குற்றிய லுகரத் திறுதியு முளப்பட" எனவேயெடுத்தோதினமையானும், புணர்ச்சிக்கண் முற்றுகரத்திற்குரிய செய்கை பெறாமையானும், அஃதுரையன்றென்க.

இக்குற்றியலிகரக்குற்றியலுகரங்களை முற்றியலிகரவுகரங்களின் குறுக்கமென்றவர் ஆய்தத்தினையும் அவ்வாறொன்றன்குறுக்கமெனக் கூற மறந்தார்போலும்.

இனிக் குற்றியலுகரம் "ஆயிரு மூன்றே யுகரங் குறுகிடன்" என்பதனான் இடவேற்றுமைபற்றியறுவகைப்படுமென்றும், நெட்டெழுத்தேழும் ஆய்தமொன்றும் உயிர் பன்னிரண்டும் வல்லெழுத்தாறும் மெல்லெழுத்தாறும் இடையெழுத்தாறுமென்னும் அவற்றின்பகுதி முப்பத்தெட்டனுள், இடையெழுத்துக்களுள் வகரம் வல்லெழுத்துக்களோடு தொடராமையானும், உயிரெழுத்துக்களுள் ஒளகாரம் மொழியிடையிறுதிகளின் வரப்பெறாமையானும், அவ்விரண்டுமொழித்து ஏனைமுப்பத்தாறுமிடவேற்றுமைபற்றிய விரியாமென்றுங் கூறுவாருமுளர்.

இனி நாகு காசு என்புழியும் நீடாது குறுகாது என்புழியும் நெட்டுயிரிறுதிக்குற்றுகரமேயாகவும், நாகென்பதனை நெடிலிறுதிக்குற்றுகரமெனவும் நீடாதென்பதனையுயிர்த்தொடர் மொழிக்குற்றுகரமெனவும் ஆசிரியர் கொண்டது ஈரெழுத்தொருமொழியெனவும் இரண்டனையிறந்த தொடர்மொழியெனவும் பகுத்துணர்ந்து கோடற்பொருட்டாயினும், எழுத்தான் வேறுபாடின்மையின் அவ்வாறனையாற்கொள்ளாது, ஆசிரியர் ஈற்றயலினின்றவெழுத்தையிடமாகக் கொண்டாற்போல ஈற்றயலினின்றவசையையிடமாகக் கொண்டு, அவற்றுள் அது இது முதலிய முற்றுகரத்தை நீக்குதற்குக் குற்றெழுத்துத் தனியேவருமசையொன்றனையுமொழித்து, ஏனையேழசையினையும் "நெடிலே குறிலிணை குறினெடி லென்றிவை—யொற்றொடு வருதலொடு குற்றொற் றிறுதியென்—றேழ் குற் றுகரக் கிடனென மொழிப." என்பதோர் சூத்திரம்பற்றி ஏழிடமெனக் கோடுமென்பார்க்குப், பிண்ணாக்குச் சுண்ணாம்பு பட்டாங்கு விளையாட்டு இரும்பூது முதலியனவும், ஆய்தந்தொடர்ந்தனவும், நெட்டொற்றிறுதி நெடிலிறுதிக்குற்றுகரமுதலியனவும் குற்றொற்றிறுதிக்குற்றுகரமுமாயடங்குமேனும், போவது வருவது ஒன்பது முதலியனவடங்காமையறிக. நெடின்முதலாயின ஈற்றயலினிற்றல்வேண்டுமென யாப்புறவின்மையின், முதற்கணிற்பினும் ஈற்றுகரமவற்றிறுதியாதலமையுமெனக் கொண்டு, போவது முதலியனவும் நெடிலிறுதி முதலியனவாயடங்குமென்பார்க்கும், அங்ஙனம் பாகுபடுத்துக் கருவிசெய்ததனாற் போந்த பயனின்றென்பது.

இனியிம்மூன்றுமேயன்றி உயிர்மெய் முதலியவற்றையுஞ் சார்பெழுத்தென்பாருமுளராலோவெனின்;—ஆல் என்புழி உயிர் முன்னும் மெய் பின்னுநின்று மயங்கினாற்போல, லா என்புழியும் மெய் முன்னுமுயிர்பின்னுநின்று மயங்கினவேயல்லது, உயிருமெய்யுமாகிய தந்தன்மை திரிந்து வேறாகாமைக்கு "மெய்யோ டியை

யினு முயிரிய றிரியா." என்றற்றொடக்கத்துச் சூத்திரங்களே சான்றாகலான், உயிர்மெய்யாகிய காலத்துங் குறின்மை நெடின்மை யென்னுமுயிர்த்தன்மையும் வன்மை மென்மை இடைமையென்னு மெய்த்தன்மையுந் தம்மியல்பிற்றிரிவுபடாமையானும், உடன்மே லுயிர்வந் தொன்றுதல் பொன்மணிபோல வியல்புபுணர்ச்சியே யாமென்பவாகலானும், ஒற்றுமைநயத்தான் உயிர்மெய்யென்பத னைத் தகரஞாழல்போல உம்மைத்தொகைநிலைக்களத்துப் பிறந்த வன்மொழித்தொகையென்பார்க்குத் தகரமுஞாழலுங்கூடிய சாந்து பின்னர்த் தகரமுஞாழலுமாகாதவாறுபோல மெய்யுயிர்நீங்கிற்றன்னுருவாதல் பொருந்தாமையானும், துணங்கை என்பது மெய்ம்முதல் உயிரீறு மெய்ம்மயக்கமெனவும் வரகு என்பதுயிர்த் தொடர்மொழிக் குற்றியலுகரமெனவுங்கொள்வதன்றி, உயிர்மெய் முதல் உயிர்மெய்யீறு உயிர்மெய்மயக்கம் உயிர்மெய்த்தொடர்மொழிக் குற்றியலுகரமெனக் கொள்ளாமையின் ஒற்றுமைநயம்பற்றி யொன்றென்பதனாலொருபயனின்மையானும், மெய்களெல்லாம் உயிர்வந்தொன்றாது தனித்துநின்றவழியே மாத்திரைகொள்ளவு மெழுத்தென்னவும்படுமென்பது அவற்றியல்பாகலின் அதுபற்றி யொன்றெனல்வேண்டாமையானும், அவ்வியல்பறிந்துகோடற்குத் தனித்துநின்ற மெய்யையொற்றெனவும் புள்ளியெனவும் உயிரோடு கூடிய மெய்யை உயிர்மெய்யெனவுஞ் சிறப்புப்பெயரிட்டானாதலாசிரியர் கருத்தாகலானும், உயிரோடுகூடிய விடத்து வரிவடிவு வேறுபடுதலின் அதுபற்றிப் "புள்ளி யில்லா வெல்லா மெய்யும்" என மெய்மேல் வைத்துச் சூத்திரஞ்செய்து வடிவெழுத்திலக்கணங்கூறினாரன்றி ஒலியெழுத்திலக்கணம் வேறுபடக் கூறாமையானும், அளபெடை சார்பெழுத்தென வேறாகாமை முன்னர்க் காட்டப்பட்டதாகலானும், ஐகாரக்குறுக்கமுதலியன ஒருகாரணம் பற்றிக் குறுகினவாகலிற் சிறுமரம் பெருத்துழியும் பெருமரஞ் சிறுத்துழியும் வேறொருமரமாகாதவாறுபோல வேறெழுத்தெனப் படாவாகலானும், வடநூலாரும் வடவெழுத்துள் உயிரெழுத்தினிறுதிக்கண்வைத்த விரண்டும் ஒற்றெழுத்தினிறுதிக்கண் வைத்த விரண்டுமாகிய நான்கெழுத்தும் வல்லெழுத்தின்முன் மெல்லெழுத்து வந்து மயங்குழி அவ்வவ்வல்லெழுத்தோடொப்ப விடையே தோன்றுமெனப்பட்ட வியமவெழுத்துமென்னும் இவைமாத்திரையே சார்பெழுத்தென வேறுகோடலன்றி உயிர்மெய் உயிரளபெடை ஐகாரக்குறுக்கமுதலியவெழுத்துக்களைச் சிறிது திரிந்தமை பற்றி வேறெழுத்தென யாண்டுங்கொள்ளாமையானும், அது பொருந்தாதென மறுக்க. வன்றொடர்மொழிக்குற்றியலுகரம் வல்லெழுத்து வருவழிக் கான்மாத்திரையாய்க் குறுகுதலின், அதுபற்றி

அதனைக் குற்றியலுகரத்தின் வேறென்றுமையின், அவர்க்குமது கருத்தன்றுபோலுமென்க.

இன்னுமவர் ஐகாரம் மொழிமுதற்கண்ணுங் குறுகுமெனவும், கை பை முதலியனவும் பொருளைச் சுட்டியவழிக் குறுகுமெனவுங் கூறினர். இடையன் மடையன் தினை பனை யென்புழிக் குறுகுதல் போல "வைகலும் வைகல் வரக்கண்டும்" என்புழி ஐகாரமுதற் கட்குறுகாமை செவி கருவியாகவுணரப்படுதலானும், அன்றியும் "வைகலும் வைகல்" என்புழிக் குறுகுமாயின் வைகலென்பதனைக் குறிலிணையொற்றென்றசைத்தல்வேண்டும் வேண்டவே வெண்டளை சிதைதலானும், "மொழிப்படுத் திசைப்பினுந் தெரிந்துவே றிசைப்பினு—மெழுத்திய றிரியா வென்மனர் புலவர்." எனவெல்லாவெழுத்திற்கும் பொதுப்படக் கூறிய விதியோடு முரணி ஐகாரந்தெரிந்து வேறிசைத்தற்கட்டிரியாதெனவும்,மொழிப்படுத்திசைப்பின் யாண்டு வரினுந்திரியுமெனவுங்கூறுதல் பொருந்தாமையானும், "ஓரள பாகு மிடனுமா ருண்டே" என்றவும்மையான் ஓரளபாகாவிடனுமாருண்டென்பது தானே பெறப்படுதலானும், ஈண்டிடமாவது மொழிமுதலிடைகடையென மூன்றேயன்றி வேறின்மையானும், ஐகாரமொழிமுதற்கட்குறுகாதெனவே கொள்க. ஈண்டுக் காட்டிய வேதுக்களானும், ஆசிரியரோதாமையானும், பிறருங் "குறுகிய மூவுயிர்" என்றே யொழிதலானும், ஔகாரக்குறுக்கமெனவொன்றின்மையுணர்க. இஃதுரையாசிரியருரையானுமறிக. எழுத்தின்குறுக்கமாவது ஒலிமுயற்சியின் மெலிதாகவுச்சரித்தல். வடநூலாரும் இலகூச்சாரணமென்பர்.

## சூத்திரப்பொருணிலை யொருவகையான் முடிந்தது.

---

### இனிச்சொன்முடிபாமாறு:—

### 'எழுத்து'

எழுதப்படுவதென்னும்பொருட்கண் எழுத்தென்னுமுதனிலையுரிச்சொல்லின்முன்னர்ச் செயப்படுபொருண்மையுணர்த்தும் ஐகாரவிகுதி புணர்ந்து, "செய்யா யென்னு முன்னிலை வினைச்சொல்" என்னுஞ் சூத்திரத்து மொழிந்தபொருளோடொன்றவவ்வயின் மொழியாததனை முட்டின்று முடித்தலென்னுமுத்தியால் அவ்வைகாரங்கெட்டுச், கெட்டவழித் தகரமிரட்டித்து, எழுத்தென முடிந்தது.

இவ்வாறன்றி எழுதென்னுமுதனிலை எழுத்தெனத் தானே திரிந்து நின்றதென்றும், அஃதாகுபெயராற்செயப்படுபொருளையு

ணர்த்திற்றென்றுங் கூறுவாருமுளர். அது பொருந்தாது, ஒருகாரணமின்றித் திரிதல் கூடாமையானும், நட வா கரு செ முதலிய முதனிலையெல்லாம் விகுதியோடன்றித் தனித்தியங்கலாற்றாமையானும், இம்முதனிலைகளுரிச்சொல்லாகலிற் பெயர்த்தன்மைப்பட்டுழியல்லது ஆகுபெயராதற்கேலாமையானுமென்பது. அஃதேல், நட வா உண் தின்னென்றற்றொடக்கத்து முதனிலைகளே விகுதியொடு புணராது தனித்து நின்றோசைவேறுபாட்டான் முன்னிலையேவலொருமையெதிர்காலவினைமுற்றுப் பொருண்மையுணர்த்தினவாலோவெனின்;—அற்றன்று, நடவாய் வாராய் உண்ணாய் தின்னாயென்றற்றொடக்கத்து முன்னிலையேவலொருமையெதிர்காலவினைமுற்றுச்சொற்கள் "செய்யா யென்னு முன்னிலை வினைச்சொற்—செய்யென் கிளவி யாகிட னுடைத்தே." என்னுஞ்சூத்திரத்தால் ஆயென்னும் விகுதி குன்றி, நட வா உண் தின்னென்றற்றொடக்கத்தனவாய் நின்றனவல்லது முதனிலைகளே யோசைவேறுபாட்டானவ்வாறு நின்றனவென்பது படாமையின். அது "செய்யா யென்னு முன்னிலை வினைச்சொல்" என்னுஞ் சூத்திரத்திற்சேனாவரையர் கடா விடைகளான் விளங்கக் கூறியவாற்றானுமறிக.

இனியுரையாசிரியர் முதலியோர் செய்யாயென்னுமெதிர்மறை வினைச்சொல்லே செய்யென்னும் பொருளுந்தருமென்பது இச்சூத்திரத்திற்குப் பொருளாகவுரைத்தார். அஃதாசிரியர்கருத்தாயின், 'செய்யா யென்னு மெதிர்மறை வினைச்சொற்—செய்யென் பொருளுந் தருமிட னுடைத்தே' எனச் சூத்திரஞ்செய்வர். அவ்வாறன்றி "முன்னிலை வினைச்சொற்—செய்யென் கிளவி யாகிட னுடைத்து" எனச்சொல்லேபற்றிச் சூத்திரஞ்செய்தலானும், அன்றிச் செய்யாயென்னுமெதிர்மறைவினைச்சொல்லேசெய்யென்பொருளுந்தருமென்பது கருத்தாயின், செய்யீரென்பதுஞ் செய்யுமென்னுமேவற்பொருள்படவருதலிற் 'செய்யீ ரென்னு முன்னிலை வினைச்சொலுஞ்—செய்யுமென் கிளவி யாகிட னுடைத்தே' எனச் சூத்திரஞ்செய்யாமை குன்றக்கூறலாய் முடியுமாகலானும், இரண்டும் வடிவானொப்பினும், செய்யாய் செய்யீரென்னுமேவல்வினைச்சொற்கள் முதனிலையு மீறுமாய்ப்பகுக்கப்பட்டு நிற்றலும், செய்யாய் செய்யீரென்னுமெதிர்மறைவினைச்சொற்கள் முதனிலையுமீறுமாய்ப் பகுக்கப்பட்டு எதிர்மறையுணர்த்தும் ஆகாரவிடைநிலைகெட்டு நிற்றலுமாகிய வேறுபாடுடைமையானும், அவ்வுரை போலியுரையென்க. செய்கிலன், செய்யலன் என்புழிப்போலச் செய்யாயென்புழியும் எதிர்மறைப்பொருளுணர்த்துதற்கோரிடைநிலையுண்டெனக் கொள்க. அஃதாகாரமாதல், செய்யாது, செய்யாத, தெருளாதான், அருளாதான் என மெய்ம்முதலாகிய விகுதியொடு புணருஞ்சொற்

களிற்கண்டுகொள்க. செய்யான், செய்யேன், செய்யாய் எனவுயிர் முதலாகிய விகுதி புணர்வுழி அவ்வாகாரஞ் சந்திநோக்கிக் குன்றியதேயாமென்பது. விரிவஞ்சியொருமொழியிலக்கணங் கூறு தொழிந்தவாசிரியர் "செய்யா யென்னு முன்னிலை வினைச்சொல்" எனச் சூத்திரஞ்செய்த்து இங்ஙிகரனவாய் வருவனவெல்லாம் அவ் வவ்வேறுபாடுணர்ந்து இலக்கியங்கண்டதற்கிலக்கணமாக முடித் துக்கொள்ளப்படுமென்றுய்த்துணர்ந்துகோடற்பொருட்டேயாமா கலானும், "சொல்வரைந் தறியப் பிரித்தனர் காட்டல்" என முடி வின்கணுணர் தந்தமையானும், சேனாவரையரும் இவ்வாறே தொல் காப்பியமுதலிய சிலமொழிகளையாண்டாண்டுப் பிரித்துப் புணர்த் துச் செய்கைசெய்து முடித்தாராகலானும், இன்னோரன்னவையெ ல்லாம் இவ்வாறே முடிக்குமியல்பறிந்து முடித்துக்கொள்கவென் பது தொல்லாசிரியர் துணிபெனவுணர்க. வடமொழியுள்ளும் ஆசி ரியர் பாணினியார் எட்டத்தியாயத்துள் விகுதிமாத்திரைக்கே மூன்றத்தியாயங்கூறி விகுதிப்புணர்ச்சிக்கட்படுஞ் செய்கை முத லியனவும் வேறு கூறினார். அவற்றுள்ளுமடங்காதெஞ்சிநின்ற சொற்களைப் பின்னுள்ளோர் இலக்கியங்கண்டதற்கிலக்கணமா கவே யேற்றபெற்றியறிந்து புணர்த்துச் செய்கைசெய்து முடித் துக் காட்டியவாறுமறிக.

ஊண், தீன், கோள் என்றாற்போல்வனவுஞ் செயப்படுபொரு ண்மையுணர்த்தும் ஐகார விகுதி புணர்ந்து கெட்டு, முதனீண்டு நின்றன. திரை, நுரை, அலை, தளிர், பூ, காய், கனி என்றாற்போல் வன வினைமுதற்பொருண்மையுணர்த்தும் இகரவிகுதி புணர்ந்து கெட்டு நின்றன. "கெடுவாக வையாது" என்புழிக் கெடுவென் பது புடைபெயர்ச்சியையுணர்த்துந் தல்விகுதி கெட்டு நின்றது. கேடென்பது அவ்வாறாய் முதனீண்டு நின்றதெனக்கொள்க. ஏனை யவுமிவ்வாறே யேற்றபெற்றியறிந்து முடித்துக்கொள்க. திரை, நுரை, அலை, தளிர் என்றாற்போல்வன விகுதிகுன்றி முதனிலைமா த்திரையாய் நிற்றல்பற்றி, இவற்றை முதனிலைவினைப்பெயரென வழங்குப. ஐகாரவிகுதி செயப்படுபொருண்மையுணர்த்துதல், நடவை, சேக்கை, உடுக்கை, தொடை, விடை என்றாற்போல்வன வற்றுள்ளும், இகரவிகுதி வினைமுதற்பொருண்மையுணர்த்துதல், சேர்ந்தாரைக்கொல்லி, நூற்றுவரைக்கொல்லி, நாளோதி, நூலோ தியென்றாற்போல்வனவற்றுள்ளுங்காண்க. இவ்விகுதிகள் சிறுபா ன்மை பிறபொருளுணர்த்தியும்வரும். வடநூலாரும் வினைப்பெய ர்விகுதிகள் கூறிய நியமந்தப்பிப் பிறபொருளுணர்த்தியும் வருமெ னக்கொள்வர். உடுக்கையென்பது உடுக்கப்படும் பொருளையுணர் த்துங்கால் ஐகாரவிகுதித்தென்றும், உடுத்தலெனப் புடைபெ

யர்ச்சியையுணர்த்துங்காற் கைவிகுதித்தென்றுந் தெரிந்துணர்ந்து கொள்க.

அற்றேல், இவ்வொருமொழிமுடிபிலக்கணம் ஆசிரியர் கூறுமை குன்றக்கூறலாம் பிறவெனின்;—இந்திரனுக்குப் பிருகற்பதி இவை வழு இவை வழுவில்லனவென வடமொழிகளைத் தனித்தனியெடுத்தோதலுற்றார்க்குத் தெய்வயாண்டிலாயிரம் யாண்டு சென்றற சென்றுஞ் சொற்கண்முடிந்திலவென மாபாடியத்துளாசிரியர் பதஞ்சலியாரெடுத்தோதினர். தமிழ்மொழியுமவ்வாறு பெருகிக்கிடத்தலின், அவற்றை இவை வழு இவை வழுவில்லனவெனத் தனித்தனியெடுத்தோதப் புகின், முடிவுபெறாது. ஆசிரியருக்கொருவாற்றான்முடிவு பெறினும், சின்னாட்பல்பிணிச்சிற்றறிவினோர் அவற்றைக் கற்பதற்கேயாயுள் போதாவாம். ஆகவே, அவற்றைக் கற்றுப் பலருடன் பயின்று பிறர்க்குரைத்துக் கல்விநிரப்புமாறில்லையாகலான், அவ்வாறு கூறாது, சிலவற்றைப் பொதுவிதியானும், சிலவற்றைச் சிறப்புவிதியானும், சிலவற்றையெடுத்தோத்தானும், சிலவற்றையிலேசானும், சிலவற்றைப் புறனடையானும், சிலவற்றையுத்திவகையானுமுணர்ந்துகொள்ளுமாறு தொகுத்து நூல்செய்தாராசிரியராகலின், ஆகாதென்க.

அற்றேலஃதாக; நட வா முதலிய முதனிலைகளை உரிச்சொலென்றதென்னை? நடத்தலைச்செய்தானென உருபேற்றுநிற்றலிற் பெயர்ச்சொல்லேயாம், அஃதல்லாக்கால் வினையுணர்த்துதலின் வினைச்சொல்லெனப்படுமாலோவெனின்;—அறியாது கடாயினாய். என்னை? "எல்லாச் சொல்லும் பொருள்குறித் தனவே" யாக, அவற்றைப் பெயர்வினையிடையுரியெனப் பாகுபாடு செய்தது உயர்திணையஃறிணையென்றற்றொடக்கத்தனபோலப் பொருள்வேறுபாடுபற்றிக் கருவிசெய்தற்பொருட்டன்றே. அவற்றுட்குறிப்பும் பண்பும் இசையும்பற்றி வருவனவெல்லாமொருங்கிரனவாக அவற்றுட் சிலவற்றையுரிச்சொல்லெனவும் சிலவற்றை வேறுசொல்லெனவுங் கோடல் பொருந்தாமையின், குறிப்பும் பண்பும் இசையும் குணப்பண்புந் தொழிற்பண்புமெனவிரண்டாயடங்கும். பொருளிடங்காலஞ்சினையென்னுநான்கும் பொருளெனவொன்றாயடங்கும். தொழிற்பண்பு வினைமுதலிய காரகங்களாற்புடைபெயருங்கால் அது வினையெனப்படும். இங்ஙனமாகலிற் பொருளையுணர்த்துஞ்சொற் பெயர்ச்சொல்லெனவும்,குணப்பண்புந்தொழிற்பண்புமாகிய பொருட்பண்பையுணர்த்துஞ்சொல் உரிச்சொல்லெனவும், பொருட்புடைபெயர்ச்சியாகிய தொழிற்பண்பின் காரியத்தையுணர்த்துஞ்சொல் வினைச்சொல்லெனவும், பொருளையும் பொருளது புடைபெயர்ச்சியையுந் தம்மானன்றித் தத்தங்குறிப்பானுணர்த்துஞ்

சொல் இடைச்சொல்லெனவும், பகுக்கப்பட்டன. எல்லாம் பொருளென்றற்கோரோவழியுரிமையுடைமையின், அதுபற்றிப் பண்புந்தொழிலும் பொருளெனவும்படுமாகலின், அவற்றையுணர்த்து முரிச்சொல்லும் ஒரோவழிப்பெயர்ச்சொல்லெனப்படும்; இடைச்சொல்லுமொருவாற்றாற்பெயரேயாம். இக்கருத்தேபற்றியன்றே ஆசிரியர் "சொல்லெனப் படுப பெயரே வினையென்—றாயிரண்டென்ப வறிந்திசி னோரே." எ-ம். "இடைச்சொற் கிளவியு முரிச்சொற் கிளவியு—மவற்றுவழி மருங்கிற் றோன்று மென்ப." எ-ம். இவ்வாறு சூத்திரஞ்செய்ததூஉமெனக் கொள்க.

பெயர், பொருள் என்பன வொருபொருட்கிளவியாகலின், பொருளையுணர்த்துஞ்சொற் பெயர்ச்சொல்லெனப்பட்டது. பொருட்குப் பண்பு உரிமை பூண்டுநிற்றலின், அதனையுணர்த்துஞ்சொல் உரிச்சொல்லெனப்பட்டது. வினையென்பது பலபொருளொருசொல்லாய்த் தொழிற்பண்பினையும் அதன்காரியமாகிய வினைநிகழ்ச்சியையுமுணர்த்தும். அவற்றுட்டொழிற்பண்பையுணர்த்துஞ் சொல் லுரிச்சொல்லெனவடங்கினமையின், வினைக்காரியமாகிய புடைபெயர்ச்சிவினையையுணர்த்துஞ்சொல் வினைச்சொல்லெனப்பட்டது. பொருளையும் பொருளது புடைபெயர்ச்சியையுந் தம்மானன்றித் தத்தங்குறிப்பானுணர்த்துஞ்சொற்கள் பெயர்ச்சொல் வினைச்சொற்களுமாகாது அவற்றின் வேறுமாகாது இடைநிகரனவாய் நிற்றலின், இடைச்சொல்லெனப்பட்டன. இது பாலைத்திணையை நடுவுநிலைத்திணையென்றதுபோலக் கொள்க.

பொருட்புடைபெயர்ச்சியாவது பொருட்பண்பின் புடைபெயர்ச்சியெனவே கொள்க. புடைபெயர்ச்சியெனினும் வினைநிகழ்ச்சியெனினுமொக்கும். இந்நால்வகைச்சொற்களுள்ளும் பண்புணர்த்துவனவாகிய உரிச்சொற்கள் பலவென்க. அற்றாகலினன்றே, ஆசிரியர் "வெளிப்படு சொல்லே கிளத்தல் வேண்டா—வெளிப்பட வாரா வுரிச்சொன் மேன" எனச் சிலவற்றையெடுத்தோதி, இவ்வாறு வருவனவும் பலவுள அவையெல்லாமீண்டுக் கூறப்புகின் முடிவுபெறா வென்னுங்கருத்தாற் "பன்முறை யானும் பரந்தன வரூஉ—முரிச்சொல்லெல்லாம்." எ-ம். "இனைத்தென வறியும் வரம்புதமக் கின்மையின்." எ-ம். "கிளந்தவற் றியலாற் பாங்குற வுணர்தல்." எ-ம். கூறியொழிந்தாரென்பது. இடைச்சொற் கிவ்வாறு கூறாமையுமறிக. இப்பெற்றியறியாதார் தத்தமக்கு வேண்டியவாறே கூறுப.

நட வா முதலிய முதனிலைகளுந் தொழிற்பண்பை யுணர்த்துஞ்சொற்களாகலின், உரிச்சொல்லேயாமென வுணர்க. அஃதேல்,

நடந்தானென்புழி நடத்தலைச்செய்தானெனவுருபு விரிந்தவாறென்னையெனின்;—அற்றன்று, நடந்தானென்ப தொருமொழித்தன்மைப்பட்டு நிற்றலின். அது நடவைத்தானென்னத் தன்சொல்லாற்பிரித்துக்காட்டப்படாமையின், நடத்தலைச்செய்தானெனப் பிறசொல்லாற்காட்டி முடிக்கப்படும். நடவென்பது தல்லென்னும் பகுதிப்பொருள்விகுதிபெற்றவழிப் பெயர்ச்சொல்லாமாகலின், ஆண்டுருபேற்றல்மையுமென்க. வடநூலாரும் பிரியாத் தொகையைப் பிறசொல்லாற்பிரித்துக் காட்டுகவென்பர். இன்னும் விரிப்பிற் பெருகுமாகலானமைக.

அற்றேல் அஃதங்ஙனமாக; பாலைத்திணை நடுவுநிலைத்திணையென்றுயவாறென்னையெனிற் கூறுதும்:—ஆசிரியர் யாதானுமோர் காரணம்பற்றியே குறியிட்டாளுவதல்லது வடநூலார்போலக் காரணம்பற்றாதுங் குறியிட்டாளுதல் யாண்டுமின்மையானும், ஆட்சிநோக்கிய குறியெனிற் குறியீடெல்லாமாட்சிப்பொருட்டேயாகலின் ஆட்சி நோக்கிக் குறியீடு குறியீடு நோக்கியாட்சியென ஒன்றனை யொன்றுபற்றுதலென்னுங்குற்றமாமாகலின் ஆட்சிநோக்கிய குறியென்பது பொருந்தாமையானும், "நடுவுநிலைத் திணையே நண்பகல் வேனிலொடு—முடிவுநிலை மருங்கின் முன்னிய நெறித்தே." என்புழி நடுவுநிலைத்திணையென்னுஞ்சொல்லே தன்காரணமினிது விளக்கிநிற்றலானும், அது நடுவுநிற்றல்காரணத்தாற்பெற்ற பெயரென்பது பெறும். ஏனைநாற்றிணையுமுறையானே கூறி இறுதிக்கணோதுதலான் இஃதவற்றின் வேறென்பது விளங்குதலானும்; எஞ்சிநின்றது பாலையேயாகலானும், புறப்பொருள் கூறுங்கால் "வாகை தானே பாலையது புறனே" என நடுவுநிலைத்திணைகூறுந்தானத்திற் பாலையெனக் குறியிட்டாளுதலானும், பாலைத்திணை நடுவுநிலைத்திணையென்பன ஒருபொருட்கிளவியென்பதூஉம் பெறப்பட்டது. படவே அஃதைவற்றினடுவுநிற்பதென்றவாறாங்கால், எண்ணுமுறைமைக்கணடுவுநிற்பதென்றல் பொருந்தாது, முதற்பொருண்முறைபற்றி முல்லை முதலாக வைத்தெண்ணினர், உரிப்பொருண்முறைபற்றியும் புறப்பொருண்முறைபற்றியுங் குறிஞ்சி முதலாக வைத்தெண்ணப்படும், அம்முக்கூற்றெண்ணுமுறைமையினும் பாலைத்திணை நடுவுநிற்பதன்றாகலின். இனியேனை நால்வகையுரிப்பொருள்களினும் இடையிடையே பிரிவு நிகழ்தலின், அதுபற்றி நடுவுநிலைத்திணை யென்றாரெனின்;—புணர்ச்சியும் அவ்வாறிடையிடை நிகழ்தல்பற்றிக் குறிஞ்சியுநடுவுநிலைத்திணையெனல் வேண்டுமாகலானும், நடுவணதாகிய நண்பகற்காலம் தனக்குக் காலமாதல்பற்றி அங்ஙனங்கூறினாரெனின், நடுவணதாகிய விடையாமந் தனக்குக் காலமாதல்பற்றிக் குறிஞ்சியுமவ்வாறு கூறப்

படுமாகலானும், புணர்தற்குமிருத்தற்குமிடையே பிரிவுவைத்தல்பற்றிக் கூறினாரெனின், இருத்தலிரங்கலும் அவ்வாறாகலின், அதுபற்றி முல்லை நெய்தல்களும் அவ்வாறு கூறப்படுமாகலானும், உலகியற்பொருளாகிய அறம்பொருளின்பங்களுள் நடுவணதாகிய பொருட்குத் தான் காரணமாதல்பற்றி யங்ஙனங்கூறினாரெனின், பரத்தையிற்பிரிவு ஓதற்பிரிவுபோல்வன ஏனையவற்றிற்குங் காரணமாகலிற் பொருண்மாத்திரைக்கே காரணமென்பதுபடாமையானும், அங்ஙனமுரைப்பனவெல்லாம் போலியென்றொழிக. மற்றென்னையோ காரணம்பற்றிக் குறியிட்டவாறெனின்;—"நடுவணைந்திணை நடுவண தொழியப்—படுதிரை வையம் பாத்திய பண்பே." என நிலம்பகுத்தோதுங்கால் நடுவணதெனக் குறியிட்டாராகலின், அங்ஙனம் பகுக்கப்படுநிலங்களுமாகாது அவற்றின் வேறுமாகாது தனக்குரிய நிலம் நடு நிகர்த்ததாய் நிற்றல்பற்றி நடுவுநிலைத்திணையெனக் குறியிட்டாளுதலே ஆசிரியர்கருத்தென்க. அங்ஙனமாதல் "முல்லையுங் குறிஞ்சியு முறைமையிற் றிரிந்து—நல்லியல் பழிந்து நடுங்குதுய ருறுத்துப்—பாலை யென்பதோர் படிவங் கொள்ளும்." என்பதனானுமுணர்க. இங்ஙனங் குறியிட்டமையிற் பாலைக்கு நிலமுண்டென்பதூஉம் அதனையேனைநிலங்களின் வேறாக வைத்துப் பகுத்தெண்ணுதன்மரபன்றென்பதூஉம், ஆசிரியர்கருத்தாதலுணர்ந்துகொள்க. இவ்வுண்மையுணராதார் பாலைசான்றசுரம் நானிலத்துளடங்காதென வேறுவைத்தெண்ணி, ஆசிரியரோடு மாறுகொண்டு, நிலமைந்தெனத் தமக்கு வேண்டியவாறே கூறுப.

அஃதங்ஙனமாக; முல்லை முதலாக வைத்தெண்ணியது முதற்பொருண்முறைபற்றியென்றதென்னை? காடுறையுலகமுதல்வைத்தெண்ணுதலின் நிலமுதற்பொருள் கூறியதே. நிலமுறைபற்றியன்று. இனிக்காலமுதற்பொருளிரண்டனுட்பெரும்பொழுது ஞாயிற்றிற்குரிய சிங்கவோரை முதல்வைத்தெண்ணுதல் முறையாயினும், திணைகள் ஒன்றும் பலவும் பெரும்பொழுது பெறுதலின், அம்முறைபற்றி முறைகோடல் பொருத்தமன்று. சிறுபொழுது காமத்திற்குச் சிறந்தவிராக்காலத்தின் மூற்கூறு முதல்வைத்தெண்ணியது முறையாயினும், எற்பாடாகிய பின்பகலையிறுதிக்கண் வையாமையின், அதுவுமுறைபற்றிக் கூறியதன்று. இங்ஙனமாகலானும், வேறுகாரணமின்மையானும், தலைவன் பிரிந்துழித் தலைவியாற்றியிருத்தல் கற்பாகலின், இல்லறத்திற்குக் கற்புச் சிறந்தமைபற்றி முல்லைமுதல்வைத்தெண்ணினாரெனவே கோடுமெனின்;—அது பொருந்தாது, ஏனைத்திணைகள் அவ்வாற்றான் முறைபெறாமையானும், கந்தருவவழக்கிற்கற்பினுங் களவு சிறந்ததாகலானுமென்பது. இனி

நிலம்பற்றியும் பெரும்பொழுதுபற்றியுமுறைகோடல் சாலாதாயினும், சிறுபொழுதுபற்றி முறைகோடல் சாலுமென்க. ஆண்டெற்பாடென்றது நாள்வெயிற்காலையேயாம். படுதல் உண்டாதலென்னும்பொருட்டு. இப்பொருள்காணுதார் எற்பாடு பின்பகலென மயங்கிக்கூறுப. "இலமென் கிளவிக்குப் படுவரு காலை" "இலம்பாடொற்கமா யிரண்டும் வறுமை" என்னுஞ் சூத்திரங்களின் நச்சினார்க்கினியாரும் படுதல் உண்டாதலென்றுரைத்தவாறு காண்க. எனவே, எற்பாடென்றது ஞாயிற்றினுதயமென்றவாருயிற்று. தலைவன் பிரிந்துழித் தனித்திருந்த தலைவி இராக்காலமுழுவதுங்கொண்னே கழிந்தமைபற்றி இரங்குதற்குரிய காலம் அறுவாமென்பார் "எற்பாடு—நெய்த லாதன் மெய்பெறத் தோன்றும்" என்ருர். இனி யிவ்வாறன்றி, வைகுறுவிடியலென்னும் வினைத்தொகையை வைகுறுவும் விடியலுமென உம்மைத்தொகையாக்கி, வைகறையை வைகுறு வெனவும் நாள்வெயிற்காலையை விடியலெனவுங்கொண்டு, இவ்விரண்டுமருதத்திணைக்குரியனவென்றும், பின்பகலையெற்பாடெனக்கொண்டு அது நெய்தற்குரித்தென்றும், இங்ஙனஞ்சிறுபொழுதறுவகைப்படுமென்றுமுரைப்பாருமுளர். "காலையும் பகலுங் கையறு மாலையு—மூர்துஞ் சியாமமும் விடியலு மென்றிப்—பொழுதிடை தெரியிற் பொய்யே காமம்" என்னுங் குறுந்தொகைப்பாட்டினுட் சிறுபொழுதைந்தே கொண்டமையானும், பகலெனவே பின்பகலுமடங்குமெனின் அதுபற்றி முன்பகலுமடங்குமென்ருெழியாது காலையை வேறுகூறினமையின் அது கருத்தன்ருகலானும், ஆண்டும் வைகறையினையே விடியலென்றமையிற்காலையை விடியலென்றல் பொருந்தாமையானும் இதனுனே "விடியல்வெங்கதிர் காயும்" என்புழி விடியற்பின்னர்த்தாகிய வெங்கதிரென்பதே பொருளாமாகலானும், விடிதல் இருள்புலர்தலென்னும் பொருட்டாகலின், விடியல், புலரி, வைகறை என்பனவொருபொருட்கிளவியாகலானும், "ஊடுதல் காமத்திற் கின்ப மதற்கின்பங்—கூடி முயங்கப் பெறின்." என்பவாகலின் ஊடலிறுதிக்கட்கூடலொருதலையென்பது பெறப்படுதலின், கற்புக்காலத்து நாள்வெயிற்காலையிற் புணர்தன்முறையன்மையின் அக்காலத்தினூடல்செல்லாமையானும், அடிசில்கைதொட்டபின்னர்ப் பயமின்றிக் கழியும் பின்பகல் புராணக்கேள்வி முதலியவற்ருனுதல் விளையாட்டுமுதலியவற்ருனுதல் பொழுதுபோக்கப்படுவதல்லது விதிக்கப்படுங் கருமமொன்றற்குமுரித்தன்மையின், அதனையொன்ருக வைத்தெண்ணிச் சிறுபொழுதறுவகைத்தென்றல் பொருந்தாமையானும், ஆசிரியர் முல்லை குறிஞ்சி மருத நெய்தல் பாலையென முறைசெய்தற்கேற்ப மாலை யாமம் வைகறை காலை நண்பகல் என்னுஞ் சிறு

பொழுதின்கிடக்கைமுறையேயன்றி வேறின்மையானும், ஏனைத் திணைகட்குச் சிறுபொழுதோரோவொன்றேயாகலின், மருதமாத் திரைக்கிரண்டுகோடல் பொருந்தாமையானும், அஃதுரையன் றென மறுக்க. வைகுறுவிடியல் இராப்பொழுது தன்னோடு கழி வுறுதற்கேதுவாகிய விடியலென்க. "விளம்பழங் கமழுங் கமஞ் சூழ் குழிசி" என்னுநற்றிணையுள் வைகுறுபுலர்விடியல் என்றது மப் பொருட்டு. அற்றைநாட்பொழுது தன்னெல்லையோடறுதல்பற்றி வைகறையெனவும்படும். வைகுதல் கழிதலென்னும் பொருட்டு. "ஆடலின்னரவமும்" என்னுஞ் செய்யுளின் நச்சினார்க்கினியாரும் "வைகறொறும்வைகின்றே" என்பதற்கு நாடோறுங்கழியாநின்ற தெனப் பொருளுரைத்தார். இவ்வாறன்றி மாலையுமிடையாமமும் கழியுந்துணையும் அக்கங்குல் வைகுறுதலின் வைகுறுவாயிற்றென் பார்க்கு, ஏனைப்பொழுதுகளுந் தமக்கு முன்னுளவாகிய பொழுது கள் கழியுந்துணையுந் தாம் வைகுறுதலின் அவையுமப்பெயர்பெறு வான் செல்லுமென்றொழிக. பெரும்பொழுதாறென்றார்க்குச் சிறு பொழுதுமாறென்றலே பொருத்தமுடைத்தெனின்;—அங்ஙனங் கூறுவார்க்கு, மருதநெய்தல்கட்குப் பெரும்பொழுதெல்லா முரிய வென்றார்க்குச் சிறுபொழுதுமெல்லாமுரியவென்றல் பொருத்தமு டைத்தெனல்வேண்டுதலின், அது கடாவன்றென விடுக்க.

உரிச்சொல்லியல்புளங்கொளற்பொருட்டு நால்வகைச்சொற் களுந் தெரிக்கலுற்றுழி, இடைச்சொல்லென்றதன்காரணங்கூறிய தற்கெடுத்துக்காட்டிய புகுந்து, இத்துணையும் விரிந்ததென்றுண ர்க. இவ்வாறாகலின், எழுத்தென்றதற்கீண்டுக் கூறியதே முடிபெ னக்கொள்க.

எழுத்து+எனப்படுப='எழுத்தெனப்படுப.'

இனியாசிரியர் "நூறென் கிளவி யொன்றுமுத லொன்பாற்— கீறுசினை யொழிய வினவொற்று மிகுமே." எ-ம். "ஆறன் மருங் கிற் குற்றிய லுகர—மீறுமெய் யொழியக் கெடுதல் வேண்டும்." எ-ம். நூறென்னுமெண்முன்னு மாறென்னுமெண்முன்னும் முறை யே ஒன்றுமுதலிய வெண்களும் ஆயிரமும் வந்து புணரிற் குற்றிய லுகரங்கெட நின்ற வொற்றின்மேல் உயிர்வந்தொன்றி முடியுமெ ன்றார். எனவே ஒன்றினமுடித்த லென்பதனால் ஏனைக்குற்றியலு கரவீறும் உயிர்முதன்மொழி வந்து புணர்வுழிக் குற்றியலுகரங் கெட்டு நின்றவொற்றின்மேல் உயிர்வந்தொன்றி முடியுமென்ப தூஉம் பெறப்பட்டதாகலின், ஈண்டுமவ்வாறே குற்றியலுகரங் கெட நின்ற தகரவொற்றின்மேல் எகரவுயிர்வந்தொன்றி எழுத் தெனப்படுபவென முடிந்தது.

அஃதேல், நாகரிதென்புழி முன்னர்க்குற்றுகரவோசையும் பின்னருயிரோசையும் பெற்று அவ்விரண்டுங்கூடி நின்றல்லது அப்பொருளுணர்த்தலாகாமையின், குற்றியலுகரத்திறுதிமுன்னும் புள்ளியீற்றுமுன்போல உயிர்முதன்மொழிவந்தால் அவ்வுயிரேறி முடியுமென்னுமோவெனின்;—என்னும். என்னை? அங்ஙனங் கூறுவார்க்குக் கதவழகிது கனவழகிது என்புழியும் முன்னர் முற்றுகரவோசையும் பின்னருயிரோசையுங் கூடியல்லது அப்பொருளுணர்த்தலாகாமையின், அவற்றையுமுற்றுகரத்தின்மேலுயிரேறி முடிந்ததெனக் கூறல்வேண்டும். அவ்வாறன்றி முற்றுகரங்கெட நின்ற வொற்றின்மேல் உயிரேறிமுடியுமென்பதே எல்லார்க்குமொப்ப முடிந்ததாகலானும், குற்றியலுகரத்திற்குமுயிரென்னுங் குறியீடு கொண்டமையின் ஒற்றின்மேலன்றி உயிரின்மேலுயிரேறுதல் பொருந்தாமையானும், நாகரிதென்புழி இதழ்சிறிது குவிதலாகிய முயற்சி ஆண்டுப் பெறப்படாமையிற் குற்றியலுகரவோசை ஆண்டுண்டென்றல் பொருந்தாமையானும், "ஆறன் மருங்கின்" என்றற்றொடக்கத்துச் சூத்திரங்களோடு முரணுதலானும், யகரம் வருவழி யிகரங்குறுகி யுகரத்தின்மேலேறி முடியுமென்னாது "இகரங் குறுகு—முகரக் கிளவி துவரத் தோன்றாது" என்றாராகலானுமென்பது. இங்ஙனங் கூறியவாசிரியர்கருத்து நோக்காது, யாம் பிடித்ததே சாதிப்பேமென்னுங்கருத்தாற் "புள்ளியொடு நிலையல்" என்பதனோடு மாட்டெறிந்து "குற்றிய லுகரமு மற்றென மொழிப" எனப் புணரியன்முதற்கட்கூறிய சூத்திரத்தினைப் "புள்ளி யீற்றுமுனுயிர்தனித் தியலாது" எனவவ்வியலினிறுதிக்கட்கூறிய சூத்திரத்தோடு மாட்டெறிந்து பொருள்கூறி, அறுயிரம் நூற்றொன்று முதலியவற்றிற்குஞ் சூத்திரக்கிடக்கைமுறை நோக்காது குற்றியலுகரத்தைப் புள்ளியீற்றோடு தாங்கண்மாட்டெறிந்ததற்கேற்பவே பொருளுரைத்தார் மாட்டேற்றுமுறைமையுணராத உரையாசிரியரையுள்ளிட்டோரெனவுணர்க. இன்னும் "அவற்றுண் மெய்யீறெல்லாம்" என்னுஞ்சூத்திரத்துள் அவ்வீற்றின்மெய் உயிர்முதன் மொழிவந்தால் அஃதேறவிடங்கொடுத்து நிற்குமென்பதூஉங் கூறினாராயிற்றெனவுரைத்தார். இச்சூத்திரத்தாலிவ்விதியுங் கூறினாராயிற்றேல், "புள்ளியீற்றுமுன்" எனச் சூத்திரஞ்செய்தது கூறியது கூறலென்னுங்குற்றந்தங்குதற்கோவெனக் கூறி மறுக்க.

## 'எனப்படுப.'

இனி எனப்படுப என்பது என்னென்னுமுதனிலையீதே செயப்படுபொருண்மையுணர்த்தும் படுவென்னும் விகுதியும் அகரச்சாரியையும் வந்து புணர்ந்து, எனப்படு என நின்றவழி, அதுவுமுத

னிலைத்தன்மைப்பட்டு, மேல்வரும் அகரவிகுதியும் பகரவிடைநிலையும் பெற்று, எனப்படுப என முடிந்த பலவறிசொல்.

அஃறேல், எனவென்னுஞ்செயவெனெச்சம் படுபவென்னும் வினைகொண்டு முடிந்ததென்றாற்படுமிழுக்கென்னையெனின்;—அறியாது கடாயினாய். செயவெனெச்சம் நிகழ்காலத்தின்கண் இது நிகழாநிற்க இது நிகழ்ந்ததென்னும் பொருட்டாயும், இறந்தகாலத்திற் காரணப்பொருட்டாயும், எதிர்காலத்திற் காரியப்பொருட்டாயும் வரும். அங்ஙனமிருவினைப்பொருடாராது தொழிலுறுவதாகிய வொருவினைப்பொருளே தந்துநிற்பதொன்றாகலானும் இருவினையென்பார்க்குப் படுசொற்செயப்படுபொருளுணர்த்தாது வேறோர் வினையுணர்த்தல்வேண்டும் அது பொருந்தாமையானும், "இல்வாழ்வா னென்பான்" என்புழி எனப்படுவானென விரித்தமையானும், யாங்கூறியதே முடிபெனவுணர்க.

செய்வித்தானென்புழியும், செய்வியென்றியல்பாயொருசொலின்மையிற் செய்யென்னுமுதனிலைமேல் ஏவற்பொருண்மையுணர்த்தும் விகரவிகுதி வந்து செய்வியென நின்றவழி, அதுவுமுதனிலைத்தன்மைப்பட்டு மேல்வருமைம்பான் மூவிடங்கட்குரிய விகுதிகளும் முக்காலமுங்காட்டுமிடைநிலைகளும் பிறவிகுதிகளுமேற்று நிற்கும். எழுந்திருந்தான் எழுந்திட்டான் என்புழி இரு இடு என்பன பகுதிப்பொருள்விகுதியாய் முதனிலையோடியைதற்குரிய துச்சாரியை பெற்று எழுந்திரு எழுந்திடு என நின்றவழி, அவையும் முதனிலைத்தன்மைப்பட்டு, மேல்வரும் விகுதிமுதலியவேற்று நிற்கும். இஃதறியாதார் எழுந்திருந்தான் எழுந்திட்டான் என்புழி இருந்து இட்டு என்பனவே இடைச்சொல்லாமென்பர். எழுந்திருக்கின்றான் எழுந்திடுகின்றான் என வேனைக்காலங்களோடு வருவழி இரு இடு எனவே வேண்டுதலின், ஈண்டுமவ்வாறே இறந்தகாலவிடைநிலையேற்று நின்றனவெனக் கொள்க. செய்துவிட்டான் செய்தொழிந்தான் என்புழி விடு ஒழி என்பன ஒருதலையென்னும் பொருட்கண் வந்த விகுதி. செய்துகொண்டானென்புழிக் கொள்ளென்பது வினைப்பயன் வினைமுதலைச்சென்றடைதலாகிய தற்பொருட்டுப்பொருட்கண் வந்த விகுதி. இதனை வடநூலார் ஆற்பனேபதமென்ப.

போக்கு, பாய்ச்சு, ஊட்டு, நடத்து, எழுப்பு, தீற்று என்புழிக் குசரமுதலியன விப்பிப்பொருளின் வந்த விகுதி. உண்ணாநின்றான், உண்ணாகிடந்தான், உண்ணாவிருந்தான் என்புழி நில், கிட, இரு என்னுநிகழ்காலவிடைநிலைகளும் ஆகாரச்சாரியையும் புணர்ந்து, உண்ணாநில், உண்ணாகிட, உண்ணாவிரு என நின்றவழி, அவை

யுமுதனிலைத்தன்மைப்பட்டு, நிகழ்காலத்துள்ளுமுக்காலமுண்மை யின் அவற்றிற்கேற்ற காலவிடைநிலைகளும் பாலிடங்காட்டும் விகு திகளு மேற்றுநிற்கும். இன்னுமிங்ஙனம் வேறுபடவருவனவெல் லாம் இவ்வாறேயேற்றபெற்றியறிந்து முடித்துக்கொள்க. இன்னு மிவற்றைக் கடாவிடைகளான் விரிப்பிற்பெருகுமென்றொழிக. இன் னோரன்ன விகுதிகளெல்லாம் முதனிலைத்தன்மைப்பட்டு மேல் வரும்விகுதி யேற்று நிற்குமென்பதே வடநூலார்க்குந் துணிபெ ன்க. உய்த்துவிடும், காட்டிவிடும் என்றற்றொடக்கத்துச் சொற் களைப் பரிமேலழகியார் முதலாயினோர் ஒருசொல்லென்றதூஉமிக் கருத்தேபற்றியெனக் கொள்க.

எனப்படுப + அகரம் = 'எனப்படுபவகரம்'

எழுத்தெனப்படுபவகரமுதலென்புழி, வகரம் நிலைமொழியீற் றினும் வருமொழிமுதலினுநின்றவுயிர்களை உடம்படுத்தற்கு வந்த கருவியாகலின், அஃதுடம்படுமெய்யென்றாயிற்று. உடம்படுத்த லெனினும் உடன்படுத்தலெனினுமொக்கும். அஃது "உடம்பாடி லாதவர்வாழ்க்கை" என்பதனானுமறிக.

"உடம்படு மெய்யி னுருபுகொளல் வரையார்" என வாசிரி யர் பொதுப்படவோதினாரேனும், உயிர்களையுடம்படுத்தற்குரியன இடப்பிறவியான் அவ்வுயிரோடொத்தவிடையெழுத்தென்பதூஉம், அவற்றுள்ளுமொழிமுதற்கண் வருதற்குரியன யகர வகரங்களே யாகலின் அவையேயீண்டைக்கு வரப்பெறுமென்பதூஉம் தாமே விளங்கும். அவற்றுள்ளும், பெரும்பாலும் இ ஈ ஐ முன்னர் யக ரமும், ஏனையுயிர்களின்முன்னர் வகரமும் வருமென்பது ஏற்புழிக் கோடலாற்பெறப்படும், "உடம்படு மெய்யே யகார வகார—முயிர் முதன் மொழிவரூஉங் காலையான." என்பவாகலின். அங்ஙனம் வரும் யகர வகரங்களேயுடம்படுமெய்யெனப் பெயர்பெறுமெ ன்க. "விண்வத்துக் கொட்கும் வண்ணத் தமரர்" என்புழி வகர முடம்படாதவற்றையுடம்படுத்தவந்ததல்லாமையின், இன்னோரன் னவை உடம்படுமெய்யெனப்பெயர்பெறுமாறில்லையென்பது. இஃ திருமொழியுமுடம்படுத்தற்கு வருங்கருவியாகலின், ஆசிரியரிச்சூத் திரத்தைச் செய்கையோத்துட்கூறாது கருவியோத்துட்கூறினார். "புள்ளியீற்றுமுன்" "மெய்யுயிர்நீங்கின்" என்பனவும் வரிவடி வின்கணறிந்துகோடற்குச் செய்த கருவியாகலிற் கருவியோத் துள் வைக்கப்பட்டன. நாகரிதென்புழி ஒலியெழுத்தின்கட்படுஞ் செய்கை இதனோடியையாமையானும், கருவியோத்துட் புணர் மொழிச்செய்கைகூறுதல் பொருந்தாமையானும், மேற்கூறியவாற் றானும், "குற்றிய லுகரமு மற்றென மொழிப." என்பதற்கியா

முரைத்ததே பொருளென்பது தெற்றெனவுணர்க. இப்பெற்றியுணராதவுரையாசிரியர் நச்சினார்க்கினியார் "புள்ளியீற்றுமுன்" "மெய்யுயிர்நீங்கின்" என்பவற்றை ஒலியெழுத்தின்கட்படுஞ் செய்கையென மயங்கிக் "குற்றிய லுகரமு மற்றென மொழிப." என்பதனை இதனோடு மாட்டெறிந்ததூஉமன்றி, "உருவுரு வாகி யகரமோடுயிர்த்தலு—மேனை யுயிரோ டுருவுதிரிந் துயிர்த்தலும்" என்புழி உயிர்த்தலென்பதற்கு ஒலித்தலெனப் பொருள்கூறினர். உருவுருவாகியுயிர்த்தலும் உருவுதிரிந்துயிர்த்தலும் புள்ளியுண்டாதலும் இலவாதலும் வரிவடிவிற்கேயன்றி ஒலிவடிவிற்கின்மையின், அவைபோலியுரையென்க.

'அகரமுதல்;' 'னகரவிறுவாய்.'

இனி அகரமுதல் னகரவிறுவாயென்பன பண்புத்தொகை நிலைக்களத்துப்பிறந்தவன்மொழித்தொகை.

பண்புத்தொகைப்பொருள்படத் தொக்கவழி அஃதன்மொழித்தொகையாகாமையிற் பண்புத்தொகையிற்பிறந்தவன்மொழித்தொகையென்னாது பண்புத்தொகைக்கு நிலைக்களமாகிய சொல்லிற்பிறந்த தொகையென்பது விளக்கிய, தொல்லாசிரியரெல்லாம் பண்புத்தொகைநிலைக்களத்துப் பிறந்தவன்மொழித்தொகையென வழங்கியவாறு. பிறவுமன்ன.

அகரம் னகரம் என்பன பண்பல்லவாயினும், பண்புதொக்க தொகைபோல விசேடிப்பதூஉம் விசேடிக்கப்படுவதூஉமாகிய இயைபுபற்றி, இன்னோரன்னவையும் பண்புத்தொகையெனப் பட்டன.

அற்றேல், தொக்கவிருமொழிப்பொருளுந்தாராது புறமொழிப்பொருளைத்தருவது அன்மொழித்தொகையாகலின், அகரமுதல் னகரவிறுவாயென்புழி அன்மொழித்தொகையான் அகரமும் னகரமுமொழித்து ஒழிந்தவிருபத்தெட்டுமே கொள்ளப்படும், அவ்வாறன்றி அவற்றையுமுடனெண்ணி முப்பஃதென்றனிரம்பாதாம் பிறவெனின்;—ஆகுபெயர் விட்டவாகுபெயரும் விடாதவாகுபெயருமென விருவகையாயவாறுபோல, அன்மொழித்தொகையும் விட்டவன்மொழித்தொகையும் விடாதவன்மொழித்தொகையுமென விருவகைப்படும். அவற்றுள் இது விடாதவன்மொழித்தொகையாகலி னிரம்புமென்க. அகரவீறு புள்ளியீற்றுமுன் என்றாற்போல்வனவுமவை. பொற்றொடிவந்தாள் ஒண்ணுதலுண்டாள் என்பன விட்ட வன்மொழித்தொகை. வடநூலார் விடாதவன்மொழித் தொகையைத் தற்குணசம்விஞ்ஞானவெகுவிரீகியென்றும், விட்ட

வன்மொழித்தொகையை அதற்குணசம்விஞ்ஞானவெகுவிரீகியென்றுங் கூறுவர்.

அற்றேல், ஆகுபெயருமன்மொழித்தொகையுந் தம்பொருளுணர்த்தாது பிறிதுபொருளுணர்த்துதலானொக்குமாகலின், அவை தம்முள் வேற்றுமை யாதோவெனின்;—ஆகுபெயர் ஒன்றன்பெயரானதனோடியைபுபற்றிய பிறிதொன்றனையுணர்த்தி யொருமொழிக்கண்ணதாம்; அன்மொழித்தொகை இயைபுவேண்டா திருமொழியுந் தொக்க தொகையாற்றலாற் பிறிதுபொருளுணர்த்தி யிருமொழிக்கண்ணதாம். இவை தம்முள் வேற்றுமையென்க.

இருபெயரொட்டாகுபெயர் இருமொழிக்கண் வந்ததன்றோவெனின்;—அன்று. என்னை? வகரக்கிளவி, அதுவாகுகிளவி, மக்கட்சுட்டு என்னுமிருபெயரொட்டாகுபெயருள், வகரமும் அதுவாதலும் மக்களுமாகிய வடைமொழிகள் கிளவி சுட்டென்னுமியற்பெயர்ப்பொருளை விசேடித்து நில்லாது, எழுத்துஞ் சொற்பொருளும் பொருளுமாகியவாகுபெயர்ப்பொருளை விசேடித்து நிற்ப, கிளவி சுட்டென்பனவேயாகுபெயராய் அப்பொருளையுணர்த்த, இருபெயருமொட்டிநிற்குமாகலின். இனிப் பொற்றொடியென்னு மன்மொழித்தொகையிற் பொன்னென்பது அவ்வாறன்மொழித்தொகைப்பொருளை விசேடித்து நில்லாது, தொடியினையே விசேடித்து நிற்ப, அவ்விரண்டன்றொகையாற்றலான் அன்மொழித்தொகைப்பொருளையுணர்த்துமாறுமறிக. இக்கருத்தேபற்றி மக்கட்சுட்டு முதலியவற்றைப் பின்மொழியாகுபெயரென்பாருமுளர். இனி மக்கட்சுட்டென்புழி மக்களென்பதாகுபெயரான் மக்கட்கருத்தையுணர்த்திற்றென்பார்க்கு, அங்ஙனமுணர்த்திற்றேல், "பாணன் பறையன் றுடியன் கடம்பனென்—றந்நான் கல்லது குடியுமில்லை." என்புழிப் பாணன்முதலியனபோல மக்களென்பது ஆண்டஃறிணைச் சொல்லாதல்வேண்டும், வேண்டவே, அஃதலபிறவே என வஃறிணைச்சுட்டுப்பெயராற்கூறுது, "அவரலபிற" என்றல் திணைவழூவாய் முடியுமாகலின், அஃதாசிரியர்கருத்தன்றென்றொழிக. மக்கட்பொருளெனவேயமையுமாயினும், அப்பொருட்குயர்திணையெனக் குறியிட்டதற்குக் காரணந்தோன்ற, மனத்தோடாறறிவினரே மக்களென மரபியலுட்கூறுமுயர்ச்சிபற்றி மக்களாகிய நன்குமதிக்கப்படும் பொருளென்பார் மக்கட்சுட்டென்றார். மக்களென்பது பொதுமையினீக்கிப் பொருளை விசேடித்து நிற்பச் சுட்டென்பது விடாதவாகுபெயராய் அப்பொருளினுயர்ச்சியுணரநிற்ப, இருபெயருமொன்றனையொன்று விசேடித்து இன்னதிதுவென வருமாறு காண்க.

இனிச் சேனாவரையர் ஆகுபெயரு மன்மொழித்தொகையு மொன்றேயெனவும், இயற்பெயர் ஆகுபெயரெனப் பெயரிரண்டா யடங்கும்வழிப் பொற்றொடியென்பதொருபெயர்ப்பட்டது அது வே யன்மொழித்தொகையாதலுமுடைமையான் எச்சவியலுள் ளுங் கூறப்பட்டதெனவுங்கூறினார். அது வடநூல்விதியோடு மூர ணுதலானும், வடநூலோடு மாறுகொள்ளாமற்கூறலே ஆசிரியர் மேற்கோளென "அதனினியறல்" என்னுஞ்சூத்திரத்துத் தாமுங் கூறினாராகலானும், அவர்க்கது கருத்தன்றென்க.

இன்னுமவர் சாத்தனதனை சாத்தனதனோடு என்புழிச் சாத் தனதென்பது துவ்விகுதியும் அகரச்சாரியையும் பெற்று உருபே ற்றுநின்ற பெயராகலின் ஆண்டு அதுவெனவொன்றாக வைத்து ஆறனுருபென்றல் பொருந்தாதென்பதும் நோக்காது, உருபேற்றல் பெயர்க்கேயுரிய விலக்கணமென்பதும் நோக்காது, எச்சவியலு ட்கூறுந் தொகைச்சொற்கணுருபுதொகுதல் ஈண்டுக்கூறுதற் கோரி யையின்றென்பதும் நோக்காது, இனமல்லவற்றையுடனெண்ணு தல் மரபன்றென்பதும் நோக்காது, "பிறிதுபிறிதேற்றலும்" என் பதற்கு ஆறனுருபு பிறிதோருருபை யேற்றலும் ஆறுருபுந்தொக்கு நிற்றலும் வழுவாகாவென உரையாசிரியருரைத்தவாறேயுரைத் தார். இதுவுமவர் கருத்தன்று. இச்சூத்திரப்பொருள் முன்னர்க் கூறுதும், ஆண்டுக்காண்க. இன்னுமொரோவோரிடங்களிலிவ்வா றே மயங்கிக் கூறுவர். அங்ஙனமொரோவழி மயங்குதல்பற்றி அவரை யிகழற்க, நச்சினார்க்கினியார் முதலியோர்போல யாம் பிடித்ததே சாதிப்பேமென்னுஞ் செருக்கால் யாண்டு மயங்காமை யின். முக்குணங்களு மாறி மாறி வருதலின், அதுபற்றி யெனைத் துணை நுண்ணறிவாளருமொரோவழி மயங்குதலியல்பென்க. இக் கருத்தேபற்றியன்றே "அரியகற் றாசற்றார் கண்ணுந் தெரியுங்கா— லின்மை யரிதே வெளிறு." "குணநாடிக் குற்றமு நாடி யவற் றுள்—மிகைநாடி மிக்க கொளல்." என்றார் தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனாருமென்பது. இங்ஙனமாகலின், வடமொழியி னும் ஆசிரியர் பாணினியார் தொல்லாசிரியர் சூத்திரங்களுட் சில வற்றைத் தம்முடைய சூத்திரங்களாலெடுத்தோதி மறுத்து வேறு விதிகூறுவர். அவர் சூத்திரங்களுட் சிலவற்றை ஆசிரியர் வரருசி யாரெடுத்தோதி மறுத்து வேறுவிதி கூறுவர். அவ்விருவரையு மோரோரிடங்களினாசிரியர் பதஞ்சலியாரெடுத்தோதி மறுத்து வேறுவிதி கூறுவர். அதுபற்றியவரிகழப்படாரென்க. அஃதேல், ஆசிரியரகத்தியனார் தொல்காப்பியனார் பதஞ்சலியார் முதலாயினா ருமொரோவழியிவ்வாறு மயங்கிக்கூறுபவாலோவெனின்;—அவர் தவத்தரன் மனந்தூயராய் முக்குணங்களையுங்கடந்து இறைவன

ருள்பெற்றுடையராகலின், அன்னரல்லரெனவுணர்க. ஆகுபெயரும் வேறே அன்மொழித்தொகையும் வேறேயென்பதாசிரியர் கருத்தெனக் கொள்க.

**'னகரவிறுவாய்'**

னகரவிறுவாயென்புழி இறுவாயென்பது வினைத்தொகைநிலைக்களத்துப்பிறந்த வன்மொழித்தொகையாய், இறுவாய்க்கணின்றவெழுத்தை யுணர்த்திற்று. அதனை னகரம் விசேடித்து இன்னதிறுவென்பதுபடவருதலின், னகரவிறுவாயென்பது பண்புத்தொகைநிலைக்களத்துப் பிறந்த வன்மொழித்தொகையாதலறிக.

அற்றேல், வினைத்தொகையாவது "செய்யுஞ் செய்த வென்னுங்கிளவியின்—மெய்யொருங் கியலுந் தொழிறொகு மொழி" யாகலின், அது பெயர்ச்சொற்கொண்டு முடியாது வாயென்னுமிடைச்சொற்கொண்டு முடிதலமையாதாம் பிறவெனின்;—இடைச்சொல்லெல்லா மொருவாற்றாற் பெயரெனப்படுமாகலினமையுமென்க. "வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை" "நினைத்தொறுங் காண்டொறும் பேசுந்தோறு மெப்போதும்" என்றாற்போல்வனவுமிவ்வாறே கொள்க.

அகரம்+முதல்='அகரமுதல்.'

னகரம்+இறுவாய்='னகரவிறுவாய்.'

அகரமுதல் னகரவிறுவாய் என்புழி, இருபெயரொட்டுப் பண்புத்தொகையெல்லாம் வேற்றுமைவழியோடொக்குமாகலின், "துவரக்கெட்டு" என்பதனான் மகரங்கெட்டு, "நின்ற சொன்முனியல்பா கும்மே" என்பதனானியல்பாய் முடிந்தன.

முதல்+னகரம்='முதனகரம்.'

அகரம் னகரமெனக் கரச்சாரியை பெற்றவழிச் சொற்றன்மையெய்திநிற்றலின், ஆண்டுநின்ற முதலென்பதன் லகரம் "நெடியதன்முன்னர்' என்னுஞ் சூத்திரவிதி "குறுமையுநெடுமையும்" என்பதனாற் பெற்றுக் கெட்டது.

அற்றேல், மொழிக்குமுதலாமெழுத்துக்கள் வந்து புணர்வுழிப்படுஞ் செய்கையன்றே ஈண்டுப் பெறப்படுவது, னகரமொழிக்கு முதலாவதன்மையின், அது வந்து புணர்வுழிச் செய்கைப்படுமாறென்னையெனின்;—அற்றன்று: மொழிக்கு முதலாகாதனவுஞ் சொற்றன்மையெய்திப் புணர்ந்தவழி மொழிக்குமுதலாமெழுத்துப் புணர்வுழிப்படுஞ்செய்கை செயப்படுமென்று கோடற்கன்றே, ஆசி

ரியர் "முதலா வேன தம்பெயர் முதலும்." எனக் கருவிசெய்தா ரென்க. அஃதேல், "வல்லெழுத் தியையின் டகார மாகும்" என் புழியும் "மன்னுஞ் சின்னும்" என்னுஞ் சூத்திரவிதியால் னகா ரம் றகாரமாகல்வேண்டுமெனின்;—றகரமுன்னர் டகரமயங்கா மையின், வேண்டாவாயிற்றென்க. அற்றேல், னகாரமுன்னர் டகர மயங்கியவாறென்னையெனின்;—அது "தம்மியல் கிளப்பி னெல் லா வெழுத்து—மெய்ந்நிலை மயக்க மான மில்லை." எனக் கருவி செய்தமையான், மயங்கிப் புணர்ந்ததென்க. இச்சூத்திரத்திற்கி துவே பொருளாதல் உரையாசிரியருரையானுணர்க. அற்றேல், றகரமுமவ்வாறு மயங்குகவெனின்;—அற்றன்று: செய்கையெய் தாதியல்பாய் வருவனவற்றிற்கே "தம்மியல்கிளப்பின்" எனக் கருவிசெய்தாரென்பது. அங்ஙனமல்லாக்கால், இவை மயங்கும் இவை மயங்காவென முற்சூத்திரங்களால் வரையறுத்துக் கருவி செய்தது பயனின்றாய் முடியுமென்க.

## 'முப்பஃது.'

இனி முப்பஃதென்பதனை "ஒன்றுமுத லொன்பா னிறுதி முன்னர்" "மூன்று மாறும்" "மூன்ற னொற்றே" என்னுஞ்சூத்தி ரங்களாற் செய்கைசெய்து முடித்துக் கொள்க. முப்பஃது மூன்று றழ்ந்த பத்தென விரியும். இங்ஙனமுருபொடு வினைச்சொல்லு மொருங்கு விரிதல் "வேற்றுமைத் தொகையே வேற்றுமை யியல." என்பதனாற்கொள்க.

"வேற்றுமைத் தொகையே வேற்றுமை யியல." எ-து. வேற் றுமைத்தொகைவிரியுங்காற் றொகாநிலைவேற்றுமையியல்பினவாய் விரியுமென்றவாறு. எனவே, அங்ஙனம் விரியுமியல்புடையது வேற்றுமைத்தொகையென்றதாயிற்று. வேற்றுமைத்தொகையே யெனப் பிரித்தமையால், முன் வந்த வேற்றுமை தொகாநிலைவேற் றுமையென்பதூஉம், தொகாநிலைவேற்றுமையியலவெனவே விரி யுங்காலென்பதூஉந் தாமே போதரும். "உவமத் தொகையே யுவம வியல." என்பதற்கு மிவ்வாறுரைத்துக்கொள்க. "வேற்றுமைத் தொகையே வேற்றுமை யியல." என்றற்றொடக்கத்துச் சூத்திரங் களாற் றொகைச்சொற்கள் விரியுமாறு கூறுமுகத்தான் அவற்றிற் கிலக்கணங்கூறியவாறு.

இனி "வேற்றுமைத் தொகையே வேற்றுமை யியல." என் பது ஆற்றலுள்ளன தொகும் அல்லன தொகா என்பது விளக்கு தற்பொருட்டெழுந்ததென்பரொருசாரார். அஃதேயிலக்கணமன்மை யானும், அப்பொருளுமிதனுளடங்குதலானும், அது போலியுரை

யென்க. "வேற்றுமைத் தொகையே வேற்றுமை யியல." என்றற்றொடக்கத்துச்சூத்திரங்களால் வேற்றுமைத்தொகை முதலியவற்றிற்குச் சிறப்பிலக்கணங்கூறி "எல்லாத் தொகையு மொருசொன்னடைய." என்பதனாற் பொதுவிலக்கணங்கூறியவாறுமறிக.

அற்றேல், தொகாநிலைவேற்றுமையியல்பாவதென்னையெனின்;—கிழமைப் பொருட்கண் வரும் ஆறுவதொழித்தொழிந்தவுருபுகளெல்லாங் காரகப்பொருள்வாகலின் வினைகொண்டன்றி முடியாமையென்க. கண்ணாற்கொத்தை, காலான்முடம். எ-ம். கரும்பிற்குவேலி, கடிசூத்திரத்திற்குப் பொன். எ-ம். வேங்கடத்தின்றெற்கு, குமரியின்வடக்கு: எ-ம். குன்றத்துக்கட்குவடு; குன்றத்துக் கட்கூகை. எ-ம். இவை பெயர்கொண்டு முடிந்தனவாலோவெனின்;—அற்றன்று: கூறும்வழி யவ்வாறு வரினும், பொருள்படும்வழிக் கண்ணாலறியப்படுங் கொத்தைமையன், காலாலறியப்படுமுடத்தன்மையது. எ-ம். கரும்பிற்குக் கோலிய வேலி; கடிசூத்திரத்திற்கு வைத்தபொன். எ-ம். வேங்கடத்தின்றெற்குள்ளது; குமரியின்வடக்குள்ளது. எ-ம். குன்றத்துக்கண்ணுள்ளகுவடு, குன்றத்தின்கண்ணிருந்த கூகை. எ-ம். வினைகொண்டன்றி முடியாமையுணர்க. ஐயுருபு கூறும்வழியும் வினையோடன்றி வாராதெனக்கொள்க. "எவ்வழி வரினும் வினையே வினைக்குறிப்—பவ்விரு முதலிற் றேன்று மதுவே." என்றதூஉமிக்கருத்தேபற்றியென்க. நிலத்தைக்கடத்தல் குழையையுடைமை என்பவற்றுள் கடத்தல் உடைமை என்பனவும் வினைவினைக்குறிப்புமுதனிலையடியாகத் தோன்றிய பெயராகலின், அவையும் வினை வினைக்குறிப்போடு முடிந்தனவேயாமென்பது. இக்கருத்தேபற்றியன்றே, அவ்விரண்டினென்றொழியாது "அவ்விருமுதலின்" என்றாரென்க. எனவே, செயப்படுபொருள் பெயருளென்பதூஉங் குறிப்பாற்பெறப்படும். இஃதறியாதார் தத்தமக்கு வேண்டியவாறேயுரைப்ப. அவர்க்குஞ் செயப்படுபொருள் பொருளென்றல் குறிப்பானன்றியுணரப்படாமையும், அப்பொருள் சிறவாமையுமோர்ந்துணர்க.

அற்றேலஃதாக; வேற்றுமைத்தொகை விரியுமாறு "வேற்றுமைப் பொருளை விரிக்குங் காலை" என்னுஞ் சூத்திரத்தாற் பெறப்பட்டதாலோவெனின்;—வேற்றுமைத்தொகையை விரிக்குங்காலையென்னாமையானும், எச்சவியலுட்கூறும்வேற்றுமைத்தொகைவிரியுமாறுவேற்றுமையியலுட்கூறுதற்கோரியையின்மையானும்,வேற்றுமையியலுள் உருபும் பொருளும் உருபுநிற்குமிடமுமாத்திரையே கூறியொழிந்தாரன்றி வேறொன்றுங்கூறாமையானும், வேற்றுமைத்தொகை விரியுமாறு "வேற்றுமையியல" என்பதனாற்பெறப்

படுதலின் வேறு கூறவேண்டாமையானும், வேண்டுமெனிற் பான்மொழியென்னுமுவமத்தொகையும் பாலினினிமைபோலுமினிமையையுடைய மொழியென விரிதலின் உவமத்தொகைக்கட்சொற்பெய்து விரித்தற்கு வேறு சூத்திரங்கூறாமை குன்றக்கூறலாய் முடியுமாகலானும், அச்சூத்திரத்திற்கது பொருளன்றென்றொழிக.

அற்றேல், அச்சூத்திரத்திற்குப் பொருள் யாதோவெனிற் கூறுதும்:—"வேற்றுமைப் பொருளை விரிக்குங் காலை—யீற்றுநின் றியலுந் தொகைவயிற் பிரிந்து—பல்லா றாகப் பொருள்புணர்ந் திசைக்கு—மெல்லாச் சொல்லு முரிய வென்ப." எ-து. ஒத்தினிறுதிக் கட்புறனடை. இதன்பொருள். "காப்பி னொப்பி னூர்தியி னிழையின்" என்றற்றொடக்கத்தனவாக ஈண்டுக்கூறிய பொருளேயன்றி இன்னும் வேற்றுமைப்பொருளை விரித்துக் கூறுங்காலத்துக் காப்பினொப்பினென்றற்றொடக்கத்துத் தொகைச்சொற்களின் வேறுபட்டுப் பொருளோடு புணர்ந்திசைக்கு மெல்லாச்சொற்களும் ஈண்டுக் கோடற்குரியவென்பரென்றவாறு. முடிக்குஞ்சொல்லைப் பொருளென்றார், தொடர்மொழிப்பொருள் அதன்கண்ணதாகலின். காப்பினொப்பின் முதலிய சொற்கள் புரத்தல் ஓம்புதல் நேர்தல் நிகர்தல் என்றற்றொடக்கத்துப் பொருள்புணர்ந்திசைக்குஞ் சொற்களையெல்லாங் கருத்துவகையானுள்ளடக்கித் தொகுத்த மொழியாய் நிற்றலின் அவற்றைத் தொகையென்றும்,அதனினியறல் அதற்றகுகிளவி என்றற்றொடக்கத்துத் தொடர்மொழிகளினிறுதிச்சொற்களே ஈண்டுக் கொள்ளப்படுமென்பது விளக்கிய ஈற்றுநின்றியலுந்தொகையென்றும், ஊரைப்பேணும் ஊரைத்தாங்கும் என்றாற்போலப் பிறவாற்றான் வருவனவுங் காத்தற்பொருளே பயந்து நிற்றலின் அவையுந் தழுவுதற்குப் பல்லாறாகவென்றுங் கூறினார். காப்பினொப்பினென்றாரேனும், அதனைக் காத்தல் அதனையொத்தலெனச் சூத்திரஞ் செய்தலே ஆசிரியர் கருத்தெனக் கொள்க. பிறவுமன்ன. அற்றேலிஃதுத்தியாற் கொள்ளப்படுமாலோவெனின், இன்னோரன்னவை எடுத்தோத்தில்வழியே யுத்தியாற்கொள்வதென மறுக்க. அங்ஙனமல்லாக்காற் புறனடையென்பதே வேண்டாதாய் முடியுமென்றொழிக.

இனிச் சேனாவரையர் வேற்றுமைத்தொகை விரியுமாறு கூறுதற்கெழுந்ததிச்சூத்திரமென்றும், அது விரியுங்கால் அன்மொழித்தொகைபோல விரியுமென்றும், அன்மொழித்தொகைக்கட்சொற்பெய்து விரித்தலும் அநுவாதமுகத்தானீண்டேபெற்றாமென்றுமுரைத்தார். எச்சவியலுட்கூறப்படுந்தொகைச்சொல் விரியுமாறு ஈண்டுக்கூறுதற்கோரியைபில்லையென்பது மேற்காட்டினாமாகலா

7055

னும், அன்மொழித்தொகை விரியுமாறுமீண்டே பெற்றுமெனின் இன்னோரன்னவை அறுவாதமுகத்தாற் பெறுதற்குரியனவாகாது தன்னைப் பற்றுதலென்னுங் குற்றமாய் முடியுமாகலானும், அவை பொருந்தாவென மறுக்க. இதனானே உரையாசிரியர் நச்சினார்க்கினியாருரைகளுமறுக்கப்பட்டன. வடநூலார் தன்னைப்பற்றுதலென்னுங் குற்றத்தை ஆன்மாச்சிரயமென்றும், ஒன்றனையொன்றுபற்றுதலென்னுங் குற்றத்தை இதரேதராச்சிரயமென்றுங்கூறுப.

அற்றேல், எச்சவியலுட்கூறப்படும் வேற்றுமைத்தொகைக்கணுருபுதொகுமாறு "உருபுதொக வருதலும்" எ-ம். "ஐயுங் கண்ணுமல்லாப் பொருள்வயின்—மெய்யுருபு தொகாஅ விறுதி யான." எ-ம். வேற்றுமைமயங்கியலுள் இயைபின்றியோதியதென்னையெனின்;—அச்சூத்திரங்கட்கதுபொருளன்றாமாறு சூத்திரக்கிடக்கை முறையேகாட்டும்:—"அச்சக்கிளவிக்கு" என்னுஞ் சூத்திரங்களாலும் வேற்றுமைமயக்கமாமாறுகூறி, "அன்னபிறவும்" என்பதனாற் புறனடையுங்கூறிமுடித்து, பின்னர் உருபுதொடர்ந்தடுக்குதலுமொருமயக்கமாகலின், அதன்கட்படுமிலக்கணம் "உருபுதொடர்ந்தடுக்கிய" என்பதனாற்கூறினார். பின்னர் "இறுதியுமிடையும்" என்னுஞ் சூத்திரத்தால் அங்ஙனமுருபு தொடர்ந்தடுக்கும்வழி "அரிக்கும் பிரமற்கு மல்லாததேவர்கட்கும்" என்றாற்போல இறுதியுமிடையு முருபுவிரிந்தே நிற்றலை நீக்கார் வடநூலாரெனப் பிறர்மதங்கூறி, "பிறிதுபிறிது" என்னுஞ் சூத்திரத்தாற்றமிழ்நடையின் அவ்வாறு நியமமின்றி "அரிக்கும் பிரமற்கு மல்லாத தேவர்கட்குந்—தெரிக்கும் படித்தன்றி நின்றசிவம்." "கிழவன் றன்னொடுங் கிழத்தி தன்னொடு—நற்றாய் கூறன் முற்றத் தோன்றும்." என விறுதியுமிடையு முருபேற்றலும் "அருமந்த தேவ ரயன்றிருமாற் கரியசிவம்." "ஒண்டொடி மாதர் கிழவன் கிழத்தியொடு—கண்டோர் மொழிதல் கண்டதென்ப." என இடையிற்றொகவிறுதியினுருபுவருதலும் நெறிபடவழங்கிய வழக்கைச் சார்ந்து வருதலான் வழுவாகாவென்றோதி, உருபு தொகுமாறதிகாரப்பட்டமையாற்றொகாநிலைச்சொற்களினுருபுதொகுங்காற்படுமுறைமை "ஐயுங்கண்ணும்" என்னுஞ் சூத்திரத்தாலோதினார். இனியிவ்வாறன்றி "இறுதியுமிடையும்" என்னுஞ் சூத்திரத்திற்குக் கடந்தானிலத்தை நிலத்தைக்கடந்தான் என வேற்றுமைத்தொடரிறுதிக்கண்ணும் அதனிடைநிலத்தும் உருபுநிலவுதலை வரையாரென்றுரைப்பின்; "கூறிய முறையி னுருபுநிலை திரியா—தீறுபெயர்க் காகு மியற்கைய வென்ப." என்பதனால் வேற்றுமைத் தொடரின் யாண்டுப் பெயர்நின்றதாண்டுப் பெயரிறுதியினுருபு நிற்குமென்பது தானே பெறப்படுதலின், இச்சூத்திரம் வெற்றெனத் தொடுத்தலாய் முடியுமென்க.

"கூறிய முறையி னுருபுநிலை திரியாது" என்றதனாற் பெறப்படுவதனையே "வேற்றுமை வழிய பெயர்புணர் நிலையே." என்பதனானுங் கூறினார்க்கு இதுவுங்கூறவமையும் பிறவெனின்;—பிருண்டுக் கூறுமாறுபோல வேற்றுமையுருபென்னுமையானும், ஆறனுருபிறுதியிற்றெருகின் "ஐயுங்கண்ணும்" என்னுஞ் சூத்திரவிதியோடு முரணுதலானும், கூறியது கூறலாகலானும், "வேற்றுமை வழிய பெயர் புணர் நிலையே." என்பதற் கதுபொருளன்மையின், அமையாதென்க. மற்றென்னையோ அதற்குப் பொருளெனின்;—நால்வகைச் சொற்களும் இருவழியும் புணருமென மேலெய்தியதனை யொருமருங்கு மறுத்துப் பெயர்ச்சொற்புணருநிலையே வேற்றுமைவழியவாம் என்பது பொருளெனக் கொள்க. ஏகாரம் பிரிநிலையென்க. எனவே, ஏனை வினைச்சொன்முதலிய மூன்றும் அல்வழியவாவனவன்றி வேற்றுமைவழிய வாகாவெனவும், பெயர்ச்சொற்களிருவழியவுமாமெனவுங் கூறியவாருயிற்று. இங்ஙனஞ் செம்பொருள் கொள்ளமாட்டாதார் பெயர்வழிடவெனமாறி அவற்றுடனென வருவித்துப் புணர்நிலையென்பதனையும் வெற்றெனத்தொடுத்தலாக்கிக் கூறியது கூறலென்னுங்குற்றம்படவிடர்ப்பட்டுப் பொருளுரைத்தார். இவ்வாறே யாண்டு முரைசெய்தலவரியல்பென்க. "சூத்திரந் தானே—யாடி நிழலி னறியத் தோன்றி—நாடுத லின்றிப் பொருணனி விளங்க—யாப்பினுட் டோன்ற யாத்தமைப்பதுவே." என்றவாசிரியர்தாமே அங்ஙனம் பொருள்விளங்காது நாடியுய்த்துணரவைத்துச் சூத்திரஞ்செய்யாரெனவுணர்க. ஏனைச் சூத்திரங்களுமிவ்வாறே செம்பொருள்படுமாறு நுண்ணுணர்வாற் கண்டுகொள்க. "பிறிதுபிறிதேற்றலும்" என்பதற்குரையாசிரியரையுள்ளிட்டோருரைத்தவை போலியுரையென்பது மேற்கூறினும்.

அற்றேலஃதாக; "ஐயுங்கண்ணும்" என்னுஞ் சூத்திரந்தொகாநிலைச்சொற்களினுருபுதொகுங்காற் படுமுறைமையுணர்த்துதற் கெழுந்ததென்றதென்னை? உருபுதொக்கனவெல்லாந் தொகைச்சொல்லெனப்படுமாலோவெனின்;—அற்றன்று. நிலங்கடந்தான், நாய்கோட்பட்டான்; அறங்கறக்கும், வரைபாய்ந்தான், குன்றத்திருந்தான் என்பவற்றுள் உருபு தொக்கனவாயினும், வினையொடு முடிதலின், "எல்லாத் தொகையு மொருசொன் னடைய." என்னுந்தொகையிலக்கணம் பெறாது பக்கிசைத்தலான், இவை தொகாநிலையேயாமென்க. செய்தான்பொருள், இருந்தான்மாடத்து என்பவற்றைத் தொகாநிலைச்சொல்லெனக் கொண்டமையாற் சேனுவரையர்க்குமிதுவே கருத்துப்போலுமென்க. நிலங்கடந்தான், நாய்கோட்பட்டான் என்பன ஒரு சொன்னீர்மையவென்பார்க்கு நிலத்தைக்கடந்தான், நாயாற்கோட்பட்டான் என்பவற்றேடிவற்

றிடை வேற்றுமையின்மையின், அவையுந் தொகைச்சொல்லா வான் செல்லுமாறறிக.

அற்றேல், "பெயரி ளுகிய தொகையும்" என்றவும்மையாற் பெயரொடு வினைதொக்க தொகையுமுளவென்பது பெறப்படுமா லோவெனின்;—"அவ்வுமுரிய" என்பதற்கேலாமையானும், வட நூலோடு மாறுகோடலானும், அவ்வும்மைக்கது பொருளன்று; மற்றென்னைபொருளெனின்; விகுதியிளுகிய பெயருமுள அவை யுமுரியவென்பது பொருளெனக் கொள்க. வடமொழியுள் உப சர்க்கத்தோடு வினைதொக்க தொகையுமுளவென யோகவிபாகத் தாற்கொண்டது, வேதத்துளிசைபற்றியொரோவழியவ்வாறு கொள்ளவேண்டுதலானென்க. அற்றேல், வேற்றுமைத்தொகைக்கணு ருபு தொகுமென்பதியாண்டுப் பெறுதுமென்பாரை உவமத்தொ கைக்கணுவமவுருபு தொகுதல் யாண்டுப் பெற்றீரெனக் கடாவிமறு க்க. தொகையெனவே, உருபுதொகுதலுந்தானே போதரும்.

'என்ப.'

இனி என்பவென்பது பகரவீற்றுப்பலரறிசொல்.

அற்றேல், என்பவென்னும் அகரவீற்றுப்பலவறிசொல்லோடு இதனிடைவேற்றுமை யாதோவெனின்;—அகரவீறு என்பன என் பவென்முற்போல அன்பெற்றும் பெருதும், இடைநிலைவகையாற் காலங்காட்டி, முக்காலத்தினும் வரும். பகரவீறு அவ்வாறன்றி ஈற்றுவகையானெதிர்காலங்காட்டி, முதனிலையுமீறுமாகவே பகுக் கப்பட்டு வரும். இவை தம்முள் வேற்றுமையென்க.

அற்றேலஃதாக; எழுத்தெனப்படுமென்றல் முக்காலத்தினு மொத்தியல்வதாகலின், "முந்நிலைக் காலமுந் தோன்று மியற்கை" என்னுஞ் சூத்திரவிதிபற்றி நிகழ்காலப்பொதுச்சொல்லாற்கூறல் வேண்டும்; அன்றித் தொல்லாசிரியர் குறியீடென்னுங்கருத்துவ கையாற் கூறினும், இறந்தகாலத்தாற் கூறவமையும்; அவ்வாறன்றி என்பவெனவெதிர்காலத்தாற்கிளந்தவாறென்னையெனின்;—நன்று வினுயினுய். "முந்நிலைக் காலமுந் தோன்று மியற்கை" என்னுஞ் சூத்திரம் வடமொழிமதம்பற்றிக் கூறினுர், தந்துணிபுரைத்தல ன்று, இறப்பினுநிகழ்வினுமுண்மை நிகழ்ச்சியானறியக் கிடத்த லின் எதிர்காலத்தினுமுளதாதலுணர்ந்தன்றி முக்காலத்தினு நிலை பேறுடைமையுணர்ச்சி கூடாமையின். அதுபற்றி எதிர்காலச்சொ ல்லாற்கிளத்தல் தமிழ்நடையென்பதாசிரியர் துணிபென்றற்கு, எழுத்தெனப்படுப வகரமுதனகரவிறுவாய் முப்பஃதென்ப என் ருற்போல யாண்டுமுடம்பொடு புணர்த்து விதித்ததே சான்ருத

லறிக. "மூன்னிலைக்காலமும்" என்பதுபற்றி ஆசிரியர் நிகழ்காலச் சொல்லானேரிடத்துங்கிளவாமையுமறிக. அற்றேல், வடமொழி வழக்கொடு மாறுகொள்ளுமாலோவெனின்;—அறியாது கடாயி னாய். ஒருமொழியுள்ளுந் தேயவேற்றுமைபற்றி வேறுவேறு வழங் குதலியல்பாதலின், இன்னோரன்னவை மாறுகோளல்லவென்க.

'நூலோர்.'

நூலோரென்பது சொல்லெச்சம்.

அற்றேல், பொருளுணர்ந்தன்றிச் சொல்வருவித்தல் கூடாது, பொருளுணர்ந்த பின்னர்ச் சொல்வருவித்தலாற் பெறப்படுவதோர் பயனில்லை, ஆதலாற் சொல்லெச்சம் வருவித்தல்வேண்டாம் பிற வெனின்;—சொற்றொடருணர்ச்சி சொல்லானன்றிப் பெறப்படா மையின், ஒருதலையான் வேண்டுமென்க.

என்ப+சார்ந்து='என்பசார்ந்து.'

என்பசார்ந்தென்னுநிலையாத்தொடர் "உயிரீ றாகிய வுயர்தி ணைப் பெயரும்" என்ற சூத்திரத்திலேசானே இயல்பாய்முடிந்தது.

"குற்றிய லிகர நிற்றல் வேண்டும்" என்றற்றொடக்கத்துச் சூத்திரங்களாற் பெறப்படுதலின், ஈண்டுச் சார்ச்சிக்குச் செயப் படுபொருள் கூறாராயினர்.

'சார்ந்து வரல்.'

சார்ந்துவரலென்புழிச் சார்ந்தென்னும் வினையெச்சம் வரலெ ன்னுந்தொழிற்பெயரின் வாவென்னுமுதனிலையோடு முடிந்தது.

"வினையெஞ்சு கிளவிக்கு வினையுங் குறிப்பும்" என்புழி ஆண்டு வினையென்றது முதனிலையுரிச்சொல்லேயாகலின், விகுதியெவ்வாற் றான் வரினும் அதுபற்றி யாராய்ச்சி வேண்டாவெனக் கொள்க. "எதிர்மறுத்து மொழியினும் பொருணிலை திரியா" என்றதூஉமிக் கருத்தேபற்றி யென்பது. இன்னும் வினையெச்சமுடிபுவேறுபாடுக ளெல்லாம் பாயிரவிருத்தியுளுரைத்தாம்,கடைப்பிடித்துக்கொள்க.

வரன்+மரபு='வரன்மரபு.'

வரன்மரபென்புழி "மெல்லெழுத்தியையின்" என்றதனால் லகாரம் னகாரமாயிற்று.

'மரபின்மூன்று.'

மரபின்மூன்றென்பது "மெய்பெற" என்றதனானே சாரியை யுள்வழித் தன்னுருபு நிலையாது வந்தது.

மரபினவென்பது பாடமாயின், மரபினையுடையனவாகிய மூன்றெனவுரைக்க. மரபினவென்பது மரபென்னும் பண்படியாகத் தோன்றிய பெயர்.

அற்றேல், வினைக்குறிப்போடிதனிடை வேற்றுமை யாதோவெனின்;—வினைக்குறிப்புச் சொல்லெல்லாம் தெரிநிலைவினைபோல் முதனிலையிற்பொருள் சிறந்து நிற்கும். பெயர்ச்சொல் அவ்வாறன்றி விகுதியிற்பொருள் சிறந்து நிற்கும். உண்டான்சாத்தன், கரியான்சாத்தன் என்புழி வினைச்சொற்கள் முதனிலையிற் பொருள் சிறத்தலின், விகுதிப்பொருள் வேறு விளக்குதற்குச் சாத்தனென்னும்பெயர் ஒருதலையான் வேண்டப்பட்டது. இக்கருத்தேபற்றி ஆசிரியர் "எத்திறத் தானும் பெயர்முடி பினவே" என்றார். இனி உண்டான், கரியானென்னும் பெயர்ச்சொற்கள் விகுதியிற்பொருள் சிறத்தலின், அப்பொருளை விளக்குதற்கு வேறோர்பெயர் வேண்டாது, உண்டான்வந்தான், உண்டானைக்கொணா, கரியான்வந்தான், கரியானைக்கொணா எனத் தாமேயெழுவாயாய்ப் பயனிலையேற்றும், ஐமுதலிய்வுருபுகளேற்றும் நின்றன.

எல்லாச்சொற்களையுங் கூறுங்காற் பொருள்சிறக்குமிடத்தெழுத்தினையெடுத்தும், அயலெழுத்தினை நலிந்தும், ஏனையெழுத்துக்களைப் படுத்துங்கூறுக. எடுத்தல்படுத்தன்முதலிய வோசைகளும் எழுத்துச்சாரியையும் இன்னோரன்னபிறவுந் தனித்தியங்குமாற்றலுடையவுயிர்க்கேயன்றி அவ்வாற்றலில்லாத மெய்க்கில்லையெனவுணர்க.

'னகரவிறுவாய்' 'வகாரமிசையும்' 'வஃகான்மெய்கெட' என்புழி வருவன மெய்யையியக்க வந்த அகரத்தின்சாரியையெனக் கொள்க.

இச்சொல்லியல்புணராது, எழுத்தொப்புமையான் மயங்கி, வினைவினைக்குறிப்புமுற்றுக்களே ஓசைவேறுபாட்டாற்பெயராமென்பாருமுளர். ஒருகாரணமின்றி யோசைவேறுபடுதல் பொருந்தாது. பெயராயவாற்றாலோசை வேறுபட்டதெனின், ஓசைவேறுபட்டவாற்றாற் பெயராயிற்றுப் பெயராயவாற்றாலோசை வேறுபட்டதென ஒன்றனையொன்றுபற்றுதலென்னுங்குற்றமாமெனவொழிக. பொருணிலைவேறுபாட்டாற் சொல்லும் வேறெனவே கொள்க. அங்ஙனமாயினும், சொற்சுருங்குதற்பொருட்டு எழுத்தொப்புமைபற்றிப் பலபொருளொருசொல்லென்ப. நடந்தான், குழையானென்னும் வினைவினைக்குறிப்புமுற்றுச்சொற்களும் வேறு, நடந்தான், குழையானென்னும் பெயர்ச்சொற்களும் வேறென்பதே ஆசி

ரியர்கருத்தாதல், "நிலப்பெயர் குடிப்பெயர்" என்றற்றொடக்கத்துச் சூத்திரங்களை வினையியலுட்கூறாது பெயரியலுட் கூறியவாற்றானும், "நிலப்பெயர் குடிப்பெயர் குழுவின் பெயரே—வினைப்பெய ருடைப்பெயர்" என வினைப்பெயரையிவற்றுடனெண்ணலானுமறிக. சேனாவரையர்க்கு மிதுவே கருத்தாதல் "நிலப்பெயர் குடிப்பெயர்" என்னுஞ் சூத்திரத்துள் "வினைப்பெயர் வருவார் செல்வார் என்பன. தச்சன் கொல்லன் என்பனவுமவை" எனக் காட்டிய வுதாரணங்களானும், "பெயர்நிலைக் கிளவி காலந் தோன்றா" என்னுஞ் சூத்திரத்துள் "உண்டான் தின்றான் என்னுந் தொடக்கத்துப் "படுத்துச்சொல்லப் படுந்தொழிற்பெயர் வினைச்சொற்போலத் "திணையும் பாலுங் காலமுமுதலாயினவற்றை விளக்கி; அன் ஆன் "முதலியவீற்றவாய் வருதலிற்றொழினிலையொட்டுமென்றார். ஒட்டு "மென்பதுவமச்சொல்" என்னுமுரையானுமறிக. வினைச்சொற்போலவெனவே இவை வேறுசொல்லென்பது பெறப்பட்டது. பண்டியாகவரும்பெயர் பண்புப்பெயரென்றாற்போல வினையடியாக வரும் பெயர் வினைப்பெயரென்பதே சேனாவரையர்க்குங்கருத்து.

வடநூலார் முதனிலையைப் பிரகிருதியெனவும், விகுதி இடைநிலை வேற்றுமையுருபுகளைப் பிரத்தியயமெனவும், அவற்றுட்பெயர் முதனிலையைப் பிராதிபதிகமெனவும், வினைமுதனிலையைத் தாதுவெனவும், பெயர்விகுதியைத் தத்திதமெனவும், வினைமுதனிலைமேல்வரும் பெயர்விகுதியைக் கிருந்து எனவும், வினைமுற்றுவிகுதியைத் திங்கெனவும், வேற்றுமையுருபுகளைச் சுப்பெனவும், இடைநிலையை விகரணியெனவும் கூறுப. வடமொழிவினைச்சொற்களுள் விகுதியே காலங்காட்டுமாகலின், இடைநிலை வினைமுதற்பொருண்மைமுதலியனபற்றி வரும் வினைக்குறிப்பு வடமொழிக்கின்று. இவையெல்லாமுதனிலையுமீறுமாகப் பகுக்கப்படுதல்பற்றிப் பின்னுள்ளோரிவற்றைப் பகுபதமெனப் பெயரிட்டு வழங்குப.

இனி "யாருமில்லை தானே கள்வன்" என்பதனுட் 'கால' வென்பதுபோல மரபினவென்பதும் மரபினையுடையவெனப் பெயரெச்சவினைக்குறிப்புச் சொல்லென்றலுமொன்று. அற்றேல், காலவென்புழி அகரம் பால்காட்டுமீறென்றாற்படுமிழுக்கென்னையெனின்;—அஃதுண்டென்னு மொருமைச்சொற்கொண்டு முடிதலிற் பால்வழுவாய் முடியுமென்க. இவ்வுண்டென்னுஞ்சொல் ஐம்பான் மூவிடத்திற்கும் பொதுவன்றோவெனின்;—அறியாது கடாயினாய். உளன், உளள், உளர் என்பனபோலக் குறிப்புணர்த்தி இன்றென்பதற்கு மறுதலையாய் அஃறிணையொருமைக்குரிய டுவ்விகுதி பெற்று நிற்கும் உண்டென்னுஞ்சொல்லும் வேறே, இல்லென்பதற்கு

மறுதலையாய் உண்மைத்தன்மையுணர்த்தி வேறு, இல், யார், எவன் என்பனபோல விகுதியின்றிப் பொதுச்சொல்லாயே நிற்குமுண்டென்னுஞ்சொல்லும் வேறேயெனக் கொள்க. இது யாரென வகரங்கெட்டு நிற்கும் பலரறிசொல்லும் வேறே, யாரென்னும் வினாவினைக்குறிப்பும் வேறேயாமாறுபோலக் கொள்க. "நினைத்தாளன்ன சிறுபசுங் கால—வொழுகுநீ ரரல் பார்க்குங்—குருகுமுண்டு" என்புழி உண்டென்பது குறிப்புணர்த்தி நிற்றலின், அஃதொருமைச்சொல்லேயாமெனவுணர்க. அற்றேல், காலகுருகென்பது பன்மையொருமைமயக்கமெனக் கோடுமெனின்;--அற்றன்று, "மாடமது வார்சடைய வள்ளலையு மொக்கும்" எனவுயர்திணைக்கண்ணும் பயின்று வருதலின், ஒருகாரணமின்றித் திணை மயங்குதல் பொருந்தாமையின், இன்னோரன்னவையெல்லாம் பெயரெச்சவினைக்குறிப்பேயாமென்க.

'மூன்று.'

இனி மூன்றென்பதாகுபெயரான் அத்தொகையுடையவற்றையுணர்த்திற்று. இது "கிளந்தவல்ல" என்னுமாகுபெயர்ப் புறனடையாற்கொள்க. இதனையாகுபெயரன்றென்பாருமுளர். நெல்லையளந்துபார்த்தும் பொன்னை நிறுத்துப்பார்த்துமன்றி அவற்றிற்குப் பதக்குத் தொடியென்று அளவும் நிறையுமாகிய பெயர் கூறப்படாமைபோலப் பத்துப்பொன்னையுமெண்ணிப்பார்த்தன்றி அவற்றிற்குப் பத்தென்னும் பெயர் கூறப்படாமையானும், "ஆறறியந்தணர்" என்புழி ஆறென்னும் வரையறைப்பண்புப்பெயர் அப்பண்பினையுடையவங்கத்தினையுணர்த்தி ஆகுபெயராய் நிற்குமெனக் கூறிய நச்சினார்க்கினியார்க்கு எண்ணுப்பெய ராகுபெயராதற்கேலாதென்றது கருத்தன்றாகலானும், உரையாசிரியர்க்குமிவற்றையாகுபெயரென்றலே கருத்தாகலானும், எண்ணுப்பெயரு மெண்ணப்படும்பொருளையுணர்த்தும்வழி யாகுபெயரேயாமென்க. இன்னுமுயர்திணைக்கண் மூவரென விகுதி நின்றே பொருளையுணர்த்துதலான், அல்லுழியாகுபெயராயே நின்று பொருளையுணர்த்துமெனவுணர்க. இன்னோரன்னவற்றிற்கெல்லாம் வடநூலார் விகுதி நின்று கெட்டதென்பர்.

அல் + அம் + கடை = 'அலங்கடை.'

இனி அல் கடையென்னுங்கடையீற்றுவினையெச்சக்குறிப்புச் சொல் அம்முப்பெற்று அலங்கடையென நின்றது.

ஏகாரமீற்றசை.

இன்னும் விரிக்கிற்பெருகுமாகலினமைக.

சொன்னிலையொருவகையாற்காட்டப்பட்டது.

குற்றியலுகரமுதலியவற்றிற்குச் சார்பு "குற்றிய லிகர நிற்றல்வேண்டும்" என்றற்றொடக்கத்து வருஞ் சூத்திரங்களாலுணர்க. இவை மொழிக்கட்படுத்துக்காட்டவேண்டுதலின், ஈண்டுவையாது மொழிமரபில் வைத்தார். அற்றேல், மயக்கச்சூத்திரங்களுமாண்டுவைக்கவெனின்;—அற்றன்று: "பன்னீ ருயிரு மொழிமுதலாகும்" "உயிர்ஔ வெஞ்சிய விறுதி யாகும்" என்பனபோல இடையேவருமென்றது இவ்வெழுத்திற்கிவ்வெழுத்து நட்பு அல்லன பகையென்னுந்துணையானே கருவிசெய்தலின், இவையீண்டேவைக்கப்பட்டன. இஃதறியாதார் தத்தமக்கு வேண்டியவாறேயுரைப்ப. ஆசிரியர் நட்பெழுத்துப் பகையெழுத்தாமாறீண்டுக்கூறியினமாமாறு பிறப்பியலாற்கூறுவர். அற்றேல், பிறப்பியலை நூன்மரபிற் கூறுகவெனின்;—பிற்கூறியினமடைக்கவேண்டுதலானும், விரிவுடைமையானும், வேறோரோத்தாகக் கூறினாரென்பது. அற்றேல், பிறப்பியலை நூன்மரபினைச் சார வைக்கவெனின்;—அற்றன்று: மொழிமரபிற்கூறும் விதியெல்லாம் நூன்மரபினொழிபாகலான், அஃததன்பின்னர் வைத்துப் பிறப்பியலவற்றின்பின் வைக்கப்பட்டது.

மொழிமரபிற்கூறும் விதிகள் நூன்மரபினொழிபாமாறு:— "குற்றிய லிகர நிற்றல் வேண்டும்" என்பது முதல் "உருவினு மிசையினும்" என்னுஞ் சூத்திரங்காறும் 'அவைதாம்' என்பதனொழிபு. "குன்றிசை" "ஐ ஔ" இரண்டும் "நீட்டம்" என்பதனொழிபு. "நெட்டெழுத்தேழே" என்பது "அவற்றுள் அஇஉஎ" "ஆஈஊஏ" என்பவற்றினொழிபு. மொழியாக்கம் அதிகாரப்பட்டமையின் ஓரெழுத்தொருமொழியென்பதுமுடன்கூறினார். "மெய்யினியக்கம்" என்பது "னகார விறுவாய்" என்பதனொழிபு. "தம்மியல் கிளப்பின்" என்பது முதல் "மகரத் தொடர் மொழி" என்னுஞ் சூத்திரங்காறும் மயக்கச்சூத்திர வொழிபெனக் காண்க. இதனை விரிப்பிற்பெருகும், உய்த்துணர்ந்தமைத்துக்கொள்க.

## தொல்காப்பியமுதற்சூத்திரவிருத்தி ஒருவகையான்முடிந்தது.

மெய்கண்டதேசிகன்றிருவடிவாழ்க.

கணபதி துணை.

# இலக்கணவிளக்கச்சூறாவளி.

## பாயிரம்.

முன்னர்ப் பாயிரத்தை வைத்து இது பாயிரமென்றுரைத்துப் பின்னர் அதுகேட்ட மாணாக்கர்க்கு நூலுரைப்பான்றொடங்கினார், இப்பாயிரமுரைக்கவேண்டுவதென்னையென்னுங்கடா நிகழ்தற்கிடனுளதாய வழி, இவ்விவ்வேதுக்களான் முன்னர்ப் பாயிரமுரைக்க வேண்டுமென்றிறுத்தலமையும். அவ்வாறொரியையுமின்றித் "திருவிளங்கியமாநகர" முதலாகவெடுத்துரைக்குமுத்தரஞ் செப்புவழுவு மற்றொன்று விரித்தலுமாய் முடியுமென்க. இவ்வாறு தொல்லாசிரியருரையாமையுங்காண்க. 'கங்கையாடிப் போந்தேனொருபிடிசோறுதம்மின்' எனக் கடாவின்றியுஞ்செப்பு நிகழ்ந்ததாலெனின்;—கொடுப்போன்பாலேற்போன் சென்றுழி, அவன் யாண்டுவந்தாயெனக் கடாவாளாயினும், கடா நிகழ்தற்கிடமுண்மையின், அதுவும் வினையபொருளை யறிவுறுத்தலேயாமென்க. அங்ஙனங்கொள்ளர்க்காற் செப்பிலக்கணம் பொருந்தாமையறிக. வடநூலாரும் மேற்கோள் முன்னர்க் கூறியே பின்னர் ஏது முதலிய நான்குறுப்பும் ஒன்றன்பின்னொன்றியைபுபடக் கூறுமாறறிக. பரிமேலழகர் உரையாளர் பாயிரமியம்புதல் கடனென்பதுபற்றி "இந்திரன்முதலிய" முதலாக்ச் சிறப்புப்பாயிரமே யுரையாற்கூறினார். இதுநிற்க.

அவயவமாகிய பாயிரத்துள் அவயவியாகிய நூலடங்காதென்றார், அவற்றியல்புணராமையின். அன்றியுமாசிரியர் தொல்காப்பியனார் நூலினியல்பு மரபியலுட்கூறினார். "மூன்றுறுப் படக்கிய பிண்டத் தானும்" எனவும் "ஒத்துப் படல மென்னு முறுப்பின்" எனவுங்கிளந்தெடுத்தோதலின், அஃதவயவமென்ப தவரறிந்திலர் போலும். இன்னும் "நூனுதல் பொருளைத் தன்னகத் தடக்கி" என்பதனைத் தழீஇயினாராகலின், நூலியல்பு பாயிரத்துளடங்காதென்றல் அவர்க்குங் கருத்தன்றென மறுக்க.

சிறப்புப்பாயிரத்துள் ஆக்கியோன்பெயர் முதலியவற்றிற் கெடுத்துக்காட்டினவற்றுட் சில பொருந்தாமை தொல்காப்பியப் பாயிரவிருத்தியில் விரித்துரைத்தாம், ஆண்டுக் காண்க.

பாயிரமுற்றிற்று.

# எழுத்ததிகாரம்.

## எழுத்தியல்.

எழுத்ததிகாரமென்புழி அதிகாரம் முறைமையென்றார். அதிகாரமென்னும் வடசொற்கு அது பொருளன்மை தொல்காப்பிய விருத்தியிற் கூறியவாற்றானறிக.

### க. "மலைமகளொருபால்."

மலைமகளென்பது மலையுமகளெனவும் அமங்கலப்பொருட்ந்து "தொகையார் பொருள் பலவாய்த் தோன்ற" லின் மலையென்பதும், பொருளதிகாரத்துள் "உமையுரு வுரும்மடுத்து" என்னுஞ் சூத்திரத்துள் ஏனையவற்றிற்கு மேற்குமாறு மலைமகளொருபாலென்னுஞ் சூத்திரத்திற்குரைத்தாங்குப் பொருள்விரித்துரைத்துக் கொள்கவென்றமையின் ஈண்டு மலைமகளொருபான் மணந்தென்றது இந்நூனின்று நிலவுதல்வேண்டியென்றார்க்கு ஆண்டிதற்கு மறுதலையாக உமையுருவுரும்மடுத்தென்றது இந்நூனின்று நிலவாதிருதல் வேண்டியெனப் பொருட்டருதலின் மலைமகளொருபான் மணந்தென்பதும், உறுபொருண்முதலிய வெல்லாவற்றிற்குமுரிய வேந்தனை உல்குபொருட்குரிய வேந்தனென்றல் அவனிறைமைக்கேலாதவாறுபோல ஐந்தொழிற்குமுரிய தலைவனை உலகளித்த தலைவனென்பது தலையன்மையிற் றலைவனென்னும் பெயர்க்கேலாமையின் உலகளித்தவென்பதும், உலகளித்தவென்றமையாற் றலைவனென்பதும், "வில்வணக்கந் தீங்கு குறித்தமை யான்" எனவும் "முதிர்தலை வணங்கி" எனவும் "வணங்குநுண் மருங்குல்" எனவும் வணங்குதற்கு வளைவே பொருளாகக் கோடலிற் றலையின் வினையாகிய இறைஞ்சுதலையே யுணர்த்துமென்பதுபற்றிச் சொல் வணக்கமென்பது சொல்லாகிய வணக்கமெனப் பொருளுரையாது ஒப்புமைபற்றிக் கூறினமைதோன்றப் பரிமேலழகர் "சொல்லினது வணக்கம்" எனக் கூறினமையானும், "வணங்கிய வாயினராதலரிது" என்பது "பணிந்த மொழியினையுடையராதல் கூடாது" என்றும் "பணிந்தமொழி பணிவைப் புலப்படுத்திய மொழி" என்றுங் கூறினமையானும், "மனமொழி மெய்களின் வணங்குது மகிழ்ந்தே" என்புழியும் ஒப்புமைபற்றிக் கூறியதேயாமாகலானும், "தாளை வணங்காத்தலை" எனவும் "அவனை நினைத்தலும் வாழ்த்தலும் வணங்கலுஞ்செய்யாதவழி" எனவுங் கிளந்தோதுதலானும், வணங்குதல் சிறப்புவினையாவதல்லது பொதுவினையாகாமையின் வணங்கியென்பதும், அவ்வப்பயன்குறித்து வாராமையறிக. இவ்வாறு மேலுஞ்சொற்றொறுமுள்ள குற்றங்களைக்கூறின், விரியுமென்றொழிக.

## ௨. "எண்பெயர் முறைபிறப்பு."

எண்ணுதற்கும் பெயர் கருவியாகலின், அதனை முற்கூறுதது முறையன்று. எண்ணுமுறையும் போல்வனவற்றால் ஒருபயனின்மையின், அவற்றை வகையுட்சேர்த்துக் கருவிசெய்தல் பயனில் கூற்றாமாறறிக.

போலியெழுத்தென வொன்றில்லையென்பது தொல்காப்பிய முதற்சூத்திரவிருத்தியுட்காண்க.

## ச. "உயிரு முடம்பும்."

சுருக்கச்சொல்லுநூற்கண் எந்தவிதியுமோரிடத்துக் கூறிப் பலவிடத்துணர்ந்துகொள்ளும்படி சூத்திரஞ்செய்தலே மரபு. அவ்வாறன்றி உயிரீராறு மெய்ம்மூவாறென்னுந்தொகைகளை எண்ணுச்சூத்திரத்தும் பெயர்ச்சூத்திரத்தும் வேறுவேறு கூறன் மிகையாமென்க.

## ரு. "குற்றியலிகரங் குற்றியலுகரம்."

ஆசிரியர் தொல்காப்பியனார் சார்பெழுத்து மூன்றேயென வரையறுத்திருப்பவும்; தாமவரினுநுண்ணறிவுடையார்போன்று, நன்னூலார் கூறியசொற்பற்றிச் சிலமுதலெழுத்துக்களையும் அம்மூன்றனோடு கூட்டிச் சார்பெழுத்தெனக்கொண்டார். அது பொருந்தாமை விருத்தியில் விரித்துக் காட்டினும், ஆண்டுக்காண்க. முதலெழுத்துக்களே தம்மோடு தாஞ்சார்ந்தும் இடஞ்சார்ந்தும் பற்றுக்கோடு சார்ந்தும் வருதலாற் சார்பெழுத்தெனக் காரணக்குறியாயிற்றெனின்;—அஃதாய்தத்திற்குப் பொருந்தாமையின் அவ்வியாத்திக்குற்றமும், ஆல் கால் என்பன தம்மோடு தாஞ்சார்ந்து வருதலின் அதிவியாத்திக்குற்றமுமாமாறுகாண்க.

இடவேற்றுமையாற் குற்றியலுகர முப்பத்தாறுதல் சாலுமென்பதும் விருத்தியுட்காட்டினும்.

## கூ. "அகரமுதல."

நன்னூலார் மொழிமுதற்கட்சுட்டுப் பொருளுணர்த்திவரினல்லது சுட்டெழுத்தாகாவென்பார் "தனிவரிற்சுட்டு" என்றார். தாமுமவ்வாறுகூறாது, எவ்வாறு வரினுஞ் சுட்டெழுத்தாமென்று பொருன்பட வாளா "மொழிமுதல்வரிற்சுட்டு" என்றதுவுமன்றி, அவர் கருத்தறியாது குற்றமுங்கூறினார்.

அ. "தோற்றமளவு."

இது பொருந்தாமை விருத்தியுட்காண்க.

கூ. "உயிருழப்பு."

"படைகுடி கூழமைச்சு நட்பர ணாறும்" என்பழிப்போலச் செய்யுளின்பம்படத் "தலையினு மிடற்றினு நெஞ்சினு நிலைஇ" எனச் சூத்திரஞ் செய்தவாசிரியர்கருத்தை நோக்காது, அதுவே முறையாகக் கொண்டார். சைவாகமங்களின் உந்தியினின்றெழுந்த நாதம் நெஞ்சின்கட்பைசந்தியாய்க் கண்டத்தின்கண் மத்திமையாய் நின்று பின்னர் வைகரியாய் வெளிப்படுமென்றதனையல்லது இவர் கூறிய முறையாற் பிறக்குமென்னுமையானும்,பிறவாற்றானும், அது முறையன்மையறிக.

கக. "அவற்றுள்—முயற்சியுள்."

நாவிளிம்பணுகுதற்குக் காரணமாகிய பல் அண்பல்லென்றார். பல் நாவிளிம்பணுகுதற்குக் காரணமாயின், அணுகுதற்குச் செயப்படுபொருள் யாதென்பார்க்கு விடையின்மையறிக.

கரூ. "நெடிலோடாய்தம்."

நெடிலோ டாய்த முயிர்வலி மெலியிடைத் தொடர்மொழி யென்னாது "நெடிலோ டாய்த முயிர்வலி மெலியிடை தொடர் மொழி" என இவை யெழுவாயாகவும் தொடரென்பதிவற்றின் பயனிலையாகவுங்கூறி, பதவுரையுள்ளுமிவ்வாறேயுரைத்தார். உரைக்கவே, இவ்வைந்துந்தொடரப்படுவது உகரப்பற்றுக்கோடாகிய ஈற்றுவல்லெழுத்தொன்றுமேயன்றிச் சொன்முழுதுமன்மையின், இவற்றின்மேற் பிறதொடரவும் பெறுமெனக் கூறுவிடின், இவ்வைவகை யெழுத்துமீற்றெழுத்துங் கூடியே ஒருமொழியாய் நிற்குமெனவும்பட்டு, அது இது வென்றற்றொடக்கத்தனவுங் குற்றியலுகரமாவான் செல்லுமாறறிக. ஆறன்பகுதியாகிய முப்பத்தெட்டுந்தொடரவேண்டுமென்னும் யாப்புறவின்றி ஏற்றபெற்றி தொடருமெனக் கொள்க என்றுரையாது, வன்மையெனப் பொதுப்படக்கூறுதலான், ஆறனையுந்தொடரவேண்டுமென்னு மியாப்புறவில்லையெனத் தமக்குத் தோன்றியவாறேயுரைத்தார்.

ஏழிடங்தொண்டார்க்குப் பிண்ணாக்குச் சுண்ணாம்பு என்றாற் போல்வனவும் ஆய்தந்தொடர்ந்தனவும் அடங்குமென்பதும் பிறவும் விருத்தியுட்காண்க.

## ௧௭. "குறியதன்முன்னர்."

விலஃகி இலஃகு எனக் குறிலிணைக்கீழ் ஒற்றில்வழியொற்றாய் வருவதூஉம் ஆய்தமேயாதலானும், இன்னமுதலெழுத்தைச் சார்ந்து தோன்றுமென நியமித்தவாறு தோன்றுதலே சார்பெழுத்திற் கிலக்கணமாதலானும், ஏனையவெல்லாம் எவ்வாற்றான் வரினுங் கூறியவிதியிற் பிறழ்ந்து வாராமையானும், ஆய்தங்குறிலிணைக்கீழ் வாராதென்றல் பொருந்தாதென மறுக்க. அஃகாமை அஃகுதல் என வல்லாறன்கீழ்ப் பிறவெழுத்துக்கள் வரினும், ஒன்பஃது ஒருபஃது எனக் குறியதன்மேற்பிறவெழுத்துக்கள் வரினும், ஆய்தங் குறில்வலிநடுவணதேயாமென்பார், "குறியதன் முன்ன ராய்தப் புள்ளி—யுயிரொடு புணர்ந்தவல் லாறன் மிசைத்தே" என்றாசிரியர் தொல்காப்பியனாருமென்க.

## ௧௮. "புள்ளியில்லா."

உயிர்த்தலென்பதற்கு ஒலித்தலென்பொருளுரைத்தார். மூன்றுருவாகியும் உருவுதிரிந்துமுயிர்த்தல் வரிவடிவிற்கல்லதொலிவடிவிற்கன்மையின், ஒலித்தலென்னும் பொருளேலர்மையுணர்க.

## ௧௯. "இசைகெடின்."

இதற்கு விருத்தியுட்காண்க.

## ௨௧. "தற்சுட்டளபொழி."

மூவழியு மையு மென்றதனான் ஐகாரமொழிக்கணன்றிக் குறுகாதென்பதுதானே பெறப்படுதலிற் றன்னைச்சுட்டுதற்கட்குறுகாதென்றலும், ஐகாரமளபெடுத்தல் மேற்கூறப்பட்டமையிற் றன்மாத்திரையின் மிக்கொலிக்கு மளபெடைக்கட்குறுகுங்கொல்லோவென்னுமையமின்மையின் அளபெடுத்தற்கட்குறுகாதென்றலும், பயனில்கூற்றாமென்க.

ஐகாரமொழிமுதற்கட்குறுகாமையும் ஔகாரக்குறுக்கமென வொன்றின்மையும் விருத்தியுட்காண்க.

## ௨௨. "லளமெய் திரிந்த."

திரிதல் யாண்டுப் பெற்றாமெனின் அறுவும் அறுவாதமுகத்தானீண்டேபெற்றாமென்றார். போன்ம் மருண்ம் என்பன பகுபதங்களாகலின், உரைத்தான் உயிர்த்தான் கற்பான் நிற்பான் என்பனபோல இவையும் பகுபதவுறுப்பாறனுட் சந்திநோக்கி விகாரப்பட்டமையுணர்ந்திலர்போலும். நடந்தாலென்புழி அவர்தாமே "இயல்பினும் விதியினும்" என்னும் புணரியற்சூத்திரவிதியான் முடித்துக்காட்டியவாறுமறிக.

## உ௬. "தொல்லைவடிவின."

புள்ளியுந்தொல்லைவடிவேயாயினும் எகர ஏகாரங்கட்கும் ஒகர ஓகாரங்கட்குந் தனிமெய்க்கும் உயிர்மெய்க்கும் வடிவொப்புமைகண்டு அவ்வொப்புமைமேல் வேற்றுமைசெய்யும்பொருட்டு அவற்றிற்கு முன்னோர் பின்னர்ப் புள்ளியிட்டெழுதுகவென்றாரென்னுங்கருத்தான் "ஆண்டெய்தும்" என்றார்க்கு, அகர ஆகாரங்கள் உகர ஊகாரங்கள் முதலியனவும் அத்தன்மையவாகலின், அவற்றிற்கும் வடிவொப்புமைகண்டு அவ்வொப்புமைமேல் வேற்றுமைசெய்யும்பொருட்டு அவற்றிற்கு முன்னோர் பின்னர்க் கீழ்விலங்கும் புள்ளிக்காலுமுதலியவிட்டெழுதுக வென்றாரென்னுங் கருத்தான் அவை கீழ்விலங்கு முதலியன பெறுமென்றோதாமை குன்றக்கூறலாமாகலின், நன்னூலார் கூறிய "ஆண்டெய்தும்" என்பதற்கு அது கருத்தன்றென்க. அங்ஙனங் கடாயினார்க்கு வேறிருக்குமுறை யறியாமையிற் றமக்கு வேண்டியவாறே கூறினார். மேலுமிவ்வாறே நெகிழ்ந்து போவனவற்றை ஆண்டாண்டு விரிக்கிற்பெருகும், ஆகலினின்னோரன்னவற்றை விரிக்கின்றிலம்.

## உ௭. "ஐ ஔவலவொடு."

முதலாவனவிவை ஈறுவனவிவையென ஈண்டுக்கருவிசெய்தது மேனிலைமொழியீறு வருமொழிமுதலோடியையப் புணர்க்கும் பொருட்டன்றேயெனத் தாமுங்கூறினார். புணர்ச்சிக்கட் படுஞ்செய்கை எல்லாமொழிக்கும் பொதுவாகக் கூறியதன்றித் தமிழ்மொழிமாத்திரைக்கன்றுமன்றே. அதற்கேற்ப ஈண்டு நால்வகைமொழிக்கும் பொதுவாகக் கருவிசெய்யாது தமிழ்மொழிமாத்திரைக்கே கருவிசெய்யிற் புணர்ச்சிக்கட்படுஞ் செய்கையுந் தமிழ்மொழிமாத்திரைக்கே விதித்தல்வேண்டும்; அவ்வாறன்றிப் பிரமகோட்டம் பிரமக்கோட்டம், வாசுதேவகோட்டம் வாசுதேவக்கோட்டம் என்றாற்போலப் பிறண்டும் வடமொழியுதாரணங்களு மெடுத்துக்காட்டி, இடையுரிபோல வடமொழிக்குஞ் செய்கையியம்பி, அவ்வியம்பிய கொளாதவற்றிற்கு "இடையுரி வடசொலி னியம்பிய கொளாதவும்" என்னுஞ்சூத்திரத்தாற் புறனடையுந் தாமுங் கூறுதலானும், "திங்களு நாளு முந்துகிளந் தன்ன" என்னுஞ் சூத்திரத்தான் ஆசிரியர் தொல்காப்பியனார் வடமொழிப்புணர்ச்சியே சிறந்தெடுத்தோதுதலானும், அதற்கேற்ப ஈண்டெல்லாமொழிப்புணர்ச்சிக்குங் கருவிசெய்யாது தமிழ்மொழிப்புணர்ச்சிமாத்திரைக்கே கருவிசெய்தல் குன்றக்கூறலென்னுங் குற்றமாமென்க. அல்லதூஉம், "தம்பொறிகளால்யவனர் தாட்படுத்த பொறியே" எனவும் "பலர்தொல் யூபநட்ட வியன்களம் பலகொல்" எனவும் "ஞமலி

தந்த மனவுச்கு லுடம்பின்" என்வும், பிறண்டுஞ் சான்றோரெல்லாம் இவற்றை மொழிக்கு முதலாகவெடுத்து நிலைமொழி வருமொழியாகப் புணர்த்து இவ்வாறு மொழிக்கு முதலாகாதவாரியச் சொற்களை அரத்தம் இரதி உலோபமென மொழிக்கு முதலாமெழுத்துக்களோடு கூட்டிக் கூறுதலின், அதற்கேற்ப இவ்வெழுத்துக்கண் மொழிக்கு முதலாம் இவ்வெழுத்துக்கண் மொழிக்கு முதலாகாவென எல்லாமொழிக்கும் பொதுப்பட வரைந்தோதாவிடின், ஆரியச்சொற்கள் ரத்தம் ரதியென்றாற்போல வேண்டியவாறே மொழிக்கு முதலாக வெடுத்து நிலைமொழி வருமொழியாகப் புணர்க்கப்பட்டு வழுவாமென்னுங்கருத்தானும், நன்னூலார் எல்லா மொழிக்கும் பொதுவாக மொழிக்கு முதலாமெழுத்துக்களிவை ஆகாவெழுத்துக்களிவையென வரைந்து சூத்திரஞ்செய்தார். இவரிவ்வியல்புணராமையிற் றமக்கு வேண்டியவாறே கூறினார். "ஐ ஔவெனுமூன்றலங்கடை" என்பது முதலாக இவ்வெழுத்துக்களை மொழிக்கு முதலாகாவென ஆசிரியர் தொல்காப்பியனார் விலக்கினமையின், இவ்வடமொழிகளுந் திசைச்சொற்களும் அக்காலத்திவ்வாறு தமிழின்கட்பயின்றுவாராமை பெறுதும்.

ஙனமென்னும் பலபொருளொருசொற் றனித்து வருதலின்றியாழ்க்களின்வழிச் சார்ந்து வருமாகலின், அக்கருத்தானே ஆசிரியர் தொல்காப்பியனார் "முதலா கெழுத்து ஙகரமொடு தோன்றும்" என்றார். அவ்வழக்கிக்காலத்து வீழ்ந்தமையின், இக்காலத்துப் புதியனபுணர்த்தலான் வழங்குதற்கேற்ப, நன்னூலார் "சுட்டியா வெகர வினாவழி" என்றார், இவரக்கருத்தறியாது தோன்றியவாறே குற்றங்கூறினார். அங்ஙனம் இங்ஙனமெனச் சார்ந்துவருவனவற்றிற்கு அங்கு இங்கு எனவுருப்பாய் வருவனவற்றை யெடுத்துக்காட்டி மறுத்தல் பொருந்தாமையறிக.

## உ.அ. "ஆ வினுணநமன."

குற்றுகரத்தைப் புணர்ச்சி வேறுபாட்டான் வேறெடுத்தோதினதாகக் கூறினார். அல்லுழியுயிரேயாமென்னுங்கருத்துப்போலும். அஃதாசிரியர் தொல்காப்பியனார்க்குக் கருத்தாயிற் குற்றியலுகரப் புணரியலை உயிர்மயங்கியலைச் சாரவைப்பர். அங்ஙனம் வையாது புள்ளிமயங்கியலின் பின்னர் வைத்தது இம்மயக்கம் வாராமைப் பொருட்டென்றே கொள்க. முதலெழுத்திற்குப் புணர்ச்சி கூறிப் பின்னர்ச் சார்பெழுத்திற்குப் புணர்ச்சிகூறவேண்டுதலின், அம்முறைபற்றிக் குற்றியலுகரப்புணரியலை உயிர்மயங்கியல் புள்ளிமயங்கியலின் பின்னர் வைத்தாரென முறைகூறவறியாது, நச்சினார்க்கினியார் மெய்யுயிரென்றவற்றுள் உயிரினது விகாரமாய் நின்ற

குற்றியலுகரத்தை இருவழிக்கண்ணும் புணர்க்கின்றமையிற் புள்ளிமய்ங்கியலோடியையுடைத்தாயிற்றென்றார். உயிரினது விகாரமாயின் உயிர்மயங்கியலைச் சாரவையாது புள்ளிமயங்கியலைச் சாரவைத்தன் முறையன்மையின், அது பொருந்தாதென்க. ஆய்தத்தை யொருநிமித்தம்பற்றி யொற்றின்பாற்படுப்பினும் பதினெட்டொற்றுளடங்காதவாறுபோலக் குற்றியலிகரக் குற்றியலுகரங்களை யொருநிமித்தம்பற்றி உயிரின்பாற்படுப்பினும் பன்னிரண்டியிருள்ளுமடங்காது வேறேயாமெனக் கொள்க.

உகூ. "குற்றுயிரளபு."

ஈண்டுதாரணங்களுட் சிறிது பொருந்தாமை யுய்த்துணர்க. எழுத்து வேற்றுமையல்லது இடவேற்றுமைபற்றியெண்ணலாகாதென மேலோதியவர் ஈண்டுமவ்வாறே உயிரீறு பன்னிரண்டெனவெழுத்து வேற்றுமைபற்றியெண்ணமறந்து, இடவேற்றுமைபற்றியெண்ணி, உயிரீறு நூற்றறுபத்துமூன்றென மயங்கிக் கூறினார். முதலுக்குமிஃதொக்கும்.

ஙூ0. "னகரவிறுதி."

"மகரத் தொடர்மொழி மயங்குதல் வரைந்த—னகரத் தொடர்மொழி யொன்பஃ தென்ப" எனவாசிரியர் தொல்காப்பியனார் வரைந்தோதியிருப்ப, இவர் இத்தொடக்கத்தனவெனப் பின்னுஞ் சிலவுளவாக அவரோடு மாறுகொளக் கூறினார். நிலன் நிலம் என்றற்றொடக்கத்துக் குறிலிணையொற்றாய் நிற்குஞ் சொற்களின் னகரம் மகரத்தோடு மயங்கிநிற்குமாற்றலுடைமையின், அவ்வாற்றலுடையவற்றுள் மயங்காது நிற்குஞ்சொற்களே யெடுத்தோதி விலக்கல்வேண்டும். அவ்வாற்றலில்லாத கடான் வயான் என்றாற்போலுங் குறினெடிலொற்றுக்களை யெடுத்தோதி விலக்கல்வேண்டியதென்றுக்கென்க. யாண்டுங்குறிலிணையொற்றல்லுழி வரும் னகரமும் மூவெழுத்தினிறந்த தொடர்மொழி னகரமும் மகரத்தோடு மயங்காமை கண்டுகொள்க. ஆசிரியர் தொடர்மொழியென்றாராயினும், தொடர்மொழியுண் முந்தியதாகிய மூவெழுத்துத்தொடர்மொழியென்பதே கருத்தாகக் கொள்க. அவற்றுள்ளுங் குறிலிணையொற்றாகிய மொழியென்பது ஏற்புழிக்கோடலாற்கோடும்.

ஙுக. "கசதபவொழித்த."

மெய்யொடு மெய்யிணைபதற்கே சையோகமென்னுங்குறி வடநூலார் கூறுவர். ஆசிரியர் தொல்காப்பியனாரும் "அம்மூ வாறும் வழங்கியன் மருங்கின்—மெய்ம்மயங் குடனிலை தெரியுங் காலை",

என மெய்யொடு மெய்யியைதற்கே மயக்கமென்னுங்குறியீடு கூறினார். அக்கருத்தேபற்றி நன்னூலாரும் "இவ்விருபான்மயக்கு மொழியிடை மேவும்" எனச் சூத்திரப்பொருளை முடித்து, உயிருமெய்யு மயங்குமயக்கத்துக்கு வரையறையின்மையின் அவையிக்குறியீடு பெறுவென்பார், "உயிர்மெய்மயக்களவின்றே" என வொழிந்தார். ஒன்றோடொன்றியைதலொப்புமைபற்றி "ஏழூத்தனிக் குறிலணையா" என்பதனை இதனைச் சாரவைத்தார். அதனானது மயக்கமென்னுங்குறியீடு பெறுமையறிக. அக்கருத்தறியாது அவற்றிற்கு மயக்கமென்னுங்குறியீடு கொண்டாராயினும், முதலிறுதிகளை ஒற்றுமைநயம்பற்றி உயிர்மெய்முதல் உயிர்மெய்யீறென வோதாது வேற்றுமை நயம்பற்றி மெய்ம்முதல் உயிரீறென வோதியவாறே, ஈண்டும் கருவி துணங்கை யென்பவற்றை உயிர்மயக்கமெனக் கோடல்வேண்டும். அதனை மறந்து உயிர்மெய்மயக்கமென்றல் பொருந்தாமையறிக.

## ௩௫. "தம்மரபிசைப்பின்."

முதலாமெனவே, ஈறுதலுந்தானே பெறப்படும். முதலீறிடைநிலையென வேண்டாகூறினார். இவ்விதிக்கும் பயன்கூறுதார்க்கு இச்சூத்திரம் பயனில்கூற்றாய் முடியுமென்க.

## ௩௬. "அம்முனிகரம்."

போலியெழுத்தென வேறில்லையென்பது விருத்தியுட்காண்க வென மேலுரைத்தாம், கடைப்பிடிக்க.

## ௩௭. "நெட்டுயிர்காரமும்."

ஒற்றுக்கள் சாரியைபெறுவென்பது விருத்தியுட்காண்க.

### எழுத்தியன் முற்றிற்று

---

# ப த வி ய ல்.

## க. "எழுத்தே தனித்தும்."

நன்னூலார் பதவியல் கூறியதற்கு முதனூல் வடநூலாகலின், அஃது தோன்ற மொழியியலென்னாது பதவியலென வடசொல்லான் அதற்குப்பெயரிட்டு, அவ்வோத்துள் வடவெழுத்துத் தமிழில் வருமாறுங்கூறினார். இவர் தமிழ்மொழி மாத்திரைக்கே யிலக்

கணங்கூறுதுமெனப் புகுந்தமையாற் பதவியலென வடமொழி யாற் குறியிடுதல் பழுதாமென்க.

எழுத்துத் தனித்து நிற்றலானும் ஒன்றோடொன்று தொடர்ந்து நிற்றலானுமன்றே தனிமொழி தொடர்மொழியெனப் பெயர் பெற்றன. அன்னமாகலின் ஈரெழுத்திணைந்ததனையுந்தொடர்மொழியென்னுக்கால், அவை தொடர்ந்தனவுமல்லவாய்ப் பொருளை விளக்குதலுமில்லையாமாகலின், ஈரெழுத்தொருமொழியுந் தொடர்மொழியென்றலே ஆசிரியர் தொல்காப்பியனார்க்குங்கருத்து. ஆயினும், "தொடரலிறுதி" எனவும் "சொல்லியதொடர்மொழியிறுதி" எனவும் "மகரத் தொடர்மொழி மயங்குதல் வரைந்த—னகரத் தொடர்மொழி" எனவும் "நெட்டெழுத் திம்பருந் தொடர்மொழி யீற்றும்" எனவும் ஈரெழுத்துத்தொடர்மொழிக்கும் இரண்டனை யிறந்திசைக்குந் தொடர்மொழிக்கும் முடிவுவேறுபாடு கண்டு, முன்னர்ச் செய்கைசெய்வதற்கேற்ப, ஈண்டு ஈரெழுத்தொருமொழி யெனவுந் தொடர்மொழியெனவும் பெயரிட்டுக் கருவிசெய்தார். இதுவே யாசிரியர் கருத்தாதல் "தொடர்மொழி" யென வாளா கூறாது "இரண்டிறந்திசைக்குந்தொடர்மொழி" என வடைகொடுத்தோதியதே இரண்டனையிறவாதிணைந்திசைக்குந் தொடர்மொழியுமுண்டெனப் பொருள்கொள்ளக் கிடத்தலானறிக. நன்னூலார் கொண்ட நயத்திற்கு அவ்வாறு கருவிசெய்யவேண்டாமையின், இணைந்திசைக்குந்தொடர்மொழியை வேறு கூறாது தொடர்மொழியென ஒன்றாகக் கூறினார். இவரக்கருத்தறியாது தமக்குவேண்டியவாறேயுரைத்தார்.

இன்னுமிவ்வியன் முழுதினும் இவர் கூறியவற்றுட் குற்றங்களை விரிக்கப்புகின், விளையாட்டுமகளிரட்ட மணற்சோற்றிற் கல்லாராயப் புகுதலோடொக்குமென்றொழிக. அவையெல்லாம் விருத்தியுட் கூறியதுபற்றியுய்த்துணர்ந்துகொள்க.

சொல்லியல்பு சிறிது முணராமையாற் றமக்கு வேண்டியவாறெல்லாங் கூறினார். பிரயோகவிவேகநூலாருஞ் சொல்லியல்புணராமையான், எல்லாச்சொல்லு முரிச்சொல்லாமெனவும், குறிப்பு வினைமுற்றும் பெயர்ப்பகுபதமுமொன்றெனவும் மயங்கிக் கூறி, குறிப்புவினைமுற்றே தத்திதாந்தமெனவுங்கூறினார். தத்திதன் பிராதிபதிகமெனப் பெயர்பெற்று ஐம்முதலியவுருபேற்றுச் சுபந்தமென நிற்குமென அவர்தாமே கூறினமையும் இவ்விலக்கணம் வினைக்குறிப்புக்கேலாமையுமறிக.

### கச. "இலக்கியங்கண்டதற்கிலக்கணம்."

கச்சினன் கட்டினன் என்புழி வரும் இன் ஈண்டுச் சாரியையன்று, உறங்கினனென்புழிப்போல இடைநிற்றலானிடைநிலையாமென்றார். அதனை மறந்து; பதமுன்விகுதியும் என்னுஞ்சூத்திரத்துள் உண்டது ஊரது என்றாற்போல்வன சாரியை வரவேண்டியே நின்றனவென்றார். இங்ஙன முன்னொடு பின் மயங்கக்கூறுதல் அவரியல்பென்க.

பதவியன்முற்றிற்று.

## உயிரீற்றுப்புணரியல்.

### க. "மெய்யுயிர்முதல்."

உயிரீற்றுப்புணரியலென்பதற்குப் "பதமுன் விகுதியும் பதமுமுருபும் புணர்வுழி" என்றவாறே உயிரீற்றுப்பதமுன் வருமொழி நாற்கணமும் வந்து புணருமியல்பென ஏழாம்வேற்றுமைச் சந்திப்பொருள்படக் கூறாது, உயிரீற்றுப்பதநின்று வருமொழி நாற்கணத்தோடு புணருமியல்பெனப் பொருளுரைத்தார். அங்ஙனமெழுவாய்ச்சந்திப்பொருள்பட நிற்பின், உயிரீறுபுணரியலென இயல்பாய் முடிவதல்லது உயிரீற்றுப்புணரியலெனச் செய்கைப்பட்டு முடியாமையான், அது பொருளன்மையறிக. மெய்யீற்றுப்புணரியலென்பதற்கும் இஃதொக்கும். ஆசிரியர் தொல்காப்பியனார் "நிறுத்த சொல்லுங் குறித்துவரு கிளவியும்" எனக்கொண்ட குறியீடுமறிந்திலர்போலும்.

### உ. "ஐம்முதலாறும்."

ஆசிரியர் தொல்காப்பியனார் வினைத்தொகைகள் பண்புத்தொகைகள் இருமொழிப்புணர்ச்சியானும் பிரிவிலொட்டுக்களாய் நிற்றலிற் "புணரிய னிலையிடை யுணரத் தோன்றா" எனவும், பகுபதமொருமொழியாய் நிற்றலிற் புணர்ச்சியெய்தாதெனவுமொழிந்தார், தொகுத்துச்செய்யுநூலாகலின். அது பாயிரத்துள் "புலந்தொகுத்தோன்" என்றதனானறிக. இவரந்நயம்பற்றி யோதாது, நன்னூலார்கூறிய நயம்பற்றி "அறிஞ முன்னிப் புணர்த்து முடித்தனர் கொளலே." எ-ம். "பதமுன்விகுதியும் புணர்வுழி." எ-ம். கூறி, ஒருமொழிநீர்மைத்தாகிய பகுபதத்தினை நிலைமொழி வருமொழியாகப் பகுதி விகுதிமுதலியவற்றை வேறு நிறீஇப் புணர்ச்சிக்குக் கூறிய செய்கையாற்செய்கை செய்து புணர்த்து முடித்தவர்

இருமொழிப்புணர்ச்சியாகிய வினைத்தொகை பண்புத்தொகைகளை நிலைமொழிவருமொழிசெய்து புணர்க்கப்படாவென்றலும் அவற்றிற்குச் செய்கைகூறுதொழிதலுங் குற்றமாதலறிக.

பொற்றொடி, பவளவாய், திரிதாடி, வெள்ளாடை, தகரஞாழலென்னும் வேற்றுமைத்தொகைமுதலிய ஐந்தொகையும் தத்தம் பொருள்படத் தொகாது அன்மொழிப்பொருள்படத் தொக்கவழிப் பின்னரவை வேற்றுமைத்தொகைமுதலிய தொகையாகாமையின், அவ்வேறுபாடுபற்றி அன்மொழித்தொகை வேறுகூறிய நன்னூலார் கருத்தறியாது, அன்மொழிப்பொருள்படத் தொக்கவிருமொழியையும் நிலைமொழியாயே நிறுத்தி வேறு வருமொழியோடு புணர்த்திக்காட்டிக் குற்றங்கூறல் பொருந்தாமையறிக. அவ்வாறு புணர்த்தலே சந்தியாயிற் புலிப்பாய்த்துள் புலிவிற்கெண்டை முதலியவற்றையும் வேறு வருமொழியோடு புணர்த்துதாரணங்காட்டல்வேண்டும். வேண்டவே, அவையுமல்வழிச் சந்திக்கேலாமையுணர்க. பொற்றொடியென்பது தொடியையுணர்த்தியவழி வேற்றுமைச்சந்தியாம், அணிந்தாளையுணர்த்தியவழி அல்வழிச்சந்தியாமெனத் தெரிந்துகொள்க.

ங. "வேற்றுமைவழிய."

இச்சூத்திரத்திற்கிதுபொருளன்மை விருத்தியுட்காண்க.

ரு. "வலித்தன்மெலித்தனீட்டல்."

வலித்தன் முதலிய நான்குவிகாரமும்படுதல் சொல்லின்கண்ணதாகிய வெழுத்திற்கெனவும், விரித்தறொகுத்தலென்னு மிரண்டுவிகாரமும்படுதல் சொன்முழுதிற்குமெனவுங்கூறினர். "தண்ணந்துறைவர் தகவிலர்" என்புழி அம்முச்சாரியையாய்த்தான் அசைநிலையாய்த்தான் அழகென்னும் பொருட்டாய்த்தானிற்குமாகலானும், சொல் யாண்டும்பொருட்பயனின்றி வாராமையானும், சொல் விரிதலாமாறியாண்டையதென்க. அன்றியும் "சீர்நிலை திரியாது தடுமாறும்மே" என்வெழுத்துவிரியும் விகாரம் வேறியாண்டடங்குமென்றொழிக. இன்னுமினமல்லாத சொல்விகாரத்தை யெழுத்துவிகாரத்தோடுடனெண்ணல் பொருந்தாமையுமறிக. இவ்வையம் நீக்குதற்கன்றே ஆசிரியர் தொல்காப்பியனார் அறுவகை விகாரத்துள் விரிக்கும்வழி விரித்தலையுந் தொகுக்கும்வழித் தொகுத்தலையும் நடுவண்வைத்தெண்ணியதூஉமென்க.

கா. "ஒருமொழிமூவழி."

ஒருமொழியானது ஒருதொடரின் முதலிடைகடையென்னு மூன்றிடத்துங்குறுகலும் வேண்டுழி வருமென்றலே இச்சூத்திரப்

பொருளென்பது தெரிந்துகொள்க. "குறைச்சொற் கிளவி குறைக்கும்வழி யறிதல்" என்பதுமிது.

## எ. "அன்றுனின்னல்."

தொடையலென்புழி அல் விகுதியென்றெழிக. அற்றுச்சாரியை பொருணிலைக்குதவிசெய்யுஞ் சிறப்புத்தோன்ற "நல்லற்று" என்ற நன்னூலார் கருத்தறியாது, அல்லுச் சாரியையெனக்கொண்டார்.

## அ. "அத்தினகரம்."

ஆசிரியர்தொல்காப்பியனார் கூறிய சாரியைச்சூத்திரம் பல்காமைப்பொருட்டுத் தமக்கேற்றவாறு வேறுபடுத்துவார்க்கு, அத்துச்சாரியையேயன்றித் துச்சாரியையுமொன்று வகுத்து இச்சூத்திரமோதாதொழிதலே பொருத்தமுடைத்தென்க.

## கூ. "பதமுன்விகுதியும்."

நன்னூலார்போல "வருதலுந் தவிர்தலும் விகற்பமுமாகும்" எனத்தொகுத்துக்கூறிப் புறனடையுமீண்டே கூறினார். ஆசிரியர் தொல்காப்பியனார் போல மேற்பதங்கட்குத் தனித்தனி சாரியைப் பேறு விதிக்கப் புகுந்தார்க்கு ஈண்டே யிவ்வாறு கூறல் பொருந்தாமையறிக.

## க௨. "புள்ளியீற்றுமுன்."

"ஞணநமல வளன வொற்றிறு தொழிற்பெயர்" என்றற்றொடக்கத்து மெய்யீற்றுப்புணர்ச்சிக்கேயுரிய விதியையீண்டுக் கூறுதல் உயிரீற்றுப்புணரியலென்னும் பெயர்க்கேலாமை தெரிந்துகொள்க.

## கங. "குற்றியலுகரத்திறுதி."

இது பொருந்தாமையும் பிறவும் விருத்தியுட்காண்க.

## கசூ. "பொதுப்பெயருயர்திணை."

நிலைமொழிச்செய்கையாய்த் திரிதற்குரியவெழுத்துக்கள் திரியாதியல்பாதலும் வருமொழிச்செய்கையாய் மிகுதற்குரிய வெழுத்துக்கண் மிகாதியல்பாதலுங் கருதியன்றே, 'ஈற்றுமெய்யியல்பாம்' என்றும், 'வன்மை மிகா' என்றும் பகுத்தோதினர். அவ்வாறே யரழக்கண்மூன்றும் உயிர்போல வருமொழிச்செய்கையாய் வன்மைமிகுதற்குரியனவன்றி ஏனைமெய்போல நிலைமொழிச்செய்கை

யாய்த் திரிதற்குரியனவன்மையின், அவற்றுள் மகரம் பொதுப் பெயருயர்திணைப் பெயர்கட்கீறுகாமையின், ஈறுவனவான ஏனை இரண்டனையுமுயிரொடு சேர்த்து வருமொழிச்செய்கை யியல்பா மென்னுது, ஏனைமெய்களோடொப்பவைத்தியல்பாமென்றல் பொ ருந்தாமையறிக. அக்கருத்துக் கொள்ளாக்கால், ஈற்றுமெய்முன் மிகா எனவும் அவற்றீற்றுயிரியல்பாமெனவுமாறிக்கூறினும் பொ ருந்துமெனப்பட்டு, வழுவாமாறறிக.

## உஉ. "ஔவென வருஉம்."

இச்சூத்திரத்திற்கூறிய வெழுத்துக்களை யீறாகவுடைய சொ ற்கள் முன்னிலைவினைக்கின்மையான் அதன்கணையமின்மையின்,மு ன்னிலைவினையை விலக்குதல்வேண்டாம்,இவ்வீற்றுத்தொழிற்பெய ருண்மையின் அதனை விலக்குதல் வேண்டுமாயின், சொல்லென்ப தேவல்வினையெனவேயமையும். அவ்வாறு கூறுது ஒருமொழியே யோசைவேறுபாட்டாற் பிறிதுபொருளையு முணர்த்துமெனமய ங்கி, ஏற்புழிக்கோடலான் ஈண்டேவல்வினைமேற்றுயிற்றெனப் பழுதுபடக்கூறினர்.

## உச. "மெல்லெழுத்துமிகுவழி."

புணர்ச்சிக்கணுயிர்மிகவருஞ்செய்கைக்கு இவரியாண்டுஞ்சூத் திரங் கூறுமையின் "உயிர்மிக வருவழி யுயிர்கெட வருதலும்" என்றலும், ஏனையவற்றிற்கும் இவ்வீறு மெல்லெழுத்துமிகும் இவ் வீறு வல்லெழுத்துமிகும் இவ்வீறியற்கையாம் இவ்வீறு சாரியை பெறுமென ஆசிரியர் தொல்காப்பியனுர் கூறியவாறே இவர் தனித் தனி வகுத்துக்கூறுமையின் "இயல்பின் விகாரமும் விகாரத்தியல் பும்" என நன்னூலார் கூறியவாறே பொதுப்படக் கூறுது ஆசி ரியர் கூறியவாறே வகுத்துக்கூறுதலும், பொருந்தாமையறிக.

"எக்கண்டு பெயருங் காலை" "நப்புணர் வில்லா நயனில் லோர்" என நெடுமுதல் குறுகும் விரவுப்பெயர்கள் இனமெல்லெ ழுத்தாய்த் திரிதற்குரிய மகரந்திரியாதுகெட்டு வல்லெழுத்துப் பெ ற்றனவெனத் தாங்கூறிய செய்கைக்கேற்பக்கூற மறந்து, மெல் லெழுத்துப்பெறுதற்குரியன வல்லெழுத்துப்பெற்றனவென ஆசிரி யர் தொல்காப்பியனுர் கூறியவாறே அவ்வுரைவாசகத்தை யெடுத் தெழுதினர்.

## உகூ. "எகரவினுமுச்சுட்டின்."

இதனுட்சொன்முடிபு பொருந்தாமை தெரிந்துகொள்க.

### ௩௧. "இயல்பினும் விதியினும்."

பிறிதென்று நயம்பற்றிக் கூறிலமென்றார்க்கு "இயல்பினும் விதியினும்" எனப் பகுத்துக்கூறல் பொருந்தாமையறிக.

புலிபோலக் கொண்டான் என்புழிப் போலவென்பது உணக் கொண்டா னென்புழிப்போலக் காலம்விளக்கி நிற்றலிற் றெரிநிலை வினையாவதல்லது குறிப்புவினையாகாதென மறுக்க.

கண்டெனக்கொண்டானென்புழி எனவென்பது செய்து செய்யூ முதலியவற்றீறுபோல வினையெச்சவிகுதியேயென மறுக்க.

அதிர்ப்புக்கடிதென்பதனுள் அதிர்ப்பென்பதனைக் குற்றியலு கர வீற்றுரிச்சொலென்றார், உரிச்சொலிலக்கண மறியாமையின். அதிரென்னுமுரிச்சொற் புகரவிகுதி பெற்றுத் தொழிற்பெயராய் நிற்குமாறறிக.

### ௩௫. "செய்யியவென்னும்."

உருபுயிரீண்டடங்காதென "மூன்ற னுருபினு மாற னுருபினும்" என்று வேறுசூத்திரஞ்செய்வார்க்கு ஈண்டாறனுருபு வேறோதல் பொருந்தாமையுணர்க.

சொற்பல்கச் சூத்திரஞ்செய்தற்கஞ்சாதார்க்கு ஈண்டைவிதி களை நன்னூலார்போலச் சாலவுஞ்சொற்சுருங்கச் சூத்திரித்தும், "அன்றுவரு காலை யாவாகுதலு—மைவரு காலை மெய்வரைந்து கெடுதலுஞ்—செய்யுண் மருங்கி னுரித்தென மொழிப." "மெல்லெழுத்து மிகுவழி வலிப்பொடு தோன்றலு—மன்ன பிறவுந் தன்னியன் மருங்கின்—மெய்பெறக் கிளந்து பொருள்வரைந் திசைக்கு—மைகார வேற்றுமைத் திரிபென மொழிப" என்றாற்போலுஞ் சில வற்றை ஆசிரியர் தொல்காப்பியனார்போலச் சாலவுஞ்சொற்பல்கச் சூத்திரித்தும், ஒருவழிப்பட நில்லாராயினார். இன்னுஞ் சிலவிதி களை நன்னூலார்நயம்பற்றிப் புடைநூலோடொப்பக் கூறிச் சில விதிகளை ஆசிரியர்தொல்காப்பியனார் நயம்பற்றி வழிநூலோடொப் பக் கூறினார். ஒருநயம்பற்றியொருவழிப்பட்டுநின்று கூறாது, இவ் வாறு பலவழிப்படச் செய்தார், நூல்செய்யுந்திறனறியாமையா னென்க. ஏனையவுமிவ்வாறே யாண்டாண்டுக் கண்டுகொள்க, ஈண்டு விரிப்பிற்பெருகும்.

உயிரீற்றுப்புணரியன் முற்றிற்று.

## உருபுபுணரியல்.

### ௧௧. "இதற்கிதுமுடிபு."

எண் பெயர் முதலிய புறப்புறக்கருவியென்றார். எண்ணு முறையும் பிறப்பு முருவு மளவுஞ் செய்கைக்குக் கருவியாகாமை யின், அவை பயனிலவாய் முடியும், இவர் கூறிய முறைநோக்குவா ர்க்கெனவறிக. பதவியல் புறக்கருவியென்றார்க்கு "எழுத்தே தனி த்து மிணைந்துந் தொடர்ந்தும்—பதமாம் பொருடரின்" என்பதொ ழித்து ஏனையவெல்லாம் வெற்றெனத்தொடுத்தலாய் முடியுமாற றிக. "மெய்யுயிர் முதலீ ரிரு பதங்களும்" என்றற்றொடக்கத்த னவற்றை அகக்கருவியென்னாது அகப்புறக்கருவியெனவும் "எகர ஒகரம் பெயர்க்கீ றாகா" என்றாற்போலும் புறப்புறக்கருவியை அக க்கருவியெனவுங் கூறினார், இச்செய்கை செய்தற்கு இது சிறந்தக ருவி இது சிறவாக்கருவியென்னு முண்மையறியமாட்டாமையின்.

இனிச்செய்கையை நான்காக வகுத்துக் கூறியதூஉம் பொருந் தாமையோர்ந்துணர்க.

உருபுபுணரியன்முற்றிற்று.

எழுத்ததிகாரமுடிந்தது.

# சொல்லதிகாரம்.

## பெயரியல்.

### ௧. "உமையவளொடு."

இவ்வதிகாரம் மேற்பாயிரத்துளெழுத்துமுதன்மூன்றையுமெ ன நிறுத்தமுறையானே எழுத்துணர்த்திச் சொல்லுணர்த்துகின்ற ராகலிற் சொல்லதிகாரமென்னும் பெயர்த்தென்றார். பாயிரஞ்செய் தார் சதாசிவநாவலரென்றன்றே ஆண்டுரைத்தார். சதாசிவநாவலர் நிறுத்த முறைபற்றி வைத்தியநாத நாவலர் நூல்செய்தாரென்றல் பொருந்தாமையறிக, பாயிரம் நூல்செய்த பின்னர்ச்செயப்படுவ தாகலின். அதீ "பொருள்விரித் துரைத்தனன்" என்றிறந்தகால வாய்பாட்டாற் கூறியதனானுமுணர்க.

## ச. "உயர்திணை யென்மனார்."

மக்கட்சுட்டென்பது பண்புத்தொகைநிலைக்களத்துப்பிறந்த அன்மொழித்தொகையெனவும், மக்களென்ற தாகுபெயரான் மக்கட்சுட்டையுணர்த்தி நின்றதெனவுங்கூறினார். மக்களென்றதாகுபெயரான் மக்கட்சுட்டையுணர்த்திற்றேல், "பாணன் பறையன் றுடியன் கடம்பனென்—றந்நான் கல்லது குடியுமில்லை" என்புழிப்போல ஆண்டஃதஃறிணைச்சொல்லாதல்வேண்டும்: வேண்டவே, அஃதலபிறவேயென அஃறிணைச்சுட்டாற் கூறாது "அவரலபிறவே" என்றல் திணைவழுவாய் முடியுமாகலின், அஃதாசிரியர்கருத்தன்றென்க. இன்னோரன்னவையெல்லாந் தொல்காப்பியமுதற்சூத்திரவிருத்தியுள் விளங்கக் கூறினோம், ஆண்டுக் காண்க.

உயர்திணையென்பது இறந்தகாலவினைத்தொகையென்றார். உயர்ச்சி முக்காலத்துமொத்தியல்வதறியார்போலும்.

திணையென்பதொழுக்கமென்றார். அஃறிணையுளுயிரில்லனவற்றிற்கு ஒழுக்கமின்மையின், அது பொருளன்று. இவையுயர்சாதி இவையிழிசாதியென உலகத்துப்பொருளையெல்லாம் இருவகைச்சாதியாகப் பகுத்துக்கூறுதலே ஆசிரியர்கருத்தாகலானும், திணையென்னும் பலபொருளொருசொல் ஈண்டுச்சாதியுணர்த்தி நின்றதெனக் கொள்க.

## ரு. "ஒன்றேபல."

ஆண்பால் பெண்பாலென்னும் வழக்கு உயர்திணைக்கேயன்றி அஃறிணைக்கின்றென்றார். "ஆண்பா லெல்லா மாணெனற் குரிய" "பெண்பா லெல்லாம் பெண்ணெனற் குரிய" என்று மரபியற்சூத்திரங்களையும், ஆண்மைசுட்டியபெயர் பெண்மைசுட்டியபெரென்னுங் குறியீடுகளையும், களிறு பிடிமுதலிய வழக்குக்களையும் மறந்தார்போலும்.

## எ. "தெய்வமும் பேடுமாம்."

ஆணவாய்ப் பெண்ணிழந்ததற்கும் பெண்ணவாயாணிழந்ததற்கும் முறையே பேடன்வந்தான் பேடிவந்தாளௌனவுதாரணங்காட்டி, அலி அவற்றின்வேறெனக் கூறினார். அது பொருந்தாது, பெண்ணவாயாணிழந்ததனைப் பேடியெனவும் ஆணவாய்ப் பெண்ணிழந்ததனை யலியெனவுங்கூறுதலே மரபாகலின். அது பேடன் வந்தான் பேடன்மாரென உரையாசிரியரையுள்ளிட்டோர் காட்டாமையானும், அலிவந்தாளௌனத் தாமுங்காட்டாமையானும், "பெண்ணவா யாணிழந்த பேடி யணியாளோ" எ-ம். "பேடிகை

வாளாண்மை" எ-ம். "இன்பா லடிசிற் கிவர்கின்ற கைப்பேடி." எ-ம். சான்றோரெல்லாம் பெண்ணவாயாணிழந்ததனையே பேடெனக் கூறுதலானுமறிக. அற்றேல், ஏனையாண்பால் பெண்பால்போலப் புணர்ச்சிமுதலாயவற்றிற்குரியவாய் முகவுரோம முலைமுதலியவுறுப்புக்களையுடையவாய்த் தன்மை திரிந்தன ஆண்பேடு பெண்பேடெனவும், இத்தன்மையில்லதலியெனவுங் கூறிஞகாதோ வெனின்;— ஆகாது, "வேயே திரண்மென்றோள் வில்லே கொடும்புருவம்—வாயே வளர்பவள மாந்தளிரே மாமேனி--நோயே முலைசுமப்ப தென்றூர்க் கருகிருந்தா—ரேயே யிவளொருத்தி பேடியோ வென்று—ரெரிமணிப்பூண் மேகலையாள் பேடியோ வென்றூர்." "பலிகொண்டு பேராத பாச மிவள்கண்—ணொலிகொண் டுயிருண்ணுங் கூற்றமென் றெல்லே—கலிகொண்டு தேவர் முலைகரந்து வைத்தா—ரிலைகொண்ட பூணினீ ரென்றெழினி சேர்ந்தா—ளிலங்குபொற் கிங்கிணியா ணக்கெழினி சேர்ந்தாள்." என்பவற்றூற் பேடியை முலையுறுப்பில்லாதவளெனவும், அதனலொலிகொண்டுயிருண்ணுந் தன்மை யில்லாளெனவும், விளங்கக் கூறுதலின். அன்றியுந் தன்மைதிரிபெயர்க்கு அலிவந்ததெனவே தாமுமுதாரணங் காட்டினூராகலிற் றமக்குமிதுவே கருத்துப்போலுமென்க.

## கo. "இலக்கணமுடையது."

குழூஉக்குறியையும் வழக்குநெறியெனவுடனெண்ணினூர். குழுவின் வந்த குறுநிலவழக்குச் சான்றோர்வழக்கின்கண்ணும் அவர் செய்யுட்கண்ணும் வாராமையின் அமைக்கப்படாவெனச் சேனவரையர் மறுத்தமையான்,அது வழக்குநெறியாகாமையறிக.

## கஉ. "ஆகுபெயர்வினைக்குறிப்பு."

"அறத்தா றிதுவென வெள்ளைக் கிழிபு" என்பதாகுபெயருளடங்குதலின், வேறூதல் பொருந்தாது. "குன்று விளையு ளுயர்நிலந் துன்புற்றுத்—தாவென் றிரப்பாடன் கை." என்றூற்போல எழுத்துக்களை யெடுத்துக்கொண்டன சொல்லன்மையான் ஆகுபெயராதற்கேலாமையின், வேறூதலமையுமென்க.

## கச. "செந்தமிழாகி."

வடவேங்கடந் தென்குமரியென இரண்டெல்லைக்குட்பட்டன வெல்லாந் தமிழ்நாடாகவும், அவற்றுளொருநிலத்தைப் பிரித்துச் செந்தமிழ்நிலமென்றற்குக் காரணமறியாமையின், அதற்கெல்லை முன்னூரைசெய்தார் கூறியதேபற்றித் தாமுமுரைத்தார், ஒருவர்சென்றவழியே சேறலுலகியல்பாகலின். முக்குணவயத்தான்

முறைதிறம்பல் உயிர்வருக்கத்துக்கெல்லாம் பொதுவாதலறிக. கருவூரின்கிழக்கெல்லாம் புனலூடையாம், புனலூடெனினுஞ் சோணாடெனினுமொக்கும். புனலூடென்றாற்போலப் பொதுப்படக் கூறாது தென்பாண்டியென ஏகதேசத்தைப் பிரித்தோதியதுமறிக.

## கரு. "ஒருபொருள்குறித்த."

அருமையானன்றி யியல்பாற்பொருளுணருஞ் சொல்லை இயற்சொல்லெனவும் அதனின் வேறுயரிதுணர்பொருளனவாகிய சொல்லைத் திரிசொல்லெனவுங்கூறிய உண்மை நோக்காது, யான், யாம், நீ, நீர் என்பன என், எம், நின், நும் எனத் திரிந்தாற்போல மலையென்னுஞ்சொல்லே விலங்கல் அடுக்கலென்றற்றொடக்கத்தனவாய்த் திரிதலிற் றிரிசொல்லெனப்படுமெனவும், அது திரியுங்காற் கிளியென்பது கிள்ளையென உறுப்புத்திரிந்தும் தத்தையென முழுவதுந்திரிந்தும் வருமெனவுங்கூறினார். மலையென்பதே விலங்கல் அடுக்கலென்றற்றொடக்கத்தனவாய்த் திரியுமெனின், அவையெல்லா மொருசொல்லெனல்வேண்டும். அவ்வாறன்றி "ஒருபொருள் குறித்தவேறுசொல் லாகியும்" எனவும் ஆவி உடம்பு உறுப்பு ஒற்று உடல் புள்ளியென்றற்றொடக்கத்தனவற்றைப் பரியாயநாமங்களெனவும், அவர்தாமே கூறுதலான், அவர்க்கது கருத்தன்றென மறுக்க. அப்பரியாயநாமங்களெல்லாம் பெரும்பான்மையும் ஒவ்வொருகாரணம்பற்றி வருதலின், வேறுசொல்லேயாமென்பது.

## கசு. "செந்தமிழ்நிலஞ்சேர்."

தமிழொழி பதினேழ்நிலத்து மொழிகளையுங் கொடுந்தமிழ்நாட்டு மொழியோடொப்பத் திசைச்சொல்லெனக் கொண்டார். ஆசிரியர்தொல்காப்பியர் அவ்வாறு கொள்ளாமையானும், உரையாசிரியர் சேனாவரையர் கூறாமையானும், வடசொற்போல வேனைநிலத்துச்சொற்கள் சான்றோர்வழக்கினுள்ளுஞ் செய்யுளினும் வாராமையானும், சிலசொற்கள் இக்காலத்து வரினும் இலக்கணமுறையன்மையானும், அவை தமிழ்க்குரிய திசைச்சொல்லாகாவென மறுக்க.

## கஎ. "பொதுவெழுத்தானும்."

வடமொழியிலக்கணமறியாதார் ஈண்டுக் கூறியவற்றுட் பொருந்துவனவும் பொருந்ாதனவுமுள அவையோர்ந்துணர்க. இவ்வெழுத்திவ்வெழுத்தாய்த் திரிந்து வருமென வரையறுத்தோதப்புகின் அவ்வரையறையிர்பிறழ்ந்தும் வருதலின் இங்ஙனமோதில

மென்றார். புணர்ச்சிமுதலிய வேளைவிதிகளுங் கூறிய வரையறையிற் பிறழ்ந்தும் வருதலினன்றே புறனடை முதலியவற்றுணமைத்தார். அவற்றையுமிக்கருத்தேபற்றியோதாதொழிய மறந்தார்போலும். இங்ஙனங் கூறுவார்க்கு நூல்செய்தமெனத் தொடங்குதலுங் கூடாதென்க.

உக. "கிளந்தகிளைமுதல்."

"வெறியுறு கமழ்கண்ணி வேந்தர்கட் காயினும்" என்றாற்போல்வனவற்றுட் கள்ளென்விகுதி யிசைநிறைத்து நின்றதேயாமென்றார். விகுதியுமிடைச்சொல்லென்னுஞ் சொல்லாகலின், "ஒருபொருட் பன்மொழி சிறப்பினின் வழாஅ" என்னும் விதிபற்றிச் சிறப்பின்கண் வந்தமையறியார்போலும்.

உச. "பால்பகாவஃறிணை."

அஃறிணையியற்பெயர் பால்வரையறைப்படாது நிற்பது சொல்லியல்பென்னாது, கள்ளொடு சிவணுமையாலென்றார். உழத்திகள் மறத்திகளென்றாற்போலுமுயர்திணைப்பெயருங் கள்ளொடு சிவணுவழிப் பால்வரையறைப்படாது நிற்றல்வேண்டும்; அங்ஙனமின்மையின், அது சொல்லியல்பாமென்க.

உரு. "முதற்பெயர்நான்கும்."

கோதையென்பது சாத்தன், சாத்தி, மருதி, செவியிலி என்றாற்போல ஈற்றாற் பால் விளக்குதலின்றிப் பொதுவாய் நிற்றலிற் பன்மை சுட்டியபெயராமென்க.

உஅ. "பன்மைசுட்டிய வெல்லாப்பெயரும்."

பன்மைசுட்டிடப்பெயரென்றது பலபாலையுஞ்சுட்டிநிற்றலிற் பிறிதினியைபு நீக்கிய விசேடணமடுத்து நின்றதென உரையாசிரியர் கூறியவாறே கூறாது, இயைபின்மை நீக்கிய விசேடணமடுத்து ஆதீண்டுகுற்றியென்றாற்போலத் தலைமைபற்றிய வழக்காய் நின்றதெனவும், பன்மைசுட்டுதற்குத் தலைமை யாண்மை சுட்டியபெயர் முதன்மூன்றனும் ஒருகாற்சுட்டப்படும் ஒன்றுமொருவரும்போலாது இப்பெயரானே சுட்டப்படு முரிமையுடைமையாற் கொள்கவெனவுங்கூறினார். ஆண்மைசுட்டியபெயர் முதலிய மூன்றனையும் பிறிதினியைபுநீக்கியவிசேடணமடுத்து நின்ற பெயரெனக் கொண்டு, அவற்றோடுடனெண்ணியவிதனை அவ்வாறு கொள்ளாது, இயைபின்மைநீக்கிய விசேடணமடுத்து நின்றதெனக் கோடல் பொருந்தாமையானும், ஆண்மைசுட்டியபெயர் முதலிய மூன்றும் போலாது பன்மைசுட்டிய பெயர்க்குப் பன்மைசுட்டுதற்கண் விசேடவுரிமையின்மையானும், பெயரான் விசேடவுரிமையுண்டாயிற் பன்மைசுட்டியபெயர் உயர்திணைப்பன்மைசுட்டாமையும் ஒரு

மைசுட்டுதலும் வழுவாமாகலானும், இஃதமைதிச்சூத்திரமன்மை யானும், அது போலியுரையென்க. பலபாலையுஞ் சுட்டிநிற்றலிற் பன்மைசுட்டியபெயரெனின், ஆண்மைசுட்டியபெயர்முதலியன வும் பலபால்களையுஞ் சுட்டிநிற்றலின் அவற்றையும் பன்மைசுட் டியபெயரெனல் வேண்டுமாலெனின்;—அது பொருந்தாது, நான் குபாலுஞ் சுட்டிநிற்குந் தன்னைநோக்க ஏனைமூன்றுபாலு மிரண்டு பாலுஞ் சுட்டிநிற்கும் பெயர்கள் சின்மைசுட்டிய பெயரெனப் படுவனவல்லது பன்மைசுட்டிய பெயரெனப்படாவாகலானெ ன்க. அற்றேல், அவற்றைச் சின்மைசுட்டியபெயரெனவேயமை யும் பிறவெனின்:—அவற்றுள் ஆண்மைசுட்டுதன் முதலிய பகுப்பு ண்மையின் அவற்றைப் பகுத்துக் கூறல் வேண்டுதலான், அமை யாதென்க. இக்கருத்தேபற்றியன்றே பஃறொடைவெண்பாவென் றாற்போல ஏனையவற்றையும் பஃறொடைவெண்பாவெனக் கூறாத தூஉம், பகுப்புண்மையிற் சிஃறொடைவெண்பாவென்றொழியாத தூஉம், பஃறாழிசைக் கொச்சகமென்றதனை நோக்கி அதனிற்குறை ந்ததனைப் பகுப்பின்மையாற் சிஃறாழிசைக்கொச்சகமென்றே போ ந்ததூஉமென்க. இனியிவ்வாறன்றி, ஆணொருமை பெண்ணொருமை அஃறிணையொருமையென்ற மூன்றும் ஒருமைப்பாலென வொன் றாயடங்குதலிற் பலபால்களையுஞ் சுட்டிநின்றனவல்லவாகலான், அம்மூன்றொருமையுஞ் சுட்டியபெயர்களை ஒருமைசுட்டியபெயரெ னவும், இஃதொருமையும் பன்மையுமென்னுமிருபாலுஞ் சுட்டிநி ற்றலாற் பன்மைசுட்டியபெயரெனவுங் கொள்ளினுமிழுக்காது. இனி ஒருமைசுட்டிய பெயர்மூன்றும் இருதிணையினும் பன்மைசுட் டாது ஒருமையே சுட்டியவாறுபோலப் பன்மைசுட்டியபெயரும் இருதிணைக்கண்ணும் பன்மைசுட்டுவதல்லது ஒருமைசுட்டுதல் பொருந்தாதெனக்கொண்டு, கள்ளென்விகுதி இருதிணைப்பன்மை க்கும் பொதுவாய் நிற்றலின் இருதிணையொருமைக்கும் பொது வாய்நிற்கு முதற்பெயர்முதலிய மூன்றனோடு அவ்விகுதியைத் தலைப்பெய்து, அவற்றைப் பன்மைசுட்டிய பெயர்க்குதாரணமா கக்கொள்ளிற் படுமிழுக்கென்னையெனின்;—தாய் தந்தை முதலிய முறைப்பெயருங்கள்விகுதியோடு கூடி மூன்றெனப்படுதலான் முறைப்பெயரிரண்டாமென்பதனோடு முரணுதலானும், இயற்பெய ராய் நிற்பவற்றிற்கன்றி விகுதியொடுவரும்பெயரை ஈண்டு விதிக் கப்புகாமையானும், தொல்காப்பியத்தோடு முரணுதலானும், அது பொருந்தாதெனமறுக்க.

## உக. "தன்மையானுன்."

"பேய்பூத மந்தி கிளிபூவை பேசுதலா—ஞ்குமே தன்மை பொது" என்பதேபற்றித் தன்மையை விரவுத்திணையெனச் சாதி

த்து, ஆசிரியர் தொல்காப்பியனுர்க்கு மறியாமையேற்றினர். பேய் பூதந் தெய்வச்சாதியாதலால் "தெய்வஞ்சுட்டிய பெயர்நிலைக் கிளவி" என்பதனுளடங்குமாகலானும், மந்திபேசுதல் யாண்டுமி ன்மையின் "ஈங்குநீ யெம்மை நோக்கி" என்றாற்போல்வன புனை ந்துரைவகையாற்கூறியதன்றி உண்மைபற்றிக் கூறியதன்றாகலா னும், கிளி பூவை கூறியவாறு கூறுதலல்லது இச்சொல்லை யிவ் வாறு கூறவேண்டுமெனச் சொல்லுண்மையறிந்து கூறுதலுலகத் தின்மையால் "பூவையுங் கிளியுங் கேட்டு" என்றாற்போல்வனவும் புனைந்துரைவகையாற் கூறியதேயாமாகலானும், தன்மை விரவுத் திணையாகாதென மறுக்க. மரமுதலியன பேசுவனவாகச் சான் றோர்செய்யுட்கண் வருதலின் அவை புனைந்துரையெனவேபடுமா கலான், இவையுமன்னவேயாமென்க. இனி மந்திமுதலிய உண் மையாற்பேசினவேயாமெனினும், எறும்புகள் பேசினவற்றை யொருவேந்தன் கேட்டு நகைத்துத் தன்மனைவிக்குக் கூறித் தலையி ழந்தானெனப் புராணங்கள் கூறுதலின், எறும்புகள் பேசுதல் பெற்றாம்; அவைபேசுதல் குறிப்பாலுணர்த்துதலன்றி மொழியாற் பேசுதலன்றென்ப தெல்லார்க்குமொப்ப முடிந்தது; முடியவே அஃறிணைப்பெயர்களெல்லாம் இவ்வாறொன்றற்கொன்று குறிப்பா லுணர்த்துமென்பது பெறப்பட்டதாகலின், மந்திமுதலிய பேசுத லும் அவ்வியல்பிற்றேயாமென்க. இங்ஙனமன்றாயின், உயர்திணை யஃறிணையென்னும் பகுப்பேலாமையறிக. ஒரோவழி யஃறிணைப் பொருள்கள் மொழியாற்பேசுவனவுளவாயின், அது தெய்வத்தன் மைமுதலிய விசேடத்தானன்றிப் பொருட்டன்மையானன்மை யின், அமைத்துக்கொள்வதன்றி அதுபற்றி விரவுத்திணையென்றல் சிறிதும் பொருந்தாதென்க. அற்றாதலினன்றே ஆசிரியர் தன்மை யை யுயர்திணையெனவே கூறியதூஉமென்க. இது கொள்ளாதார் க்குச் "சொல்லா மரபி னவற்றொடு கெழீஇச்—செய்யா மரபிற் றொழிற்படுத் தடக்கியும்" என்பதனைத் தழுவுதலும் "கேட்குந போலவுங் கிளக்குந போலவு—மஃறிணை மருங்கினு மறையப் படுமே" என வழுவமைத்தலும் வேண்டாவென்க.

## ௩௩. "ஒருவரென்பது."

காளை விடலையென்பன பொதுப்பெயரென்றார். சிறப்புப் பெயராக "நம்பியாடூஉவிடலை" எனச் சூத்திரித்ததை மறந்தார் போலும். இங்ஙனமுன்னொடுபின் மயங்கிக் கூறுதலவரியல்பெ ன்க. எருத்தைக் காளை விடலையென அடிப்பட்ட சான்றோரான் வழங்கப்படாமையுமுணர்க.

## ௩௪. "பொருண்முதல்."

எண்ணுப்பெய ராகுபெயராகாதென்றல் பொருந்தாமை விருத்தியுட்காண்க.

இவ்வதிகாரமெழுத்து இவ்வதிகாரஞ்சொல் இவ்வதிகாரம்பொருளொன்றாற்போல்வன எழுத்துச் சொற் பொருளென்னுஞ்சொற்களான் அவற்றிற்கிலக்கணங்கூறியவதிகாரங்களைக் கூறினவென இவற்றைச் சொல்லாகுபெயருக்குதாரணமாகக்காட்டினார். கடுத்தின்றான், புளித்தின்றானென்றற்றொடக்கத்தனவுங் கடு புளியென்றற்றொடக்கத்துச் சொற்களாற் காய் முதலிய பொருள்களைக் கூறலான், அவற்றையுஞ் சொல்லாகுபெயரெனல் வேண்டும். அவ்வாறு வேண்டாமையான், இவையுஞ் சொல்லாகுபெயராகாவென மறுக்க. எழுத்துச்சொற்பொருளென்னுந்தானிகளான் அவ்விலக்கணங்களைக் கூறுதற்குத் தானமாகிய படலங்களைக் கூறினமையான், இவை தானியாகுபெயரேயாமென்க. இனித் திருவாசகம் திருவாய்மொழியெனச் சொல்லையேயுணர்த்திநிற்கும் பெயர்களான் அச்சொல்லாலாக்கப்படு நூலைக் கூறினமையின், இவற்றைச் சொல்லாகுபெயரென்னுமோவெனின்;—என்னும். என்னை? சொற்கெழுத்து முதற்காரணமாயினாற்போலச் செய்யுட்கு முதற்காரணமாய் நிற்குமொழியின்பெயரான் அச்செய்யுட்களை யுணர்த்துதலான் அவை காரணவாகுபெயரெனப்படுமாகலானென்க. இனித்திருவாசகம் திருவாய்மொழியென்பன உண்மையானோக்குவார்க்கு அன்மொழித்தொகையாவனவன்றி யாகுபெயராகாமையுணர்க. "திரைத்த விருது குறள்சிந் தளவடி தேம்பழுத்து" எனவொருசெய்யுட்கு முதனிற்குஞ்சொற்களான் அவ்வவசெய்யுட்களைக் கூறினமையின், இவையே சொல்லாகுபெயராமென்க. இது சினையாகுபெயருளடங்குமேனும், விளங்குதற்பொருட்டு வேறு கூறினார்; அளவையாகுபெயர் குணவாகுபெயருளடங்குமேனும் அதனை வேறுகூறினாற்போலக் கொள்க.

அகத்தியம், தொல்காப்பியம், கபிலமென்பனவாகுபெயரல்லவாதல் விருத்தியுட்காண்க.

ஆகுபெயர்க்கு மன்மொழித்தொகைக்கும் வேற்றுமை விருத்தியுள் விளங்கக் கூறினும், ஆண்டுக்காண்க. ஈண்டாகுபெயருமன்மொழித்தொகையுமொன்றென்றவர் குறிப்பிற்றருமொழியிவையென்புழி ஆகுபெயரெனவேயன்மொழித்தொகையுமடங்குமென்றொழியாது "ஆகுபெயர் வினைக்குறிப் பன்மொழி விகாரம்" என வேறு கூறலான், அவ்விரண்டுமொன்றேயென்றல் அவர்க்குங்கருத்தன்மையுணர்க. பரிமேலழகியார் கனங்குழையென்றதனையாகுபெயரென்றாரானெனின்;—அவர் "பொச்சாவாக் கருவியாற் போற்றிச்

செயின்" என்பதற்குப் பொச்சாவாமனமென அந்தக்கரணத்தைக் கருவியாகக் கூறினார். அதனை மறுத்துப் பொச்சாவாமையாகிய கருவியென்த் தாமும் பெயரெச்சச்சூத்திரத்துளுரைத்தாராகலின், அவர்கூறியனவெல்லாமுடன்பாடென்பது தமக்குங் கருத்தன்றெனக.

மக்கட்சுட்டு மக்களாகிய நன்குமதிக்கப்படும்பொருளென்றக்கால் நன்குமதிக்கப்படும்பொருளுமக்களேயாகலின், மக்களாகிய மக்களென வருவதல்லது இன்னதிதுவென வாராமையின், மக்கட் சுட்டேயிருபெயரொட்டாகாதென்றார். உலகத்துப் பொருளையெல்லாம் உயர்திணைப்பொருள் அஃறிணைப்பொருளெனவிரண்டாகப் பகுத்துக்கொண்டதற்கேற்ப, மக்களென்பது பொருளென்னும் பொதுமையினீக்கி உயர்திணைப்பொருளை விசேடித்து நிற்பச் சுட்டென்பதாகுபெயராய் அப்பொருளினுயர்ச்சி தோன்றச் சிறப்பித்துநிற்ப, இன்னதிதுவென ஒன்றனையொன்று விசேடித்து இருபெயருமொட்டி வருதலான், இருபெயரொட்டாகாமை யாண்டையதென மறுக்க.

## சுரு. "ஏற்குமெவ்வகை."

செயப்படுபொருண்முதலியவற்றின் வேறுபடுத்துப் பொருண்மாத்திரமுணர்த்தி நிற்றலின் எழுவாயும் வேற்றுமையாயிற்றென்றார். அவ்வாறு கூறுவார்க்கு விகாரத்தினின்றும் வேறுபடுதலின் இயல்பும் விகாரமேயாமெனல் வேண்டுமென்க.

## சுஎ. "ஆறனுருபு."

எழுவாயாய் நின்றவுருபே ஆறு வேற்றுமைகளினுருபுமேற்குமென்னுங்கருத்தான் "ஆற னுருபு மேற்குமவ் வுருபே." எனக் கூறிய நன்னூலார்கருத்தறியாது, ஆறும்வேற்றுமையுருபு பிறவுருபுகளையேற்குமென்க் கொண்டார். அது பொருந்தாமை விருத்தியுட்கூறினும், ஆண்டுக் காண்க.

## சுக. "இரண்டாவதனுருபு."

குழையையுடையனென்றவழிக் குழையும் உடையனெனக் கருதுதற்றொழிலையுற்று நின்றமையிற் செயப்படுபொருளேயாமென்றார்,செயப்படுபொருளுண்மைபுணராமையின். குழையையுடையன் சாத்தனென்றவழி உடையனென்னும் விகுதியானுணர்த்தப்படுங் கருத்தாவின்றொழிலையுற்று நிற்பினன்றே செயப்படுபொருளாம். அவ்வாறன்றி உடையனெனக் கருதுவானொருவன்றொழிலையுற்றுநிற்பது செயப்படுபொருளெனக் கொள்ளின்;—எயிலையிழைத்தானென்பதும் இழைத்தானெனக் கருதுதற்றொழிலையுற்று நின்றமையின், அதனையுமவ்வாற்றாற் செயப்படுபொருளெனல்வேண்டும். அன்றியுங் குழையையுடையனென்புழி, உடையானுமுடையனெ

னக் கருதுதற்றொழிலையுற்று நின்றமையின், அவனையுமாண்டுச் செயப்படுபொருளெனக் கோடல்வேண்டும், ஆகலினது போலியுரையென்க.

### ச௨. "மூன்றாவதனுருபு."

வினைமுதற்குங்கருவிக்குமிவர்கூறியவிலக்கணம், செயப்படுபொருள்குன்றியவினை நிகழ்வுழிச் செல்லாமையின், வழுவாதலறிக. ஆசிரியர்பாணினியார் "சுதந்திரன்கருத்தா." எ-ம். "சாதகதமங்கரணம்." எ-ம். ஒதினார். ஒருதொழினிகழ்ச்சிக்கட்டன்வயத்ததாகக் குறிக்கப்படும் பொருள் கருத்தா. எ-ம். ஒருதொழில் பயத்தற்கண் உயர்ந்த காரகங்கருவி. எ-ம். அவற்றிற்கு நிருத்தி கூறுவார். இங்ஙனங்கூறியவாற்றாற் கருவி கருத்தா முதலியவற்றிற்கும் கருவி கருத்தாமுதலியவாதற்றன்மை பொருந்துமாறறிக. ஏனையவுமிவ்வாறுள்ளனவோர்ந்துணர்க.

### சச. "ஐந்தாவதற்குருபு."

"நீங்கலொப் பெல்லை யேதுப் பொருள்" எனவே இதனினீற்றிவென்னும் பொருள் விளங்குதலின், அது கூறுதன்மிகையாம், அன்றி அதுகூறவேண்டுவார்க்கு "நீங்கலொப் பெல்லை யேதுப் பொருள்வயின்" என்றன்மிகையாம். இரண்டுங்கூறுதலே மரபென்பார்க்கு ஏனையவற்றிற்கும் 'இதனைச் செய்வ திதுவென லதன்பொருள்' 'இதனாற் செய்வ திதுவென லதன்பொருள்' என்றாற்போலச் சூத்திரஞ்செய்யாமை குன்றக்கூறலாய் முடியுமெனவுணர்க. மேலுமிவ்வாறே காண்க.

### சரு. "ஆறன்."

சொல்லின்றிரிபே பொருளென அபேதங்கூறுவார் மதம்பற்றித் தொகையதுவிரி பொருளதுகேடு என்பவற்றோடு சொல்லது பொருளென்பதனையுஞ் சிறிது திரிந்ததற்குதாரணமாகக் காட்டினார். மேற்சொல்லாவதிருதிணையைம்பாற்பொருளையு மொருவனுணர்தற்குக் கருவியாமோசையெனப் பேதமாகக் கூறியதை மறந்தார்போலும்.

### சசா. "ஏழனுருபு."

கண் கால் முதலியன உருபாகாவென்றார், அவையோரிடத்தினை வரைந்துணர்த்துங்காற் பொருளாதலும் ஐம்முதலியனபோலச் சாத்தனுழையிருந்தான் சாத்தன்முன்வந்தான் எனத் தனக்கெனவோர்பொருளின்றிப் பெயர்ப்பொருளையிடமாக வேறுபடுத்துங்கால் உருபாதலுமாகிய வேறுபாடுணராமையின்.

## ௯௬. "இம்முப்பெயர்க்கண்."

பால் காட்டுமீறின்றேனும், பொருள்வகையான் ஆண்பால் பெண்பாலென்பன அஃறிணைக்குமுண்மையின், அவை இருதிணைக்கும் பொதுவாய்ச் சொற்றன்மையான் அஃறிணைப்பெயராய் நிற்கும். அவற்றை ஆண்பால் கூறுய் பெண்பால் கூறுய் என, லகரவீற்றுயர்திணைப் பெயர்க்குதாரணங்காட்டல் பொருந்தாமையறிக. அவை இருதிணைக்கும் பொதுவாதல் "ஆண்பா லெல்லா மாணெனற் குரிய." "பெண்பா லெல்லாம் பெண்ணெனற் குரிய." என்னுமரபியற்சூத்திரங்களானுமுணர்க.

## ௫௧. "ஒருசார்னவ்வீற்று."

ஏடாவென்பது தோழன் முன்னிலைப்பெயராயே நிற்பதொன்றாயின் ஆண்டுருபேற்றற்கிடமாகாமையின், "வேற்றுமைக்கிடனாய்" எனச் சிறந்தெடுத்தோதிய பெயரிலக்கணம் வழுவாய் முடியுமென்க. தோழன்முன்னிலைப்பெயரென்றமையான், அஃதிடைச் சொல்லன்மையுமுணர்க. ஆயின் ஏடாவென்பது தோழன்முன்னிலைப்பெயரென்றதென்னையெனின், வழக்குமிகுதிபற்றி அவ்வாறு கூறியதென்க. "நோனுமை பொருமை யாமென நுவல்வர்" என்றுரேனும், நோன்றலென்னுமுடம்பாட்டுச்சொல் விலக்கப்படாமைபோலக் கொள்க.

## ௫அ. "தநு."

"இ உ ஊவோடு" என்னுஞ் சூத்திரத்தான் விளியேற்குமெனக் கூறிப்போந்த ஈற்றுள் ஒன்றல்லாத மகரவீற்றுத் தாமென்னும் விரவுப்பெயரையும் ஈண்டெடுத்து விலக்கினர். அவருக்கு மயக்கமுமறவியும் இயல்பென்றற்கிதுவே சான்றாதலறிக.

## ௬அ. "வினையேசெய்வது."

குழையானென்றவழிக் கருதுதற்றொழிலுங் கருதுதற்கருத்தாவுங் கருதப்பட்டகுழையும் பிறவும்பற்றி அக்கருத்து நிகழ்ந்ததென்றார். அது பொருந்தாமை மேலே கூறினும். வினைக்குறிப்பினுண்மையறியாமையின், இவ்வாறு தமக்கு வேண்டியவாறே கூறினர்.

பெயரியன்முற்றிற்று.

## வினையியல்.

### ௩. "அனவதாம்."

முற்றிற்குமெச்சத்திற்குந் தமக்கு வேண்டியவாறே இடர்ப்பட்டிலக்கணங் கூறினார். அவாய்நிலையில்வழியும் "ஆர்த்தார் கொண்மார் வந்தார்" "காண்கும் வந்தேம்" என்பன பிறிதோர்சொற்பற்றியல்லது நிற்றலாற்றாமையின், அவையெச்சமாவான் சேறலான், அஃதிலக்கண்வழுவாதலறிக.

### க௩. "கயவொடு ரவ்வொற்று."

"பாடின் மன்னரைப் பாடன்மா ரெமரே" "நோய்மலி வருத்தங் காணன்மா ரெமரே" என மாரீறு பல்லோர்படர்க்கையொன்றற்கேயுரித்தாய் வருதலின், அதனைத் திணைபாலிடமெல்லாஞ் செல்லும் வியங்கோளீறெனக் கோடல்சிறிதும் பொருந்தாமையறிக. ஏனையவுமிவ்வாறு வருவனவோர்ந்துணர்க.

### கச. "வேறின்மையுண்டு."

"குருகுமுண்டு" என்புழி உண்டெனக் குறிப்புணர்த்தி நிற்குஞ்சொல்லும் 'ஆவுண்டு' எனவுண்மையுணர்த்தி நிற்குஞ்சொல்லும் ஒன்றென மயங்கிக் கூறினார். அவை தம்முள் வேறாதல் விருத்தியுட்காண்க.

### கஎ. "அவற்றுட்செய்த."

ஆறுசென்றவியர், உண்டவெச்சில் என்றாற்போல்வன செயப்படுபொருட்கணடங்குமென்றார். "மற்றிந்நோய் தீரு மருந்தருளாய்" என்புழிக் கருவிக்கணடங்குமென்ற மருந்து மருந்தானே ய்தீர்ந்தது எனக் கருவிப்பொருண்மைக்குரிய மூன்றனுருபேற்று நிற்குமாறுபோல, வியர்முதலிய செயப்படுபொருண்மைக்குரிய இரண்டனுருபேற்று நில்லாமையிற் செயப்படுபொருட்கணடங்குமாறியாண்டையதென்க.

### உஉ. "சினைவினைமுதலொடு."

முதலினன்கும் பிறவினைமுதலொடு முடியுமாயின், "சினைவினைமுதலொடும்" எனவமைக்கவும், "முதலினன்கும் வினைமுதல் கொள்ளும்" என விதந்தோதவும் வேண்டா. அங்ஙனம் வேண்டலாற் பிறவினை பிறவினைமுதலொடு முடியுமென்றல் அவர்க்குங்கருத்தன்றுபோலுமென மறுக்க. "உரற்கால் யானை யொடித்துண்டெஞ்சிய யா" என்றாற்போல்வனவற்றிற்குப் பொருள்கோளறியாமையின், அவ்வாறு கூறினார். இன்னோரன்னவையெல்லாம் விருத்தியுட்காண்க. செய்தெனெச்சம் பிறவினையுங்கொள்ளுமென்பார்க்குத் தலைவன்பிரிந்து வருந்தினாள் என்றாற்போல்வனவற்றையுஞ்

செய்தெனெச்சம் பிறவினைகொண்டனவென்னாது செயவெனெச்சத்திரிபென்றலெற்றிற்கென்க. காரணகாரியப்பொருட்டாயிறந்தகால முணர்த்துவனவெல்லாஞ் செயவெனெச்சத்திரிபாமெனின், கையற்றுவீழ்ந்தான் கண்ணொந்துகிடந்தான் என்றற்றொடக்கத்தனவற்றையுங் காரணகாரியப்பொருட்டா யிறந்தகாலமுணர்த்துதல்பற்றிச் செயவெனெச்சத் திரிபென்றல்வேண்டும். அங்ஙனங்கூறாது, அவற்றைச் செய்தெனெச்சமென்றே கொண்டார். இவ்வாறு மயங்கக் கூறுதல் அவரியல்பென்க. 'ஆகிடந்து செறுவிளைந்தது' 'பூணணிந்து விளங்கிய புகழ்சான் மார்ப' 'உண்டு பசிகெட்டது' என்றாற்போல்வனவுங் காரணகாரியப்பொருளவாய்ப் பிறவினை கோடலின், இவையுஞ்செயவெனெச்சத் திரிபென்றேகொள்க.

### ௨௪. "வினைமுற்றேவினை."

"காணான் கழிதலு முண்டென் றொருநாள்" என்புழி எச்சமுற்றாய்த் திரிந்ததென்னாது முற்றெச்சமாய்த் திரிந்ததென்றார்க்குத் தலைவன்பிரிந்து வருந்தினாளென்புழியும் அவ்வாறு சொல்வடிவுபற்றிப் பிரிந்தென்னுஞ்செய்தெனெச்சஞ் செயவெனெச்சமாய்த் திரிந்ததெனல்வேண்டும். அதனை மறந்தார்போலும். அன்றியும், செயவென்னுமெச்சஞ் செய்தெனெச்சமாய்த் திரிந்தவழியுந் தன்பொருளையே தந்து நின்றாற்போல, முற்றெச்சமாய்த் திரிந்த வழியும் முற்றுப்பொருளே தரல்வேண்டும். அங்ஙனந்தாராமையின், முற்றேயெச்சமாய்த் திரிதல் யாண்டையதென்க, எச்சமே முற்றாய்த் திரிந்ததாயின், இருதிணையைம்பான் மூவிடத்திற்கும் பொதுவாய் நில்லாது முற்றுச்சொற்கோதியவீற்றவாய் இருதிணையைம்பான் மூவிடமுமுணர்த்துமாறென்னையெனின்;—அற்றாதலினன்றே திரிந்ததெனப்பட்டதென்க. கண்ணியன் வில்லினன் எனவரும் வினைக்குறிப்புமுற்றாதற்கேற்பதோ ரெச்சமின்றாலெனின்;—நன்றுசொன்னாய். வினைக்குறிப்புமுற்றெச்சமாய்த் திரியுமென்றாரை அங்ஙனமெச்சமாய்த் திரிந்த வாய்பாடியாதெனக் கடாயினாருக்கு விடை யாதோவென்க.

வினையியன்முற்றிற்று.

---

## இடைச்சொல்லியல்.

### ௧. "எதிர்மறைசிறப்பெண்."

சாத்தன்வருதற்குமுரியனென்பது வாராமைக்குமுரியனென்றெஞ்சிநிற்ப எச்சவும்மைக்குரியவிலக்கணமுழுவது மேற்றுநிற்றலின், அஃதெச்சவும்மையாவதல்லது எதிர்மறையும்மையாகாதென

மறுக்க. "மறப்பினு மோத்தக் கொளலாகும்" என்புழி மறப்பினு மென்னுமும்மை மறக்கலாகாதென்னுமெதிர்மறைப்பொருடந்து நிற்றலின், இன்னோரன்னவையே எதிர்மறையும்மையாமென்பது. "ஒன்றுரைப்பான் போலிளிவந்துஞ்சொல்லும்" என்பதன்கண் வருவனவற்றையையவும்மையென்றார். 'திருமகளுமல்லள ரமகளுமல்லளிவள்' என்பதனோடு 'மதுகையுமுடையன் அடக்கமுமுடையன் வன்மையுமுடையன் ஒருவன்' என்பதன்கண் வேற்றுமையின்மையானும், மதுகையுடையவனோ அடக்கமுடையவனோ வன்மையுடையவனோவென ஐயப்பொருடாராமையானும், "அன்னா னொருவன்றனாண்டகைமை விட்டென்னைச் சொல்லுஞ்சொற் கேட்டிசுடரிழாய்" எனத் தோழி தலைவன்றன்மைகளையெடுத்துக் காட்டி அத்தன்மைகளையுடையானொருவன் சொல்லுஞ்சொல்லைக் கேட்பாயாகவெனத் தலைவிக்கறிவுறுக்கின்றாளல்லது ஐயுற்றுக் கூறுகின்றாளல்லளாகலானும், அது பொருந்தாதென மறுக்க. அவன்வெல்லினும் வெல்லுமென்பது துணியாமைக்கண் வருதலின், இன்னோரன்னவையே ஐயவும்மையாம். பத்தானுமெட்டானுமெனக் காட்டுவாருமுளர். திருமகளுமல்லளரமகளுமல்லளென்பதும் எச்சவும்மையென மறுக்க. கெடியனும் வலியனுமாயினனென்பது எண்ணும்மையென மறுக்க. இதுவே சேனாவரையர்க்குங்கருத்தாதல் அவருரையானுணர்க. முற்றும்மையெச்சப்படுவதெதிர்மறைவினைக்கணன்றி விதிவினைக்கணின்றென மறுக்க. அவர் பெயரெச்சச்சூத்திரத்துள் "அறுபொருட்பெயரொடு முடியு முறையது" என்புழி முற்றும்மையை யெச்சமாக்கிப் பிறபொருட்பெயரொடு முடியுமெனக் கொள்கவென்றார். ஆண்டிதனை மறந்தார்போலும். ஏனையவுமோர்ந்துணர்க.

இடைச்சொல்லியன் முற்றிற்று.

---

## உரிச்சொல்லியல்.

### கக. "அன்னபிறவும்."

"எச்சொல் லாயினும் பொருள்வேறு கிளத்தல்" எனவென்னுற்றரப்பட்ட பாதுகாவலாணையாலென்றார். இவ்விலக்கணவிளக்கநூலுள் எச்சொல்லாயினும் பொருள்வேறுகிளத்தலென இவராற்றரப்பட்டவாணை யாண்டையதென்க. தாஞ்செய்த நூன்முறைபற்றியுரைசெய்யாது தொல்காப்பியத்திற்கிடந்தவாறே படியெடுத்தெழுதித் தமதறியாமையை விளக்கினாரெனவறிக. ஏனையவுமோர்ந்துணர்க.

உரிச்சொல்லியன் முற்றிற்று.

# பொதுவியல்.

## க. "திணையேபாலிடம்."

நால்வகையோத்தினுள்ளுங் கூறுதற்கிடனின்றிப் பெற்றிருக்கின்ற நால்வகைச்சொல்லிலக்கணங்களை முன்னர் வைத்து உறுப்புக்களைக்கொண்டு சொற்களையமைத்துக்கோடலை அவற்றின்பின்னாக வைப்பவன்றே. நால்வகையோத்தினோடு இவ்வோத்திற்கியைபுடைமை விளக்கும். அங்ஙனம் வையாமல் மாறி வைத்தமையான், முதலோத்துக்களோடியையாமையுணர்க.

## உ. "திணைமயக்குற்ற."

துணிந்தவழி அன்மைச்சொல் ஆண்மைத்தன்மையுடைப் பொருட்க ப்படும் பொருண்மேலும் மறுக்கப்படுமுகத்தாற் சுட்டி நிற்றலின்றென்றார். குற்றிகொல்லோ மகன்கொல்லோவென்றையுற்றதன் பின்னர் மகனெனத் துணிந்ததூஉந் தன்முன்னுகக் காணப்படும் பொருளையாமன்றே, அங்ஙனமாகவே வேறுபொருளன்றாந்தன் மையை அப்பொருண்மேற்சுட்டிக் கூறுவானல்லது வேறுபொரு ண்மேற்சுட்டிக் கூறுதற்கோரியைபின்மையின், அது பொருந்தா தென மறுக்க. அல்லதூஉங் குற்றியன்று மகனென்றதனுட் மக னென்பது இவனென்னுந்தோன்றுவெழுவாய்க்குப் பயனிலையாக நின்று முடியினுங்குற்றியன்றென்பதனோடியையாமையின், குற்றி யன்று மகனென்பதொருதொடரன்றாம். அன்றாகவே, குற்றியன் றென்பது துணிதற்பயன்பற்றி வந்ததன்றாய் முடிக்கத. முடி யவே, குற்றியன்று மகனென்றதனால் வேறுபயனின்மையின், அது வழுவாமென மறுக்க. ஏனையுதாரணங்களுமிவ்வாறே காண்க.

## ௩. "திணைவிரவெண்ணுப்பெயர்."

"தானுந் தேரும் பாகனும் வந்தென் னலனுண்டான்" என் புழி வருதல்வினை மூன்றற்குமுண்மையான், ஆண்டமைக்கவேண் டுவதின்று. இனியம்முப்பொருளின் வினையாகிய வந்தென்னுஞ் செய்தெனெச்சம் உண்டானென்னுமொன்றன்வினைகொண்டு முடி தல் வினையெச்சமுடிபாராய்ச்சிக்கட்பெறற்பாலதாகலின், அதனை யும் ஈண்டொன்றெனமுடித்தலாலமைத்தல் பொருந்தாமையறிக.

## ரு. "உவப்பினும்."

வேள் குரிசிலென்பன அஃறிணைவாசகமென ஈண்டு வழு வமைத்தார். மேற்பெயரியலுள் "நம்பி யாடூஉ விடலை கோவேள் குரிசில்" என உயர்திணையாண்பாற்பெயருளெடுத்தோதியதனை மற ந்தார்போலும். குடிமைநல்லன் ஆண்மைநல்லனென ஈறு திரி

யாது நின்றாங்கு நின்று குடிமை ஆண்மை முதலியன உயர்திணை முடிபுகொள்ளுமெனவும், அது வழாநிலையாமெனவுங்கூறினார். ஆசிரியர் தொல்காப்பியனார் "உயர்திணை மருங்கி னிலையின வாயினு—மஃறிணை மருங்கிற் கிளந்தாங் கியலும்" என்றதனால் அவையுயர்திணை முடிபுகொள்ளாவென விலக்கப்பட்டமையானும், குடிமைநல்லன் ஆண்மைநல்லன் முதலிய வாய்பாடு இருவகைவழக்கினுமின்மையானும், அது பொருந்தாதென மறுக்க. "நின்றாங் கிசைத்த லிவணியல் பின்றே." "இசைத்தலு முரிய வேறிடத் தான" என்னுஞ் சூத்திரங்கட்குப் பொருளறியாது உரையாசிரியரையுள்ளிட்டோரெல்லாம் "அஃறிணை மருங்கிற் கிளந்தாங் கியலும்" என்பதனோடு மாறுகொள்ளவுரைத்தார். அது பொருந்தாமையறிக. இவ்வாறின்னுமெடுத்து விரிக்கிற்பெருகும். ஆங்காங்குய்த்துணர்க.

பொதுவியன்முற்றிற்று.

சொல்லதிகாரமுடிந்தது.

---

## இலக்கணவிளக்கச்சூறாவளி முற்றுப்பெற்றது.

மெய்கண்டதேசிகன் திருவடிவாழ்க.

தமிழ்ப் பல்கலைக் கழக நூலகம், தஞ்சாவூர்

## பிழை திருத்தம்.

இலக்கணக்கொத்து.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| ௩ | ௪ | கொடுத் தம். | கொடுத்தாம். |
| ௧௮ | ௧௨ | நூல்கலப் | நூற்கலப் |
| ௪0. | ௩௨ | ஈறும், | இறும், |
| ௭௮ | ௧௭ | சொல், பொருள் | பொருள், சொல் |
| ,, | ௨௭ | கோண் | கோன் |
| ௮0 | ௩௪ | யன்றொ | யன்றோ |
| ௮௨ | ௭ | ஒடிய | ஓடிய |